An Online, Peer - reviewed, Refereed and Quarterly Journal

EISSN 2456-5571

# BODHI

## INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

VOLUME 9 | SPECIAL ISSUE 2 | OCTOBER 2024 | E-ISSN: 2456-5571

## அரசு கலைக் கல்லூரி, மேலூர்

தமிழ் உயராய்வுமையம் வெளியிடும்
பன்னாட்டுக் கருத்தரங்கச் சிறப்பிதழ்

## கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு

பதிப்பாசிரியர்கள்
முனைவர் இர.ஷீலாராணி | முனைவர் இரா.முருகானந்தம்

# BODHI

# International Journal of Research in Humanities, Arts and Science


An Online, Peer Reviewed, Refereed and Quarterly Journal

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571



CENTRE FOR RESOURCE, RESEARCH & PUBLICATION SERVICES (CRRPS)

www.crrps.in | www.bodhijournals.com

**BIJRHAS**

The **BODHI International Journal of Research in Humanities, Arts and Science** (E-ISSN: 2456-5571) is online, peer reviewed, Refereed and Quarterly Journal, which is powered & published by **Center for Resource, Research and Publication Services, (CRRPS)** India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the fields of humanities, arts and science.

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

Research should be at the core and must be instrumental in generating a major interface with the academic world. It must provide a new theoretical frame work that enable reassessment and refinement of current practices and thinking. This may result in a fundamental discovery and an extension of the knowledge acquired. Research is meant to establish or confirm facts, reaffirm the results of previous works, solve new or existing problems, support theorems; or develop new theorems. It empowers the faculty and students for an in-depth approach in research. It has the potential to enhance the consultancy capabilities of the researcher. In short, conceptually and thematically an active attempt to provide these types of common platforms on educational reformations through research has become the main objective of this Journal.

**Dr. S. Balakrishnan**
Publisher and Managing Editor
bodhijournal@gmail.com
www.bodhijournals.com
09944212131

## AUTHOR GUIDELINES

**About Bodhi**

The BODHI International Journal of Research in Humanities, Arts and Science (E-ISSN:2456-5571) is open access, peer reviewed, referred and quarterly journal, which is powered & published by center for Resource, Research and Publication Services, (CRRPS) India. It is committed to bring together academicians, research scholars and students from all over the world who work professionally to upgrade status of academic career and society by their ideas and aims to promote interdisciplinary studies in the field of humanities, arts and science.

**Subjects for Papers**

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. Agriculture, anthropology, education, geography, advertising botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, bioscience, entrepreneurship, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

**Call for Papers**

The journal invites balanced mix of theoretical or empirical, conceptual papers to publish including research articles, case studies, review papers, comparative studies, dissertation chapters, reports of projects in progress, analytical and simulation models, technical notes, and book reviews, leading academicians, business peoples, corporate sectors, researcher scholars and students from academic institutions, research organizations, non-government organizations (NGOs), corporate sectors, civil societies, industries, and others from India and abroad.

**Submission of Manuscript**

1. Submit your article by email to **bodhijournal@gmail.com**
2. The manuscripts/papers should be research based or related, original and comprise of previously unpublished material and must be presented following scientific methodology.
3. Authors must send an abstract of the paper not exceeding 250 words, all manuscripts must be in font style of Times New Roman, size: 12, line spacing: double spaced and submitted only in MS Word 2003/ 2007 version.
4. All manuscripts should follow the MLA or APA style manual. The full paper must not exceed 3000 words, including tables and references.
5. The manuscript should be well-organized to have Title page, Abstract, Keywords, Introduction, Literature Survey, Problem Definition, Material & Methods, Findings & Results, Interpretation & Discussion, Conclusion and References.
6. All quoted, reproduced material should clearly be referenced.
7. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text.
8. All contents should be original – authors' own words, ideas, findings and arguments.

9. Tables and figures should appear in the document near / after where they are referenced in the text. All figures and tables must have an intelligible caption in relation to the text.
10. Photographs must be sharp, and exhibit good contrast.
11. Correct and complete referencing of quoted and reproduced material is the obligation of the author. In the text, references should be inserted in parentheses in full.
12. If author uses a reference from an out-source, author should cite relevant source giving credit to the original author/contributor.

**Review of Article / Manuscript**

1. The manuscript will be numbered and sent to the review committee for review-report.
2. The author will be intimidated of the review and the process will take a maximum period of 15 – 20 days.

**Ethical Policy**

1. Authors are advised to adhere to the ethics of publication of his/her article to be considered for publication.
2. Acknowledgement of the original ideas, borrowed from other sources is imperative.
3. The authors of original research work (previously unpublished / under process for the publication elsewhere) should be an accurate submission of the work carried out, provide the rationale of the significance of the research work in context with previous works, and should contain sufficient details to allow others for further research.
4. It will be the wholesome responsibility of the authors for such lapses if any on legal bindings and against ethical code of publication or communication media.

**Plagiarism Alert & Disclaimer**

1. The publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts.
2. All submissions should be original and must have a "statement of declaration" assuring their research paper as an original and fresh work and it has not been published anywhere else.
3. It will be authors are sole responsibility for such lapses, if any on legal bindings and ethical code of publication.
4. Contributors are advised to be aware about Plagiarism and ensure their paper is beyond plagiarism as per UGC norms.

**Publication Policy & Peer-review Process**

Peer review exists to ensure that journals publish article which is of benefit to entire research community. Peer reviewers' comments and recommendations are an essential guide to inform the editor's decision on a manuscript that revisions and improvement. They are part of the publication process and actually help raise the quality of the manuscript. It also helps the readers to trust the research integrity of the article.

1. The Editor-in-Chief will primarily examine each manuscript.
2. The editor-in- Chief will advise the authors about the acceptance of the manuscript by email.
3. The manuscript will be evaluated on parameters of originality, practical importance, subject relevance, scientific level and contribution to the current academic scenario.
4. If the manuscript is accepted following publication policies.

5. Accepted manuscript will be forwarded to the double-blind peer review process. Such that the journal does not disclose the identity of the reviewer(s) to the author(s) and does not disclose the identity of the author(s) to the reviewer(s).
6. The review committee is not responsible for stripping of any information during panel review as the original author is not known to the committee.
7. Manuscript/paper will be published only when the article is 'commended for publication' from the review committee/editorial board.
8. If necessary the copy-editing work will be done by the members of the Editorial Board.
9. The review process may take minimum 20 working days.
10. In case of acceptance of the manuscript and commended for publication favorably, the manuscript will be published in online mode of time. If paper/article/manuscript is not commended for publication, the rejected manuscripts shall not be returned.

**Copyright Notice**

Submission of an article implies that the work described has not been published previously (except in the form of an abstract or as part of a published lecture or academic thesis), that it is not under consideration for publication elsewhere, that its publication is approved by all authors and tacitly or explicitly by the responsible authorities where the work was carried out, and that, if accepted, will not be published elsewhere in the same form, in English or in any other language, without the written consent to the Publisher. The Editors reserve the right to edit or otherwise alter all contributions, but authors will receive proofs for approval before publication.

Copyrights for articles published in Bodhi International Journal of Research in Humanities, Arts and Science are retained by the authors, with first publication rights granted to the journal. The journal/publisher is not responsible for subsequent uses of the work. It is the author's responsibility to bring any infringement action if so desired by the author.

**Indexed & Open Access**

The journal will be indexed as per database norms. The Indexing will provide the manuscript to achieve its purpose of being accessible to worldwide readers. Easy accessible will increase as manuscript's and journal's reputation. It will be a source of the quality information in respective areas/studies.

**Privacy Statement**

We may collect the contact details from authors like names, designation with Institutional address, email addresses, postal address, phone numbers and other information to understand needs and provide with a better service that are entered in this journal site and will be used exclusively for the stated purposes of this journal.

**Frequency of Publication of the Journal**

BODHI is a quarterly journal, will be published in January, April, July and October on respective Years.

**Review and Evaluation Committee**

Quarterly review committee meeting will be convened by the editor-in-chief. Authors are expected to submit their manuscript before 20 working days of the publication of the respective month. The journal will be published regularly as per Journal publication policy.

**Article Submission**

Authors are kindly advised to send manuscripts along with registration & copyright forms. (Duly filled-in Registration form is mandatory with the paper for acceptance) Soft copy of the papers should be mailed to **bodhijournal@gmail.com**

**Conference Proceedings**

Bodhi will be published as special issues for the national / international conference and seminars volumes. The group of papers also will be published in Bodhi journal.

# வாழ்த்துரை

**முனைவர் அ. அந்தோணி செல்வராஜ்**

*முதல்வர் (மு.கூ.பொ.) அரசு கலைக் கல்லூரி மேலூர்*

தமிழர்களாய்ப் பிறந்ததற்கு நாம் என்றைக்கும் பெருமை கொள்ளலாம். ஏனெனில் உலகில் மற்றவர்கள் தத்தம் தாய்மொழிகளில் பேசிக் கொண்டிருக்கிறார்கள் தமிழர் நாம் மட்டும் பல மொழிகளுடைய தாய் மொழியில் பேசிக்கொண்டிருக்கிறோம். இன்றைய காலகட்டத்தில் உலகின் பல மொழியியல் சார்ந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாய்வுகளின் முடிவுகள் உலகின் மூத்த மொழியாக தமிழை முன் நிறுத்துகின்றன.

மொழயியல் ஆய்வுகளும், வரலாற்று ஆய்வுகளும் மானுடவியல் சார்ந்த ஆய்வுகளும் போதுமான அளவில் மேற்கொள்ளப்படாத காலத்தில் தமிழுக்கும் "நீஷ பாஷை" என்ற முத்திரை குத்தப்பட்டது. ஆய்வுகளில் கிடைத்த தரவுகள் முன்கூறப்பட்ட புரட்டுக் கட்டமைப்பை உடைத்து வருகின்றன, சிலரால் நீஷ பாஷையாக கட்டமைக்கப்பட்ட தமிழ் என்றும் மக்களின் நேச பாஷை என்று இன்று உணரப்படுகின்றது. ஆம், மக்களுக்காக மக்களே படைத்த மக்களின் மொழி தமிழ்.

ஒரு மொழியின் காலத்தை, நீளத்தை, ஆழத்தை, மூலத்தை, கோலத்தை, அறிய உதவுபவை அம்மொழியில் வந்த இலக்கியங்களே. நமது நாட்டில் பல மொழிகள் தோன்றுவதற்கு முன்பே தமிழில் இலக்கியங்கள் வந்துவிட்டன. பல மொழிகளில் எழுத்து வடிவங்கள் பிறப்பதற்கு முன்பே தமிழில் இலக்கண நூல்கள் எழுதப்பட்டுவிட்டன. நீண்ட நெடுங்காலத்திற்கு முன்பே இலக்கண நூல்களையே இலக்கியங்களாகப் படைத்த பெருமைபெற்ற ஒரே மொழி தமிழ்மொழி தான். அன்றைக்கு எழுதப்பட்ட இலக்கியங்களை இன்றை காலத்திலும் நாம் வாசித்து அனுபவிக்கமுடியும் என்பது தான் அறுந்து போகாத மொழித்தொடர்ச்சிக்கு எடுத்துக்காட்டு.

நம் தமிழ் மொழியின் பயன்பாட்டுத் தொடர்ச்சியையும், அதன் இலக்கிய செறிவையைம் பதிவு செய்யவேண்டும் என்ற உயரிய நோக்கத்தில்தான் ''காலந்தோறும் தமிழ் இலக்கியத்தின் போக்கு'' என்ற பன்னாட்டுக் கருத்தரங்கு மேலூர் அரசு கலைக் கல்லூரி தமிழ்த்துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்படுகிறது. நமக்குப் பிடித்தமான எழுத்தாளரின் எழுத்துக்களை நூல் வெளியானவுடனே வரிசையில் காத்திருந்து வாங்கி நாம் வாசிக்கும் மகிழ்வையும் மனநிறைவையும் தமிழ்த்துறையினரின் இம்முயற்சிகள் தருகின்றன. முயற்சியாளர்களான கருத்தரங்கின் ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் இர. ஷீலாராணி மற்றும் முனைவர் இரா. முருகானந்தம் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்கள்.

கருத்தரங்கின் ஆய்வுக் கட்டுரைகள் ''போதி'' என்னும் சர்வதேச ஆய்விதழில் இரண்டு தொகுதிகளாக வெளிவருவது கருத்தரங்க முயற்சிக்கு மேலும் வலுச் சேர்க்கின்றன.

முயன்றோருக்கும், முயற்சிக்கும், முயற்சிகளின் தொடர்ச்சிக்கும் என் வாழ்த்துக்கள்!

**முதல்வர்**

# மகிழ்வுரை

**முனைவர் பா. சிங்காரவேலன்**
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ் உயராய்வு மையம், அரசு கலைக்கல்லூரி, மேலூர்

மேலூர் அரசு கலைக்கல்லூரி தமிழ் உயராய்வு மையமும், போதி பன்னாட்டு ஆய்விதழும் இணைந்து நடத்தும் கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு எனும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கம். ஒரு முறை இரு முறை அல்ல. ஏழாம் முறையாக அரசு கலைக் கல்லூரி மேலூரில் நடைபெறுவது தமிழ்த்துறைக்குப் பெருமை சேர்க்கிறது. அரசு கல்லூரிக்கும் ஆய்வுலகிற்கும் இடையே உள்ள தடைகளை உடைத்து, வசதி பொருந்திய தன்னாட்சிக் கல்லூரிகளுக்கு நிகராகவும், பல கல்லூரிகள் ஒருங்கிணக்க இயலாத ஒன்றிணைச் செய்து முடித்த மன நிறைவை ஒருங்கிணைப்பாளர்களிடம் காண்கின்றேன்.

2015 -2016 ஆம் ஆண்டு கருத்தரங்கம் தொடங்க முயற்சித்து போது எதிர்கொண்ட இன்னல்களையும், ஏற்படுத்திய தடைகளையும் அதனை முறியடித்து ஆறு ஆண்டுகள் நடத்திட இறைவன் மன வலிமையினையும் உடல் நலத்தையும் அளித்தார், என்னோடு ஐந்து ஆண்டுகள் கரம் கோர்த்தார் முனைவர் செ.எபநேசர். ஒரு ஆண்டு முனைவர் இர.ஷீலாராணி அவர்கள் உறுதுணையாக இருந்தார். அந்த அனுபவத்தின் வெளிப்பாடாக இவ்வாண்டு முனைவர் இரா, முருகானந்தம் அவர்களோடு இணைந்து செயல் பட்டு வருகிறார்.

தமிழ் மொழியின் இனிமையினையும், சம கால ஆய்வு நெறிகளையும், அதன் இன்றைய வளர் நிலைகளையும் ஆய்வுலகிற்கு எடுத்துரைக்கும் விதமாக 18.10,2024 வெள்ளிக்கிழமை நடைபெறுவது மிகிழ்வளிக்கிறது. தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இருந்து கட்டுரை அனுப்பிய பேராளர்களுக்கு நன்றியும் பாராட்டும். ஆண்டு தோறும் பன்னாட்டுக் கருத்தங்கம் நடத்த திட்டமிட்டுள்ளோம். மகிழ்வுடன் வாருங்கள். இன்முகத்துடன் கலந்துரையாடுங்கள்.

கருந்தரங்க ஒருங்கிணப்பாளர்களான தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் இர.ஷீலாராணி அவர்களுக்கும், கௌரவ விரிவுரையாளர் முனைவர் இரா.முருகானந்தம் அவர்களுக்கும் வாழ்த்துக்கள்..

**இவண்**

**முனைவர் பா. சிங்காரவேலன்**
இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர்
தமிழ் உயராய்வு மையம், அரசு கலைக்கல்லூரி, மேலூர்

# பதிப்புரை

இலக்கிய இலக்கண வளமுடைய தமிழ்மொழியில் அந்தந்தக் காலங்களுக்கேற்ப இலக்கியங்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. அந்த வகையில் நாங்களும் காலத்திற்கேற்ப **“கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு”** என்ற தலைப்பில் பன்னாட்டுக் கருந்தரங்கை ஏழாவது ஆண்டாக துறை மேற்கொண்டாலும் நாங்கள் முதல்முறையாக இப்பணியினை ஏற்று நடத்த முயற்சித்தோம். எம் முயற்சிக்கு பலனாக இவ்வாய்வரங்கிற்கு பல்வேறு இடங்களில் இருந்து பேராசிரியர்களும் ஆய்வு மாணாக்கர்களும் கட்டுரை வழங்கி என்னை ஊக்கப்படுத்தியதன் விளைவாக கட்டுரைகளை இரண்டு தொகுதிகளாகப் பிரித்து நூலாக்கம் செய்வதில் பெருமிதம் கொள்கின்றோம்.

கருத்தரங்கம் நடத்த அனுமதி வழங்கிய கல்லூரியின் முதல்வர் (மு.கூ.பொ) முனைவர் அ.அந்தோணி செல்வராஜ் அவர்களுக்கும், தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் பா.சிங்காரவேலன் அவர்களுக்கும், துறைப் பேராசிரியப் பெருமக்களுக்கும் எங்கள் அன்பு கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம். பதிப்புப் பணிக்கு உற்ற துணையாக விளங்கிய அன்பு கணவர் ரா.ஜாண் டார்வின் துரை மற்றும் மகள் ஜா.ஷீ.கிருத்திகா அவர்களுக்கும் எம்துறை கௌரவ விரிவுரையாளர் இரா.முருகானந்தம் அவர்களின் அன்பு துணைவியார் மு.புவனேஸ்வரி அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.

கட்டுரை வழங்கி சிறப்பித்த அனைவருக்கும் நன்றிகள் பல. என்னை தொலை தொடர்பு வழி ஊக்கப்படுத்திய அன்புதோழி ஈரோடு, சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, இணைப்பேராசிரியர், முனைவர் இராக்கு, அவர்களுக்கும் நன்றி. பதிப்புத்துறை போதி ஆய்விதழ் நிறுவனர் முனைவர் செ.பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் நன்றி. ஆண்டுதோறும் எங்களோடு நீங்கள் பயணிக்க தமிழை உலகறியச் செய்ய ஒன்று கூடி இணைந்து செயல்படுவோம்.

இவண்<br>
**இர.ஷீலாராணி**<br>
**இரா.முருகானந்தம்**<br>
கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர்கள்<br>
மற்றும் பதிப்பாசிரியர்கள்

# BODHI
# INTERNATIONAL JOURNAL OF RESEARCH IN HUMANITIES, ARTS AND SCIENCE

An Online, Peer-reviewed, Refereed and Quarterly Journal

**Vol: 9** **Special Issue 2** **October 2024** **E-ISSN: 2456-5571**


**Aim & Objectives**

Academic Excellence in research is sustained by promoting research support for young Scholars. Our Journal on Humanities, Arts and Science of research is motivating all aspects of encounters across disciplines and research fields in a multidisciplinary view, by assembling research groups and consequently projects, supporting publications with this inclination and organizing programmes. Internationalization of research work is the unit seeks to develop its scholarly profile in research through quality of publications. And visibility of research is creating sustainable platforms for research and publication, such as series of books; motivating dissemination of research results for people and society.

**Disclaimer**

Contributors are advised to be strict in academic ethics with respect to acknowledgment of the original ideas borrowed from others. The Publisher & editors will not be held responsible for any such lapse of the contributor regarding plagiarism and unwarranted quotations in their manuscripts. All submissions should be original and must be accompanied by a declaration stating your research paper as an original work and has not been published anywhere else. It will be the sole responsibility of the authors for such lapses, if any on legal bindings and ethical code of publication.

**Communication**

Papers should be mailed to bodhijournal@gmail.com

## CONTENTS


| S. No. | Chapters | Page No. |
|---|---|---|
| 1 | இலக்கண நூல்களில் ஆய்தமும் உரையாசிரியர்களின் உரைத் திறனும் **முனைவர் ரோமா. பேச்சிமுத்து** | 1 |
| 2 | சங்ககால அறம் சார்ந்த அரசியலும் இன்றைய அரசியலும் **முனைவர் சு. பால்மோகன்** | 7 |
| 3 | வளையாபதியில் வாழ்வியல் அறம் **முனைவர் க. இராக்கு** | 10 |
| 4 | திருவேடகப் பதிகம் உணர்த்தும் பதியின் இயல்பு **முனைவர் கு. இராமர்** | 14 |
| 5 | ஐந்திலக்கண நூல்களில் இயற்கைப் புணர்ச்சி **மு. சண்முகவேல்** | 17 |
| 6 | மழலை உதிர்த்த சொல்லில் எள்ளல், அழகியல் சிந்தனைகள் **முனைவர் மு. செந்தில்குமார்** | 20 |
| 7 | அப்துல் ரகுமான் கவிதையில் ‘அண்ணா’ **முனைவர் பா. சிங்காரவேலன்** | 23 |
| 8 | ராஜா வந்திருக்கிறார் சிறுகதை காட்டும் வாழ்வியல் நெறிகள் **திருமதி மூ. சிவகாமி** | 28 |
| 9 | தமிழிலக்கியங்களில் வெற்றிலை - அறிவியல்தமிழ் நோக்கு **முனைவர் லோ. சரவணன்** | 30 |
| 10 | இலக்கியத்தில் பெண்ணியப் பார்வை **பூ. சிவகாமசுந்தரி** | 36 |
| 11 | அண்ணாவின் ‘குமாஸ்தாவின் பெண்’ நாவலில் வறுமையும் காதலும் **முனைவர் யா. சாம்ராஜ்** | 40 |
| 12 | நா.முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்களில் நட்பு **சோ. சதிஸ் குமார் & முனைவர். அ. மோகன்ராஜ்** | 43 |
| 13 | சங்க இலக்கியங்களில் பெண்ணியம் **திருமதி. நா. சுதா** | 45 |

| | | |
|---|---|---|
| 14 | The Role of Translation for the Development of Tamil Literature<br>**T. Suganya** | 48 |
| 15 | கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்கள் காட்டும் சமூகம்<br>**திருமதி செள. சுருதி &**<br>**முனைவர் அ. வளர்மதி** | 52 |
| 16 | நாட்டுப்புறக் கும்மிபாடல்களில் - பக்தி<br>**முனைவர். க. சரவணன்** | 55 |
| 17 | பட்டினப்பாலையில் சொற்புலங்களும்,புலச்சொற்களும்<br>**முனைவர் இர. ஷீலாராணி** | 58 |
| 18 | திணைக்கோட்பாட்டுப் பார்வையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - ஒருபார்வை<br>**ச. சங்கரலெட்சுமி &**<br>**முனைவர் உ. கருப்பத்தேவன்** | 61 |
| 19 | தமிழ் இலக்கியத்தின் போக்கு<br>**முனைவர் த. சுந்தரராஜ்** | 66 |
| 20 | பெண்ணிய வாசிப்பில் ஔவையாரின் பாடல்கள்<br>**இரா. ஸ்ரீவித்யா** | 69 |
| 21 | அகநானூற்றில் மருதத்திணைப் பாடல்களில் உவமைகள்<br>**முனைவர் இ. செல்வி** | 75 |
| 22 | மாணிக்கவாசகர் மதநல்லிணக்கம்<br>**கு. தேன்மொழி & சி. குமார்** | 78 |
| 23 | புறநானூறு உணர்த்தும் உயர்சிந்தனைகளும் வாழ்வியல் நெறிகளும்<br>**முனைவர் வெ. திலகம்** | 82 |
| 24 | களவழிநாற்பது – போர்க்களக்காட்சி<br>**முனைவர் மா. உமா மகேஸ்வரி** | 85 |
| 25 | ஔவையருளிய ஓரடியறங்கள்<br>**திரு. எஸ்.உமாபதி** | 88 |
| 26 | Socio-Psycho Dynamics of Binary Society in Kalki's Visamanthiram<br>**Dr. V. Vellaichamy** | 94 |
| 27 | சோகவனம் சிறுகதைகாட்டும் உலகமயமாதல்<br>**திருமதி. சு. வேல்தாய்** | 98 |
| 28 | புதுக்கவிதையில் சமுதாயச் சாடல்<br>**முனைவர் கு. வாணி ஜமுனா** | 102 |
| 29 | கவிஞர் பூவண்ணனின் குழந்தைப் பாடல்களில் இலக்கிய உத்திகள்<br>**முனைவர் ச. வேணுகோபால்** | 107 |
| 30 | சீவகசிந்தாமணியும் அணியும்<br>**முனைவர் அ. வளர்மதி** | 112 |
| 31 | தமிழ் இலக்கணத்தில் புணர்ச்சி<br>**திருமதி க வெண்ணிலா &**<br>**முனைவர் ம. பூபதி** | 118 |
| 32 | ஜி. குப்புசாமியின் மொழிபெயர்ப்பு நாவலில் (ஓரான் பாமுக்கின்) பனி என்ற நாவலில் அயலக மக்களும் வாழ்க்கையும்<br>**வெ. வடிவேல் &**<br>**முனைவர் செள. வீரலெக்ஷ்மி** | 122 |
| 33 | அறநூல்கள் காட்டும் நல்வாழ்வியலுக்கான அனுகுமுறைகள்<br>**முனைவர் இரா. முருகானந்தம்** | 126 |
| 34 | தற்காலத் தமிழ் தன்வரலாறுகளின் புதிய போக்குகள்<br>**இரா. ஹேமலதா**<br>**முனைவர் அ. நந்தினி** | 131 |
| 33 | கால வளர்ச்சியில் சித்திரக்கவியின் போக்கு<br>**கு. திலகவதி** | 134 |
| 34 | கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு<br>**த. நிர்மலாதேவி** | 139 |

# இலக்கண நூல்களில் ஆய்தமும் உரையாசிரியர்களின் உரைத் திறனும்

**முனைவர் ரோ. மா. பேச்சிமுத்து**
*தமிழ் விரிவுரையாளர்*
*அரசு கலைக் கல்லூரி, மேலூர்*

**முன்னுரை**

ஆய்தம் என்னும் சொல் **'சார்ந்தது'** என்னும் பொருளுடையதாகும். **'ஆஸ்திரம்'** என்ற வடசொல்லின் திரிபு என்றும் ககரத்தின் முன் வரும் விசர்க்க ஒலியைச் சுட்ட வழங்கிய **ஆஸ்திரம்** போன்ற ஒலியாக ஆய்தம் இருத்தலால், இது வடமொழி எழுத்து தமிழில் வந்து வழங்கியது என்றும் சிலர் கருதுகின்றனர். **'ஆய்தம்'** என்பது **'ஆய்தல்'** என்னும் தமிழ்ச் சொல்லோடு உறவு உடையது என்றும், **'புள்ளி'** என்றும், **'ஒற்றும்'** என்றும் ஆய்தத்தை வழங்குவது அதன் வரி வடிவத்தைக் கொண்டு அமைவதாகும். **குற்றியலிகரம், குற்றியலுகரம்** முதலிய சார்பெழுத்துக்கள் தமக்கெனத் தனி வரிவடிவமும் ஒலிவடிவமும் இல்லை. ஆனால் ஆய்தத்திற்குத் தனி வரிவடிவமும் ஒலி வடிவமும் உண்டு. உயிர் எழுத்துகள் பன்னிரண்டில் இறுதியில் ஆய்தம் வருவதால் இது உயிர் எனக் கொள்வர் சிலர். உயிர் எழுத்துக்களுக்கும், மெய் எழுத்துக்களுக்கும் இடையில் ஆய்தம் வைக்கப்பட்டு உள்ளதே வீரசோழியம் **'நடுவாய்தம்'** எனறு ஆய்தத்தைக் குறிப்பிக்கின்றது. நேமிநாதம் **முதல் எழுத்து** என்று கூறுகின்றது. தமிழ் எழுத்துக்களில் மிகவும் புதிரான எழுத்து ஆய்த எழுத்தாகும். **ஆய்தம் முதல் எழுத்தா? சார்பு எழுத்தா?, ஆய்தத்தின் வடிவம் முப்பாற் புள்ளியா? வேறா?, ஆய்தத்தின் பிறப்பிடமும் மற்றும் ஒலியும், ஆய்தத்தின் எண்ணிக்கை, ஆய்தத்தின் குறுக்கம்** என்பனவற்றை வகைதொகைப்படுத்தி விளக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**ஆய்தம் முதல் எழுத்தா ? சார்பெழுத்தா?**

தொல்காப்பியர் எழுத்துக்களை **முதல் எழுத்து** எனவும் **சார்பெழுத்து** எனவும் பகுக்க வில்லை. ஆனால் **'சார்ந்து வரல் மரபின் எனப்பட்ட மூன்றில்'** ஒன்றாக ஆய்தத்தைக் கூறுகின்றார். தொல்காப்பியர் கருத்துப்படி ஆய்தம் முதலெழுத்து இல்லை சார்பெழுத்து எனச் சுட்டுகின்றது. சார்பெழுத்துக்களில், ஆய்தம் தவிர்த்த பிற எழுத்துக்களில் சில பண்புகள் காணப்படுகிள்றன. 1. சார்பெழுத்துக்கள் முதலெழுத்துக்களின் விகாரத்தால் அமைபவை. 2. சார்பெழுத்துக்கள் தம் முதலெழுத்துக்களின் பிறப்பு, முயற்சி, பிறப்பிடம் ஆகியவற்றையே தம் பிறப்பு, முயற்சி, பிறப்பிடம் ஆகப் பெற்றுள்ளன. இவ்இருதன்மைகளும் ஆய்தத்துக்கு இல்லை. அத்துடன் சார்பெழுத்துக்கள் முதலெழுத்தின் வடிவத்தையே தம் வடிவமாகப் பெற்றுள்ளன. ஆனால் ஆய்தம் தனக்கென ஒரு வடிவம் பெற்றுள்ளது. ஆய்தம் சார்பெழுத்து என்று சொல்லப்பட்டாலும், அது எந்த முதலெழுத்தையும் சார்ந்து வருவதில்லை. உயிரெழுத்தாகவும், மெய்யெழுத்தாகவும் அமைந்து, தானே முதலெழுத்தாகச் செயல்பட்டுத் தனித்து நிற்கின்றது. தொல்காப்பியம் ஆய்தத்தைச் **'சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே'** என்று கூறுகின்றது. **'எழுத்தோரன்ன'** என்னும் வகையுள் இதனை அடக்குகின்றது. **குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்** என்ற மூன்றொழித்த **அகர முதல் நகர இறுவாய்** முப்பதெழுத்தும் முதலெழுத்தென்றமையால், ஆய்தம் சார்பெழுத்து என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். ஆய்தம் எழுத்தல்ல, அது ஓர் அடையாளம்[1] என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரம் கூறுகின்றார்.

> **"குற்றியலுகரம் குற்றிய லிகரம்**
> **ஆய்தம் என்னும் முப்பாற் புள்ளியும்"**
> (தொல். எழுத்து, நூற். எண். 02)

என்னும் நூற்பா **ஆய்தம் முப்பாற் புள்ளி வடிவினை உடையது** என்று கூறுகின்றது. அன்றியும்,

> **"பத்தென் கிளவி ஒற்றிடைக் கெடுவழி**
> **நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி"**
> (தொல். எழுத்து. நூற். எண்.390)

என்னும் நூற்பாவல் ஆய்தம் புள்ளி வடிவினது என்பதை அறியமுடிகின்றது. எனவே ஆய்தம் ஓர் வரிவடிவ எழுத்தே, ஒலிகளே வரிவடிவால் குறிக்கப்படுகின்றன. எனவே ஆய்தம் ஒலியே ஆகும். அகத்தியம் என்னும் நூலில், **"முதல் உயிர்மெய் ஆய்தம் முப்பால் ஒற்றே"** (அகத். நூற். 07) என்னும் நூற்பாவில் உள்ள உயிர், மெய் ஆகிய முதலெழுத்துகளுடன் ஆய்தமும் உடன் வைத்துப் பேசப்பகின்றது. எனவே ஆய்தம் முதலெழுத்து என்பதை,,

**“உயிர்மெய் அளபெடை இரண்டும்**
**ஆய்தம் அறுகுறுக்கம் சார்பாம்”**

**(அகத். 38)**

என்னும் நூற்பாவால் ஆய்தம் முதல் எழுத்து எனவும், சார்பெழுத்து எனவும் அகத்தியம் கூறுகின்றது. தனித்து இயங்குவதால் முதலெழுத்து: குறில், உயிரோடு புணர்ந்த வல்லினம் என்ற இரண்டு எழுத்துகளைப் பற்றி வருவதால் சார்பெழுத்து என இரண்டாகவும் திகழ்கின்ற காரணத்தால் இரண்டின் கீழும் வைத்தது பொருத்தமேயாகும். பாட்டியல் நூல்கள் இதனை அலியெழுத்து என்று உரைக்கும்[2]என்கிறார் சிவப்ரியா.

ஆய்தம் உயிர் போலவும், மெய் போலவும் செயல்பட்டுத் தனித்த வரிவடிவமும் ஒலிவடிவமும் கொண்டு முதலெழுத்து போல நிற்பினும், அது பிற எழுத்துக்களைப் போல மொழியில் தனித்து நிற்க முடியாது. ஆய்தத்துக்கு முன் முதலெழுத்து குறிலாக அமையப் பின்வரும் எழுத்து உயிர் ஏறிய வல்லினமாக அமைகின்றது. அந்நிலையில் அவற்றுக்கு இடையே வருகின்றது. தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஆய்தத்தை மெய்யெழுத்து எனக் குறிப்பிடுகின்றார். இது **லகர ளகர** மெய்தான் திரிந்து ஆய்தம் வருதலால் ஆய்தமும் மெய்யாகவே ஆதல் வேண்டும் எனக் கூறுகின்றார். **க∴றீது, மு∴டீது** என்பனவற்றை மெய்பிறிதாகிய புணர்ச்சி என்பதனாலும் ஈண்டுப் புள்ளி என்றதாலும் ஆய்தமும் மெய்யாயிற்று, இதனை நச்சினார்க்கியர் முதலெழுத்து எனப் பொருள் கொள்கின்றார்.[3] ஆனால், ஆய்தம் மெய்யெழுத்தன்று என்பது தொல்காப்பியர் முதலான இலக்கண நூலரிரியர்களின் கருத்தாகும். அவர்கள் ஆய்தத்தை நீக்கி, ககர முதல் னகர இறுவாயாக அமைந்த பதினெட்டு எழுத்துக்களையே மெய்யெழுத்து என்றமையால் இதனை அறியலாம்.

**தோன்றிற் புகழொடு தோன்றுக அ∴திலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று”**

**(குறள். எண். 236)**

என்ற குறள்வழியில் அ∴திலார் என்பது நேர் நிரை எனப் பொருள் கொள்ளலாம். இங்கு ஆய்தம் மெய் போலக் கருதி அலகுப் பெற்று நின்றதை அறியமுடிகின்றது. மேலும்,

**“அற்றார் அழிபசி தீர்த்தல் அ∴தொருவன்**
**பெற்றான் பொருள்வைப் பழி”**

**(குறள். எண். 226)**

என்ற குறளில், ஆய்தம் உயிர் போலக் கருதப்பட்டு அலகுப் பெறாது நின்றதை அறிய முடிகின்றது. இவ்வாறு உயிராகவும் மெய்யாகவும் கருதி அலகுப்பெறும் தன்மையை ஆய்தம் பெற்றுள்ளது என்பதை இந்தக் குறள்வழி அறியமுடிகின்றது.

**ஆய்தத்தின் வரிவடிவம்**

தொல்காப்பியர் சார்பெழுத்துக்களைப் பற்றிக் கூறும்போது,

**“அவைதால்**
**குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் என்ற**
**முப்பாற் புள்ளியும் அவற்றோ ரன்ன”**

**(தொல். எழுத்து. நூற்பா. 02)**

என நூற்பா அமைத்தார். இதில் **‘ஆய்தம்’** என்ற முப்பாற் புள்ளியும் என்பது ஆய்தம் மூன்று புள்ளிகளால் ஆனது என்பதைக் குறிக்கும் என்பர். மாறாக **குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்** என்னும் புள்ளிப் பெற்று வழங்கும் மூன்று எழுத்துக்களும் என்று இத்தொடருக்குப் பொருள் கொண்டு ஆய்தம் புள்ளிப் பெற்று வருவது என்று எண்ணுவதும் உண்டு. பேராசிரியர் இம்மூன்றுமே புள்ளிப் பெறுவதற்கு உரியன என்று கூறுகின்றார். சிவஞான முனிவரும், அம்மூன்றும் புள்ளிப் பெறுதல் பற்றிப் பொதுப் பெயராக **‘முப்பாற் புள்ளியும்’** என்ற மூன்றையும் புள்ளிப் பெறுவனவாகவே குறிப்பிடுகின்றார். இதனை மறுக்கும் வெள்ளைவாரணர், மூன்றும் புள்ளிப் பெறுதல் காரணமாக முப்பாற் புள்ளி எனப்பட்டன. எனின், **எகர, ஒகரம்** புள்ளிப் பெறுதல் காரணமாகப் புள்ளி என வழங்கப்டாமையானும் ஆய்தத்துக்கு முப்பாற் புள்ளி அல்லது வேறு வடிவின்மையானும், குற்றியலிகர உகரங்களையாண்டும் புள்ளி என்ற பெயரால் எடுத்தாளாமல் மெய்யோடு இயைதல் முதலாக உயிர் இயல்பில் வைத்து உணர்த்தலானும், அக்கூற்றுப் பொருந்தாது[5] என்று கூறுகின்றார். நச்சினார்க்கினியர், ஆய்தம் என்ற ஓசைதான் அடுப்புக் கூட்டுப் போல மூன்று புள்ளி வடிவிற்று என்பது உணர்த்தற்கு ஆய்தம் என்ற **‘முப்பாற் புள்ளியும்’** என்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டு எழுதுப இதற்கு வரிவடிவு கூறினார். ஏனை ஒற்றுகள் போல உயிர் ஏறாது ஓசை விகாரமாய் நிற்பதொன்று ஆகலின் என்று கூறுகின்றார்.[6] நச்சினார்க்கினியர், ஆய்தம் என்ற ஓசைதான் அடுப்புக் கூட்டுப் போல மூன்று புள்ளி வடிவத்தை உணர்த்துவதற்கு ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும் என்றனர். இது தன்னுடைய கால எழுத்து மொழியைப் பின்பற்றியதாகும். அதாவது இன்று எழுதுவது போல நச்சினார்க்கினியர் காலத்தில்

எழுதப்பட்டது என்பதேயாகும். நச்சினார்க்கினியரின் இந்தக் கருத்தைச் சிவஞான முனிவர் ஒத்துக் கொள்ளவில்லை.[7] சிவஞானமுனிவர், முதற் சூத்திர விருத்தியில், குற்றியலிகரம், பொதுப்பெயராக **முப்பாற் புள்ளி** என்பது கூறப்பட்டதாக விளக்கியுள்ளார். இந்தக் கருத்தை ஆதரித்துச் சுப்பிரமணிய சாஸ்திரியும் சிவஞான முனிவரை மேற்கோள் காட்டுகின்றார். ஆனால் நச்சினார்க்கினியர் சிவஞான முனிவர் கருத்துத் தவறு என்று குறிப்பிடவில்லை.. வேங்கடராசுலு ரெட்டியார் நச்சினார்க்கினியரை மறுத்து, சிவஞான முனிவர் கருத்தை ஆதரித்தாலும் ஆய்தம் புள்ளிவிட்டு எழுதப்பட்டு இருக்கலாம் என்று கருதுகின்றார். வெள்ளைவாரணார் சிவஞான முனிவர் கருத்தை ஒத்துக்கொள்ளவில்லை.[8]

காசக்குடி பட்டயத்துள் இருக்கும் என்ற வடிவத்தைச் சுட்டிக் காட்டினாலும், நச்சினார்க்கினியர் கருத்து தொல்காப்பியர்க்கு உடன்பாடு என்றே கொள்கின்றார். **பழங்காலக் கல்வெட்டுகளில் ஆய்தம் காணப்படவில்லை. 8 ஆம் நூற்றாண்டு முற்பட்ட கல்வெட்டுகளில் இல்லை.**எனவே நச்சினார்க்கினியர் கருத்து தொல்காப்பியர் கால உண்மையாகக் கொள்ள முடியாது. மேலும், அவரே இக்காலத்தார் **'நடுவ வாங்கி இட்டு எழுதுப'** என்று குறிப்பிடுகின்றார். இது எந்த முறையைக் குறிக்கிறது என்பது சரியாகத் தெரியவில்லை.[9] ஆய்தத்தைக் குறிக்கும்போது, தொல்காப்பியர் அதள் புள்ளி வடிவத்தைக் கூறகின்றார். **'குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி'** (தொல். எழுத்து, நூற். எண். 38), **'நிற்றல் வேண்டும் ஆய்தப் புள்ளி'** (தொல். எழுத்து, நூற். எண். 391), என்னும் நூற்பாவின்வழி ஆய்தம் புள்ளிப் பெற்று வருவது புலனாகின்றது. ஆனால், குற்றியலுகரமும், குற்றியலிகரமும் புள்ளிப் பெற்று எங்கும் வருவதாகத் தெரியவில்லை. எனவே முப்பாற் புள்ளி என்பது ஆய்தத்தின் மூன்று புள்ளி வடிவமாக அமைந்த தன்மையைக் குறிப்பது என்றே பொருள் கொள்ளுதல் வேண்டும்.

கி.பி. 800 இல் ஆண்ட நந்திவர்மன் காலத்துக் காசக்குடி செப்பேட்டில், மேலும் கீழும் புள்ளியைக் கொண்ட பிறை வடிவம் பெற்றிருந்ததாக அறியப்படுகின்றது. கி.பி. 905 இல் எழுந்ததாகக் கருதப்படும் திருச்செந்தூர்க் கல்வெட்டில், ஆய்தம் வகுத்தல் குறி வடிவம் பெற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது. இவையே அன்றி **வ, கூ** போன்ற வடிவங்களும், ஆய்தத்துக்கு வழங்கியதாக அறிஞர் கூறுகின்றனர். ஆனால் இன்றுவரை தமிழ் நெடுங்கணக்கில், ஆய்தம் முக்கூட்டு அடுப்பு வடிவமாக வழங்கி வருகின்றது. புள்ளிகளால் மட்டுமே அமைந்த ஒரே எழுத்து ஆய்தமேயாகும். ஆனால் அது தனிநிலை என்று பெயர் பெற்றிலுருக்கலாம். எனவே மூன்று புள்ளியே, ஆய்தத்தின் தொன்மையான வடிவமாகக் கருதலாம்.

**இலக்கண நூல்கள் குறிப்பிடும் ஆய்தத்தின் பிறப்பிடம்**

ஆய்தம் பிறக்கும் இடம் பற்றி இலக்கண நூலும், மொழி நூலும் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கின்றனர். ஆய்தம் மற்ற இரண்டு சார்பெழுத்துக்களைப் போல தத்தம் சார்பிற் பிறக்கும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

> **"சார்ந்துவரின் அல்லது தமக்கியல்பு இலஎனத்**
> **தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்**
> **ஓத்த காட்சியின் தம்மியல்பு இயலும்"**
> **(தொல். எழுத்து, நூற். எண். 101)**

எனினும் இலக்கண ஆசிரியர்களும், உரையாசிரியர்களும் ஆய்தத்துக்குத் தனிப் பிறப்பிடம் கூறுகின்றனர்.

> **"ஆய்தக்குகு இடம்தலை அங்கா முயற்சி**
> **சார்பெழுத்து எனவும் தம்முதல் அனைய"**
> **(நன். எழுத்து. நூற். எண். 32)**

என்னும் நன்னூல் நூற்பா, ஆய்தம் பிறத்தற்கு இடம் தலை என்று கூறுகின்றது. நேமிநாதமும் ஆய்தம் தலையை இடமாகக் கொண்டு தோன்றும் என்கின்றது. **நெஞ்சு ஓசையின் அங்காந்து இயலும்** என இலக்கண விளக்கம் சுட்டுகின்றது. முத்து வீரியம் ஆய்தம் உந்தியை இடமாகக் கொண்டு பிறக்கும் என பொருள்கொள்கின்றது. **'உந்தி தனிநிலை உற்று அங்காந் தியலும்'**என நச்சினார்க்கினியர் ஆய்தம் நெஞ்சினை இடமாகக் கொண்டு பிறக்கும்[10] என்கின்றார். தொல்காப்பியர் பிறப்பியலில்,

> **"உந்நி முதலா முந்துவளி தோன்றித்**
> **தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்"**
> **(தொல். எழுத்து, நூற். 83 )**

என்ற வரிகளில் தலையை, எழுத்து பிறத்தற்குரிய இடங்களுள் ஒன்றாகக் கூறியுள்ளார். நன்னூலாரும், **"ஆய்தக் இடம்தலை அங்கா முயற்சி"(நன். எழுத்து. நூற். எண்.** 32) என்கின்றார். இல்லாறு இலக்கண நூலாரும் எழுத்து பிறக்கும் இடங்களில் ஒன்றாகத் தலையைக் கொண்டது உடல் நூலுக்கும், ஒலிநூலுக்கும் பொருந்துவதாய்த் தோன்றவில்லை[11] என்று நேவநேயப் பாவாணரின் கூற்றாகும். ஆபர்கிராம்பி என்னும் மொழிநூல் அறிஞர் ஏறக்குறைய தொல்காப்பியர் கூறுவது போலவே

தலையை எழுத்துப் பிறக்கும் இடங்களில் ஒன்றாகக் கருதுகின்றார்.[12] இவ்வாறு எழுத்தின் பிறப்பிடமாகத் தலையை அவர் குறிப்பிடுவது இந்திய முறையில் அமைந்த சொற்பிரயோகம் ஏற்றதே காரணமாக இருக்கலாம் என ஆலன் என்னும் மொழிநூல் அறிஞர் கருதுகின்றார். இன்றைய மொழி நூலார் தலை என்னும் சொல் குறிப்பிடுவது, வாயுறையும் மூக்கறையும் சேர்ந்த பகுதி அதாவது தொண்டைக்கு மேலுள்ள பகுதி[13] என்று முருகையன் தம் தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை என்னும் கட்டுரையில் விளக்கம் தருகின்றார்.

### ஆய்தத்தின் ஒலி

தொல்காப்பியர் ஆய்தத்தை **'இசைமை'** என்னும் சொல்லால் குறிப்பிடுகின்றார். **"ஈறியல் மருங்கிலும் இசைமை தோன்றும்" (தொல். எழுத்து, நூற். எண். 39)** ஆய்தம் இசையையும் உருவையும் சுட்டிக்காட்டத் தோன்றும் என்பது தொல்காப்பியரின் கருத்து என்பதை,

> **"இசையினும் உருவினும் அருகித் தோன்றும்**
> **மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா**
> **ஆய்தம் அ∴காக் காலையான"**
>
> **(தொல். எழுத்து, நூற். எண். 40)**

என்னும் நூற்பாவால் அறியமுடிகின்றது. மேலும் தொல்காப்பியர் வண்ணம் என்பதைச் செய்யுளின் உறுப்புகளுள் ஒன்றாகக் கூறுகின்றார். அவர் கூறும் இருபது வண்ணங்களுள் ஒன்று **'நலிபு வண்ணம்'** எனப்படும். அந்நலிபு வண்ணம் ஆய்த எழுத்துக்கள் பயின்று வரப்பெறும் என்பதை, **'நலிபு வண்ணம் ஆய்தம் பயிலும்' (தொல். பொருள், நூற். எண். 1479)** என்னும் நூற்பா விளக்குகின்றது.

> **"ஓய்தல் ஆய்தல் நிழத்தல் சாஅய்**
> **ஆவயின் நான்கும் உள்ளதன் நுணுக்கும்"**
>
> **(தொல். சொல். நூற். எண். 813)**

என்னும் தொல்காப்பிய நூற்பா **'ஆய்தம்'** என்னும் சொல் **உள்ளதன் நுணுக்கம்** என்னும் பொருளைக் குறிப்பதாகும். தொல்காப்பியர் ஆய்தம் பயிலும் வண்ணத்தை **'நலிபு வண்ணம்'** என்றமையாலும், ஆய்தம் என்பது உள்ளதன் நுணுக்கம் என்று பொருள்படும் என்றமையாலும் ஆய்தம் ஓர் உரைவொலியாக அல்லது நலிவொலியாக இருந்திருக்கலாம்[14] என தி.முருக ரத்தினம் கூறுகின்றார்.

தனிவல்லெழுத்து வலிவொலியாக அமைய ஆய்தம் சார்ந்த வல்லெழுத்து நலிவொலியாக அமைந்திருத்தல் வேண்டும். தொல்காப்பியர் காலத்தில் வல்லெழுத்துகளில் உயிர்ப்பொலி, குரலொலி வேறுபாடு இருந்திருக்காது. ஆனால், வலிவொலி, வேறுபாடு ஆய்தத்தின் துணையால் இந்திருக்கலாம். ஆய்தம் சார்ந்த வண்ணத்தைத் தொல்காப்பியர் **நலிபு வண்ணம்** என்று கூறியதற்கும் பொருந்துமாறு இது அமைந்துள்ளது என்பது அவர் கருத்தாகும். இன்று எ∴கு போன்ற சொற்களில் ஆய்தம் அடிநா அடி அண்ண உரசொலியாக இருப்பதால், ஹகரம் போல ஒலிப்பது என்றும், இது செய்யுளில் மட்டும் வருவது, இலக்கண ஆசிரியரின் கண்டுபிடிப்பு[15] என்று இராபர்ட் கால்டுவெல் குறிப்பிடுகின்றார். சுப்பிரமணிய சாஸ்திரியும் கூய்ப்பரும் ஆய்தம் வடமொழி விசர்க்கத்தோடு ஒப்புமை உடையது[16] என்கின்றனர். தெ.பொ. மீனாட்சி சுந்தரம், இப்பொழுது வழங்கும் ஆய்தத்தை அடுத்து வரும் வல்லொலிக்கு இணையான இரட்டை உரசொலியாக அதாவது அறுவகைப்பட்ட இரட்டை உரசொலியாகக் கருதுகின்றார். கூய்ப்பர் ஆய்தமும் வல்லெழுத்தும், அடுத்தடுத்து வரும் இரட்டை வல்லெழுத்தின் மாற்று உச்சரிப்பாகப் பொருள் கொள்கின்றார். யாப்பருங்கலப் பழைய உரையில்,

> **"ஒண்டமிழ்**
> **நாதர் ஆயவர் நாநலிபு ஓசையிற்கு**
> **ஏது என்று எடுத்து ஓதினார்"**
>
> **(யாப்பருங்கல விருத்தி. நூற். 03)**

என்னும் பாடல், **'ஆய்தம் நலிபு ஓசையைக் குறிக்கும் ஒரு குறியீடு'** என்று தொல்காப்பியர் கருதினார். செய்யுளில் ஆய்தம் மிகுந்து வந்தால் அதனை **'நலிபு வண்ணம்'** எனத் தொல்காப்பியம் **(தொல். பொருள். நூற். 1419)** கூறுகின்றார். எனவே வல்லொலிகள் உரசொலியாக மாறுவதைக் குறிப்பதற்காக இடப்பட்ட குறியீடு ஆய்தம் என்று கொள்ள வேண்டும் [17] என. செ.வை. சண்முகம் கூறுகின்றார்.

ஆய்தல் என்ற உரிச்சொல் அடியாகப் பிறந்தது **ஆய்தல், ஓய்தல்,** என்பதால் அது நுணகிய ஓசை உடைய எழுத்து என்னும் பொருளில் வழங்கி இருக்கக் கூடும்[18] என வெள்ளைவாரணன் குறிப்பிடுகின்றார். அய்தம் என்பது அடிநிலை ஒலியன் அல்லது ஆர்க்கி ஒலியன் என்றும், ஒலிக் கூறுகள் முழுமையாக வரையறுக்கப்படும். இதுபோன்ற ஆய்தமும் அடுத்து வரும் ஆறு வல்லெழுத்துக்களின் அடிப்படையில் ஆறு வகையாக ஒலிக்கப்பெறும்[19] என்றும் பாலசுப்பிரமணியன் கூறுகின்றார்.

தி, முருகரத்தினம், அஹ் என்னும் ஒலிக்கு ஒரே ஒலிப்பிட ஒலிப்பு முயற்சியைத்தான் குறிப்பிட முடியும். அது எ.ஃகு என்பதில் போன்று ககரத்தின் முன் வழங்கும் ஒலியாகும். ஆய்தம் ஒரு காலத்தில் மற்ற வல்லெழுத்துக்களின் முன்பெறும் ஒலியினை மட்டும் பெற்றிருத்தல் வேண்டும். இதன் காரணமாகத்தான் பழங்சுவடிகளில் ஆய்தம் **'கு'** அல்லது **'கூ'** எனவும் எழுதப்பட்டிருப்பதாக[20] தி. முருக ரத்தினம் குறிபபிடுகின்றார்.

ஆய்தம் வல்லெழுத்தைச் சார்ந்தே வருகின்றது. இது சார்ந்து வரும் வல்லெழுத்தை உரசெழுத்து ஆக்கி விடுகின்றது. ஆய்தத்தைத் தொடர்ந்த வல்லெழுத்து ஒரு வகையாகவும், ஆய்தத்தைத் தொடராத வல்லெழுத்து ஒரு வகையாகவும் ஒலிக்கின்றன. ஆனால் வல்லெழுத்தில் இருவகை மாற்றொலிகள் ஏற்படுகின்றன. எனவே ஆய்தத்தை முதலெழுத்தாகக் கொள்ளமுடியாது. இன எழுத்து இன்மையால் கூட பொருள் கொள்ள இயலாது. சார்பெழுத்துக்களின் உச்சரிப்பு அவற்றுக்கு முன் அல்லது பின்வரும் மெய்களிலேயே தங்கியிருக்கிறது. ஆய்தம் சில மெய்யொலிகளின் திரிபு எனலாம்.

அவ் -- து – அ.ஃது

கள் -- தீது – க.ஃடீது

அல் -- தினை – அ.ஃறிணை

தொடர்ந்து வரும் வல்லின மெய்யிலேயே ஆய்தத்தின் உச்சரிப்பு தங்கியள்ளது[21] என ஆ. வேலுப்பிள்ளை குறிப்பிடுகின்றார். ஆனால்,

**"பத்தென் கிளவி ஒற்றிடைக் கெடுவழி**
**நிற்றில் வேண்டும் ஆய்தப் புள்ளி"**

**(தொல். எழுத்து. நூற். 390)**

என்னும் நூற்பா **'பத்து'** என்பது **'ப.ஃது'** என ஆகும் என்னுரைக்கிறது. எனவே ஆய்தம் மாற்றொலி என்பது தவறன்று. ஆனால் பாலசுப்பிரமணியன், குழ்நிலை அடுத்து வரும் தனி வல்லெழுத்துடன் ஆய்தம் வேற்று நிலையில் நிற்பதைக் காட்டும் எடுத்துக்காட்டுகள் கொடுத்துள்ளார். **'அ.ஃடு'** (புறம். 319: 4),**'அட்டு'** (புறம். 704: 3),**'அடு'** (புறம். 8: 5),**'எ.ஃகு'** (புறம். 26: 5),**'எக்கர்'** (புறம். 212: 23), **'எகினம்'**(அகம். 34: 12),**'அ.ஃகி'** (தொல் 1129 1),**'அக்கின்'** (தொல் 128: 2) முதலானவற்றை எடுத்துக்காட்டி, இவை ஆய்தம் இரட்டித்த வல்லொலியனின் மாற்றொலி அல்ல. அதனினின்றும் வேறுபட்ட தனி ஒலியனே என்று தருகின்றார்.[22] இதன்படிப் புணர்ச்சியின் அடிப்படை வடிவத்தில் ஆய்தம் அமைந்திருக்கிறது. எனவே தொல்காப்பியர் கருத்துப்படி தனி எழுத்து ஆகக் கொள்ளத்தான் வேண்டும்[23] என செ. வை. சண்முகம்முடிவு கூறுகின்றார்.

**ஆய்தத்தின் எண்ணிக்கை**

ஆய்தம் **'எட்டு'** என்று நன்னூல் கூறுகின்றது. **'ஒன்று'** என்று இலக்கண விளக்கம் கூறுகின்றது. வல்லின வகையான் இயல்பாக வந்த ஆய்தம் ஆறனோடு புணர்ச்சி விகாரத்தான் வரும் ஆய்தமும், செய்யுள் விகாரத்தால் வரும் ஆய்தமும் கூட்டி எட்டாய் வரும் என்பது சங்கர நமச்சிவாயர் உரையாகும். ஒன்று என்பது ஒலியன் நிலையைக் குறிப்பதாகும். ஆனால் ஒலி நிலையில் ஆறு என்றே கருதுவது பொருந்தும் எனலாம். எட்டு என்பது இப்பொருந்தாது[24] என்று செ.வை. சண்முகம் கூறுகின்றார். இக்கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும்.

**ஆய்தக் குறுக்கம்**

தொல்காப்பியர், ஆய்தக்குறுக்கம் பற்றிப் பேசவில்லை. ஆனால்,

**"உருவினும் இசையினும் அருகித் தோன்றும்**
**மொழிக்குறிப் பெல்லாம் எழுத்தின் இயலா**
**ஆய்தம் அ.ஃகாக் காலை யான"**

**(தொல். எழுத்து, நூற். எண். 40)**

என்னும் தொல்காப்பிய நூற்பா ஆய்தம் அ.ஃகும் காலையும் உண்டு என உடன்படுவது போல அமைந்துள்ளது. இதற்கு எடுத்துக்காட்டுகள் தரும் நச்சினார்க்கினியர்,**'க.ஃறென்னும் கல்லதர் அத்தம்'** என நிறத்தின்கண்ணும் க.ஃறென்னும் தண்டோட்டுப் பெண்ணை என இசையின் கண்ணும் வரும் என விளக்கிச் செல்கின்றார். இங்குக் **'கறுப்பு'** நிறத்தைக் குறிக்கக் **'கறு'** என்னும் சொல்லும், காற்றின் ஓசையைக் குறிக்கச் **'சுறு'** என்னும் சொல்லும் வருகின்றன. நன்னூல், **'லளஈற்றியையின் ஆய்தம் அ.ஃகும்'(நன். எழுத்து. நூற். 42)** என ஆய்தக் குறுக்கம் வரும் இடம் பற்றிக் கூறுகின்றது. அதோடு அவ்ஆய்தம் குறுக்கம் கால் மாத்திரை அளவை உடையது என்றும் கூறுகின்றது. ஆனால் **தொல்காப்பியர் குறுக்கம் பெறும் மாத்திரையின் அளவைக் கூறவிலை.** நேமிநாதம் முதலிய பிற்கால இலக்கண ஆசிரியர்களும், குற்றாய்தம் என்னும் சார்பெழுத்தைப் பற்றிப் பேசுகின்றனர். ஆய்தம் ஒலியின் அளவே குறுகியது. அதனினும் குறுகியது ஆய்தக் குறுக்க ஒலி எனவே குறிப்பிடவில்லை[25] என தி. முருகரத்தினம் சுட்டுகின்றார்.

முடிவுரை

ஆய்தம் என்னும் சொல் **'சார்ந்தது'** என்னும் பொருளுடையதாகும். **'ஆய்தம்'** என்பது **'ஆய்தல்'** என்னும் தமிழ்ச்சொல்லோடு உறவு உடையது என்றும், நேமிநாதம் ஆய்தத்தை **முதல் எழுத்து** என்று குறிப்பிடுகின்றது. ஆய்தம் எழுத்தல்ல, அது ஓர் அடையாளம் என்று தெ. பொ. மீனாட்சிசுந்தரம் கூறுகின்றார். அகத்தியம் ஆய்தத்தை **முதல் எழுத்து** எனவும், **சார்பெழுத்து** எனவும் உணர்த்துகின்றது. நச்சினார்க்கினியர் ஆய்தத்தை **முதல் எழுத்து** என்றும் **மெய்யெழுத்து** என்றும் குறிப்பிடுகின்றார். பேராசிரியர் **குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்** ஆகிய மூன்றுமே புள்ளிப் பெறுவதற்கு உரியன என்று குறிப்பிடுகின்றார். பழங்காலக் கல்வெட்டுகளில் ஆய்தம் காணப்படவில்லை. கி.பி. 800 இல் ஆண்ட நந்திவர்மன் காலத்துக் காசக்குடி செப்பேட்டில், மேலும் கீழும் புள்ளியைக் கொண்ட பிறை வடிவம் பெற்றிருந்ததாக அறியப்படுகின்றது. கி.பி. 905 இல் எழுந்ததாகக் கருதப்படும் திருச்செந்தூர்க் கல்வெட்டில், ஆய்தம் வகுத்தல் குறி வடிவம் பெற்றிருந்ததாகக் கூறப்படுகின்றது. ஆய்தம் முக்கூட்டு அடுப்பு வடிவமாக வழங்கி வருகின்றது. நன்னூல் ஆய்தம் பிறப்பிற்கு இடம் தலை என்று கூறுகின்றது. நேமிநாதமும் ஆய்தம் தலையை இடமாகக் கொண்டு தோன்றும் என்கின்றது. **'நெஞ்சு ஓசையின் அங்காந்து இயலும்'** என இலக்கண விளக்கம் சுட்டுகின்றது. முத்து வீரியம் ஆய்தம் உந்தியை இடமாகக் கொண்டு பிறக்கும் என பொருள்கொள்கின்றது. **'உந்தி தனிநிலை உற்று அங்காந் தியலும்'**என நச்சினார்க்கினியர் ஆய்தம் நெஞ்சினை இடமாகக் கொண்டு பிறக்கும் என்கின்றார். ஆய்தம் **'எட்டு'** என்று நன்னூல் கூறுகின்றது. **'ஒன்று'** என்று இலக்கண விளக்கம் கூறுகின்றது.

அடிக்குறிப்புகள்

1. தெ. பொ. மீனாடசி சுந்தரம், தமிழ்மொழி வரலாறு, ப. 45.
2. சிவப்ரியா, மொழியியல், ப. 86.
3. நச்சினார்க்கினியர் (உரை. ஆ.), தொல். எழுத்து, 101.
4. சிவஞானமுனியவர், தொல்காப்பியச் சூத்திர விருத்தி, ப. 36.
5. சிவஞானமுனிவர், மு.நூற், ப. 27.
6. நச்சினார்க்கினியர் (உரை. ஆ.), தொல். எழுத்து, 01.
7. சிவஞானமுனிவர், மு.நூற், ப. 27.
8. சிவஞானமுனிவர், மு.நூற், ப. 28.
9. நச்சினார்க்கினியர் (உரை. ஆ.), தொல். எழுத்து, 38.
10. நச்சினார்க்கினியர் (உரை. ஆ.), தொல். எழுத்து, 101.
11. தொல்காப்பியர் பிறப்பியல், நூற். 01.
12. Aber Crombie, Elements of General Phonetics, P.21.
13. முருகையன், தொல்காப்பியரின் ஒலியியல் கொள்கை, ஆய்வுகோவை, ப. 45.
14. தி. முருகரத்தினம், தமிழ் எழுத்தியல் அன்றும் இன்றும், ப. 45.
15. இராபர்ட் கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், ப. 45.
16. தெ. பொ. மீனாடசி சுந்தரம், தமிழ்மொழி வரலாறு, ப. 45.
17. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப.45.
18. வெள்ளைவாரணார் (உரை. ஆ.), தொல். எழுத்து. ப. 45
19. பால. சுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு, ப. 85
20. தி.முருகரத்தினம், மு.நூ, ப. 45.
21. ஆ. வேலுப்பிள்ளை, தமிழ் வரலாற்றிலக்கணம், ப. 56.
22. பாலசுப்பிரமணியன், மு.நூ,, ப. 45.
23. செ. வை. சண்முகம், எழுத்திலக்கணக் கோட்பாடு, ப.46.
24. செ. வை. சண்முகம், மு.நூ. ப. 48.
25. தி.முருகரத்தினம், மு.நூ, ப. 48.

# சங்ககால அறம் சார்ந்த அரசியலும் இன்றைய அரசியலும்

**முனைவர் சு. பால்மோகன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*தி.தெ.மா.நா.ச. கல்லூரி, தெ. கள்ளிக்குளம்*
*மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி*

**ஆய்வுச் சுருக்கம்**
சங்ககாலத் தமிழகத்தை சேர, சோழ, பாண்டியர் ஆண்டகாலம் என்றும் இதனை கி.மு.3 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலம் என்றும் கூறுவர். அப்போது தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் அறம் சார்ந்த அரசியலை தன்னுடைய ஆட்சியின் உயிராக நினைத்து நாட்டு மக்களை வருத்தாமல் ஆட்சி புரிந்தனர். மன்னன் அரசவையில் உள்ள அனைவரும் மன்னனுக்கு தேவையான அறக்கருத்துக்களை நல்கினர்.

**“அறன்அறிந்து ஆன்றுஅமைந்த சொல்லான் எஞ்ஞான்றும்**
**திறன்அறிந்தான் தேர்ச்சித் துணை”** (குறள். 635)

என்ற குறள் வழி அறியமுடிகிறது. பண்டையத் தமிழ் அரசர்கள் தமக்கென வாழாமல் தன் நாட்டு மக்களுக்காக வாழ்ந்தனர் ஆனால் இன்றைய அரசியல்வாதிகள் தன்னுடைய வசதிக்காகவும் தன் சந்ததியை வளர்ப்பதற்காகவும் அரசியலை பயன்படுத்துகின்றனர் அதனால் தான் அறம்சார்ந்த சங்ககால அரசியலையும் இன்றைய அரசியலையும் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளேன்.

## ஆய்வு முன்னுரை

சங்ககால மக்களின் வாழ்வியலை படம்பிடித்துக் காட்டும் காலக்கண்ணாடி சங்க இலக்கியம். பண்டையத் தமிழர்களின் அரசியல், ஆட்சி சிறப்பு, வீரம், ஈகை, விருந்தோம்பல், காதல், இல்லறம், கல்வி ஆகிய வாழ்வியல் கூறுகளை அக்காலக் கட்டத்தில் தோன்றிய இலக்கியம் மூலம் அறியமுடிகிறது. அதன் அடிப்படையில் நம்முன்னோர்கள் போற்றிய அரசியலை இன்றைய அரசியலுடன் ஒப்பிட்டு ஆராயப்பட்டுள்ளது.

## அரசியல் விளக்கம்

அரசியல் என்ற சொல் கிரேக்க மொழியில் இருந்து உருவானது. ‘‘அரசியல் என்பது மக்கள் குழுக்களில் முடிவெடுக்கும் முறையைக் குறிக்கும் சொல். பொதுவாக அரசமைப்புகளின் செயல்பாட்டைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டாலும் அரசியல் என்பது உண்மையில் அலுவலகம், கல்வி மற்றும் சமய நிறுவனங்கள் உட்பட அனைத்து மனித குழுக்களின் ஊடாடல்களிலும் காணப்படுகிறது’’. (ta.m.wikipedia.ary) தத்துவவாதி சார்லஸ் பிலாட்பெர்க்கின் வரையறைப்படி ‘‘அரசியல் என்பது முரண்பாடுகளுக்கு உரையாடல் மூலம் பதிலளித்தல்’’ என்பதாகும். அரசியல் பிழைத்தோர்க்கு அறமே கூற்றாகும் என்பது சிலப்பதிகாரத்தில் அரசியல் கூற்று. அரசியல் பொருளாதாரம் சமூகம் மனித மேம்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடையது. அரசியல் நிலைத்தன்மையே நாட்டின் பொருளாதாரத்திற்கு உந்துசக்தியாக அமையும். அதனால் தான் மக்களிடம் அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக திருவள்ளுவர்,

**“முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**
**சிறையென்று வைக்கப் படும்”** (குறள். 388)

என்று நல்லாட்சியே செய்யும் மன்னனை தெய்வமாக போற்றுகிறார். ‘‘பல சமூகங்கள் அல்லது வர்க்கங்களை உள்ளடக்கிய ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதியானது மைய அமைப்புடைய அரசாங்கத்தின் மூலம் வரிவிதித்தல் படைத்திறன் கொண்டிருத்தல், சட்டங்களை இயற்றி அவற்றின்படி அனைவரையும் நடக்கச்செய்தல், குற்றமிழைப்போருக்கு நீதித்துறை மூலம் தண்டனை விதித்தல் முதலான பணிகளைக் கொண்டது’’ என அரசின் பணிகளை பக்தவத்சல பாரதி விளக்குகிறார். சங்க காலங்களில் அரசின் இயல்புகளாக அவன் மேற்கொள்ளவேண்டிய நெறிமுறைகள், கடமைகள், நாட்டின் சிறப்பு, மக்களின் சிறப்பு, இறைமாட்சி, கல்வி, அறிவுடைமை குற்றங்கடிதல், காலம் அறிதல், பெரியோரைத் துணைக்கோடல், இடன்அறிதல், செங்கோண்மை, கொடுங்கோண்மை, ஊக்கம் உடைமை ஆகிய பண்புகளில் சிறந்து விளங்குபவன் தான் சிறந்த அரசனாக இருக்கமுடியும் என்று அரசியலுக்கு விளக்கம் தருகிறது சங்க கால இலக்கியங்கள்.

## அறம் சார்ந்த அரசியல்

இந்நிலவுலகில் நீ நல்ல அரசனாக புகழ்பெற்று வாழவிரும்பினால் அதற்கான தகுதி என்னத் தெரியுமா உலக உயிர்கள் உணவில்லாமல் வருந்தும்போது தானும் அவர்களுக்காக வருந்தி அவர்கள் உயிர் வாழ்வதற்குத் தேவையான உணவைக் கொடுப்பது முதன்மையான அறமாக போற்றப்படுகிறது. சங்க கால மன்னர்கள் இம்மானுட வாழ்வில் உணவு கொடுத்தவர்கள் உயிரைக்

கொடுத்தவர்கள் என்ற அறம்சார்ந்த அரசியலை தன்னுடைய உயிராகக் கருதியவர்கள் என்பதை,

**“நீரின் றமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப் படுவது நிலத்தொடு நீரே**
**நீரும் நிலனும் புணரி யோரீண்டு**
**உடம்பு உயிரும் படைத்திசனோரே”**

(புறம் 18)

சங்க கால அரசர்கள் கல்வி அறிவு படைத்தவராக விளங்கினர் அதனால் தான் தன்னுடைய நாட்டில் மக்கள் கல்வியறிவு உடையவராக இருக்க வேண்டும் எனக் கருதினர்.

**“உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்**
**பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே”**

(புறம் 183)

கல்வியின் இன்றிமையாமை அரசனால் எவ்வாறு உணரப்பட்டுள்ளது என்பதை அறியமுடிகிறது. உலகம் ஒன்று மனித குலம் ஒரே குலம் என்பது தமிழர் வகுத்த அறக்கொள்கை இக்கொள்கையை கடைப்பிடித்தல் உலகத்தில் போர் என்றஒன்று இருக்காது என்பதை கணியன் பூங்குன்றனாரின் பாடல்வழி அறியமுடிகிறது.

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா**
**நோதலும் தணிதலும் அவற்றோரன்ன**
**சாதலும் புதுவது அன்றே வாழ்தல்**
**இனிதென மகிழ்ந்தன்றும் இலமே”**

மேலும் இவ்வுலகில் நல்ல மாந்தர் யார், நல்ல மன்னன் யார் என்னுடைய வாழ்வில் பிரிவு என்ற துயரம் இல்லாமல் என் இல்லற வாழ்வு நல்லறமாக இருக்க காரணம் என் நாட்டின் அறம்சார்ந்த ஆட்சிதான் என்று தன்னுடைய நாட்டின் அரசனை தலைவி பாராட்டுவதை நற்றிணை பாடல் வழி அறியமுடிகிறது.

**“பொன்னும் கொள்ளார் மன்னர் நன்னுதல்**
**நாம் தம் உண்மையின் உளமேஅதனால்**
**தாம்செய் பொருளன அறியார் தாம் கசிந்து**
**என்றூழ் நிறுப்ப நீளிடை ஒழியச்**
**சென்றோர் மன்ற நம் காதலர் என்றும்**
**இன்ன நிலைமைத்து என்ப**
**என்னோடும் அறிப இவ்வுலகத்தானே”**

(நற்:226)

கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி என்ற மன்னன் மக்களாகிய நாம் பின்பற்றவேண்டிய நல்லொழுக்கங்களை கூறியுள்ளார். அதன்படி வாழ்ந்தால் சான்றோர்களாக வாழ முடியும் என்று அதன்படி வாழ்ந்துக்காட்டி அறம் சார்ந்த அரசியலை தன்னுடைய முதல் அறமாக போற்றியுள்ளார். அதனால் தான் இந்த உலகம் நிலைபெற்று இருப்பதற்கு காரணம் தனக்கு என வாழாமல் பிறர்க்கு என வாழும் மக்கள் நிலைபெற்று இருப்பதுதான் உண்மையான காரணம் என்ற உண்மையை எடுத்தியம்பியுள்ளார்.

**“உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவதாயினும் இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
**துஞ்சலும் சிலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ்எனின் உயிருங் கொடுக்குவர் பழிஎனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
**அன்னமாட்சி அனையராகித் தமக்கென முயலா**
**நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே”**

(புறம் 182)

தான் தன்னுடைய பிள்ளை தன்னுடைய உறவினர்கள் என்று வாழாமல் பிற மக்களுக்காகவும் வாழ வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். மேலும் எந்த நாட்டில் அறம் சார்ந்த நல்ல வழியில் அரசியல் உள்ளதோ அந்த நாடு வளமான நாடாக மாறும் என்று ஔவையார் கூறியுள்ளார்.

**“நாடா கொன்றோ காடா கொன்றோ**
**அவலா கொன்றோ மிசையா கொன்றோ**
**எவ்வழி நல்லவர் ஆடவர்**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே”**

(புறம் 181)

ஒரு நாடானது வறுமையில்லாமலும், நோயில்லாமலும், பகையில்லாமலும் இருப்பதுதான் உண்மையில் நலமான ஆட்சி. அதனால் தான் திருவள்ளுவர்,

**“உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்**
**சேரா தியல்வது நாடு”** (குறள் 734)

மக்களின் இயல்பையும் தேவைகளையும் உணர்ந்து செயல்படும் செங்கோண்மையாக அறம் தவறாது தீயவற்றை நீக்கி சமுதாயத்தினை மேன்மையுறச் செய்தல் வேண்டும் என்கிறார்.

**“அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா**
**மானம் உடையது அரசு”** (குறள் 384)

சங்க காலத்தில் அரசர்கள் தங்களுக்கென்று உள்ள அறநெறியில் இருந்து தவறாதவர்களாய் இருந்திருக்கின்றர். அரசனுக்கு ஆலோசனை வழங்க அமைச்சர்கள் குழு இருந்தாலும் உற்ற நேரத்தில் அறநெறியை வலியுறுத்தும் பணியை புலவர்கள் செய்துள்ளனர். கொடையிலும் கைம்மாறு கருதாக் கொடை சிறந்ததாகும். இல்லோர்க்கு வேண்டுவன நல்கி அவர்களையும் தம்மால் உலகியலில் நல்லநிலையில் வாழவைப்பது தான் உண்மையான அறம் சார்ந்த மக்கள் பணி என்பதை பண்டையத் தமிழ் அரசர்கள் உணர்ந்திருந்தனர் என்பதை

"இம்மை செய்தது மறுமைக்கு ஆமெனும்
அறவிலை வணிகன் ஆய் அலன்"
(புறம் 135)

என்ற அடிகள் உணர்த்தும். ஈதலில் மிகச் சிறப்பானது பசிப்பிணி அகற்றுதல் ஆகும். பசி என்றநோய் மிக கொடியது அது எவரிடம் உள்ளதோ அவரை மிகவும் துன்புறுத்தும். அந்த கொடிய துன்பத்தை துடைப்பவனாக பண்டையத் தமிழ் அரசர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதை,

"கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
கானிய சென்ற விரவன் மாக்கள்
களிறொடு நெடுந்தேர் வேண்டினுர்கடவன்"
(புறம் 313)

**இன்றைய அரசியல்**

சங்க காலத்தில் இருந்த அறம் சார்ந்த அரசியல் காமராஜர் ஆட்சிக் காலத்தோடு முடிவுப்பெற்று தற்போது பணம் சார்ந்த அரசியலாக மாறியுள்ளது. சங்க காலத்தில் மன்னர்கள் மக்களுக்காக ஆட்சி நடத்தினார்கள். ஆனால் இன்றைய தலைவர்கள் தன் குடும்பத்திற்காக ஆட்சி நடத்துகிறார்கள். சங்க கால அரசியல் மக்கள் பணியே மகேசன் பணி என்று மக்களைத் தேடி வந்தார்கள். ஆனால் இன்று தேர்தல் நேரத்தில் மக்களைத் தேடி வரும் அரசியல்வாதிகள் அவர்கள் வெற்றி பெற்ற பிறகு அவர்களைத் தேடினாலும் கிடைப்பதில்லை. இன்றையக் காலக்கட்டத்தில் ஏழைகளுக்கு அரசியலில் இடம் இல்லை. கோடிஸ்வரர்களுக்கு தான் அரசியலில் இடம். அவர்கள் பணத்தை தண்ணியாக செலவு செய்து ஓட்டிற்கு பணம் கொடுத்து ஆட்சியில் அமர்கிறார்கள். அதன்பிறகு அவர்கள் குடும்ப நலன்தான் அரசின் நலமாக உள்ளதை அன்றாடம் நடக்கும் நிகழ்வுகள் தெளிவுப்படுத்துகின்றன. அதனால்தான் மு. மேத்தா அவர்கள் இன்றைய அரசியலை அழகாக விமர்சித்துள்ளார்,

"மயிலுக்கு போர்வை தந்தவனின்
மரபில் வந்தவர்கள்
எங்கள் மேனியில் கிடக்கும்
கந்தல் சட்டைகளையும்
கழற்றிக் கொண்டுபோகிறார்கள்"

இன்றைய காலக்கட்டத்தில் ஓட்டுக்கு பணம் கொடுப்பதும், பணம் வாங்குவதும் பழக்கமாகிவிட்டது. தேர்தல் அறிக்கை வந்த உடனே நம்ம வீட்டில் 7 ஓட்டுகள் அப்போ இவ்வளவு பணம் வந்துரும் என்ற எண்ணம் தான் மக்கள் மனதில் ஓடிக் கொண்டிருக்கிறது. மேலும், ஒரு காலத்தில் நல்லவர்தான் வெற்றி பெறமுடியும் என்று இருந்த அரசியல் பணம் இருந்தால் தான் வெற்றி பெறமுடியும் என்ற நிலை இப்போது உள்ளது. ஆனால் சங்க கால அரசியல் அறம் சார்ந்த அரசியல். அதைக் கற்ற காமராஜரும் தன்னுடைய நலனைவிட மக்கள் நலனை பெரிதாக எண்ணினார். தன்னுடைய நலனை பெரிதாக நினைக்கவில்லை அவருடைய எளிமையை கண்டு வியந்த கண்ணதாசன்,

"சீராட்டும் தாய் தவிரச்
சொந்தமென்று ஏதுமில்லை
துணையிருக்கு மங்கையில்லை
தூய மணி மண்டபங்கள்
தோட்டங்கள் ஏதுமில்லை
ஆண்டி கையில் கூட ஓடிருக்கும்
அதுவும் உனக்கில்லையே!"

என்ற வரிகள் அரசியல் தூயவரைப் பற்றிய கண்ணதாசனின் சிந்தனை. ஆனால் இன்றைய ஆட்சியாளருக்கு அரசியல் பற்றிய புரிதல் இல்லை. நாட்டு மக்கள் நலனில் அக்கறையிலலை. தொடர்ந்து ஆட்சியைத் தக்க வைப்பதற்காகவும் மக்களை முட்டாளாக்கி அதன்மூலம் சுய அறிவில்லாத ஆட்சியை நடத்துகிறார்கள். அதனால் தான் மேத்தா,

"அமுத சுரபியைத் தான் தந்து சென்றாய்
எங்கள் கைகளில் இருப்பதோ பிச்சை
பாத்திரம்"

நம் முன்னோர்கள் நம் கையில் சுதந்திரம் என்ற அமுதசுரபியை தந்து சென்றார்கள் ஆனால் நம் மக்கள் கையில் தற்போது இருப்பது பிச்சை பாத்திரம். இப்படிப்பட்ட கயவர் கையில் தமிழகம். தமிழகம் தலை நிமிர நாட்டின் வறுமையை ஒழிப்பதற்கு பல வள்ளல்கள் தேவையில்லை. ஒரு சிறந்த அரசாங்கம் உருவாகினால் போதும் வறுமையை ஒழிக்க முடியும். மனித இனம் தீமைகளில் இருந்து விடுதலை பெற வேண்டுமானால் உண்மையான நேர்மையான அரசியல்வாதிகள் நாட்டின் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற ஏக்கம் தமிழக மக்களிடம் உள்ளது.

**முடிவுரை**

சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகளாக பாரதம் முன்னேற்றப் பாதையில் சென்றுக்கொண்டிருக்கிறது என்று கூறுகிறார்கள் ஆனால் நல்ல ஆட்சியாளர்கள் கிடைத்தால் தான் உண்மையான முன்னேற்றத்தை பெற முடியும். தமக்கு என வாழாமல் நாட்டு மக்களுக்கென வாழும் உண்மையான அரசியல்வாதிகள் உருவாக வேண்டும். அதற்கு மக்களாகிய நாமும் பணத்தை பெற்றுக்கொண்டு அயோக்கியர்களுக்கு வாக்களிக்காமல் நல்லவர் யார் என்று அடையாளம் கண்டு அவர்களுக்கு வாக்களித்து அறம் சார்ந்த அரசியல் தழைக்க வழிவகை செய்யவேண்டியது நம் கடமையாகும்.

# வளையாபதியில் வாழ்வியல் அறம்

**முனைவர் க. இராக்கு**
*இணைப்பேராசிரியர்*
*சிக்கய்ய நாயக்கர் கல்லூரி, ஈரோடு*

**ஆய்வுச்சுருக்கம்**
ஐம்பெரும் காப்பிங்களில் ஒன்றான வளையாபதி என்னும் காப்பியம் கூறும் அறக்கருத்துக்கள் மக்களுக்கு நன்மை பயப்பதோடு மட்டுமல்லாது அக்கால மக்களின் வாழ்வியலையும் அறிந்து கொள்ள ஏதுவாக அமைகிறது. அவ்வகையில் வளையாபதியில் வாழ்வியல் அறத்தைக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாய் அமைகிறது.

**திறவுச் சொற்கள்:** இல்வாழ்க்கை, மக்கட்பேறு, அடக்கம் பேணுதல், அருளுடைமை, நிலையாமை போன்றன இவ் ஆய்வுக்கட்டுரையின் திறவுச் சொற்களாக அமைகின்றன.

## வளையாபதி - காலமும் கருத்தும்

வளையாபதி சமண சமயச் சார்புடைய காப்பியம் என்ற கருத்துண்டு. இது சிந்தாமணி எழுந்த காலத்தில் எழுந்தது என்றும் கூறுவர். இதன் காப்புச் செய்யுள் சிந்தாமணிக் காப்பியத்தின் கருத்தை அடியொற்றி அமைந்துள்ளது. மேலும், காப்புச் செய்யுளின் கருத்தைக் கொண்டு வளையாபதி சீவக சிந்தாமணிக்கு முற்பட்டது என்பாரும் உண்டு. எவ்வகையாயினும் வளையாபதி எழுந்த காலம் ஆய்வுக்குரியதாகவே அமைகிறது. வளையாபதி சமண சமயம் பற்றியது. இந்நூலை இயற்றியவர் யார் எனத் தெரியவில்லை. செய்யுளின் பண்புகளைக் கொண்டு இதனை இயற்றியவர் புலமைப் பண்புமிக்க நல்லிசைப் புலவர் எனத் திண்ணமாகக் கூறலாம் எனச் சோமசுந்தரனார் தெரிவிக்கிறார். மேலும் அடியார்க்கு நல்லார், இளம்பூரணர் அரும்பதவுரையாசிரியர், பரிமேலழகர் முதலிய உரையாசியர் பெருமக்கள் வளையாபதி செய்யுளை மேற்கோளாக எடுத்திருப்பதனாலும் இந்நூல் தமிழ்மரபு மாறாத இயன்றதொரு நல்லிலக்கியம் எனவும் கூறுகின்றனர்.

## வளையாபதியில் வாழ்வியல் அறம்

### இல்வாழ்க்கை நெறி

ஆணும் பெண்ணும் இணைந்து வாழும் இவ்வாழ்கையில் அன்பின் வழி வாழும் வாழ்வு சிறந்தது என வளையாபதியில் சுட்டப்பட்டுள்ளது. இதை வள்ளுவரும், அன்பின் வழியது உயர்நிலை என்றும் "தற்காத்து தற்கொண்டார் பேணித் தகைசான்ற சொற்காத்து சோர்விலாள் பெண்" (குறள் 56) எனக் குறிப்பிட்டுள்ளமையை அறியமுடியும். மனையறம் தெய்வத் தன்மையுடையதாய்ப் பொலிவதற்குக் கற்புடைய மகளிரே காரணமாக இருந்திருக்கின்றனர். இதனை "கூட லாற்றவர் நல்லது கூறுங்காற் பாடு சான்மிகு பத்தினிக் காவதே" (வளையாபதி 7) என வளையாபதி தெரிவிக்கிறது.

### மக்கட்பேறு

இல்வாழ்க்கையின் அடுத்து மக்கட்பேறின் அவசியத்தினையும் வளையாபதி கூறுகிறது. மகப்பேறு இல்லாதவருடைய செல்வம் : பொறுமை இல்லாதவருடைய அறிவு: மணம் இல்லாத மாலை: நூல்கள் பல கற்காதவனுடைய புலமை: நல்ல நீர்நிலைகள் இல்லாத நகரம் : இவை அனைத்தும் பயனற்றாய் வெறுக்கப்பட்டது. இதில் மக்கட்பேற்றின் முக்கியத்துவமும் மக்கட்பேறு உடையார் செல்வமே பயனுடையது எனக் கூறுவது வள்ளுவரின்,

> **"மங்கல மென்ப மனைமாட்சி மற்றதன் நன்கல நன்மக்கட் பேறு"** (குறள் 60)

### அறமனை காத்தல்

மனைவியைப் பேணல்: நல்விரதம் மேற்கொண்டு வாழுதல், கடமை எனக் கொள்ள வேண்டும் என்பதும் மனைகாக்கும் மனைவியர் பேணப்பட்டனர். அவற்றைத் தன் கடமையென ஆடவர் கொண்டனர் என அறியமுடிகிறது.

### வாழ்வியல் கடமைகள்

களவு செய்யதிருத்தல், உயிர்க் கொலை, பிறரை இகழ்தல், ஆராயாமல் நட்புக் கொள்ளுதல்: பிறர் மனைவியிடம் செல்லுதல்: இவை வெகுவாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது. மேலும், பொய் கூறுதல், தீயாரொடு பழகுதல் இவை வெறுக்கப்பட்டமையும் அறிய முடிகிறது. இதனை "பொய்யன் மின்புறங் கூறன்மின் யாரையும் வையன் மின்வடி வல்லன சொல்லிநீ உய்யன் மின்னுயிர் கொன்றுண்டு வாழுநாள் செய்யன் மின்சிறி யாரொடு தீயன்மின்" (வளையாபதி 16) என்பதன் மூலம் அறியலாம்.

### விருந்தோம்பல்

உண்டி கொடுத்தலின் உயர்வாகக் குற்றமில்லாத தானப்பொருள்கள் எத்துணையானாலும் அவையெல்லாம்

உண்ணும் சோற்றிற்கு நிகராகாது எனக் கூறுவதில், உணவினை பிறர்க்குக் கொடுத்துதவும் உயர் பண்பு கூறப்படுகிறது.

**அடக்கம் பேணுதல்**

அடக்கம் அமரருள் உய்க்கும் என்ற வள்ளுவரின் வாய்மொழி போல் அடக்கம் மனிதனுக்கு அவசியம் என்கிறது வளையாபதி. நாவானது மக்களுக்கு ஆக்கம் தருவது. சொர்க்கம் (துறக்கம்) சொர்க்கம் செலுத்துவது: நாவடக்கம் இல்லையெனில் அது சிறைக்கோட்டம் செல்ல வைப்பது: நாவடக்கமின்மை நரகத்தில் வீழ்த்துவது என்றெல்லாம் தெரிகிறது அடக்கம் பேணுதலை அவசியப்படுத்தியிருக்கிறது வளையாபதி. இவை, "காக்கப் படுவன விந்திரிய மைந்தினும் நாக்கல்ல தில்லை நனிபேணு மாறே" (வளையாபதி 13) இதையே, "யாகவா ராயினு நாகாக்க காவாக்காற் சோக்காப்பர் சொ்லிழுக்குப்பட்டு" (குறள் 127) எனும் குறள் தெரிவிக்கிறது.

**வளையாபதியில் பொதுமை அறம்**

**அருளுடைமை**

அரிய உயிரினங்களிடத்தில் அருள் செய்ய வேண்டும், நல்லறங்களை நாள்தோறும் மக்களுக்குக் கூறவேண்டும். தீவினைகளை அறவே பின்பற்றக்கூடாது. வஞ்சனை, மிகையாகிய மானம் இவற்றை வெறுத்து ஒதுக்கவேண்டும். என்பன போன்ற அருளாகிய பொதுமை அறத்தினை வளையாபதிச் செய்யுளில் காணமுடிகிறது. மேலும்,"பொருளைப் பொருளாய் பொதிந்தோம்பல் செல்வா தருளைப் பொருளா அறம்செய்தல் வேண்டும்" (வளையாபதி 20) என்பதில் செல்வத்தின் பயன் ஈதல் எனும் அறக்கருத்தை அறியமுடிகிறது. அறநெறி நின்று பொருளீட்டுதலும், பிற உயிர்களுக்குத் தீங்கு நேராவண்ணம் நடந்து கொள்ளுதல் போன்றன, வீடு பேற்றினை அளிக்கக்கூடியன என்பதனையும் தெரிவிக்கிறது. திருட்டு (களவு) கண்டிக்கப்பட்டு, களவு செய்தோர் தண்டிக்கப்பட வேண்டியோர் என்பதனைப் பதிவு செய்திருக்கிறது.

**வாய்மை அறம்**

பொய் கூறாதவர் வாழ்நாளில் துன்பமின்றி இம்மையிலும், மறுமையிலும் இனிது வாழ்வார்கள் என வாய்மையின் வகைமை பற்றிக் கூறப்பட்டுள்ளது. பொய் கூறி வாழும் வாழ்க்கையில் அறிவு கெடுதலும், செல்வம் அழிதலும், இன்னும் பல்வகைத் துன்பங்கள் பெருகுதலும் உண்டாகும் என்கிறது வளையாபதி. அதுபோன்றே, கொல்லாமையும் வலியுறுத்தப்படிருக்கிறது. பிற உயிர்களைக் கொல்லாமையாகிய அறம் மேற்கொள்பவர்கள் இம்மை, மறுமையில் பயனையே பெறுவார்கள் என்றும் தெரிவிக்கிறது.

**நிலையாமை அறம்**

செல்வம், இளமை இவற்றின் நிலையாமையை எடுத்துரைப்பதில், மனிதனுக்கு அறம் கூறப்பட்டிருக்கிறது. செல்வத்தினை நாம் நிரந்தரமாகப் பேண முடியாது: எப்பொழுதும் நம்மை விட்டு நீங்கும் தன்னையுடையது. எனவே பொருள் பற்றினை ஒழிக்க வேண்டும் என்றும் இளமை நிலையில்லாது, இளமையில் அறம் செய்து வாழ்தல் நலம் பயக்கக் கூடியது என்றும் எடுத்தியம்புகிறது.

மனிதனுக்கு வரும் துன்பத்திலிருந்து விடுவிக்கும் ஆற்றல் இறைவன் ஒருவனுக்கே உண்டு என நாம் உணர வேண்டும். துன்பம் பிறரால் வருவது என்றும்: இன்பம் நம்மால் வந்தது என்றும், மகிழ்ந்து வாழ்வதைக் கைவிட வேண்டும் எனத் தெரிவிப்பதில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர் தீதும் நன்றும் பிறர்தரவாரா" (புறம் 45) என்ற கணியன் பூங்குன்றனாரின் மொழியை மெய்ப்பிப்பதாகவே அமைந்துள்ளது.

நிலையற்ற இவ்வுலகில் தோன்றும் பொருள் யாவும் அழிதல் தன்மைக் கொண்டதாகும். மனித உடல் அழியும் தன்மைக் கொண்டது. மனிதனால் உயிருக்கும் மேலாய் நேசிக்கப் படும் செல்வமோ யாரிடமும் நிலைத்து நிற்பதில்லை. இளமையோ எவரிடமும் நிலைத்து நில்லாமல் விலகி மறைந்து விடக்கூடியது. இதனையே திருவள்ளுவரும், "நில்லாதவற்றை நிலையென என்றுணரும் புல்லறி வாண்மை கடை" (331) என்றுக் குறிப்பிடுகிறார்.

**யாக்கை நிலையாமை**

உலக வாழ்வில் எவ்வொன்றையும் உற்று நோக்குங்கால், நிலையாமை எனும் கோட்பாடு நிலைத்திருப்பது விளங்கும். நிலையற்ற வாழ்வுதனை வாழ்ந்து கொண்டிருக்கும் மாந்தர். தமது வாழ்நாளினை பயனுள்ளதாக்கிக் கொளல்வேண்டும். நற்செயல்கள் செய்வதால் துன்பத்திலிருந்து விடுபடலாம் யாக்கை நிலையற்றது என்பதனை, "நீல நிறத்தனவாய் நெய்கனிந்து போத வீழ்ந்து சாய மயங்குவது என் வாழி நெஞ்சே" (வளையாபதி 3) என வளையாபதி எடுத்துரைக்கின்றது.

மானிடர்கள் தமது உடலின் புறவுறப்புதனைப் பல்வேறு அணிகலன்களால் அலங்கித்து கொள்கின்றனர். ஒப்பனைப் பொருட்கள் கொண்டு அழகை

மெருகேற்றுதல் செய்கின்றனர். புறவுறுப்புகளை பலவிதங்களில் பேணிக் கொண்டாலும் மானிடர்களால் தமது உடலை தக்க வைத்துக் கொள்ள இயலுகின்றதா என்றால் நிச்சயமாக இல்லை என்றே கூறலாம். பல்வேறு நறுமணப் பொருட்களால் அலங்கரிக்கப்படும் பேணப்பட்டும் வந்த உடல் ஈமத்தீயில் எரிந்து சாம்பாகி விடும் என்பதுதானே உண்மை இவ்வாறு இருக்க, அழிந்துவிடக்கூடிய உடல் அழகில் மயக்கம் கொள்வது ஏனென யாக்கையின் நிலையின்மையை வளையாபதி தெளிவுபடுத்துகின்றது.

## அரச வாழ்வும் நிலையற்றது

சாதாரண மானிடர் வாழ்வுதான் நிலையற்றதோ, அரசர்களின் வாழ்வு நிலையானதோ என்ற மயக்கமும் பலர் நெஞ்சில் எழலாம். பேரரசர்களின் வாழ்வும் நிலையற்றது தான் என்பதை,' வித்தகர் செய்த விளங்கு முடிகவித்தகர் மத்தக மாண்பழிதல் காண் வானி நெஞ்சே மத்தக மாண்பழில் கண்டால் மயங்காதே உத்த மன்னெறிக்கண் நில்வாழி நெஞ்சே உத்த மநன்னெறிக்கண் நின்று ஊக்கம் செய்தியேல் சித்த படர்தல் தெளிவாழி நெஞ்சே" (வளையாபதி) வளையாபதி மிகத் தெளிவாக உரைக்கின்றது. பொன்னும் அழியும், பொருளும் அழியும், தேடிக்கொண்ட பட்டமும், நாடிவந்த பதவியும் செல்வ வாழ்வைத் தரலாம். ஆனால் அவ்வாழ்வு நிலையாகாது, மகுடம் சூடி மாநிலத்தை அரசாளும் மாமன்னர்களின் தலையும் அழிவது திண்ணமே... நிலையற்ற வாழ்வின்பால் மயக்கம் கொள்வதால் பலனேதுமில்லை. உண்மையாய் நல்நெறியுடன் ஒழுக்கம் சிதைவுறாமல் வாழ்ந்து வீடுபேறு அடைந்திட வேண்டுமென வளையாபதி வழிகாட்டுகின்றது.

## செல்வம் நிலையாமை

செல்வம் நிலையில்லாதது. மானிடரின் மனமோ நிலையற்ற செல்வத்தின் பால் பேராசை கொண்டு உழல்கிறது. செல்வம் நன்மை நீங்குமுன்னே அறம் செய்தல் வேண்டும். எவருக்கும் எதுவும் தராமல் செல்வத்தைக் காக்க முயன்றால் ஏமாற்றமே மிகும். எத்தகைய செல்வமாயிருப்பினும் தேய்ந்து அழியும். நம்மைவிட்டு நீங்கும் என்பது நிதர்சனமான உண்மையாகும். இவ்வுண்மையை வளையாபதி, 'வெள்ளம் மறவி விறல் வேந்தர் தீத்தாயம் கள்வர் என்று இவ்வாறிற் கைகரப்பத் தீர்ந்தகலும் உள்ளில் ஒரு பொருளை ஒட்டாது ஒழிந்தவர் எள்ளும் பெருந்துயர் நோய் எவ்வம் இகப்போவோ" (வளையாபதி 35) என்ற வரிகளில் உணர்த்துகிறது. துன்பத்தால் துவண்டாலும், துறவியர் நிலையற்ற வாழ்வின் உண்மையை உணர்ந்திருப்பதால் ஆசையற்ற வாழ்வு வாழ்ந்து மோட்சத்தை அடைகின்றனர் என்று நிலையற்ற வாழ்வின் நிலையை அழகாய் வளையாபதி சித்தரிக்கிறது. தானம் செய்யாமல் காத்து வைத்தாலும் சொத்து அழிவது திண்ணமே. அதனால் ஈட்டிய செல்வத்தை மூடி வைக்காமல் தானம் செய்வது நன்று. பிறகு செய்வோம் என்று செல்வத்தைப் பூட்டி வைத்தாலும், அது ஏதாவது ஒரு சூழலில் நீங்கிவிடும். தருமம் செய்ய நினைத்தேன் செல்வம் தன்னிடமிருந்து நீங்கிவிட்டதே என்ற மனவருத்தம் பின்னாளில் ஏற்படும் என்பதையும் வளையாபதி சொல்கின்றது.

பொருட்செல்வத்தின் மீது நாட்டம் செலுத்தாமல், துறவறத்தில் நாட்டம் கொண்டு வாழ்வதே உன்னதாமனது என்றும் வளையாபதி செப்புகிறது. சேர்க்கப்பட்ட பெருஞ்செல்வத்தால் ஆபத்தும் நேருமோ என்று அச்சம் மிகுந்த வாழ்வு வாழ வேண்டிய நிலை ஏற்படும் என்பதனை (பாடல் 37, 38) கூறுகின்றது. செல்வம் அச்சத்தை மட்டுமின்றி, உயிருக்கு ஆபத்தையும் ஏற்படுத்தும் என்றும் வளையாபதி (பாடல் 39) சொல்கின்றது.

## இளமை நிலையாமை

"வேல்கண் மடவார் விழைவு ஒழியாம் விழையக் கோல்கண் நெறிகாட்டக் கொல்கூற்று உழையதாம் நாற்பது இகந்தாம் இளமையே" (வளையாபதி 40) என்ற வரிகள் இளமையின் நிலையின்மையைக் காட்டுகிறது. இளமையும், செல்வமும் நிலையற்றன என்றாலும் இப்பிறவியில் கிட்டிய இளமையைச் செல்வத்தைக் கொண்டு நல்லறங்கள் செய்து புண்ணியம் சேர்த்திடல் வேண்டும் என்கிறது. "இளமையும் நிலையாலால் இன்பமும் நின்ற அல்ல வளமையும் அஃதேபோல் வைகலும் துன்பமெல்லாம் உளவென நினையாதே செல்கதிக்கு என்றும் விளைநிலம் உழுவான் போல் வித்துநீர் செய்து கொண்மீன்" (வளையாபதி 41) என மானிடர்க்கு நன்னெறியை நன்கே காட்டுகிறது.

## தொகுப்புரை

வளையாபதி நூலெனத் தமிழுக்குக் கிடைக்கப் பெறவில்லை எனினும், உரையாசிரியர்களின் உதாரணச் செய்யுள்கள் வழி சிறந்த அறநூலாகவும், காப்பியமாகவும் திகழ்வதை அறியமுடிகிறது. அன்பின் அவசியம் ஆண் பெண்ணுக்கு உணர்த்தப் பெற்றிருக்கிறது. கற்புடைய மகளிர் போற்றப்பட்டிருக்கின்றனர்.

மக்கட் பேருடையான் செல்வமே மகத்தானது என்கிறது. பொறுமை, புலமை, நல்விரதம், நற்கடமை போற்றப்பட்டிருக்கிறது. தீமை, திருட்டு கண்டிக்கப்பட்டிருக்கிறது. வாய்மை அறம் போற்றப்பட்டிருக்கிறது. பற்று இழந்தவன் இம்மை, மறுமை பயன் எய்துவான். செல்வம் இளமை இவை நிலையில்லாதது அறம் செய்வதே மேன்மையானது என பல்வித அறங்களை மக்களுக்குத் தெரிவிப்பதில் வளையாபதி சிறப்பிடம் பெறுவதை அறியமுடிகிறது.

**துணைநின்ற நூல்கள்**


1. வளையாபதி -கொ.வே.சோமசுந்தரனார் (உரை)
2. வளையாபதி - எஸ். ஜெகத்ரட்சகன் (உரை)
3. திருக்குறள் - மு.வரதராசனார் (உரை)
4. தமிழ் இலக்கிய வரலாறு - மு.வரதராசனார் (உரை)
5. புறநானூறு - அவ்வை துரைசாமிப் பிள்ளை (உரை)

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# திருவேடகப் பதிகம் உணர்த்தும் பதியின் இயல்பு

**முனைவர் கு. இராமர்**
*இணைப்பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (பொ)*
*தமிழ்த்துறை, விவேகானந்த கல்லூரி, திருவேடகம் மேற்கு, மதுரை*

**முன்னுரை**

இறைவன் உலகையும், உயிரகளையும் படைக்கின்றான். படைப்பின் போது உலகில் எல்லா உயிர்களுக்கும் பசியையும், உணர்ச்சியையும் கொடுக்கின்றான். இப்பசி உணர்ச்சிகளால்தான் உயிர்களின் இயக்கம் நடைபெறுகின்றன. இதனால், உயிர்களுக்குப் பேராபத்துகள் ஏற்படுகின்றன. உயிர்களில் ஒன்றான மானுட சமூகம், தனக்கு மீறிய சக்தியால் ஆபத்து வரும்போது, அவற்றைக் கண்டு அஞ்சி அச்சக்தியை வணங்கச் செய்கிறது. இதுவே பின்பு வழிபாடாக மாறுகின்றது. எனவே மனிதனுக்கு அச்சக்தியின் அடிப்படையில்தான் முதன் முதலில் வழிபாடு என்னும் பக்தி பிறந்தது.

பக்தி முதலில் இயற்கை வழிபாடாகி பின்பு உருவவழிபாடாக மாறியது. உருவ வழிபாட்டில் தெய்வங்களுக்கு வடிவங்களும், திருநாமங்களும் இட்டு மனிதன் வணங்கத் தொடங்கினான். பின்பு தெய்வங்களின் அவரதாரங்களையும், அரும் பெருமைகளையும் இறையடியவர்கள் பாடத் தொடங்கினார்கள். இப்பக்திப் பாடல்களின் தொகுப்பே பின்னாளில் பக்தி இலக்கியங்களாக நமக்குக் கிடைத்தன.

பக்தி இலக்கியத்தில் சிவனை முழுமுதற் கடவுளாக வைத்துப் பாடப்பெறும் இலக்கியம் சைவ இலக்கியம் ஆகும். இவ்விலக்கியத்தை சாத்திரம், தோத்திரம் என இருவகைப்படுத்துவர். தோத்திர இலக்கியத்தைப் 'பன்னிருதிருமுறை இலக்கியம்' என அழைப்பர். இவ்விலக்கியத்தில் முதல் மூன்று திருமுறையான தேவாரப் பாடல்களை திருஞானசம்பந்தர் சுவாமிகள் பாடியுள்ளார்.

தேவாரம் என்ற சொல்லை தே + ஆரம் என்று பிரிக்கலாம். 'தே' என்பது தெய்வத்தைக் குறிக்கும் சொல்லாகும். 'ஆரம்' என்பது மாலை, அதாவது இறைவனுக்குச் சூட்டப்படும் வாடாத சொல்மாலை என இறையடியவர்கள் கூறுவர். மேலும், தே + வாரம். 'வாரம்' என்றால் அன்பு, அதாவது இறைவன் மீது அன்பொழுகப் பாடப்படும் பாடல்களின் தொகுதி எனவும் கூறுவர். இதில் திருஞானசம்பந்தர் சுவாமிகள் பாடிய மூன்றாம் திருமுறையில் உள்ள திருவேடகப் பதிகம் உணர்த்தும் பதியின் இயல்பு என்பதைப் பற்றிய ஆய்வாக இக்கட்டுரை அமையவுள்ளது.

**திருஞானசம்பந்தர் குறிப்பு**

> **"ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
> **சான்றோன் எனக் கேட்ட தாய்" (குறள் : 69)**

என வள்ளுவன் வகுத்த இலக்கணத்தடத்தில் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் சோழநாட்டில் உள்ள சீர்காழியில் அந்தணர் சிவபாத இருதயருக்கும், பகவதி அம்மையாருக்கும் சம்பந்தபெருமான் மகனாக அவதரித்தார். இவர் மூன்று வயதில் உமையம்மையிடம் ஞானப்பால் உண்டு இறையருள் பெற்றார். இதனை,

> **"கழிநகர்ச் சிவபாத இருதயர் தந்த கவுணியர்கோன்**
> **அழுது உமையாள் கருதியூட்டும்"**

என உமாபதி சிவாச்சாரியார் பாடியுள்ளார். சம்பந்தர்பெருமான் மூன்று வயதில் இறையருள் துணையோடு ஞானம்பெற்று, பல சிவ தலங்களுக்குச் சென்று, 4169 பாடல்களையும் பாடி சில அற்புதங்களை நிகழ்த்திக்காட்டியுள்ளார். இவரின் பாடல்களைத் திருகடைக்காப்பு என இறைநேசர்கள் அழைப்பர். மேலும், இவரை ஆளுடையபிள்ளையார், சிவக்கண்ணு, தமிழாகரன், காழிக்கோமான் என்றெல்லாம் அழைப்பர். சம்பந்த பெருமான் தன் வாழ்நாளில் புறச்சமய வாதிகளோடு வாதிட்டு வென்று, சைவசமயத்தை நிலைநாட்டி நமக்குப் பெருமை சேர்த்து, பதினாறு வயதில் இறைவனோடு கலந்தார்.

**பதிகவரலாறு**

சம்பந்த பெருமான், மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் இருவரின் வேண்டுகோட்கு இணங்கிப் பாண்டிய நாடு வந்தார். ஆங்கு சமணர்களோடு அனல்வாதம், புனல்வாதம் செய்து வென்றார். வுாதில் சம்பந்தர் பாடிய தீந்தமிழ்ப் பாடல்களின் ஓலையை தீ தீண்டவில்லை. மேலும், வைகையாற்றின் நீரில் இட்டபோதும் தமிழ் ஓலை ஆற்றை எதிர்த்துச் சென்றது. ஆவ்வாற்றில் கடிதே எதிர்த்துச் செல்லும் ஏட்டினைப் பற்ற முடியவில்லை. அதனால் சம்பந்த பெருமான் ஏடு நின்றிடும் பொருட்டுப் பாடிய பதிகமே திருஏடகப்பதிகம் ஆகும். இதனை,

"ஆர்எரியிட்டு எடுத்தஏடு அவை முன்னேற்றி ஆற்றில்
இடும்ஏடு எதிர்போய் அணைய ஏற்றி"

என்று உமாபதியார் குறிப்பிடுகிறார்.

**இன்னிசைப்பாடலால் வணங்குதல்**

நம்முன்னோர்கள் இறைவனை மனம், மொழி, மெய் ஆகிய மூன்றினால் வழிபாடு செய்வது இயல்பு. இந்நிலையில் சம்பந்தபெருமான் இறைவனை,

"வன்னியு மத்தமும் மதிபொதி சடையினன்
பொன்னிய திருவடி புதுமலர் அவைகொடு
மன்னிய மறையவர் வழிபட அடியவர்
இன்னிசை பாடலர் ஏடகத்து ஒருவனே"

(பா.எ : 01)

எனப் பாமாலையால் திருவேடகநாதரைப் பாடி வணங்கி நம்மையும் வழிபடச் சொல்கிறார். இறைவன் நிலவைச் சூடிய சடையில் வன்னி மலரையும். ஊமத்த மலரையும் விரும்பி அணியக்கூடியவன். அவனின் பொன்போன்ற திருவடியில் புதிய மலரைக் கொண்டு அந்தணர் அர்ச்சனை செய்வர். அடியவர்கள் இன்னிசைப் பாடலால் பாடி வழிபாடு செய்யக் கூடிய ஒரே ஒப்பற்ற இறைவன் திருஏடகநாதரே என்று சம்பந்தபெருமான் குறிப்பிடுகிறார்

**கவலைநோய் நீங்குதல்**

சிவபெருமான் செவியில் இரு கந்தர்வர்களைக் குண்டலமாக அணிந்திருக்கிறான். வண்டுகள் உலாவும் கொன்றை மலரையும், வானில் விளங்கும் மதியினையும் சடைமுடியில் சூடியிருக்கிறான். அவன் வீரநடை கொள்ளும் இடபத்தின் மேல் அமர்ந்திருக்கிறான். இவன் அருள்பாளிக்கும் திருஏடகத்தைக் கண்டு வணங்கினால் மனக்கவலை அகலும் என்பதை,

"குண்டலம் திகழ்தரு காதுடைக் குழகனை
வண்டலம் பும்மலர்க் கொன்றைவான் மதியணி
செண்டலம் பும்விடைச் சேடனூர் ஏடகம்
கண்டுகை தொழுதலும் கவலைநோய் கழலுமே"

(பா.எ : 03)

என்ற பாடலில் சம்பந்தர்பெருமான் குறிப்பிடுகிறார்.

**துன்பம் நீக்குதல்**

நீர்நிலைகள் நிறைந்து விளங்கும் திருஏடகத்தில், பூத்து மலரந்துள்ள மலர்களின் நடுவே தென்றல் காற்றானது நறுமணம் கொண்டு வீசுகிறது. அவ்விடத்தை விரும்பி இருக்கின்ற இறைவனின் திருவடியைப் பணிந்து வணங்கினால் நமக்கு வரக்கூடிய இடர்கள் நீங்கும் என்பதனை,

"பொய்கையின் பொழிலுறு புதுமலர்த் தென்றலார்
வைகையின் வடகரை மருவிய ஏடகத்து
ஐயனை அடிபணிந்து அரற்றுமின் அடர்தரும்
வெய்யவன் பிணிகெட வீடெளி தாகுமே"

(பா.எ : 06)

என்ற பாடலின் வழி சம்பந்தர் விளக்குகிறார்.

**பரிந்தவர்க்கு அருள்செய்தல்**

சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலை மலையை இராவணன் தன் தோள்களின் வலிமையால் பெயர்த்தான். அதைக்கண்ட இறைவன் தன் பெருவிரலைத் தரையில் ஊன்றினான். அதனால் இராவணனின் தோள் நெறிக்கப்பட்டது. பின்பு இராவணன் சிவனைப் பரிந்து வேண்ட அவனுக்கு அருள்செய்தான் இறைவன் என்பதை,

"தடவரை எடுத்தவன் தருக்கிறத் தோள்அடர்
படவிரல் ஊன்றியே பரிந்தவற் கருள்செய்தான்
மடவரல் எருக்கொடு வன்னியு மத்தமும்
இடமுடைச் சடையினன் ஏடகத்து இறைவனே"

(பா.எ : 08)

என்ற பாடலடிகள் நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன.

**ஏடகத்து ஒருவன்**

பொன், மணி, சந்தனம், அகில் அகிய மரங்களை அலைகளின் வழியெ கொண்டு வந்து சேர்க்கும் தன்மை படைத்தது வைகை ஆறு. இவ்வைகைக் கரையில் விரும்பி இருக்கின்ற ஏடகநாதரை, பன்றி வடிவமாக திருமாலும், அன்னப்பறவையாக நான்முகனும் முறையே அடி, முடி தேடினர். அவர்களுக்கு அகப்படாத ஒரே ஒப்பற்ற இறைவன் ஏடகத்து ஒருவனே ஆவான்.

"பொன்னுமா மணிகளும் பொருதிரைச் சந்தகில்
தன்னுளார் வைகையின் கரைதனிற் சமைவுற
அன்னமா மயனுமா லடிமுடி தேடியும்
இன்னவா றெனவொணான் ஏடகத் தொருவனே"

(பா.எ : 09)

என ஏடகநாதரின் சிறப்பினைச் சுட்டுகிறார் சம்பந்தபெருமான்.

**பாவம் நீக்குதல்**

யானையின் தந்தம், சந்தனம், அகில் ஆகியவற்றை அலைகள் வாயிலாகக் கொண்டுவருகிறது வையையாறு. இந்த ஆற்று நீரில் எதிர்த்து நீந்திச் சென்ற திருஏடு, சென்று சேருமிடம் திருஏடகமாகும். அவ்விடத்தில் அருள்கொண்ட ஈசனை அழகிய புகலி ஞானசம்பந்தன் பாடிய திருவேடகப்பதிகத்தின்

பாடல்களைப் பாடி அவ்விறைவனை வணங்கியவர்களுக்கு எப்பொழுதும் பாவம் இல்லாது நீங்கிவிடும்.

**“கோடுசந் தனமகில் கொண்டிழி வைகைநீர்**
**ஏடுசென் றணைதரு மேடகத் தொருவனை**
**நாடுதென் புகலியுண் ஞானசம் பந்தன**
**பாடல்பத் திவைவல்லார்க் கில்லையாம் பாவமே”**

**(பா.எ : 11)**

என திருவேடகப்பதிகத்தின் சிறப்பையும், திருவேடகநாதரின் அருட்பெருமையினையும் திருஞானசம்பந்தர் சுவாமிகள் விளக்கிக் காட்டுகிறார்.

**நிறைவுரை**

**“தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலின் தோன்றாமை நன்று”**

**(குறள் : 236)**

என்ற குறளுக்கு இலக்கணமாய் பதினாறு ஆண்டுகளே வாழ்ந்த ஞானக்குழந்தை சுவாமி திருஞானசம்பந்தர். இவர் இப்புவியில் அவதரித்து மக்களுக்கு இறை உணர்வையும், சைவசமயத்தின் பெருமையையும் நிலைநாட்டினார். புறச்சமயங்களான சமணம், பௌத்த மதங்களை அடியோடு அழித்து சைவமதம் நிலைத்தோங்க மிகமுக்கிய களமாக இருந்தவர் சுவாமி திருஞானசம்பந்தர் ஆவார்.

**திருச்சிற்றம்பலம் !**

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# ஐந்திலக்கண நூல்களில் இயற்கைப் புணர்ச்சி

**மு. சண்முகவேல்**
*முழுநேரமுனைவர்பட்டஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்.*
*மதுரைக் கல்லூரி (தன்னாட்சி), மதுரை*

**ஆய்வுச்சுருக்கம்**
ஐந்திலக்கண நூல்களில் அகத்துறைகள் உண்டு. அத்துறைகளில் முதலாவதாக இடம் பெறுவது இயற்கைப் புணர்ச்சியாகும். காதல் வாழ்க்கையில் முதன் முதலாக நிகழக்கூடிய நிகழ்வு இயற்கைப்புணர்ச்சியாகும். இப்புணர்ச்சியானது தலைவன் தலைவி இருவரும் எதிர்பாராத விதமாகச் சந்தித்துக் கொள்வதேயாகும். இது காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்னும் நான்கு பிரிவுகளில் பகுக்கப்படுகின்றது. காட்சி என்பது தலைன் தலைவி இருவரும் சந்தித்துக் கொள்ளுதல். தலைவன் தலைவியைக் காண்பது ஒத்தத் தன்மையில் திகழ்வதால் இவள் தெய்வமகளே என ஐயம் கொள்ளுதல், ஐயம் கொண்டப்பின் தெளிதல், தேறல் போன்ற நிகழ்வுகள் நடைபெறுவதுண்டு. ஐந்திலக்கண நூல்களில் முதல் நூலான வீரசோழியத்தில் இயற்கைப்புணர்ச்சியினை நான்கு நிலைகளில் பிரிக்கப்பட்டு உள்ளதினை அறியமுடிகின்றது. இலக்கண விளத்தில் தெய்வப்புணர்ச்சி எனவும், முத்துவீரியம், சுவாமிநாதம் ஆகிய இரு நூல்களில் இயற்கைப் புணர்ச்சி பற்றி விரிவாக எடுத்துரைக்கின்றதினைக் காணமுடிகின்றது, அக இலக்கண நூல்களான மாறன் அகப்பொருள், இறையனார் அகப்பொருள், நம்பியகப்பொருள் ஆகிய நூல்களில் இடம் பெரும் இயற்கைப் புணர்ச்சி குறித்து இதன் வழி அறிமுடிகின்றது.

**கலைச் சொற்கள்:** இயற்கைப் புணர்ச்சி - Natural nutrition, காட்சி - Vision, ஐயம் - Doubt, தெளிதல் - Spraying, தேறல் - Splash, களவொழுக்கம் - Field behavior, கற்பொழுக்கம் - Chastity, உணர்வு - Consciousness, காமக்குறிப்புரை - Amorous note, மகிழ்தல் - Enjoyment, நலம்பாராட்டல் - Greetings, அணிதல் - Wearing, பருவம் - The season, ஆளுமை - Personality, அகவைப் பொருத்தம் - Interanl fit, உருவப்பொருத்தம் - Figurematching, மனப்பொருத்தம் - Congruence, அருள் - Grace.

## நோக்கம்

அகத்திணையியலில் பெரும்பகுதியாக ஐந்திணைக் காதல்களைக் காணமுடிகிறது. களவொழுக்கம், கற்பொழுக்கம் என ஐந்திணைகளில் இருபாகுபாடு இருப்பினும், குறிஞ்சிக்களவு, குறிஞ்சிக்கற்பு, முல்லைக்களவு, முல்லைக்கற்பு, மருதக்களவு, மருதக்கற்பு, நெய்தற்களவு, நெய்தற்கற்பு, பாலைக்களவு, பாலைக்கற்பு எனத் திணைதோரும் காணும் வண்ணமாக உள்ளது. களவுக்காதல், கற்புக்காதல் என இரு வகைக் காதல் நிலைகள் ஐவகை நிலங்களிலும் காணப்படுவது உலக வழக்கமாகக் கருதப்படுகிறது. இந்தடிப்படையில் இயற்கைப்புணர்ச்சி குறித்த செய்திகளை இக்கட்டுரையின் வாயிலாக காணமுடிகின்றது.

## தொல்காப்பியம்

தலைவனும் தலைவியும் முதன் முதலில் ஒருவரையொருவர் சந்தித்துக் கொள்வதே இயற்கைப் புணர்ச்சி எனப்படுகிறது. இது காட்சி, ஐயம், தெளிதல், தேறல் என்னும் பிரிவுகளில் வகைமைப் படுத்தப்படுகிறது. காட்சி என்பது தலைவனும் தலைவியும் நேர் எதிர் எதிரேப் பார்த்துக் கொள்ளுதல். இதனை,

**"ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப"** [1]

என்பார் தொல்காப்பியர். தலைவனும் தலைவியும் பருவம், உருவம் முதலான ஒத்த தன்மையின் உணர்வால் விருப்புடன் கண்டுகொள்வதினைப்,

**"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறுத்தக் காம வாயில்**
**நிறையே அருளே உணர்வொடு திருவென**
**முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே"** [2]

என்கிறார் தொல்காப்பியர். இதனை இயற்கைப் புணர்ச்சி, கடவுள் புணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி, ஊழால் கூடுதல் என்றும் கூறுவர். பிறப்பு, ஒழுக்கம், ஆளுமை, அகவைப் பொருத்தம், உருவப்பொருத்தம், பால்நிலைப் பொருத்தம், மனப்பொருத்தம், அருள், அறிவு, வளம் ஆகிய பத்தும் மனத்துக்குரியதாகும் என்பார் தொல்காப்பியர். தலைவனும் தலைவியும் தன்னுடன் ஒத்த தன்மையில் சிறந்து இயங்குவதால் இவள் தெய்வமகளே என ஐயம் தோன்றும் என்பதினைச்,

**"சிறந்துழி ஐயம் சிறந்த தென்ப**
**இழிந்துழி இழவே சுட்ட லான"** [3]

என்கிறார். தலைவனுக்கு ஐயம் ஏற்படும் தன்மையினைத் திருவள்ளுவர் தன் குறளில் வெளிப்படுத்தி உள்ளதினை,

**"அணங்குகொல் ஆயில் மயில் கொல்லோ கணங்குழை**

**மாதர்கொல் மாலும் உன் நெஞ்சு"**[4]

என்னும் குறளில் காணமுடிகிறது. தலைவன் மனதில் தோன்றி எழும் ஐயங்களை மன உணர்வின் வெளிப்பாட்டால் உணர்ந்து கொள்ளமுடிகின்றது.

**"வண்டே இழைய வள்ளி பூவே**
**குண்ணே அலமரல் இமைப்பே அச்சம் என**
**அன்னவை பிறவும் ஆங்கவன் நிகழ**
**நின்றவை களையும் கருவி என்ப"**[5]

இவ்வாறு தலைவனுக்குத் தலைவியின் மீது ஐயம் தோன்றி தெளிதல் நிலைமையினைப் பெற வழிவகுக்கின்றன என்பதைக் காணமுடிகின்றது. தலைவன் மெய்ப்பார்வையைத் தெளிந்து உள்ளத்தில் உறுதிகொண்டு புணர்ச்சியின்கண் தலைவியை அடைய முயற்சி செய்வான். இருவர் கண்களும் இரு மனத்தால் ஒத்துப்போய் ஆதரவுடன் ஒன்று சேர்வதே காமக்குறிப்புரைத் தேறல் எனப்படுகிறது.

**"நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தற்குக்**
**கூட்டி உரைக்கும் குறிப்புரை யாகும்"**[6]

எனத் தொல்காப்பிய நூற்பா வழி இதனைக் காணமுடிகிறது. ஐந்திலக்கண நூல்களில் முதல் நூலான வீரசோழியத்தில் இயற்கைப் புணர்ச்சி பற்றிய செய்திகள் **'குறிஞ்சிநடையில்'** இடம் பெற்றுயிருப்பதை அறிய முடிகின்றது இதனைப்,

**"பூத்தரு புணர்ச்சியும் புனல்தரு புணர்ச்சியும்**
**காப்பெரும் புனத்துக் களிறுதரு புணர்ச்சியும்**
**தாய்தரு புணர்ச்சியும்**
**கூறிய தாயது குறிப்புவழி மொழிதலும்"**[7]

என வீரசோழியம் குறிஞ்சி நடையியலில் பூத்தரு புணர்ச்சி, புனல்தரு புணர்ச்சி, களிறுதரு புணர்ச்சி, காளைதரு புணர்ச்சி என நான்கு வகையான இயற்கைப் புணர்ச்சியினைப் புலப்படுத்துகின்றது. இலக்கண விளக்கத்தில் இயற்கைப்புணர்ச்சி என்பது தலைவனும் தலைவியும் முதல் முதலாக சந்தித்துக் கொள்ளும் இடமாகவும் அப்புணர்ச்சியானது தெய்வப் புணர்ச்சியாகவும் போற்றப்படுகிறது.

**"இயற்கைப் புணர்ச்சி தெய்வத்தின் எய்துழி**
**முயற்சி இன்றி முடிவது ஆகும்"**[8]

என்கிறார் வைத்தியநாத தேசிகர். இயற்கைப் புணர்ச்சியானது தெய்வப்புணர்ச்சியாகக் கருதப்படுகின்றது. மற்ற நூல்களைப் போன்று இல்லாமல் முத்துவீரியம் இயற்கைப்புணர்ச்சியினைப் பதினொரு வகையினை உடையது எனப் பிரித்துக் காட்டுகின்றது.

**"கலவியுரைத்தலு மிருவயினொத்தலுங்**
**கிளவு வேட்டலு நலம்புனைந் துரைத்தலும்**
**பிரிவுணர்த் தல்லொடு பருவரலறிதலும்**
**அருட்குண முரைத்தலு மணிமை கூறலும்**
**ஆடிடத் துய்த்தலு மருமை யறிதலும்**
**பாங்கியை யறிதலும் பகருங் காலை**
**நீங்கா வியற்கை நெறியென மொழி"**[9]

என்பார் முத்துவீர உபாத்தியாயர். கலவியுரைத்தல், இருவயினொத்தல், கிளவி வேட்டல், நலம் புனைந்துரைத்தல், பிரிவுணர்த்தல், பருவரலறிதல், அருட்குண முரைத்தல், இடமணித்தென்றல், ஆடிடத்துய்த்தல், அருமையறிதல், பாங்கியையறிதல் என பதினொன்று வகையான இயற்கைப் புணர்ச்சியினைக் காணமுடிகிறது. ஐந்திலக்கண நூல்களில் இறுதி நூலான சுவாமிநாதத்தில் மூன்று வகையான இயற்கைப் புணர்ச்சியானது குறிப்பிடப்படுகிறது.

**"அதிய தெய்வப்புணர்ச்சி, கலந்துழி மகிழ்தல், நலம்பா**
**ராட்டல், ஏற் புறவணி மூன்றாம் வேட்கை உணர்த்தல்"**[10]

இயற்கைப் புணர்ச்சி தெய்வக் கூட்டுப் புணர்ச்சியாகக் கலந்துழி மகிழ்தல், நலம்பாராட்டல், ஏற்புற அணிதல் என மூன்று பிரிவாகப் புலப்படுகின்றது. தொல்காப்பியத்தை அடியொற்றி இயற்கைப் புணர்ச்சி சுட்டப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக நம்பியகபொருள், இறையனார் அகப்பொருள் நூல்களில் இயற்கைப்புணர்ச்சிப் பற்றிய செய்திகளைத் தெளிவாக அறியமுடிகிறது.

**"தெய்வம் புணர்ப்பச் சிந்தைவே றாகி**
**ஏய்துங் கிழத்தியை யிறையோ என்ப"**[11]

**"காமப் புணர்ச்சி யிருவருயி ணொக்க"**[12]

எனத் தெய்வத்தன்மையால் கூட்டம் நடைபெறுவதால் மனத்தின் திரிபு அடைந்து தலைவியைச் சேர்பவன் தலைவன் என்பது இந்நூற்பாவின் மூலம் புலப்படுகின்றது. மாறன் அகப்பொருள் இயற்கைப் புணர்ச்சியினைக் **'காட்சி'** என்னும் நிலையில் குறிப்பிடுவதினை,

**"நிலம் வேறு என்றெனும் நிலைமையராகிக்**
**குலநலன் திருவுருக் குறிக் கோளி னொன்ற**
**இறைவனும் இறைவியும் கருமையும் தொடர்ந்து**
**முறைபயில் பான்மை மூதுடை முதல்வனே**
**வலிகண்ணுறுமியர்கை காட்சி**
**காவலுனுயரினுங் கடிநிலை யிலவே"**[13]

என உரைக்கின்றது. இயற்கைப் புணர்ச்சியினால் உள்ளம் மகிழ்ந்திருக்கும் போது தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து விடுவானோ? எனத் தலைவி ஐயப்படுகிறாள். தலைவியின் ஐயத்தை உணர்த்தும் விதமாகவும் தேற்றும் விதமாகவும் குறுந்தொகைப் பாடல் அமைந்துள்ளது.

**"யாயும் ஞாயும் யார் ஆகியரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப் பெயல்நீர் போல**
**அன்புடைய நெஞ்சம் தாம் கலந்தனவே"**[14]

இயற்கையாய்க் கலந்து கூடிய பின் **'பிரிவானோ'** எனக் கலங்கி நின்ற தலைவியைக் கண்டு, தலைவன் கூறும் விதமாக செம்புலப் பெயனீரார் இப்பாடலில் புலப்படுத்துகின்றார். மேலும் ஒரு குறுந்தொகைப் பாடல் இயற்கைப் புணர்ச்சிக்குச் சான்றாக அமைகிறது.

**"கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி**
**காமஞ் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்**
**செயெயிற் றரிவை கூந்தலி**
**நறியவு முளவோ நீயறியும் பூவே"**[15]

எனக் குறிப்பிடுகின்றார் இறையனார். இயற்கையாகத் தலைவன், தலைவி ஒன்று சேர்ந்த இடத்தில் தலைவியின் நாணத்தால் தடைப்பட்டு நின்ற தலைவன். தலைவியை நாணத்திலிருந்து மெல்ல மெல்ல விடுவிக்க, அங்கங்கே இயல்பாய்த் தொட்டுத் தன் அன்பை வெளிப்படுத்தி தலைவியை நலம் பாராட்டுகின்றான். **"இத்தனைக் குழப்பங்களையும் மீறித்தான் கற்பு மணமும் நிகழ்ந்துள்ளது. காதலித்துப் புணர்ந்தவன் காதலித்தவளுக்கும் தனக்கும் யாதொரு தொடர்பு இல்லை எனக் கூறும் வஞ்சனையைத் தடுப்பதற்காகக் காரணம் அமைந்தது. களவு நெறியில் ஒழுகியவன் தனக்கும் அவளுக்கும் தொடர்பில்லை என்று கூறிவிட்டான். கற்பு இல்லை காரணமும் இல்லை"**[16] எனும் உள்ளார்ந்தக் கருத்தை இதன் வழி அறியமுடிகிறது. ஐந்திலக்கண நூல்களில் இயற்கைப் புணர்ச்சிக்குள் காட்சி, ஐயம், தெளிவு, தேறல் போன்ற பல்வேறு விதமான சொல்லாடல்களின் வழி மறைமுகத் தன்மையொடு இயற்கைப் புணர்ச்சியினை அறிய முடிகிறது.

### முடிவுரை

அன்பின் ஐந்திணையில் இயற்கைப்புணர்ச்சி தலைவன் தலைவிக்கும் இடையில் தெய்வப்புணர்ச்சியாக நிகழ்வதுண்டு. இப்புணர்ச்சியானது எதார்தமாக நடைபெறக் கூடிய ஒன்றாகும். இயற்கைப்புணர்ச்சி துறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளதினையும் காணமுடிகின்றது. இயற்கைப்புணர்ச்சி துறைகளாக ஐந்திலக்கண நூல்களான இலக்கண விளக்கம், சுவாமிநாதம் ஆகிய இரு நூல்களிலும் இருபத்தி நான்கு இயற்கைப்புணர்ச்சி துறைகளைக் குறிப்பிடுகின்றது. மற்றொரு நூலான முத்துவீரியத்தில் பதினொன்று இயற்கைப்புணர்ச்சி துறைகளைக் காணமுடிகின்றது.

### அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், களவியல், 02.
2. தொல்காப்பியம், மெய்ப்பாட்டியல் - 24.
3. மேலது - 03.
4. திருக்குறள் - 1081.
5. தொல்காப்பியம், களவியல் - 04
6. மேலது - 04.
7. வீரசோழியம் - ப.94.
8. இலக்கண விளக்கம் - 402.
9. முத்துவீரியம் - 836.
10. சுவாமிநாதம் - 87.
11. நம்பியகபொருள் - 124.
12. இறையனார் அகப்பொருள் - 02.
13. மாறன் அகப்பொருள் - 135.
14. குறுந்தொகை - 40.
15. மேலது - 02.
16. ந.சுப்புரெட்டியார், அகத்திணைக் கொள்கைகள் - ப.445.

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# மழலை உதிர்த்த சொல்லில் எள்ளல், அழகியல் சிந்தனைகள்

**முனைவர் மு. செந்தில்குமார்**
*உதவிப்பேராசிரியர்*
*செந்தமிழ்க் கல்லூரி, மதுரை*

பெரியாறு பாய்வதால் வேளாண்மை வளம் நிறைந்தது தேனி மாவட்டத்திலுள்ள கம்பம் பள்ளத்தாக்கு. மக்களின் பெரும்பான்மையான தொழில் விவசாயம். வேளாண்மை விளைச்சலைப் போன்றே கம்பம் பள்ளத்தாக்கில் இலக்கிய விளைச்சலுக்கும் குறைவில்லை. சிறுகதைகளைத் தொடங்கிவைத்த கம்பம் பீர் முகம்மது பாவலர் தொடங்கி, சந்தக் கவிதையும் - மரபுக்கவிதையும் படைப்பதில் வல்லவரான அனுமந்தன்பட்டி பொன்னையாத்தேவர், கம்பம் பாரதன், கவிஞர் ரவி.அ.உமர்.ஃ.பருக், அய்.தமிழ்மணி, நாவலாசிரியர் இலட்சுமணன், சிறுவர் இலக்கியப் படைப்பாளர் தே.சுந்தர், முத்துக்கண்ணன், அகரன் வரை படைப்பாளர் பட்டியல் நீள்கிறது.

தமிழ் இலக்கிய உலகிற்கு துளிப்பாக் கவிதைகளை பாரதியார் அறிமுகப்படுத்தியதைப் போல தேனி மாவட்டத்தில் துளிப்பாக் கவிதைகளை அறிமுகப்படுத்தியவர் கவிஞர் மாயவன். மாயாண்டி என்னும் இயற்பெயரைக் கொண்டவரான இவர் கம்பம் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தில் பொருத்துநராகப் பணியாற்றிக்கொண்டு தொடர்ந்து இலக்கிய உலகில் பயணித்து வருகிறார். 2000 இல் 'சிறகின் இசை'; 2005 இல் 'மின்மினியின் வெளிச்சத்தில்'; நீண்ட இடைவெளிக்குப் பின் 2014 இல் 'மழலை உதிர்த்த சொல்' துளிப்பாத் தொகுப்பினை வெளியிட்டுள்ளார். பொருளாதாரப் பிரச்சனைகளால் தொடர்ந்து தொகுப்புக்களை வெளியிட முடியாத சூழலில் உள்ளார் 'மழலை உதிர்த்த சொல்' கவிதைத் தொகுப்பில் வெளிப்பட்டுள்ள 'எள்ளல்' சிந்தனைகளை வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**எள்ளல்**

எள்ளல் வார்த்தைக்கு தமிழ் அகராதி இகழ்ச்சி, நகைத்தல், தள்ளல், நிந்தை செய்தல் எனப் பொருள் தருகிறது. எள்ளல், சமூகக் கேடுகளை அடையாளப்படுத்தும். நகைச்சுவையுடன் இணைந்தே பயணம் செய்யும். இப்படியும் நடக்குமா என வியப்புத்தரும் ''நல்ல நகைச்சுவை என்பது சொல்லி வருவதில்லை; திட்டமிட்டு பிறப்பதுமில்லை; தானாக இயல்பாகப் பீறிட்டு வருவதுதான் நல்ல நகைச்சுவையின் இலக்கணம்'' என்பார் பேரா. மோகன். (விழிப்புணர்வுச் சிந்தனைகள் - பக்கம் - 36)

**பகுத்தறிவு**

**"சாலை அகலப்படுத்தும் பணி**
**வினைவிலகும்**
**விநாயகர்" (பக்கம் - 7)**

இந்தியாவில் இயற்கை வழிபாடு, பஞ்ச பூதங்களுக்கு கடவுளை தனித்தனியே உருவாக்கி வழிபட்டுவருவது வழக்கமாகும். காலியிடங்களில் அரசின் அனுமதியின்றி கோவில் கட்டுவது, மதத்தின் பெயரில் இடத்தை ஆக்கிரமிப்புச் செய்வது இன்றளவும் நீள்கிறது. நெடுஞ்சாலைகளை ஆக்கிரமித்து ஏதேனும் இறைவழிபாட்டுத் தலங்களை உருவாக்கி அரசின் நிர்வாகத்திற்கு இடையூறு செய்கின்றனர். கவிதையில், அவ்வாறு உருவாக்கப்பட்ட வினைவிலகும் விநாயகர் கோவிலை சாலை அகலப்படுத்தும் பணியில் அப்புறப்படுத்திவிட்டனர் பக்தர்களின் வினைகளை விலக்கிவைக்கும் விநாயகருக்கு தனக்கு வந்த வினையினை நீக்க முடியாதது எள்ளலாகும்.

**"வறுமையின்**
**பேய்ப்பிடியில்**
**கோடாங்கியின் குடும்பம்" (பக்கம் - 7)**

பக்தர்கள் தங்களின் பிரச்சினைகள் தீர இறைவனை வேண்டிவிட்டு பூசாரி, கோடாங்கியிடம் குறி கேட்டு நிற்கின்றனர். பூசாரி, கோடாங்கிகள் தங்களுக்குத் தெரிந்த ஆலோசனைகளை அருளாடிச் சொல்கின்றனர். பக்தர்களில் சிலர் காணிக்கையாக -5ரூ -10ரூபாய்களைத் தட்டுக்களில் காணிக்கையாகப் போட்டுச் செல்கின்றனர். பலர் விபூதியைப் பெற்றுக்கொண்டு வெறுமனே சென்றுவிடுகின்றனர். கடவுளோடு தொடர்பிலுள்ள பல பூசாரிகளும், கோடாங்கிகளும் வறுமையின் கோரப்பிடியில் சிக்கித் தவிப்பதைக் கவிதை எடுத்தியம்புகிறது.

**செலவு**

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் வாழ்வின் நெருக்கடிகளையும் எதிர்கொள்ள சொந்தக் கட்டிடம், வாடகை செலுத்த முடியாதவர்கள் மக்கள் கூடுகிற சாலையோரங்களில் பொருள்களை வைத்து விற்பனை செய்கின்றனர்.

**“எதற்கெடுத்தாலும் பத்து ரூபாய் கடை**
**எடுக்கச் சொன்ன போலீஸீக்கு**
**ஐம்பது ரூபாய்”** (பக்கம் - 8)

எந்தப் பொருள் எடுத்தாலும் - 10ரூ - கடை வைத்திருக்கும் சாலையோர வியாபாரியை மிரட்டி கடையை எடுக்கச் சொன்ன காவல்துறை அதிகாரிக்கு கையூட்டாக – 50ரூ - கொடுப்பதுபோல முடியும் கவிதை சமூக அவலத்தை நிந்தை செய்வதாக உள்ளது.

**கண்வலிக்குப் போனால்**
**நெஞ்சுவலி தரும்**
**மருத்துவச் செலவு** (பக்கம் - 10)

பொதுமருத்துவரே அனைத்து நோய்களுக்கும் மருத்துவம் பார்த்த நிலை மாறி இன்றைக்கு ஒவ்வொரு உறுப்பிற்கும் தனித்தனி மருத்துவர்களைக் கண்டு சிகிச்சை பெற வேண்டிய நிலையுள்ளது. உடல் தொடர்பான சிறு பிரச்சனைகளுக்கு மருத்துவமனைக்குள் நுழைந்துவிட்டால் இரத்தம், மலம், சர்க்கரை, இதயத் துடிப்புக்களுக்கான பரிசோதனைகளை எடுத்து வரச் சொல்வது இயல்பாகிவிட்டது. அதற்கான கட்டணங்களை நினைத்தாலே படபடப்பு வந்து விடுகிறது. இதனைக் கவிதை நுண்மையாகச் சுட்டுகிறது.

**இயற்கை**

**“மரம் கடத்தும்**
**லாரியின் நிறம்**
**பச்சை”** (பக்கம் - 10)

மனித சமூகம் இயற்கையைப் பேணிக்காக்கத் தவறியதால் தொடர்ச்சியாக இயற்கைப் பேரிடர்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. பருவமழை, காலநிலைகள் உலகளவில் தடுமாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. மரங்கள் வளர்ப்பதன் அவசியத்தை எவ்வளவுதான் எடுத்துரைத்தாலும் மரத்தை வெட்டும் சம்பவங்கள் தொடர்கின்றன. மரம் கடத்தும் லாரியின் நிறம் பசுமையாக இருப்பதும் லாரியின் கட்டமைப்பின் பாதிப் பொருட்கள் மரங்களாக இருப்பது வேதனை. பாரதியார் வாழ்ந்த காலத்தில் 30 கோடியாக இருந்த இந்திய மக்கள் தொகை இன்றைக்கு 140 கோடியைத் தாண்டியிருக்கிறது. அன்றிருந்த நிலத்தின் பரப்புதான் இன்றைக்கும் இருக்கிறது. மக்கள்தொகைப் பெருக்கத்தால் விளைநிலங்கள் கட்டிடங்களாக உருமாறியிருக்கின்றன. இருக்கும் நிலங்களும் மாசுபாட்டில் மூழ்கித் தவிக்கின்றன.

**“மண்வாயில்**
**மண்போடும் செயல்**
**பாலிதீன் பைகள்”–** (பக்கம் - 14)

கடைகளில் துணிப்பைகள், காகிதங்களின் பயன்பாடு குறைந்து பாலித்தீன் பைகளின் பயன்பாடு அதிகரித்துள்ளது. இவை நிலத்தில் எளிதில் மக்காது, மண் வளம் பாதிக்கும் எனப் பல்வேறாக எடுத்துச் சொன்னாலும் மனித சமூகம் பாலித்தீன் பைகளை விடுவதாக இல்லை. மனிதர்கள் தங்களின் வாயில் தாங்களே மண் அள்ளிப் போடுவதற்குச் சமம் என்பதனை கவிதையில் உணர்த்துகிறார்.

**கல்வி**

**“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப் புடைத்து.”** (குறள் - 398)

ஒரு பிறவியில் ஒருவர் கற்ற கல்வியானது தொடர்ந்து வரும் ஏழு பிறப்புக்களிலும். அவருக்கு பாதுகாப்பினைத் தரும் என்பார் வள்ளுவர். மனிதர்களின் வாழ்வில் மகத்துவமான மாற்றத்தைத் தரும் கல்வி பல இடர்பாடுகளைக் கடந்து இன்றைக்கு எல்லாருக்குமானதாக உள்ளது. அதே நேரத்தில் கல்வி வணிகத்தில் சிக்கித் தவிப்பதைக் காட்சிப்படுத்துகிறார் கவிஞர்.

**“கற்க**
**விற்க**
**வாங்க கல்வி”** (பக்கம் - 12)

மாநிலப் பாடத்திட்டம், மத்தியப் பாடத்திட்டம், உலகளாவிய பாடத்திட்டம் எனக் கல்வியை பல பகுதிகளாகப் பிரித்து எல்லோருக்குமான தரமான கல்வியென்பது கேள்விக்குறியாகவே உள்ளது. பணவசதியுள்ளோர் பணம் கொடுத்து கல்வி கற்பதும் கற்ற கல்வியை வணிக மயமாக்குவதையும் கவிதை சுட்டுகிறது.

**“கல்வியமைச்சர் வருகை**
**சுவரொட்டி ஒட்டும்**
**பள்ளிச் சிறுவர்கள்”** (பக்கம் - 15)

கல்விக்கூடங்களில் நடத்தப்படும் விழாக்களுக்கான அலங்கார வேலைகள், வரவேற்புத் தோரணங்கள், விளம்பரங்கள் அனைத்திற்கும் மாணவர்களைப் பயன்படுத்தும் அவலம் உள்ளது. முக்கிய விருந்தினர்களின் வருகைக்காக பல மணி நேரத்திற்கு முன்பாகவே மாணவர்களை வெய்யிலில் நிற்க வைப்பது கொடுமையிலும் கொடுமையாகும். கவிதை இந்நிகழ்வுகளைக் கவனப்படுத்துவதோடு வறுமையால் மாணவர்கள் பள்ளி நேரம் முடிந்த பிறகும் பகுதி நேர வேலைக்குச் செல்கின்றனர். கல்வியமைச்சர் வருகைக்காக பள்ளிச் சிறுவர்கள் சுவரொட்டி ஒட்டுவது முரணாகும்.

**அழகியல்**

உயரமான நீண்ட மலைத்தொடர்கள், மேகக்கூட்டங்கள் மேகம் சித்தரிக்கும் காட்சிகள், பசுமைப்புல் வெளிகள், மரங்கள், செடிகள், கொடிகளை கவிஞர்கள் வியந்து ரசிக்கின்றனர். இன்றைய இளம் தலைமுறைக்கு இயற்கைக் காட்சிகள் மன நெருக்கடியைத் தீர்க்குமிடமாக உள்ளது.

**"மலைக்கும் மலைக்கும்**
**வலை விரிக்கும் கலை**
**சாரல் மழை" (பக்கம் - 29)**

அடர்த்தியான மழைத்துளிகளைக் கொண்ட மழை, ஆலங்கட்டி மழை எனப்படும் பனிக்கட்டி மழை என மழைப் பொழிவினைப் பிரித்தாலும் சாரல் மழை தனித்த அழகு. இரண்டு மலைகளுக்கு இடையே பெய்யும் சாரல் மழையினை வலை விரித்தது போன்று இருப்பதாகக் கவிஞர் அழகியலோடு பேசுகிறார்.

பொம்மைகளோடு குழந்தைகள் விளையாடும் காலம் மாறி அலைபேசிகளில் வரும் பொம்மைப் படங்களைப் பார்த்து விளையாடும் காலம் உருவாகிவிட்டது. இதுவே பெற்றோர்களுக்கும் தொல்லையில்லாததாக உள்ளது.

**"குழந்தையின் அணைப்பில்**
**உயிர் பூக்கும்**
**மரப் பொம்மை" (பக்கம் - 30)**

டிஜிட்டல் பொம்மைகளோடு குழந்தைகள் விளையாடப் பழகிவிட்ட நவீனத்தில் மரப்பொம்மைகளோடு குழந்தைகள் விளையாடிய அதிசயக் காலத்தைக் கவிஞர் காட்சிப்படுத்துகிறார். குழந்தைகளின் அரவணைப்பில் உயிரற்ற மரப்பொம்மை உயிர் பூப்பதாகக் கூறுவது அழகியலையும், மனிதத்தையும் போற்றுவதாகும்.

**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்."** என்னும் வள்ளலாரின் வார்த்தைகள் மனிதத்தைப் போற்றும் உன்னதமான வரிகள். புகழ்பெற்ற சொற்றொடர்களை எடுத்துக்கொண்டு அதனை மடைமாற்றம் செய்வது நவீனப் படைப்பாளர்களின் உத்தியாக இருந்து வருகிறது. அவ்வரிசையில்,

**"வாடிய பயிரில்**
**வள்ளலார் ரசிக்கும்**
**வண்ணத்துப்பூச்சி" (பக்கம் - 34)**

வாடிய பயிரைக் கண்டு வருந்தவேண்டிய வள்ளலார் ரசிக்கிறார் எனச் சொல்லிவிட்டு மூன்றாவது வரியில் வண்ணத்துப்பூச்சி என அழகியலாய் முடிக்கிறார்.

**"ஆசை வந்தது**
**புத்தருக்கு**
**ஆசையைத் துறக்க வேண்டுமென்று"**

போன்ற துளிப்பாக்கள் தொடர்ந்து வலம் வருகின்றன.

மழை, வானவில் போன்ற இயற்கைக் காட்சிகளைக் கவிஞர்கள் பலரும் அழகியலோடு பதிவு செய்கின்றனர். கவிஞரின் கற்பனை அழகியலின் உச்சமாக வெளிப்படுகிறது.

**"மழை நூல்**
**நெய்த சேலை**
**வானவில்" (பக்கம் - 36)**

மழையை நூலாக உருவகித்து தறி இல்லாமலே நெசவுசெய்து வானவில் என்னும் சேலையை உருவாக்கி அழகு பார்க்கிறார் கவிஞர். மூன்று வார்த்தை மூன்று வரிகளில் கவிதையை முடித்திருப்பது முத்தாய்ப்பாகும்.

நவதானியப் பயிர்கள் எண்ணெய்வித்துப் பயிர்களை மறந்துபோன, அறியாத இளம் தலைமுறையினருக்கு அழகியலாய் அறிமுகப்படுத்துகிறார் கவிஞர்.

**"எள்ளு தூற்றும்**
**சிகப்புத் தோல்காரியின்**
**உடம்பெல்லாம் மச்சம்" (பக்கம் - 39)**

நவீன வேளாண்மைக் கருவிகள் விவசாயப் பணிகளையும், பணியாளர்களையும் சுருக்கிவிட்டது. பலருக்கும் விவசாயப் பணிகள் மறந்தே போனது. சிவந்த பெண் எள் தூற்றும்போது சிதறியவை உடலில் விழும்போது அவை மச்சங்களாய் உருமாறி அழகியலாய் விரிவதாகக் கற்பனையில் மிதக்கிறார் கவிஞர்.

தாலாட்டுப் பாடல்கள் உரமும் உணர்வும் செறிந்தவை. சொந்தக்கதை சோகக்கதை, வீரக்கதை, வரலாற்றுக் கதைகள் பாடல்களாக விரியும். பாடல் கேட்ட பிஞ்சுகள் நித்திரை கொள்ளும். கவிஞருக்கு கிடைத்த தாலாட்டுப் பாடலுக்கான சூழல் வித்தியாசமானது.

**"பல்லவி எழுதலாம்**
**நிலவைத் தாலாட்டும்**
**நீரலைகள்" (பக்கம் - 41)**

இரவுப்பொழுது, குளத்தில் நிலவின் பிம்பம் தேங்கியிருக்கிறது. காற்றின் அசைவில் நீரலைகள் மெலிதாய் நகர்கின்றன. இது நிலவிற்கான தாலாட்டு பாட்டு. பல்லவி எழுத வேண்டும் என கவிஞர் வார்த்தைகளுக்காய் தவமிருக்கிறார்.

**மூலநூல்**

1. மழலை உதிர்த்த சொல் - நிழல்கள் வெளியீட்டகம், கம்பம் முதல் பதிப்பு – 2014.

# அப்துல் ரகுமான் கவிதையில் "அண்ணா"

**முனைவர் பா. சிங்காரவேலன்**
*இணைப்பேராசிரியர் மற்றும் தலைவர், தமிழ் உயராய்வு மையம்*
*அரசு கலைக்கல்லூரி, மேலூர்*

**நோக்கம்**

தமிழ் இலக்கிய உலகிலும், தமிழக அரசியலிலும், கலை உலகிலும் மக்களால் அறியப்பட்ட மாமனிதர் அண்ணா என்ற சி.என்.அண்ணாத்துரை. இவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை உருவாக்கியவர். அண்ணாவை முன்னிருத்தி திராவிடக்கட்சிகள் தமிழகத்தில் அரசியல் செய்திடுவதைக் காணலாம். தந்தைப் பெரியாரின் போர்படைத் தளபதியாகவும், செயல் வீரராகவும், சுவீகர புத்திரனாகவும் இருந்த அண்ணா, சமூக சீர்திருத்தச் சிந்தனைகளைச் சட்டமாக இயற்றிட அரசியலை அயுதமாகப் பயன்படுத்தினார். தமிழகத்தின் மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். தம் பேச்சாலும் எழுத்தாலும் மக்களையும், சக அரசியல் தலைவர்களையும் கவர்ந்தவர் அண்ணாத்துரை. பொது மக்களால் அண்ணா என்று அழைக்கப்பட்டவர். அண்ணாவைப் பற்றி அப்துல்ரகுமான் கவிதைகளில் காணலாகும் கருத்துக்களை ஆராய்வதே ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

அரசியல் என்பது ஒரு காலகட்டத்தின் சமூகப் பண்பாட்டுச் சரித்திரம். ஒரு இனத்தின் எழுச்சி வரலாறு என்று கவிக்கோ அப்துல் ரகுமான் குறிப்பிடுகிறார். தன் காலத்தில் வாழ்ந்த ஒரு வரலாற்று நாயகனான அண்ணாவிற்குக் கவிதைகளால் ஒரு காவியம் படைத்திருக்கிறார். தமிழ் பேராசிரியரான கவிக்கோ அப்துல் ரகுமான் வானம்பாடி இயக்கக் கவிஞர்களோடு தன்னை இணைத்துக் கொண்டவர். புதுக்கவிதைத் துறையில் புதுமைகளைச் செய்த கவிக்கோ 'பால்வீதி' என்ற கவிதை நூல் மூலம் தன்னைக் கவிஞராக அடையாளப்படுத்திக் கொண்டவர். இவர் உவமைகள், உருவகங்கள், படிமங்கள், குறியீடுகள் ஆகியவற்றைக் கவிதைகளில் பயன்படுத்தக் கூடியவர். ஹைக்கூ, கஜல் ஆகிய பிறமொழி இலக்கிய வடிவங்களைக் கையாளக் கூடியவர். மதுரை மண்ணின் மைந்தர். தீந்தமிழ் தியாகராசர் கல்லூாயில் இடைநிலை வகுப்பு, இளங்கலை, முதுகலைப் பாடங்களைப் பயின்றவர். வாணியம்பாடி இசுலாமியக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவர். இவர் அண்ணா கவியரங்கிற்கு எழுதிய கவிதைகளைத் தொகுத்து, நூலாக்கி, முத்தமிழ் அறிஞர் மு.கருணாநிதி அவர்களின் முன்னுரையோடு வெளியிட்டு உள்ளார். இத்தொகுப்பில் இடம்பெறும் கவிதைகளில் 'அண்ணா' வைப் பற்றிய பதிவுகளைக் காண்போம்.

**காஞ்சித் தலைவன்**

பட்டு நெசவுக்குப் பெயர் பெற்ற இடம் காஞ்சிபுரம். அங்கு 1909-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 ஆம் நாள் பிறந்தார் சி.என் அண்ணாத்துரை. சிற்றன்னை இராசாமணியால் வளர்க்கப்பட்ட அண்ணா பொது வாழ்க்கையில் ஈடுபடத் தொடங்கினார்.

காஞ்சிபுரம் என்றால் வரதராஜப் பெருமாள் திருக்கோவிலும், கைலாசநாதர் திருக்கோயிலும் மடங்களும் நிறைந்த ஊரில் பிறந்த அண்ணா, தந்தைப் பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர். காலப்போக்கில் மதத்தின் பெயரால் நடைபெறும் வன்மங்களை எடுத்துக்கூறி, திராவிடக் கழகத்தில் மக்களை இணைத்தார். இதனைக் கவிக்கோ,

**மதப்பித்துக் கொண்டவரை**
**மாற்றினாய் காஞ்சியைப்**
**புதுப்பித்து அறிவுக்கோர்**
**புதுக்கோயில் எழுப்பினாய்** (ப.எ.14)

என்றும்,

**அவர் ஒரு கரை**
**நீ யொரு கரை**
**நடுவிலே வற்றாத**
**நதியாக நாம் நடந்தோம்** (ப.எ.19)

மக்கள் பெரியாரையும் அண்ணாவையும் தலைவர்களாகக் கொண்டனர்.

**உதயசூரியன்**

மக்களுக்குப் பயன்படும் கொள்கைகளைச் சட்டமாக நிறைவேற்ற அரசியல் அதிகாரம் தேவை என்பதை உணர்ந்தார் அண்ணா. ஆனால் அரசியலில் ஈடுபடக்கூடாது என்பது பெரியாரின் கொள்கையாக இருந்தது. எனவே பெரியாரை விட்டுப்பிரிந்து உதயசூரியன் சின்னத்தையும், கருப்பு, சிவப்பு நிறக்கட்சிக் கொடியையும் உருவாக்கினார். இச்செயலை

**நீயோ நமக்காகப்**
**புதிய சூரியனைக்**

**கொண்டு வந்தாய். அதுவோ**
**உதயசூரியன்: அது**
**மதிய சூரியனாய்**
**எரிப்பதுமில்லை**
**முதிய சூரியனாய்**
**முடிவதுமில்லை** (ப.எ.20)

என்றும்

**இரு வண்ணக்கொடி**
**எங்கள்**
**கண்ணீர் துடைக்க**
**நீ தந்த கைக்குட்டை**
**எங்கள்**
**காயங்களுக்குக்**
**கட்டுப்போட**
**நீ தந்த காரச் சீலை**
**எங்கள்**
**இன மானம் காக்க**
**நீ தந்த ஆடை** (ப.எ.23)

என்றும் பதிவு செய்துள்ளார்.

**கடவுள் மறுப்பாளர்**

அறிஞர் அண்ணா ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்ற கொள்கை உடையவர். சநாதன தர்மத்தின் சாஸ்த்திரங்களை வெறுப்பவர். உருவ வழிபாட்டை மறுப்பவர். ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்றவர். அவருக்கு சிலை வடித்து வழிபாடு நடத்துவதைக் கவிஞர் கண்டிக்கிறார்.

**சதைக்கோயில் எங்கும்**
**தரிசனம் தருபவனை**
**சுதைக்கோயில் கட்டிச்**
**சுருக்கினார் சிலமூடர்**
**அருவமயர் இருப்பவனை**
**அறிவுக் கெட்டாதவனை**
**உருவச் சிறைகட்டி**
**உள்ளடைத்தார் சில மூடர்** (ப.எ.68)

**மொழிப்போர் வீரர்**

தமிழ்நாட்டில் ஆண்டுதோறும் ஜனவரி 25-ஆம் தேதி மொழிப்போர் தியாகிகள் தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. தமிழ்மொழியின் உரிமைக்காகப் போராடி உயிர் நீத்த தியாகிகளக்கு அஞ்சலி செலுத்தும் நாளாக அமைகிறது. தமிழ்ப் போராளிகளான நடராசன் மற்றும் தாலமுத்து இருவரும் உயிர்நீத்தனர். டாக்டர் எஸ்.தருமாம்பாள் இந்தித் திணிப்பை எதிர்த்துப் போராட்டத்தில் ஈடுபட்டார். 1938-இல் மொழிப்போரில் பெண்களும் ஈடுபடத்தொடங்கினர். 1925 ஆம் ஆண்டு பெரியார் உருவாக்கிய சுயமரியாதை இயக்கத்தினரும் மொழிப்போரில் ஈடுபட்டு சிறை நிரப்பும் போராட்டத்திலும் ஈடுபட்டனர். மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், பத்மாவதி, தனலட்சுமி. வேலாயுதம், அன்னை சந்தியவாணிமுத்து ஆகியோர் பங்கேற்று உரிமைக்காகப் போராடினர். உயிர் நீத்தனர் என்று எழுத்தாளர் நிவேதிதா லூயிஸ் குறிப்பிடுகிறார் (பிபிசி தமிழ்). இக்கருத்தை மெய்ப்பிக்கும் விதமாக "தமிழின் இமைகள்" எனும் கவிதையில் அப்துல் ரகுமான் மொழியின் முக்கியத்துவம் குறித்த அறிஞர் அண்ணாவின் கருத்தைப் பதிவு பெற்றுள்ளார்.

**"மொழிக்காகப் போர் தொடுத்த**
**முதல் வீரன் நீ அண்ணா!**
**மொழி என்பது வெறும்**
**காகிதத்தின் முகத்தில்**
**எழுதும் வரி அல்ல:**
**அது ஒரு**
**சமூகத்தின் முகவரி** (ப.எ.25)

என்றும், பண்பாட்டின் உயிர்மூச்சு என்றும், அர்த்தங்களின் ஆடை என்றும் குறிப்பிடுகிறார். தந்தைப் பெரியாரின் தலைமையில் அண்ணா மொழிப்போரில் ஈடுபட்ட வரலாற்றையும், அதில் உயிர்தியாகம் செய்த தியாகிகளையும் மரியாதையுடன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**அன்று**
**தேகங்களையே**
**திரிகளாக்கி**
**தீபங்களாக எரிந்தீர்கள்**
**அப்போது தான்**
**தமிழன்னை ஆலயத்தில்**
**தீபராதனை நடந்தது** (ப.எ.28)

மெழுகுவர்த்தி கூட எரியும்போது கண்ணீர் வடிக்கும். தியாகிகள் சிரித்துக் கொண்டே உயிர் தியாகம் செய்தனர் என்று தமிழ்மொழியினைக் காக்க இன்னுயிர் நீத்தோரையும், மொழியை இழந்தவன் முகத்தையே இழந்து விடுகிறான் என்றும் அறிஞர் அண்ணாவின் கருத்தை அப்துல் ரகுமான் கவிதையில் பதிவு செய்துள்ளார்.

**மக்கட் பணி**

அண்ணா மாணவப் பருவத்தில் நீதிக்கட்சியில் உறுப்பினராக இருந்தார். அப்போது சபல்பூர் மாநாட்டில் கலந்துகொண்டார். பாசுதேவ் அவர்களின் நட்பு கிடைத்தது. பாசுதேவ் தமிழகத்தில் உரை நிகழ்த்தும் போதெல்லாம் மொழி பெயர்ப்பாளராக அண்ணா தொண்டாற்றினர். தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்திடும் ஆற்றலுடையவர் அண்ணா. மக்கள் தொண்டே மகேசன் தொண்டு என்று பொதுவாழ்க்கையில்

ஈடுபடுத்திக் கொண்டார். பெரியாரிடமிருந்து பிரிந்த பின் திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தொடங்கினார். 1957-ல் சட்ட மன்ற உறுப்பினராகவும், 1962-ல் பாராளுமன்ற உறுப்பினராகவும், 1967-ல் தமிழகத்தின் முதலமைச்சராகவும் பொறுப்பு வகித்தார். தமிழ் மொழிக்கு உயிரூட்டினார். மக்கள் பசியின்றி வாழ வழி வகை செய்தார் என்பதை

**பாட்டைப்போல் இனிப்பவனே!**
**பட்டாபி ே'கம் அன்று**
**உனக்கல்ல, எங்கள்**
**உயிரான தமிழுக்கு** (ப.எ.29)

என்றும்

**கம்பங்களுக்காகத்**
**துணி நெய்யும் கையை விட**
**மனிதர்களுக்காக**
**உடை நெய்யும் கைகையே**
**நான் மதிப்பேன் என்று**
**மக்கள் நலத்தை**
**முதன்முதலில் இந்நாட்டில்**
**முதன்மைப் படுத்திய**
**முதலமைச்சன் நீதான்.**
**கோயில் உண்டியலில்**
**கொட்டுகின்ற ஆளை விடப்**
**பசித்த வயிற்றில்**
**பருக்கைகளைப் போடுபவன்**
**எவனோ அவனே**
**மிகவுயர்ந்த பக்தன் என்று**
**ஏழைகளின் நெருப்பை**
**முதன் முதலாய் அணைக்க வந்த**
**முதலமைச்சன் நீதான்** (ப.எ.31)

என்று மக்கள் நலனில் அக்கரையோடு பணி செய்த அண்ணாவின் புகழைச் கவிக்கோ கவிதையாகப் புனைந்துள்ளார். கம்பராமாயணத்தில் அயோத்தி நகரின் செழுமையினைக் கம்பர்

**"உண்மை இல்லை, ஓர் வறுமை இன்மையால்**
**திண்மை இல்லை, ஓர் செறுநர் இன்மையால்**
**உண்மை இல்லை பொய்உரை இலாமையால்**
**வெண்மை இல்லை பல் கேள்வி மேவவால்"**
(பா.எ.84)

வறுமை என்பதே இல்லை என்பதால் கொடைக்கு அவசியமில்லை. பகைவர் எவரும் இல்லை என்பதால் துணிவுக்கும் கவலையில்லை. பொய்யுரை ஏதும் இல்லை என்பதால் உண்மைக்கும் பொருளில்லை. மிக்க கேள்வியறிவு பொருந்தி இருப்பதால் அறியாமை என்பதும் இல்லை என்று பதிவு செய்துள்ளார். இப்பாடலுக்கு நிகரான கருத்தைக் கவிக்கோ அண்ணா முதலமைச்சராக இருந்தபோது நிகழ்ந்ததைக் குறிப்பிடுகிறார்.

**அறிஞனே! உன்**
**ஆட்சியிலே**
**நீரில்லை கண்களிலே**
**நிழலில்லை ஊழலுக்கு**
**ஊரில்லை பசிவசிக்க**
**உடையில்லை உண்மைக்கு** (ப.எ.35)

**அண்ணாவின் எழுத்தாற்றல்**

அண்ணாவின் கதை இலக்கியம் என்ற பொருளில் ஆய்வு செய்த முனைவர் இரா.சேது (2004), அண்ணாவே எழுதுவதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடுவதாகக் கூறுகின்றார்.

'அமுக்கிக் கொல்கிற சாரமற்ற வாழ்க்கை என்னை நிர்பந்திப்பதும் என்னுள் காட்சிக் கருத்துப் பிம்பங்கள் நிறைந்திருந்ததால் என்னால் எழுதாமல் இருக்கமுடியவில்லை" என்கிறார். சிறுகதை, புதினம், கட்டுரை, நாடகம், ஓவியர், திரைப்படத்திற்கு வசனம் எழுதுனர், சொற்பொழிவாளர் என்ற பன்முகத்தன்மை கொண்டவராக அண்ணா விளங்கினார். அண்ணாவின் எழுத்தாற்றல் பற்றிக் கவிக்கோ

**உன் எழுதுகோல்**
**தலை குனியும் போதெல்லாம்**
**தமிழ் தலைநிமிர்ந்தது . . .**
**உன் பேனா**
**மகுடம் கழற்றும் போதெல்லாம்**
**தமிழ் மகுடம் தரித்து** (ப.எ.46)

என்றும்,

**உன் எழுதுகோல்**
**எழுதுகோல் அல்ல:**
**ஊன்றுகோல்,**
**அதனால்**
**தன் மானப்பாதையில்**
**தடுமாறாமல்**
**நடந்துசென்றோம் நாம்** (ப.எ.47)

என்றும்,

**நாட்டில்**
**மதுவைத் தடைசெய்தாய்**
**ஆனால்**
**பேனாவில் மட்டும்**
**மது நிரப்பிக்கொண்டாய்**
**உன் பேனாவின்**
**அடிச்சுவட்டில்**
**எங்கள்**
**இதயங்கள் நடந்தன.** (ப.எ.48)

என்றும் குறிப்பிடுகிறார். தம்பிக்கு என்னும் தலைப்பில் எழுதிய கடிதங்களும், கைதி எண்: 6342 சிறை நினைவுக் கடிதங்களும், பாலபாரதி, நவயுகம், விடுதலை, குடியரசு, மாலைமணி, நம்நாடு உள்ளிட்ட ஏடுகளில் ஆசிரியராகவும் கட்டுரையாளராகவும் இருந்தார் அண்ணா. தம்பிக்கு எனும் பொருளில் எழுதிய கடிதங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அன்றாட நிகழ்வைக் கூறுவதாக அமைந்திருந்தன.

**பேச்சாற்றல்**

1932-ல் சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் பொருளியல் துறைப் பேரவைத் தலைவராக இருந்த காலம் தொட்டு தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் உரை நிகழ்த்துவதில் வல்லவராகத் திகழ்ந்தார். சட்டமன்றம், பாராளுமன்றம் பொதுக்கூட்டங்களில் மக்களை வசீகரிக்கும் விதமாக அடுக்கு மொழியில் பேசும் திறன் பெற்றவர். இதனைக் கவிக்கோ

நீ பேசுகிறாய்
வார்த்தைகள்
பூப்படைகின்றன.
நீ பேசுகிறாய்
திடீரென்று
தீபங்கள் எரிகின்றன.
உன் பேச்சு
போர்க்களத்து வாள்வீச்சோ?
பொன்மழையின் தூறலோ?
பூவொன்று வாய்திறந்து
போருக்கு அழைக்கிறதோ? (ப.எ.39)

என்றும்,

சிலர் சொற்களையே
எச்சிலாய்த் துப்பினர்
நீ துப்பிய எச்சிலிலும்
அர்த்தம் இருந்தது...
சிலருடைய வாய்கள்
திருவோடு வாய்கள்
உன் வாயோ
அமுத சுரபி...
நீ மட்டும்
மணிமேகலையாய்
வந்திராவிட்டால்
எங்கள் இதயங்கள்
பட்டினியால் செத்திருக்கும் (ப.எ.40)
உன் சொற்கள்
சொற்கள் அல்ல
அவை எங்கள்
நிர்வாணத்தை
மறைத்த ஆடைகள் (ப.எ.42)

என்று அண்ணாவின் பேச்சாற்றலைக் கவிதையாக்கி உள்ளார். அமெரிக்கப் பத்திரிகையாளர் இந்திய மக்கள் பற்றி கேட்டபொழுது அடுக்கு மொழியில்

*My Country is Economically in*
*Educationally dull.*
*Politically null*
*but culturally well* என்று கூறினார்.

**அண்ணாவின் மீது இரங்கற்பா**

1969-ஆம் ஆண்டு பிப்ரவரி 3ஆம் நாள் சி.என்.அண்ணாத்துரை புற்றுநோயால் பாதிக்கப்பட்டு உயிர் நீத்தார். தமிழ்நாடே கண்ணீரும் கம்பலையுமாக மாறியது. இரங்கற் கூட்டம் நாடெங்கும் நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் எழுதிய இரங்கற்பா ஒலி நாடாவில் பதிவேற்றமாகி நாடெங்கும் ஒலிபரப்பப் பட்டது.

கவிக்கோ

உன் மரணம்
எண்ண மீட்டியது
வார்த்தைகளாய் என்
கண்ணீர்த் துளிகள்
இது என்
இமை பாடும்
ஈர ராகம்... (ப.எ.81)

என்றும்

நஞ்சு தணிப்பதற்கு
நாம் வளர்த்து வைத்திருந்த
சஞ்சீவி மூலிகையே
சருகாகிப் போனதம்மா! (ப.எ.84)

என்றும்,

நம்மைப் போன்ற
பைத்தியகாரர்கள்
உண்டா?
நம் கலங்கரை விளக்கைக்
கடற்கரையில் புதைத்து விட்டோம் (ப.எ.87)

என்றும்

இங்கே புதைக்கப்பட்டது
வெறும் மனித உடலல்ல
எங்கள்
வரலாற்றுப் பேழை (ப.எ.85)

என்றும்

எங்கள்
கண்கள் சிந்தும்
ஒவ்வொரு துளியிலும்
நீ
உயிர்பெற்றெழுகிறாய் (ப.எ.90)

என்றெல்லாம் அண்ணாவின் நினைவுகளைக் கவிதையாகப் பாடியுள்ளார் கவிக்கோ. மூடநம்பிக்கைளுக்கு எதிராகப் போர்க்குரல் எழுப்பிய அண்ணா மறைந்தவுடன் சிலை வைப்பதும், மாலையிடுவதும், முடியிறக்குவதுமான சடங்குகள் தொடர்வதைக் கவிஞர் கண்டிக்கிறார்.

**இதோ உன் சிலைக்கு முன்**
**சூடம் கொளுத்தி**
**தேங்காய் உடைத்து**
**மயிர் இறக்கி**
**ஓ.. இது எங்கள்**
**பரம்பரைத் தொழு நோய்**
**எந்த நோய்க்கு**
**மருந்தாக வந்தாயோ**
**அந்த நோயாலேயே**
**உனக்கு ஆராதனை!**
**எங்கள் தெய்வக் கொலுவில்**
**நீயொரு புதுப் பொம்மை** (ப.எ.80)

அண்ணா இலட்சிய எண்ணங்களோடு வாழ்ந்து மறைந்தவர். பசித்த வயிறுக்கு உணவிடுங்கள், உடை கொடுங்கள் அதுவே நீங்கள் செய்யும் தர்மம் என்று போதித்தார். அத்தகைய தலைவனை, இயல், இசை, நாடகம் எனும் முத்தமிழின் வித்தகராகத் திகழ்ந்த அண்ணாவின் மறைவுக்குப் பின் எழுத்தான் வன்நல்ல

**எண்ணானவன்-எனின்**
**ஏமாற்றி வாழ்வதற்கோ**
**எண்ணானவன்**

பழுத்த சுவைத்தமிழின்

**பண்ணானவன்-எனின்**
**பழிக்கின்ற இழிசெயல்கள்**
**பண்ணானவன்** (ப.எ.94)

மரபுக்குக் கவிதையில் இரங்கற்பாவைக் கவிக்கோ அப்துல் ரகுமான் இயற்றியுள்ளார்.

## முடிவுரை

நான் கலீல் ஜிப்ரானைப் படிக்கும் போதெல்லாம் தமிழில் இப்படி எழுத யாருமில்லையே என்று ஏங்குவேன். அந்த ஏக்கம் இப்போது இல்லை. இதோ! அப்துல்ரகுமான் வந்துவிட்டார். இவருடைய கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டால் யார் இந்தக் கவிஞன்? என்று உலகம் நிச்சயம் விசாரிக்கும் என கவியரசு கண்ணதாசன் கவியரங்கத் தலைவராக இருந்தபோது, பேச்சாளர் அண்ணா என்ற தலைப்பில் கவிதை வாசிக்க வந்த அப்துல் ரகுமானைப் பாராட்டியுள்ளார். சமகாலக் கவிஞர்களால் அங்கீகரிக்கப்பட்ட கவிக்கோ எழுதிய 'விதை போல் விழுந்தவன்' எனும் புதுக்கவிதை நூல், அண்ணாவை அறியத் துடிக்கும் வாசகனின் மனங்களில் விதை போல் விழும், திராவிடப் பயிர் வளர்க்கும். காலம் அண்ணாவின் பெயரைப் பொன்னெழுத்துக்களால் தாங்கி நிற்கும். வாழ்க அண்ணா நாமம்.

## பார்வை நூல்

1. அப்துல் ரகுமான், விதை போல் விழுந்தவன், நேஷனல் பள்ளிஷர்ஸ், தியாகராசர் நகர், சென்னை (2022)

# ராஜா வந்திருக்கிறார் சிறுகதை காட்டும் வாழ்வியல் நெறிகள்

**திருமதி மூ. சிவகாமி**
*உதவிப் பேராசிரியர்*
*மங்கையர்க்கரசி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பரவை, மதுரை*

**முன்னுரை**

வாழ்வியல் என்பத சமுதாயத்தில் குடும்பமாக சேர்ந்து வாழும் அமைப்பாகும். மனித வாழ்வில் ஏற்படும் இடையூறுகள், துன்பங்கள், மகிழ்ச்சிகள் இவை அனைத்தும் கடந்து வாழும் பொழுது தனது வாழ்க்கை முன்னேற்றத்திற்கான நெறிமுறைகளை கடைபிடிக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது. எப்படி வேண்டுமானாலும் வாழலாம் என்பதைத் தவிர்த்து இப்படித் தான் வாழ வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை வரையறுத்துக் கொடுக்கிறது இந்தச் சமுதாய சூழல். வாழ்வியல் நெறிமுறைகள் குறித்து ஆய்தலே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**வாழ்வியல்**

சமுகத்தில் நமது செயல்பாடுகளை செயல்படுத்தும் முறையே வாழ்வியல் ஆகும். மனிதர்களுக்கு ஏற்படும் அன்பு, இயலாமை, மனிதநேயம் இவை போன்ற செயல்கள் அவன் யார் என்பதையும். மற்றவர்களிடத்து வெளிக்கொணரச் செய்கிறது, நாம் வாழும் வாழ்வு அது சமுதாயத்தைச் சார்ந்துதான் அமைந்துள்ளது என்பதையும், நமக்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றது. பிறரைப் பார்த்து வாழ்வதல்ல வாழ்க்கை நமது நியதிகளை சமுதாயக் கோட்பாடுகளுக்கு உட்படுத்தி வாழ்வதே வாழ்வியலாகும்.

**குழந்தைகள் உலகம்**

குழந்தைகள் உலகம் மிகவும் மகிழ்ச்சி நிறைந்த உலகமாகும். எந்தவித பேதங்களுக்கு ஆட்படாமல் தனது உலகில் வாழ்பவர்கள் குழந்தைகள். யார் நல்லவர், யார் கெட்டவர் என்ற வேறுபாட்டுத் தன்மையற்றுக் காணப்படுவார்கள். அளவில்லா அன்பும், மட்டற்ற ஒற்றுமையும் இவர்களிடத்தே காணப்படும். **“தன்னைப் போல் தனது அயலானையும் நேசி”** என்ற சொற்றொடருக்கு சொந்தமானவர்கள் குழந்தைகள் என்றே கூறலாம். தனக்கு உண்டானது தன்னைச் சார்ந்தவர்களுக்கும் அளிக்க வேண்டும் என்ற தன்மையும் குழந்தைகளிடம் காண்படுகின்றது. இந்தக் கூற்றுக்கிணங்க **“ராஜா வந்திருக்கிறார்”** என்ற சிறுகதையிலும்

> “**பாவம்! அவனுக்கு அந்தத் துண்டைக் குடு அம்மா? குழந்தை இந்த வார்த்தைகளைச் சொல்லி நிறுத்தினாள்.** “ (ரா.வந்.ப-36)

ஆதரவின்றி வரும் ராஜாவிற்கு தங்களது வீட்டிலிருக்கும் ஒரே துண்டை கொடுக்கச் சொல்லுகிறாள் குழந்தை மங்கம்மாள். தனது சகோதரனாக இல்லாவிட்டாலும் ஆதரவற்று வரும் ராஜாவிற்கு உதவ முன்வருகிறாள் மங்கம்மாள். இதுதான் குழந்தையின் உள்ளம் என்பதை இந்தச் சான்று அரண் செய்கிறது.

**தாயின் அன்பு**

> **“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**
> **பண்பும் பயனும் அது”**

என்கிறது திருக்குறள். அன்பால் மட்டுமே உலகை ஆளமுடியும். வாழ்க்கையில் அன்பு இல்லையென்றால் மனிதர்கள் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ முடியாது. அன்பால் மட்டுமே நாம் பிறர் மனதில் நிலைத்து நிற்க முடியும். முகம் பார்த்து வருவதில்லை அன்பு ஒருவரது குணம் பார்த்து வருவதுதான் அன்பு. இதனை **ராஜா வந்திருக்கிறார்** என்ற சிறுகதையில் தாயம்மாள் தனது குழந்தைகளை அன்பாக எப்படி தீபாவளிக்கு தயார் செய்கிறாளோ? அதே போல் ராஜா என்கிற சிறுவனையும் அன்போடும் ஆதரவோடும் அவனைக் கவனித்துக் கொள்கிறாள்.

**“தம்பி! சொன்னாக் கேளுடா. என்னை உன் அம்மான்னு நினைச்சுக்கோ உனக்குக் காந்தும்படியா நான் தேய்ப்பனா? வா எண்ணெய் தேய்ச்சுக் குளி. இந்தத் தீபாவளியோடு பீடை எல்லாம் விட்டுப் போகும். குளிக்காம இருக்கக் கூடாதப்பா”.** இப்படி வெகு நேரம் கெஞ்சியபிறகு தான் அவன் வேறு வழியில்லாமல் சம்மதித்தான். ஒரு பிள்ளைக்குத் தேய்ச்சி ஒரு பிள்ளைக்குத் தேய்க்காமல் விடலாமா? என் பிள்ளை குட்டியும் நல்லா இருக்கணுமில்லப்பா என்று மற்றவர்களுக்குச் சொல்லுவது போலத் தனக்குத் தானே சொல்லிக் கொண்டே எண்ணெய் தேய்த்தாள். (ரா.வந். பக்-34, 35)

ஊரான் பிள்ளைய ஊட்டி வளர்த்தாள் தன் பிள்ளை தானாக வளரும் என்பது பழமொழி அந்த பழமொழிக்கு ஏற்றால் போல தாயம்மாளும் தனியாக வந்த ராஜாவை தனது குழந்தையாக எண்ணி அவனுக்கும் தனது குழந்தைகளுக்கு தீபாவளி அன்று என்ன செயல்கள் செய்தாளோ அதே போல் மாற்றான் வீட்டு குழந்தை ராஜாவிற்கும் செய்தாள். இதைதான் தாயின் அன்பு என்று நாம்

உணரலாம். சிறு குழந்தை மனதில் வேறுபாடு வந்துவிடக் கூடாது என்பதிலும் தாயம்மாள் கவனம் கொள்கிறாள். சரியாக அனைத்துக் குழந்தைகளுக்கும் எண்ணெய் வைத்துக் குளிக்கச் செய்கிறாள். உன் அம்மா என்று என்னையும் நினைத்துக் கொள் என்ற தாயம்மாளின் உரையாடல் குழந்தை ராஜாவின் மனதில் தனக்கு தாய் இல்லை என்ற வருத்தம் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற தாய் அன்பை வெளிக்காட்டுகிறது.

**வறுமை**

வறுமை என்பது மனித வாழ்வில் மிகவும் கடினமான நிலை என்பதை அறிய முடியும் எந்த சூழ்நிலையும் மனிதனால் சமாளிக்க முடியும். ஆனால் வறுமை மட்டுமே மனிதனால் சமாளிப்பது கடினம். வறுமையை சிறியவர்களும் சந்திக்கின்றனர். குழந்தைகளால் வறுமையை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் என்பது இல்லை. இதனையே **ராஜா வந்திருக்கிறார்** சிறுகதை சுட்டிக் காட்டுகிறது.

**"நீ கூட ஒருநாள் சாப்பாடு இல்லாமெ பள்ளிக்கூடம் போனியே கண்ணு. உன் வயித்துக்குக் கூட அன்னிக்கு ஒரு வாய்க் கூழ கெடைக்கல்லையே அவளுக்குக் கண்ணீர் வந்துவிட்டது. சாப்பாட்டுக்கே கஷ்டப்படும்போது நீ மத்தாப்புக் கேக்கலாமா கண்ணு? பேசாமப் படுத்துத் தூங்கு"** என்று தேற்றினாள் மங்கம்மாளைப் பரிவோடு தடவிக் கொடுத்தாள். (ரா.வந்-ப.32)

குழந்தையின் சிறு ஆசையைக் கூட நிறைவேற்ற முடியாத சூழ்நிலைக்கு வறுமை காரணம் ஆகிவிடுகிறது. குழந்தைப்பருவம் என்பது மகிழ்ச்சி நிறைந்தது. அந்தக் காலகட்டத்திலே குழந்தைக்கு விரும்பிய பொருள் கிடைப்பது இல்லை என்பது மிகவும் துன்பமான நிலை என்றே கூறலாம்.

**கோபம்**

வாழ்வியலில் மனிதனை சமூகத்திடம் இருந்து தள்ளி வைப்பது கோபம் எனலாம். ஒருவரின் கோபம் அவர்களின் மதிப்பையும் குறைக்கிறது. ஒருவரை உயர்த்தியும் மற்றவரை குறைத்துப் பேசும் பொழுது இருவருக்கும் இடையே கோபமும் வேற்று மனப்பான்மையும் ஏற்படுகிறது. **ராஜா வந்திருக்கிறார்** என்ற சிறுகதையில் எங்கிருந்தோ வந்த ராஜாவின் மீது தன் தாய்க்கு பாசம் அதிகரிக்கிறது என்பது மங்கம்மாவின் கோபமாகிறது.

**"மங்கம்மாளுக்கு அவன் மேல் கோபம் வந்துவிட்டது. அவனைப் புகழ்ந்து தன் கோரிக்கையைத் தாயார் புறக்கணித்துக் கொண்டு வருவது அவளுக்குப் பிடிக்கவில்லை".**

தாயின் மனம் அன்பால் நிறைந்தது. குழந்தைகள் அனைவரும் சமம் என எண்ணுகிறாள் தாயம்மாள். ஆனால் குழந்தை மங்கம்மாவுக்கு அது புரியவில்லை என்பதை இந்தக் கூற்று உணர்த்துகிறது.

**மனித நேயம்**

சமுதாயம் ஓரளவு சிறந்து விளங்குகிறது என்றால் அதற்கு ஒரு காரணம் மனித நேயம் எனலாம்.சில மனிதநேய செயல்களால் தான் பூமி இன்றளவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. நமக்கு தெரிந்தவர்களுக்கு உதவுவது மனிதநேயம் இல்லை. முன்பின் தெரியாத, நம்மை அணுகி வருபவர்களுக்கு நம்மால் இயன்றதை இல்லை என்று கூறாமல் செய்வதே மனிதநேயம் ஆகும். சங்ககாலத்தில் வீட்டில் திண்ணை அமைப்பது நெடுந்தூரம் பயணம் செய்பவர்கள் சற்று ஓய்வெடுத்து செல்வதற்குத்தான். இக்காலச் சிறுகதையிலும் மழைக்கு ஒதுங்கிய சிறுவனுக்கு அடைக்கலம் கொடுத்து அவனையும் தன் குழந்தை போல் பாவித்து அரவணைப்புக் கொடுக்கும் திறன் **ராஜா வந்திருக்கிறார்** சிறுகதையிலும் காணப்படுகிறது.

**"யாரோ? எவரோ? மழைன்னு வந்து வீட்டிலே ஒதுங்கிட்டான் அவனைப் போகச் சொல்ல முடியுமா? அவன் வந்த நேரம் தீபாவளியாய் போச்சு குழந்தைகளுக்குள்ளே வஞ்சகம் செய்யலாமா? பார்க்கிறவர்களுக்கு நான் செய்றதெல்லாம் கேலியாயிருககும் அவுஹ கேலி செய்தாச் செய்துட்டுப் போகட்டும் எனக்கும் என் குழந்தைகளுக்கும் பகவான் துணை செய்வான்.........!"**

வீட்டிற்கு வந்தவர்களை வரவேற்பது நம் தமிழர் மரபு தமிழர் மரபையும் மனித நேயத்தையும் இச்செயல் நமக்கு வலியுறுத்தியுள்ளது. நல்ல நாளில் ராஜா தாயம்மாள் வீட்டிற்கு வந்துவிட்டான். ராஜாவை வெளியேற்ற தாயம்மாளிற்கு மனம் வரவில்லை. யாருக்காகவும் தனது மனித நேய எண்ணத்தை மாற்றிக் கொள்ளாமல் ராஜாவை நன்கு பேணிக் காத்தாள். பிறர் தன்னைப் பற்றி என்ன எண்ணினாலும் அவற்றைக் கண்டு கொள்ளாமல் வந்தவனுக்கு சிறப்பு செய்தால் இது தாயம்மாள் உயர்ந்த மனித நேயப் பண்பாடு எனலாம்.

**முடிவுரை**

உலகில் பிறந்த அனைவரும் வாழ்வியலை எதிர் கொண்டு அந்த நடைமுறைக்கு கட்டுப்பட்டு வாழ்கின்றனர். எந்த இன்பம், துன்பம் எது வந்தாலும் அவற்றை அந்த வாழ்வியல் சூழலில் வாழ பழகிக் கொள்ள வேண்டும் என்பதை இந்த வாழ்வியல் தலைப்பு நமக்கு அறிவுறுத்தி உள்ளது எனலாம். ஏற்றம் என்றாலும் இறக்கம் என்றாலும் அது நம்முடன் மட்டும்தான் பிறருக்கு இல்லை. ஏனெனில் வாழ்வியலை கடந்து பழகிக் கொண்டால் அந்த வாழ்வு சிறப்பானதாக அமையும்.

# தமிழிலக்கியங்களில் வெற்றிலை - அறிவியல்தமிழ் நோக்கு

**முனைவர் லோ. சரவணன்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*கே.பி.ஆர். கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரி*

தமிழ்ப் பண்பாடு பன்முகப் பரிமாணம் கொண்டது. இதன் ஒவ்வொரு கூறும், சொல்லும் நுணுகி ஆராயத்தக்கன. அவற்றுள் இன்றியமையாதது, வெற்றிலை. சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றுவரை தமிழ் இலக்கியத்திலும், பண்பாட்டிலும் வரலாற்றிலும் காணப்படும் ஒருகூறுதான் வெற்றிலை. இன்று 'தாம்பூலம் தரித்தல், வெற்றிலைப் பாக்கு என்று வழங்கப்படுகிறது. முந்நாளிலிருந்து மங்கலப் பொருள்களுள் ஒன்றாகப் பயன்பட்டுவரும் இந்த வெற்றிலையானது, தமிழ்நாட்டிற்குரிய தாவரமன்று. மலேயா நாட்டிலிருந்து வந்த, இறக்குமதித் தாவரம் ஆகும். வெற்றிலையைப் பண்பாடு, வரலாறு, அறிவியல், இலக்கியவியல் நோக்கில் இக்கட்டுரை ஆராய்கிறது.

**வெற்றிலை - பெயராய்வு**

தாவரப் பகுப்பில், கொடிவகைகளுள் ஒன்றாக அறியப்படும் வெற்றிலையின் பெயர் பலவாறாகக் குறிக்கப்படுகின்றது. அடகு, மெல்லடகு, அடைசாகம், பன்னம், பாக்கிலை, பாசிலை, தாம்பூலம், தம்பலம், திரையல், வெள்ளிலை, மெல்லிலை எனப் பல பெயர்களுண்டு. வெற்றிலைக் கொடியின் பெயரைப் பிங்கல நிகண்டு நாகவல்லி, தாம்பூலம், மெல்லிலை, மூலவல்லி என இரண்டிடங்களில் (1852, 2985) குறிப்பிட்டு, 'இலைக்கொடி வகை' எனப் பகுக்கின்றது.

**நறிய தாம்பூலவல்லி தாம்பூலி நாகவல்லி**
**செறி தரும் இலைக்கொடிப்பேர் திரையன் மெல்லிலை யுமாகும்**
**கறியொடுமரீ சம்காயம் கலினை கோளகம் திரங்கல்**
**செறிதரு மிளகினாம் இரியலுஞ் செப்பலாமே**
**குலவு, தாம்பூல மெல்லிரை திரையல்**
**மூன்றும் குறிக்கிடும் வெற்றிலைப் பேர்**
**இசைந்த தாம்பூலி, தம்பூலவனி னாகவலி**
**என்பதவ் விலைக் கொடிப்பேர்**

நிகண்டுகளில் காணலாகும் பெயர்களுள் குலவு என்பதும் வெற்றிலையைக் குறிப்பதாகக் கிடைக்கின்றது. இவற்றில் வரும் 'தாம்பூலம்' என்பது வடசொல் என்பர். வெற்றிலை என்பது வெத்தலை என வட்டார வழக்கில் வழங்குகின்றது. 'தமலபாக்கு, வக்கா ஆக்கு' என்பது தெலுங்கு மொழி வழக்கு. 'தம்போல்' (Tambol) என்பது அராபிய வழக்கு. நவீன அறிவியல் இதைப் பூக்கும் இருவித்திலைத் தாவரமாக வகைப்படுத்திப் பைபர் பேரினத்துள், பைபர் பீடல் (Piper Betel) சிற்றினத்துள், மிளகு வரிசையிலும் அதன் குடும்பத்திலும் ஒன்றாகக் காட்டுகின்றது. இதன்கண் அமைந்துள்ள காரச்சுவையே மிளகையும் வெற்றிலையையும் வேறுபடுத்துகின்றன. ஆயினும் காண்பதற்கு ஒன்றே போல் தோன்றக்கூடியன. இந்நவீன அறிவியல் கருத்தொட்டித் தமிழ் நிகண்டுகள் (காண்க. ஆசிரிய, சூடாமணி நிகண்டு) வெற்றிலையையும், மிளகையும் ஒன்றாகவே பெயர்விளக்கம் சுட்டுகின்றன.

இலையால் பெயர்பெற்ற தாவரங்களுள் துளசியும், வெற்றிலையும் குறிக்கத்தக்கன. இரண்டிலும் காரத்தன்மை உள.

வெற்றிலை மிளகு இலையிலிருந்து பரிணமித்ததாகும். மிளகு இலையிலுள்ள காரம் நீங்கலாக ஏனைய பண்புகளை வெற்றிலையில் காணலாம். எனவே காரம் இல்லாத இலை என்னும் கருத்தில் வெற்றிலை என்னும் சொல் பிறந்து இருக்கிறது என்பர்.

காரம் இல்லா வெற்று இலை 'வெற்றிலை' என மேற்சான்று சுட்டுகிறது. இருப்பினும் இது முரண். வேல் போன்ற இலை என்னும் கருத்திற்கேற்ப, வேல்+இலை=வெற்றிலை ஆனதென்றும் கருதுவர். வேறு எதனுடனும் சாராமல் வெறுமனே உட்கொள்ளும் இலை என்னும் கருத்தொட்டிச் சித்தமருத்துவத்தில் வெற்று+இலை=வெற்றிலை என்பாரும் உளர். இப்பெயராய்வுகள் ஒரு திட்டத்தில் முடிவடைவனவல்ல. வெற்றிலை ஆசியப் பகுதிகளுக்கான தாவரம் என்றாலும், தமிழ்ப் பண்பாட்டோடு நீக்கமற நிறைந்திருப்பதும் சுட்டத்தக்கது. தமிழக ஊர்ப் பெயர்களோடு பெரிதும் ஒட்டியியல்வது கொண்டு இதைத் தெளிவிக்கலாம்.

**வெற்றிலை - ஊர்ப்பெயர்கள்**

வெற்றிலைக் குண்டு > வெத்திலைக் குண்டு > வத்தலக்குண்டு என்று ஆனதென்பர். ஆங்கிலேயர்கள் இக்கருத்தையொட்டியே Betal Gundu என்று வழங்கியிருப்பதும், இன்று அவ்வாறு வழங்கிவருவதும் சுட்டத்தக்கன. ஆனால் இ∴து இன்று மருகிப்

பட்லாகுண்டு (Batla Gundu) என்று ஒருசிலவிடங்களில் வழங்குவதும் உண்டு. இராமநாதபுரத்தின் கூமாப்பட்டிருக்கு அருகிலுக்கும் 'வெற்றிலைக்கேணி', 'வெற்றிலைக் கொடிக்கால்', 'வெற்றிலை மண்டபம்', வெற்றிலை முருகன்பட்டி, சீர்காழிக்கு அருகிலுள்ள இலையமுது கூடம் என்பன வெற்றிலைத் தாவரப் பெயர்களில் அமைந்த ஊர்களுக்குச் சான்றாகின்றன. இறைவனுக்குப் படைக்கப்படும் பொருள்களை அமுது என வழங்குதல் மரபு. அதையொட்டி நெய்யமுது, மிளகு அமுது, உப்பு அமுது, பருப்பு அமுது என்பதைப் போன்று இலை அமுது என்ற பெயர் வெற்றிலைக்கு நின்றது. இதனைப்போன்றே அடை, அடைக்காய் என்பது பாக்கைக் குறிப்பது. வெற்றிலை பாக்குடன் சேர்த்துப் பரிமாறப்படுதலால் பின்னாளில் அடைக்காய் என்பதும் வெற்றிலைக்கு ஆகி, ஆகுபெயராய் வந்தது. அதனால் அடைக்காய் அமுது எனவும் கல்வெட்டுகளில் இடம்பெறுகின்றது. இது வெற்றிலை, பாக்கு இணைந்ததைச் சுட்டுகின்றது. இது தவிர வெள்ளிலையமுது, வெள்ளிலைப் பற்று, வெற்றிலையமுது, பாக்கிலை, கொழுந்து என்பனவும் கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

**சங்க இலக்கியங்களில் வெற்றிலைக்கதை**

சங்க காலத்தில் இரண்டு ஆடு மேய்க்கும் சிறுவர்கள் தங்களின் ஆடுகளைக் காட்டில் எங்கு கொண்டுபோய் விட்டாலும் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அந்த ஆடுகள் மீண்டும் மீண்டும் சென்று மேய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தன. ஒருமுறை இரண்டு சிறுவர்களுக்கும் ஆடுகள் வழக்கமாக நிற்கும் இடத்திற்கு யார் முதலில் செல்வது என்று போட்டி நடந்தது. ஒரு சிறுவன் ஆடு நிற்கும் இடத்திற்கு வேகமாக ஓடிச்சென்று அங்கு பக்கத்தில் படர்ந்திருக்கும் கொடியிலுள்ள இலையைப் பறித்து நான் தான் வெற்றி பெற்றேன் என்றான். வெற்றி பெற்ற சிறுவன் ஊருக்குள்ளே சென்று வெற்றி பெற்றமைக்கு அடையாளமாகத் தன் கையில் வைத்திருந்த இலையைக் காண்பித்தான். அதைப் பார்த்த பெரியோர்கள் நீ வெற்றி பெற்றதால் வெற்றி+இலை = வெற்றிலை எனக் கூறியுள்ளனர். மேலும் வெற்றிலையைச் சாப்பிட்ட ஆடுகளுக்கு எந்தவொரு நோயும் வராமல் இருப்பதைக் கண்டு அவர்களும் சாப்பிடலாயினர் என்றொரு கதை வழக்கிலுள்ளது.

சங்க இலக்கியத்துள் இக்கதை பயின்றுவரும் இடமும் சான்றும் இணையக் கட்டுரையாளரால் துல்லியமாகக் குறிக்கப்படவில்லை. உண்மையில் இவ்வாறு ஒரு கதை உள்ளதா என்பது குறித்துத் தனியே ஓராய்வு மேற்கொள்ள வேண்டும். சங்க இலக்கியங்களில் வெற்றிலை குறித்துக் கிடைக்கும் தரவுகளில் இதுபோன்றதொரு கதை எங்கும் காணக்கிடைக்கவில்லை.

**சங்க இலக்கியங்களில் வெற்றிலை**

சங்க இலக்கியப் பெருவெளியைப் பொறுத்தமட்டிலும் அடை, அடகு என்னும் இருசொற்கள் புழங்கப்படுகின்றன. இவற்றுள் அடை என்பது இலையையும், அடகு என்பது கீரையையும் குறிப்பன.

**ஆம்பல் மெல் அடை கிழிய குவளை**
**நெடுநீர் ஆம்பல் அடை புறத்து அன்ன**
**என்பதில் அடை என்பது நீர்வாழ் தாவரத்தின் உறுப்பான இலையாகவும்,**
**கொய் அடகு வாடத் தருவிறகு உணங்க**
**இடுமுள் படப்பை மறிமேய்ந்து ஒழிந்த**
**குறுநறு முஞ்ஞைக் கொழுங்கண் குற்றடகு**

என்பதில் 'அடகு' மனிதர்கள் உண்பதற்குப் பயன்படுத்தும் கீரை வகைகளுள் (முஞ்ஞைக் கீரை) ஒன்றாகவும் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

**வெற்றிலை - பாலுணர்வுத் தூண்டல்?**

மதுரைக்காஞ்சி, வெற்றிலை வணிகரைப் பற்றிய குறிப்பையும், பாக்கு மூட்டை துறைமுகத்திலிருந்த குறிப்பையும் தருகின்றது.

**தகைசெய் தீம்சேற்று இன்நீர்ப் பசுங்காய்**
**நீடுகொடி இலையினர் கோடுசுடு நூற்றினர்**
**மென்பிணி அவிழ்ந்த குறுமுறி அடகும்**
**அமிர்தியன் றன்ன தீஞ்சேற்றுக் கடிகையும்**

இதில் மதுரை மாநகரத் தெருக்களின் காட்சியைக் கூறுமிடத்து, வெற்றிலை வணிகர் (நீடுகொடி இலையினர்) பற்றியும் உணவுப் பொருள்களில் ஒன்றாக, குறுமுறி அடகு என வெற்றிலையும் குறிக்கப்படுகின்றது. பிற்காலச் சங்க இலக்கியங்களுள் ஒன்றாகக் கருதப்படும் கலித்தொகையில் வெற்றிலை, தம்பலம் என்று குறிக்கப்படுகின்றது.

**வைகாண்முது பகட்டின் பக்கத்தின் போகாது**
**'தையால்! தம்பலம் தின்றியோ?' என்று தன்**
**பக்கு அழித்துக் கொண்டீ எனத் தரலும் யாது ஒன்றும்**

காதலனின் வரவிற்காகக் குறியிடத்தில் நின்று காத்திருந்த தலைவியிடம் வயது முதிர்ந்த அந்தணாளன் ஒருவன் பேச்சு வளர்க்கிறான். 'பொழுதில்லாத இந்நேரத்தில் தனியே நிற்கிறாயே' எனக் கேட்டுக்கொண்டே 'பெண்ணே தாம்பலம் தின்கிறாயா?' என்றவாறே 'இந்தா எடுத்துக்கொள்' என நெருங்கியதாகக் கலித்தொகை

காட்சிப்படுத்துகின்றது. இதில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு என்னும் மூன்றையும் 'தம்பலம்' என்னும் சொல் சுட்டுகின்றது. அத்துடன் ஒருவர் உண்ணும்போது மற்றொருவர்க்கு வெற்றிலை உண்ணத்தூண்டும் வழக்கம் இருந்துள்ளதையும் அறியலாம். இங்கு இடக்கரடக்கலாகவும், நேரடியாகவும் பாலியல் தூண்டலுக்கான குறிப்புகள் இல்லை.

ஆயினும், கம்பராமாயணம், சீவகசிந்தாமணியில் வரும் மனைவி-கணவன், பெண்-ஆணிற்கு வெற்றிலை எடுத்துக்கொடுக்கும் வழக்கம், நச்சினார்க்கினியரின் 'வெற்றிலை மடித்துக் கொடுத்தற்கென்றது இடக்கர்' ஆகிய குறிப்பை முன்வைத்து, இவை பாலியல் உணர்வுத் தூண்டலுக்கான குறியீடுகள் எனத் தினமணி நாளிதழில் வெளிவந்த ஒரு கட்டுரை காட்டுகின்றது. இருப்பினும் சங்க இலக்கியத்தில் இதையொட்டி ஒரு குறிப்புக் காணக்கிடைக்கின்றது.

**உடன் வீழ்ந்தன்றால், அமரே பெண்டிரும்**
**பாசடகு மிசையார் பனிநீர் மூழ்கார்**
**மார்பகம் பொருந்தி ஆங்கமைந்த தனரே**

கணவனை இழந்த மகளிரின் நிலையாகப் பெண்கள் பாசடகு உண்ணார், பனிநீர் மூழ்கார் எனக் காட்டப்படுகின்றது. இங்குப் பாசடகு என்பதைப் பசிய நிறங்கொண்ட இலை என்றே உரையாசிரியர்கள் பலரும் சுட்டுகின்றனர். ஆயினும் பாசடகு என்பது வெற்றிலையைக் குறிக்கும் ஆகுபெயராகின்றது. இப்பண்பாட்டு வெளியில் சமைக்காத இலைகளை உண்பது வழக்கம் இல்லை. இங்கு விலக்க வேண்டியனவாக வெற்றிலை உண்பதும், பனிநீரில் குளிர்ப்பதும் காட்டப்படுகின்றன. கூடுதலாக, இன்று வெற்றிலை மென்றான், தின்றான், உண்டான் என்றெல்லாம் வினைச்சொற்கள் ஆளப்படுகின்றன. 'வெற்றிலை மிசைந்தான்' என்பதே பழவழக்கு. கணவனை இழந்த மகளிர் வெற்றிலை உண்ணாமலிருப்பது, பாலுணர்வுத் தூண்டலைத் தடுக்கும் நிகழ்வாகக் கொள்ள இயலவில்லை. மனித உளவியலோடு தொடர்புடைய அன்பின் வெளிப்பாடாகவே அமைந்திருக்கும் என்பதைப் பின்வரும் சான்றுகள் தெளிவுபடுத்தும். இருப்பினும் உடலியல் மருத்துவக்கண்ணோட்டத்துடன் ஆய்தல் வேண்டும்.

**வெற்றிலை - வடிவம்**

இலக்கியங்களில் ஆளப்படும் தாவரம், விலங்கு, பொது அறிவியல்கூறுகள் போன்றவை அனைத்தும் அவற்றின் வடிவம், பண்பு, பயன் என்பனவற்றின் கண்ணேயே விளக்கப்படும். சான்றாக,

**தினைத்தாள் அன்ன சிறுபசுங்கால**
**ஒழுகுநீர் ஆரல் பார்க்கும்**
**குருகும் உண்டு தான் மணந்த ஞான்றே!**
**ஒலிவெள் அருவி ஓங்குமலை நாடன்**
**சிறுகண் பெருங்களிறு வயப்புலி தாக்கித்**

என்பதைக் கொள்ளலாம். இதுபோன்றே சங்க இலக்கியத்திலும் வெற்றிலையின் வடிவம் பாசடகு, நீடுகொடி இலை, தாம்பலம் (சிவப்பு), குறுமுறி அடகு (காம்பு) போன்றவை அவற்றின் தாவரவியல் பண்புகளைக் காட்டுகின்றன. இரட்டைக் காப்பியங்களில் வெற்றிலை 'திரையல்' என்ற சொல்லால் குறிக்கப்படுகின்றது. திரை என்பதற்குச் சுருக்கம் என்பது முதன்மைப் பொருள். சுருண்டு வருதலால் கடலில் தோன்றும் நீர்ச்சுருக்கத்திற்குத் 'திரை' என்றுபெயர். 'நரை திரை மூப்பு'என்பதில் உடலில் தோன்றும் தோற்சுருக்கத்தைக் குறிக்கின்றது.

**உண்டு இனிது இருந்த உயர் பேராளற்கு**
**அம்மென் திரையலோடு அடைக்காய் ஈத்த**
**மைஈர் ஓதியை,'வருக' எனப் பொருந்தி**
**போகனம் ஏந்திப் பொழுதினிற் கொண்டபின்**
**பாசிலைத் திரையலும் பளிதமும் படைத்து**
**வாய்வதாக என் மனப்பாட்டு அறமென்**

இவ்விரண்டிலும் வெற்றிலையின் வடிவம் நன்றாகப் புலப்படுகின்றது. திரை+அல் என்பது சுருக்கமல்லாத, சுருளல்லாத வெற்றிலை என்று பொருள்படுகின்றது. வெற்றிலை மிசைதல் என்பது மனநிறைவின் குறியீடாகவே ஈண்டு ஆளப்பட்டுள்ளது. மென்மையான சுருக்கம் இலாத புதிதாக இருக்கும் வெற்றிலை என்பதே, 'திரையல்' என்பதன் நுணுக்கமான பொருள். மணிமேகலை தரும் சான்றானது இன்னும் சற்று ஆழப்பட்டுள்ளது. மணிமேகலையின் அறச்சாலையை வந்தடைந்த அறவண அடிகளுக்கு உணவு பாலித்த பின்னர்ப் பசிய இலையான வெற்றிலையுடன் பாக்கும் கற்பூரமும் கலந்து படைத்தாள்' என்கிறது. ஆக அந்நாளில் வெற்றிலை மெல்லுதல் என்பது சமூகத்தின் அனைத்துத் தரப்பினர்க்கும் உண்டான விருந்தாட்டுவிப்பாக இருந்துள்ளதை அறியலாம். துறவோர்கள் வெற்றிலையுடன் நறுமணத்திற்காகப் பச்சைக் கற்பூரமும் கலந்துண்டனர். ஆனால் உணவுண்ட பின் வெற்றிலை கொள்ளுதல், கணவன் மனைவி இன்பத்திற்காக என்னும் தவறான கண்ணோட்டமும் பதிவுசெய்யப் பெற்றுள்ளது.

கோவலனும் கண்ணகியும் மதுரைக்கு வந்து புறஞ்சேரியில் மாதரி என்னும் இடையர் குலப் பெண்ணின் வீட்டில் தங்கியிருந்த இரவில் உணவு உண்டபின் கோவலனுக்குக் கண்ணகி, வெற்றிலை பாக்கு மடித்துக் கொடுக்கிறாள் அவர்கள் இருவரும்

சேர்ந்து இருக்கின்ற கடைசிநாள் அதுதான். . . . . . . . . ராமனைச் சேர்ந்து இன்பம் துய்க்க முடியாத தனது நிலைமையை இச்செய்தி மறைமுகமாகவும் கூறுவதாக அமைகிறது.

'சீவகன் விமலையாரிடம் புணர்ச்சி வேண்டுவதைக் குறிப்பால் உணர்த்தும்' விதமாக வெற்றிலை மடித்துக் கொடுப்பதற்காக அவளைத் தொட்டான் என்று கூறப்படுகிறது' என்பது நாளிதழ்க் கட்டுரையின் கருத்து. அதன்படிக் கொண்டால் வெற்றிலை உண்ணுதல் என்பது வேறொரு பரிமாணத்தில் பொருள் கொள்ளக்கூடும். இலக்கியத்துள் நேரடியாகக் குறிக்கப்பெறாதபோது வலிந்து பொருள்கொள்வதாக இது அமைகின்றது.

**'அருந்தும் மெல்லடகு ஆர்இட அருந்தும்?' என்று அழுங்கும்**
**'விருந்து கண்டபோது என் உறுமோ? என்று விம்மும்**
**'மருந்தும் உண்டுகொல் யான்கொண்ட நோய்க்கு' என்று மயங்கும்**
**இருந்த மாநிலம் செல்லரித்து எழவும் ஆண்டு தொழாதாள்**

என்னும் கம்பராமாயணப் பாடல், தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்பான விருந்தோம்பலைப் புலப்படுத்துகின்றது. கணவனுக்கு மனைவி வெற்றிலை மடித்துக் கொடுக்கும் வழக்கையும், மனைவியின் அன்புள்ளப் பரிமாற்றத்தையும் மட்டுமே தெளிவாகக் காட்டுகின்றது.

**கப்புரப் பசுந்திரை கதிர்செய் மாமணிச்**
**செப்பொடு சிலதியர் ஏந்தத் தீவிய**
**துப்பு உமிழ்ந்து அலமரும் காமவல்லியும்**
**ஒப்பரும் பாவைபோன்று உறையும் என்பவே**
**சீந்தா நின்ற தீமுக வேலோன் மணிச்செப்பின்**
**ஈந்தான் கொண்கன் இன்முகவாசம் எரிசெம்பொன்**

இவ்விரு சிந்தாமணிப் பாடலும் வெற்றிலை வைத்திருக்கும் மணிச்செப்பைக் காட்டுகின்றன. அது ஒளிபொருந்தியதாக மணிவிடும் வண்ணம் இருந்ததும், அதில் வெற்றிலைப் பாக்குடன், பச்சைக்கற்பூரமும் (கப்புரம்) இருப்பது தெளிவாகின்றது. இதில் பணிப்பெண்கள் ஏந்திடக் கணவன் - மனைவி இருவரும் வெற்றிலை கொள்ளும் நிகழ்வு காட்டப்படுகின்றது.

சீவகனுக்கு மணம்பேசும் மங்கல நிகழ்வில் வெற்றிலை கொள்ளும் நிகழ்வு சுட்டப்படுகின்றது. கல்வி, பேச்சுத்திறன் வல்ல நால்வர் கூடி, கந்துக்கடனிடத்தே குபேரமித்திரன் வேண்டலின் பொருட்டுச் சென்றபோது, அவன் எதிர்கொண்டழைத்து இருக்கையில் அமரவைத்து வெற்றிலை மணிச்செப்பை நீட்டுகிறான். இவ்விரண்டிலும் வெற்றிலை மங்கல நிகழ்வாக, அன்பின் வெளிப்பாடாகவே இடம்பெறுகின்றது. இத்துடன் பாசிலை (1987), பசுந்திரை (197), மெல்லிலை (815), மெல்லிலைக்காவு (826) எனப் பலவிடங்களில் வெற்றிலையைச் சீவகசிந்தாமணி பதிவுபடுத்துகிறது.

வெற்றிலை, பாக்கு, சுண்ணம் இணைந்த வடிவத்தையும் நிறச் சிறப்பையும் கம்பராமாயணமே தெளிவாகக் காட்சிப்படுத்துகிறது.

**எள் இட இடமும் இன்றி**
**எழுந்தன இலங்கு கோபம்**
**தள்ளுற, தலைவர் தம்மைப்**
**பிரிந்தவர் தழீஇய தூமக்**
**கள்ளுடை ஓதியார் தம்**
**கலவியில், பலகால் கான்ற**
**வெள்ளடைத் தம்பல் குப்பை**
**சிதர்ந்தென, விரிந்த மலரே**

'தம்பலப் பூச்சிகள் என்று வழங்கப்பெறும் இந்திரகோபப் பூச்சிகள் நிலத்தின்கண் எங்கும் மிகுதியாகத் தோன்றியது, தலைவனைப் பிரிந்தபின் கூடும் மகளிர் புணர்ச்சியில் பலமுறை உமிழ்ந்த வெற்றிலைக் குவியல் போன்றது' என்கிறார் கம்பர். இது வலிந்து புகுத்தப்பெற்ற உவமை. ஆண் பெண், உயர்ந்தவர் தாழ்ந்தவர், சமயப் பகுப்புகள் என எதற்கும் உடன்படாத ஒரு பொதுப்பழக்கமாகவே வெற்றிலை கொள்ளுதல் அமைந்து வந்தது இதுகாறும் எடுத்துக்காட்டப்பட்டது. இவ்வாறிருக்க பெண்கள் புணர்ச்சியின்போது வெற்றிலை கொண்டார் என்பதும், அவ்வேளையில் வெற்றிலையைப் பலவிடங்களில் பலமுறை உமிழ்வர் என்பதும் இயல்பான உலக வழக்கத்தோடு பொருந்தாதது. இங்கு வெற்றிலையுடன் கூட்டுச் சேர்மானங்கள் சேரும்போது ஏற்படும் நிறமாற்றம், அது இந்திரகோபப் பூச்சிகளின் நிறத்தொடு ஒக்கும் என்பது மட்டுமே கொள்ளவேண்டும். கூடுதல் சான்றுகள் பல அமைந்தால் மட்டுமே கம்பரின் கருத்தைப் பண்பாட்டு அடிப்படையில் ஆராய முடியும்.

**பெருக்கத் தின்றீர் தாம்பூலம்**
**பிழைக்கச் செய்தீர் பிழைப்பீரே!**
**உண்ணுஞ் சோறு பருகுவீர்**
**தின்னும் வெற்றிலையுமெல்லாம்**
**மேவருங் கோபம் அன்ன**
**வெள்ளிலைத் தம்பல் கண்டார்**
**உருப்பசி உடைவாள் ஏந்தினள் தொடர**
**மேனகை வெள்ளடை உதவ**
**நூறு காய்அடை கூடும் வேறொருவன் தனால்**

ஏய்ந்த அடைக்காய் அமுது இனைய எண்இல்
மணி பாசனத்து ஏத்தி
இனிய பஞ்சவாசமுடன் அடைக்காய அமுதும்
ஏந்தினார்

எனப் பிறவிலக்கியங்களிலும்,

தள்ள ஒண்ணா வெற்றிலைபாக்கு இத்தனை
தாஅம்மே கௌளி
சத்தமிட்டு உன் வலப்புறத்தில் கத்துதல்
கேளம்மே
மேவுமயில் போல் சுழன்று நடிப்பாள் - என்கை
வெள்ளிலை வாய்கொள்ளத் துடிப்பாள்
அறுகுபுனல் விளக்கிடுவாய் அடைக்காய்
வெள்ளிலை கொடுவா
எடுத்த சுருளும் இதழால் இடுக்குவள
வாவென்று கைச்சுருள் தாவென்று வாங்காள்

எனக் குறவஞ்சி இலக்கியங்களிலும் வருதல் காணலாம். கலிங்கத்துப்பரணியில் பேய்களனைத்தும் உணவுண்டபின் வெற்றிலை மெல்லுதல் செரிமானப் பயன்பாடாகக் காட்சியளிக்கிறது. இது புலவரின் கற்பனைத் திறன்மிகுதியால் உயர்வுநவிற்சியாகப் பேய்கள் உண்ணுவது போன்று காட்டப்பட்டுள்ளது. ஏனையவற்றில் கணவன்-மனைவி, ஆண்-பெண் இல்லற அன்பின் வெளிப்பாடாகவும் மனநிறைவு என்னும் உளவியல் தன்மையோடும் ஆளப்படுகின்றது.

பாரதியாரின்,'கங்கை நதிப்புரத்துக் கோதுமைப் பண்டம், காவிரி வெற்றிலைக்கு மாறுகொள்வோம்', பாரதிதாசனின்,'ஓரிடத்தே நல்கிய ஒள்ளிலைக்காய் சேரவைத்து' (குடும்பவிளக்கு) என்னும் தொடர்களில் வெற்றிலை என்பது வளமையின் குறியீடு.

வாயுமந்தம் பீநசம் சுவாசகாசம் அருசி
யேயுதர தோடம் இவைபோக்கும் - தூயுடற்குக்
காந்திதரும் புத்திக்கும் கட்குநலஞ்செய்யும்
மணஞ் சார்ந்த நறுந்தம்பல ரசம்

என்று சித்தமருத்துவத்தில் வெற்றிலையின் மருத்துவத் தன்மை விளக்கப்படுகின்றது. வளியினால் ஏற்படும் நோய்கள், மாந்தம், மூக்கின்கண் ஏற்படும் பிணிகள், மூச்சிரைப்பு ஏற்படுத்தும் ஐயநோய் போன்றவை தீரும் என்கிறது. உடலுக்கு ஒளி, அறிவிற்குத் தெளிவு, கண்ணிற்கு நல்லொளி ஆகியவை வெற்றிலையால் ஏற்படும் நன்மைகளாம். 1882 இல் காரைக்கால் தம்புசாமிப்பிள்ளை என்பாரின் அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்ற, 'தில்லாலேடப்பா சிங்காரப்பாட்டு' என்னும் ஒரு நூலில் தஞ்சாவூர் வட்டாரச் சிறுவர் பாடிய பாடல்களுள் ஒன்றாக, 'அடிக்குத்துக் கல்லுமேலிருந்து-கொழுந்து வெற்றிலை தின்கையிலே-தில்லாலே' என்றும்,'பாதி வெற்றிலை கொடுத்த மச்சான், பங்குனி மாசம் தொடுத்த மச்சான் வாடவெற்றிலை கொடுத்த மச்சான்' என்றும் ஆண்-பெண் அன்பு வெளிப்படுவது உளவியல்கூறின் அடிப்படையிலேயே.

முடிவுரை

- இறக்குமதித் தாவரமாக இருப்பினும் ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளாய்த் தமிழ்ப் பண்பாட்டோடு தொடர்புபட்டுள்ளது.
- வெற்றிலைக்குப் பல பெயர்கள் இருப்பதும், அதன் பெயரோடு சார்த்திப் பலவிடங்களில் ஊர்ப்பெயர்கள் அமைந்திருப்பதும், இலக்கண நூற்சான்றில் உரையாசிரியர்கள்,'வெற்றிலை நட்டான், வெற்றிலையும் பாக்கும்' எனக் காட்டுவதுகொண்டும் தமிழர் பண்பாட்டில் இன்றியமையாது இருப்பது புலப்படும்.
- நச்சினார்க்கினியரின் கருத்தொட்டி வெற்றிலை பாலுணர்வுத் தூண்டல் குறியிடாக எண்ணப்படுகின்றது. ஆயினும் அவ்விடங்களிலெல்லாம் வெற்றிலை உளவியலோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.
- கம்பரின் கருத்தும் (4176) பாலியலோடு தொடர்புபட்டுள்ளதால் கூடுதல் சான்றும், அறிவியல் முடிவுகளும் தேவைப்படுகின்றன. இந்நாளில் வெற்றிலை குறித்த கதைகளும் அவ்வண்ணமே அமைந்துள்ளன (கி.ரா.வின் வெற்றிலைக்கொடி குறித்த சிறுகதை).
- வெற்றிலைக்கான சங்க இலக்கியக் கதை, வெற்றிலை உடலுறவுத் தூண்டலுக்கான இடக்கரடக்கல் என்பவற்றை ஏற்கமுடியாது. இருப்பினும் இவை குறித்த அறிவியலாராய்ச்சி மீளாய்வுகள் தேவையாகின்றன. இவை பாடலுள் நேரடியாக இடம்பெறாமல், உரையாளர்களின் கருத்தாகவே கொள்ளப்பட்டுள்ளன.
- தமிழிலக்கியங்கள் வெளிப்படுத்தும் வெற்றிலை அறிவியல் தன்மையில் அதன் பண்பு, நிறம், வடிவம், பயன் போன்ற தாவரவியல் கூறுகளோடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இது பாலுணர்வுத் தீண்டல் குறியீடு அன்று. உளவியல் வெளிப்பாடு.
- வெற்றிலையை வரலாறு, இலக்கியவியல், சித்த மருத்துவவியல், பண்பாட்டு மானிடவியல், நாட்டுப்புறவியல் கூறுகளுடன் சார்த்தித் தனித்த பெருங்களத்தில் ஆராய்வதற்கான களனும் வாய்ப்பும் தேவையாகின்றது.

அடிக்குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம், தொகுதி-09, 1963, ப.502, தமிழ்வளர்ச்சிக் கழகம், சென்னை
2. சூடாமணி நிகண்டு, 4:37
3. ஆசிரிய நிகண்டு, 205
4. மா.சந்திரமூர்த்தி, 1977, வரலாற்றில் வெற்றிலை, ப.6, தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
5. மேலது, ப.6
6. மெல்லடகு, வேதநாயக், யாவரும்.காம், பிப்ரவரி 2022, https://www.yaavarum.com
7. அகநானூறு, 36, 56
8. குறுந்தொகை, 352
9. புறநானூறு, 318
10. மேலது, 197
11. கு.வி.கிருஷ்ணமூர்த்தி, 2009 தமிழரும் தாவரமும், ப.274, பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
12. திருச்சிராப்பள்ளி. இரண்டாம் பதிப்பு
13. மதுரைக்காஞ்சி, 400-01
14. மேலது, 531-32
15. கலித்தொகை, 65
16. புறநானூறு, 62
17. குறுந்தொகை, 25
18. மேலது, 88
19. சிலப்பதிகாரம், 16:54-56
20. மணிமேகலை, 28:242-44
21. வே.சிதம்பரம், தமிழரின் அகவாழ்வில் வெற்றிலை, பாக்கு, இ-பேப்பர், தினமணி, 25.09.2011
22. கம்பராமாயணம், 5083
23. சீவகசிந்தாமணி, 1987
24. மேலது, 1055
25. கம்பராமாயணம், 4176
26. கலிங்கத்துப்பரணி, 584
27. நாலாயிர திவ்ய பிரபந்தம், திருவாய்மொழி, 619
28. கம்பராமாயணம், 49
29. மேலது, 79
30. சிவஞான சித்தியார், பரபக்கம், 7
31. பெரியபுராணம், வம்பறாவரிவண்டுச் சருக்கும், ஏயர்கோன், 3514
32. மேலது, 4:77-4
33. சரபேந்திர பூபாலக் குறவஞ்சி, 53:2
34. மேலது, 67:2
35. தி.கு.கு.66:2
36. மேலது, 114:4
37. அகத்தியர் குணபாடம், 55
38. சுந்தர சண்முகனார், 1991, ப.72, மாதவம் புரிவாள், புதுவைப் பைந்தமிழ்ப் பதிப்பகம், புதுவை
39. ...யா பண்டாரம், 1882, தஞ்சாவூரில் சிறுவர்கள் பாடிய ‘தில்லாலேடப்பா-சிங்காரப்பாட்டும்,
40. தம்புசாமிப்பிள்ளை அச்சகம், காரைக்கால்

# இலக்கியத்தில் பெண்ணியப்பார்வை

**பூ. சிவகாம சுந்தரி,** *எம்.ஏ.,எம்.ஏ.,எம்.ஃபில்.,பி.எட்.,(பிஎச்.டி.,)*
*உதவிப்பேராசிரியர் (தமிழ்த்துறை)*
*பி.கே.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம், மதுரை*

**முன்னுரை**

**"தெய்வம் தொழாஅள் தொழுஅள் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை"**[1]
**"மங்கையராய்ப் பிறப்பதற்கே**
**நல்ல மாதவம் செய்திடல்**
**வேண்டுமம்மா"**
**"பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"**
**"சக்தியில்லையேல் சிவனில்லை"– எனப்**

பெண்ணைப் போற்றும் கவிஞர்களும், கட்டுரையாளர்களும், நாவலாசிரியர்களும் என பலரும் பெண்மையைப் போற்றும் விதமாகப் பல இலக்கியங்களைப் படைத்துள்ளனர். என்று ஒரு பெண்ணானவள் தன் கழுத்து நிறைய நகைகளை அணிந்துகொண்டு தன்னந்தனியாக நள்ளிரவில் நடமாட முடியும் என்ற நிலை எப்பொழுது உருவாகிறதோ, அன்று தான் நாடு உண்மை சுதந்திரத்தை அடைந்ததெனக் கருதமுடியுமென உரைத்தார் அண்ணல். இலக்கியங்கள் பெண்களுக்கு புகழாரம் சூட்டினாலும், பக்கம் பக்கமாய்ப் படைப்புகளைப் படைத்தாலும் பெண்களின் உண்மைநிலை இதுதான் என யாராலும் அறுதியிட்டுக் கூறமுடியாது.

**ஆண்டான் அடிமை**

ஆண்டான் அடிமை என்பது சமூகத்துக்கும் நிலபிரபுத்துவத்திற்கும் இடையேயான உற்பத்தி சக்திகளின் உறவுமாற்றம். காலப்போக்கில் இது ஆண்-பெண் உறவுக்கு இடையேயான கூறுகளாக மாற்றம் பெற்றது எனலாம். ஏனெனில் ஆண்டான் ஆணாகவும், அடிமை பெண்ணாகவும் மாற்றப்பட்ட சமூகமே இதற்கு உதாரணம். "எங்கோ செல்லும் மாரியம்மன் என்மீது வந்து ஏறுவானேன்?" என்பது போல ஆண்டான் அடிமைக்கான கோட்பாட்டினை தனக்குத் தகுந்தாற்போல மாற்றிக் கொண்டாடியவர்கள் ஒரு சிலர்.

சங்ககாலம் விட்டுச்சென்ற மரபுகள், கட்டுப்பாடுகள் விழுமியங்கள், சமுதாயம், ஆட்சி, கலாச்சாரம், காலம் என மாறிய கால கட்டங்கள் ஆண்வழிச் சிந்தனைகளையே அதிகம் சுட்டிக் காட்டுகின்றன. இப்படிப்பட்ட மரபிலிருந்து விடுபட்டு பெண்கள் பற்றிய சிந்தனைகளை ஏற்கத் துவங்கியிருப்பதே இலக்கியங்கள்.

***"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு..."***
***"கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்..."***[2]

என்பதற்கு ஏற்ப ஆதிக்கச் சிந்தனையின் அடிமை மனோபாவமானது பெண்ணுக்குள்ளும் ஊன்றியிருப்பதும், காத்திருப்பதும், மகிழ்விப்பதும், மன்னிப்பதும் பெண்ணின மனோபாவம் என்றிப்பதாலும் இவ்வுலகம் அவனை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டு செல்லவிடவில்லை. அதற்கு அவளும் ஒரு காரணமே! இப்படி பெண்கள் வாழ்வில் ஏற்படும் அநீதிகளைக் களையெடுப்பதற்காகவே இலக்கியவாதிகள் பலர் தோன்றினர், தோன்றுகின்றனர்.

**கவிஞர் ஞானக் கூத்தனின் பெண்ணியப்பார்வை**

பொது வாழ்க்கைக்கு வரும் பெண்கள் தங்கள் வாழ்க்கையைத் தொலைத்து விடுகிறார்கள். அதற்கு உதாரணம் ஔவை, காரைக்கால் அம்மையார், ஆண்டாள். ஒரு பெண் கணவனோடு வாழ்ந்தால் மட்டும்தான் அது வாழ்க்கையா? அங்கு தான் அவன் வெற்றி காண்கிறாளா? பெண்கள் தங்கள் வெற்றியாக எதை கருதுகிறார்களோ அதனைத் திறம்பட செய்து முடிப்பவர்கள்தான் வாழ்க்கையை வென்றவர்கள் என கவிஞர் ஞானக்கூத்தன் எடுத்துரைக்கிறார்.

**திரு.வி.க. கூறும் பெண்ணியம்**

**"பெண்மையாவது யாது?** அடக்கம், பொறுமை, தியாகம், பரநலம், இரக்கம் அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும். மண், நீர், காற்று, ஒலி முதலியன சேர்ந்து மரபாதல் போல, அடக்கம் முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன. சிறுசிறு நீர்த்துளிகள் சேர்ந்து மழையாதல் போல, அடக்கம் முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன. சிறுசிறு நீர்த்துளிகள் கலந்து பரந்த நீர்நிலை என்னும் பெயர்பெறுதல் போலவும், அடக்கம் முதலிய குணங்கள் ஒன்றி, அவை பெண்மை எனும் பெயர் பெற்றன. பெண்மை என்பதைக் கூறிட்டுப் பார்ப்பின், அ∴து அடக்கம் முதலிய நீர்மைகளாகப் பிரிந்து நிற்கும். ஆகவே **"அடக்கம் முதலிய இயல்புகளின் திரட்சிப் பெண்மையாகிறதெங்க"**[3]

என்கிறார் திரு.வி.க. திரு.வி.க கூறும் பெண்மையை ஆராய்ந்து பார்ப்பின் அண்ட சராசரங்கள் அவளுள் அடங்கியிருக்கிறது என்று கூறலாம். அண்டமே போற்றும் பொருளாகிறாள். பெண்ணானவள் என்றால் அது மிகையாகாது.

**சோ ராமசாமியின் புரட்சிப் பெண்ணியம்**

ஒரு கயவனால் ஏமாற்றப்பட்டு சந்தர்ப்ப வசத்தால் விபச்சாரத்தில் ஈடுபடும் ஒரு பெண்ணை தன்னுடைய முதல் கேசுக்காக அலையும் வக்கீல் பெயிலில் எடுக்கிறார். தன் வீட்டில் தற்காலிகமாக தங்க வைக்கின்றான். அவளை ஏமாற்றிய கயவனோ அவ்வக்கீலின் அண்ணன் என்ற உண்மை தெரிய அவ்வீட்டார் அவளிடம் நடந்து கொள்ளும் முறை, அவளிடம் தகாத முறையில் நடந்துகொள்ளும் ஆண்கள் என கதைக்களம் நகர்கிறது. ஒரு பெண் தானாக விபச்சாரியாக உருவாவது இல்லை. தூய்மையற்ற ஆண்களின் மனத்தால் உருவாகிறார். அதனால் அப்பெண்ணை குற்றம் சொல்வது தவறு.

**“குற்றம் செய்யாதவர் யாரேனும் இருந்தால் விபச்சாரிமீது கல்எறியவும்”** என்று சொன்ன இயேசு நாதரின் கூற்றை பிரமீளா என்ற கதாபாத்திரத்தை வைத்து பிரதிபலிக்கும் நாடகமாக சோ. ராமசாமியின் நாடகம் அமைகிறது. யாருக்கும் அஞ்சாத, எக்கூற்றுக்கும் அசையாத, தன் நிலைக்கு தான் காரணமல்ல என்ற எண்ணம் மாறாத புரட்சிப் பெண்ணாக சித்தரிக்கிறார். **“நல்ல ரசனை உள்ளவர்களுக்கே நான் எழுதுகிறேன்”**[4] என்பதே சோ. ராமசாமி அவர்களின் கூற்று.

**அறிஞர் அண்ணாவின் பார்வையில் பெண்ணியம்**

தமது அரசியல் எதிரிகளுக்காக சமத்துவத்தைப் பற்றிப் பேசிய அண்ணா, தான் ஏற்றுக்கொண்ட அரசியல் தத்துவத்தின் முதன்மை அங்கமான பெண்களுக்கான சமத்துவம் பற்றிப் பேசாமல் இருந்ததில்லை. அனைத்து இடங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலினச் சமத்துவமின்மை நிலவிவந்த நிலையில், பண்பாட்டு வாயிலாகவே பெண்கள் மிகக் கடுமையான ஒடுக்குமுறைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். எனவே அவற்றிலிருந்து வெளியேறுவதற்கான வாதங்களே தேவைப்பட்டது என்கிறார் பெரியார். நீண்டகாலமாக பண்பாட்டுத் தளத்திலேயே இருந்தவர் அண்ணா. ஒரு கட்டத்துக்கு மேல் அரசியலை நோக்கி நகர்த்ததால் பெரியாரின் பெண்ணியப் பார்வை அதிக கவனம் பெறுகிறது. எனினும் தனக்கு கிடைத்த நேரங்களில் எல்லாம் பெண்விடுதலைக்காக குரல் கொடுத்தவர் அண்ணா.

அண்ணாவின் பெண்ணியப் பார்வை அவலங்களை நயமாக அடையாளப்படுத்தும் பணியை மட்டும் செய்வதாகவும், அவைப் புரட்சிகரமான அடையாளங்களைப் பெண்களுக்கு வழங்குவதில்லை என்பது போன்றும் சிலரின் சிந்தனைகள் எழுகின்றன. ஆனால் “பெய்யெனப் பெய்யும் மழை பெண்ணினம் பேசுகிறது” போன்ற கட்டுரைகள் அந்தச் சிந்தனையைச் சிதைக்கும் வல்லமையுடையனவாக கருதப்படுகிறது.

**பெண்மை போற்றும் ஆண்மை**

சங்க இலக்கியங்களில் பெண்பாற்புலவர்கள் தங்கள் அறிவுத்திறத்தின் மூலம் மன்னர்களும் மக்களும் போற்றும் முடிசூடா முதல்வர்களாக வலம் வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. அவற்றில் ஔவையாரும் ஒருவர்.

> **“களர்ப்படு கூவல் தோண்டி நாளும்**
> **புலைத்தி கழீஇய தூவெள் அறுவை**
> **தாதுஎரு மறுகின் மாசுண இருந்து**
> **பலர்குறை செய்த மலர்தார் அண்ணற்கு”**5

களர் நிலத்தில் உண்டாகிய கிணற்றைத் தோண்டி நாள்தோறும் சலவை செய்யப்பட்ட நல்ல வெண்ணிற உடை, எருப்பொடி பரவிய தெருவில் எழும் அழுக்குப்படிய இருந்து பலர்க்கும் தேவைப்படும் உதவிகளைச் செய்து உதவும் மலர்மாலையணிந்த பெரியவனுக்கும் போர்க்களத்தில் துணையாக ஒருவரும் இல்லாதபோது சிறந்த கண்கள் சிவந்து புகையுண்டாகத் தன் கேடயம் ஆகிய ஒன்றைக்கொண்டே பகைவர் படைக்கலங்களைத் தடுக்கும் வலிமையுடையவன் ஆயினான் என பகைவர்களை எதிர்க்க துணை ஒருவரும் தேவையில்லை அவரே படைக்கலத்தில் பகை முறிக்கும் தனித்திறம் கொண்டவர் என மன்னர்களைப் புகழ்விக்கும் மாபெரும்பேறு கொண்ட ஔவையும் ஒரு பெண்பாற் புலவர் என்பதில் ஐயமில்லை.

இதுபோன்றே திருமாக்கோதையார், அஞ்சியார், நாகையார், நன்முல்லையார் அணிலாடு முன்றிலார், ஆதிமந்தியார், மாசாத்தியார் போன்ற பெண்பாற் புலவர்கள் மன்னர்களின் வெற்றி, வீரம், புகழ் கொடை போன்றவற்றை போற்றக்கூடிய ஆண்மை போற்றும் பெண்மையாகத் திகழ்கின்றனர்.

**பெண்ணிய நாவல்கள்**

பெண்ணியம் குறிந்த விழிப்புணர்வு தமிழ் நாவல்களில் தொடக்காலத்திலிருந்தே இருந்து வருகிறது. தமிழில் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் நாவலில் முதலியாரின் மனைவியாக வரும் ஞானம்பாள், கல்வி கற்றவளாகவும், போராடும்

குணம் கொண்டவளாகவும் சித்தரிக்கப்படுகிறார். காலம்காலமாக சமூகத்தில் நடக்கும பெண்ணடிமைத் தனத்திலிருந்து விடுபடும் முதல் பெண்ணாக காட்டப்படுகிறாள்.

**இன்றைய பெண்ணிய நாவல்கள்**

பெண்களுக்கான அநீதிகளைச் சாடும் நாவல்கள் எத்தனையோ வந்துவிட்டன. ஜெயகாந்தனின் **சில நேரங்களில் சில மனிதர்கள், கங்கை எங்கே போகிறாள்** ஆகிய நாவல்களின் கதையின் நாயகி பெண்களுக்கான சிக்கல்களை அனைத்தையும் தீர்க்கும் பெண்ணாக சித்தரிக்கப்படுகிறாள். **சுருக்கு** என்ற நாவலும்,**சங்கம்** என்ற நாவலும் **தலித்** மற்றும் **மலைவாழ்இனப் பெண்களின்** வாழ்வியல் போராட்டத்தைக் காட்டுகின்றன.

பெண்கள் தங்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் விதத்தையும் சில நேரங்களில் கொடுமைகளை எதிர்க்கமுடியாத சூழ்நிலைகளையும் நாவலாசிரியர்கள் எடுத்துரைக்கின்றனர்.

**பாரதியின் பார்வையில் பெண்ணியம்**

**"இன்னுயிர் தந்தெமை ஈன்று வளர்த்து அருள்**
**ஈந்ததும் இந்நாடே – எங்கள்**
**அன்னையர் தோன்றி மழலைகள் கூறி**
**அறிந்ததும் இந்நாடே – அவர்**
**கன்னியராகி நிலவினி லாடிக்**
**களித்ததும் இந்நாடே – அவர்**
**மங்கையரா யவர் இல்லறம் நன்கு**
**வளர்த்ததும் இந்நாடே, அவர்**
**தங்க மதலைகள் ஈன்று அமுதூட்டித்**
**தழுவியதும் இந்நாடே"**[6]

நாட்டு வணக்கமாகப் பாடப்பட்ட இப்பாடல் மையப்படுத்துவது இத்தேசப் பெண்களையே மகாகவியின் பெண்ணுரிமைப் பாடல்கள் எத்தனையோ இருந்தபோதிலும் இப்பாடலே நுட்பமானதாகக் கருதப்படுகிறது. பெண்களைக் நம் தேசம் கொண்டாடும் இப்பாடலின் நுட்பமே சிறப்பிற்குரியது. இப்பாடல் மகாகவி பெண்மையை போற்றியதற்குச் சான்றாகும்.

**பாரதிதாசனின் பார்வையில் பெண்ணியம்**

சமுதாய முன்னேற பெண்களின் முன்னேற்றம் அவசியம் என்கிறார் பாரதிதாசன். ஒரு பெண் எப்படி இருக்க வேண்டும் என்பதை **குடும்ப விளக்கிலும்,** ஒரு பெண் எப்படி இருக்கக்கூடாது என்பதை **இருண்ட வீட்டிலும்** எடுத்துரைக்கிறார் பாரதிதாசன்,

**"கல்வியில்லாப் பெண்கள் களர்நிலம்**
**அங்கு புல் விளைந்திடலாம் - நல்ல**
**புதல்வர்கள் விளைவதில்லை"**[7]

என ஒரு பெண்ணுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறார். **குண்டுக்கல், குடும்பவிளக்கு** என்ற இவ்விரண்டும் குடும்ப வாழ்வின் ஆண்-பெண் சமத்துவத்தை எடுத்துரைக்கிறது.

பாரதிதாசனின் பாடல்கள் பெரும்பாலும் **விதவை மறுமணத்தையே** ஆதரிக்கின்றன.

**"வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்**
**மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ**
**பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்**
**பசியாத நல்வயிறு பார்த்ததுண்டோ"**

ஆனொருவன் மறுமணம் செய்து கொள்வதை ஏற்றுக்கொள்ளும் இச்சமுதாயம் பெண்ணிற்கு அந்த சுதந்திரத்தை அளிக்காததைக் கண்டு வெகுளினார்.

**முடிவுரை**

**கமலாம்பால் சரித்திரத்தில் கல்யாணி** எனும் கதாபாத்திரம், கம்பனின் பாடல்களைப் கரைத்து குடித்தவள். இக்காலத்துக் குடும்பப் பெண்கள் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு இவள் ஒரு உதாரணம்.[8]

இவ்வுலகம் எவ்வளவோ இயற்கை சக்திகளை கொண்டிருந்தபோதிலும் முழுமை பெறுவது **ஆண்-பெண்** சக்திகளால் மட்டுமே **"ஆணுக்குப் பெண் சமம்"** என்பதல்ல பெண்மையைப் போற்றும் சக்தி. பெண் தன்கருத்தை சுதந்திரமாக வெளியிடவும், அவளுக்கான உரிமையை பறிக்காமல் இருப்பதும், அவளுக்கான சுதந்திரத்தில் பிறர் தலையிடாமல் இருப்பதும், அவள் வாழ்வை பிறரின் உந்துதல் இல்லாமல் வாழ அனுமதிப்பதும், சமுதாயத்தில் தான் உயர்ந்து இருப்பதாகவும் தன்னை என்று அவள் உணர்கிறாளோ **அன்றுதான் பெண்ணியம் போற்றப்பட்டது** என்பதை நாம் ஏற்றுகொள்ளமுடியும்.

***"பெண்ணைப் பேயெனப் பேசுதல் நன்றோ***
***பெரிய மாயையென் றேசுதல் நன்றோ***
***தண்மை யில்லா வனத்து விலங்கும்***
***தடவிப் பெண்ணலம் தாங்குதல் காண்மின்"***[9]

**அடிக்குறிப்புகள்**

1. திருக்குறள் - குறள் எண் - 55
2. குடும்பவிளக்கு - பக்கம் - 48
3. பெண்ணின் பெருமை - பக்கம் 24
4. யாருக்கும் வெட்கமில்லை - பக்கம் 4
5. புறநானூறு - பக்கம் 311 – 312

6. பாரதியார் கவிதைகள் – பக்கம் 114
7. குடும்பவிளக்கு – பக்கம் 48
8. கமலாம்பாள் சரித்திரம் – பக்கம் 7
9. பெண்ணின் பெருமை – பக்கம் 303

**துணைநூற்பட்டியல்**


| | | |
|---|---|---|
| 1 | முனைவர் தமிழண்ணல் | சங்க இலக்கியம், புறநானூறு, முனைவர் சுப. அண்ணாமலை, கோவிலூர் மடாலயப் பதிப்பு. |
| 2 | திரு.வி.க | பெண்ணின் பெருமை, மாணிக்கவாசகர் பதிப்பகம், 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 108 |
| 3 | சோ. | யாருக்கும் வெட்கமில்லை, அல்லையன்ஸ், த.பெட்டி எண் 617, எழும்பூர் சென்னை – 4 |
| 4 | கே. கே. பிள்ளை | தமிழக வரலாறு மக்களும் பண்பாடும், உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மையத்தொழில்நுட்ப பயிலக வளாகம், தரமணி சென்னை – 113. |
| 5 | பாரதியார் | பாரதியார் கவிதைகள், குமரன் பதிப்பகம், 3, முத்துகிருஷ்ணன் தெரு, சென்னை 17. |
| 6 | பாரதிதாசன் | பாரதிதாசன் கவிதைகள், குமரன் பதிப்பகம், 3, முத்து கிருஷ்ணன் தெரு, சென்னை – 17. |
| 7 | பாரதிதாசன் | குடும்ப விளக்கு மாணிக்கவாசகர் பதிப்பகம், 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை 408. |
| 8 | பி.ஆர்.இராஜம் அய்யர் | கமலாம்பாள் சரித்திரம் மணிவாசகர் பதிப்பகம் 31, சிங்கர்தெரு, பாரிமுனை, சென்னை – 408. |

# அண்ணாவின்“குமாஸ்தாவின் பெண்” நாவலில் வறுமையும் காதலும்

**முனைவர் யா. சாம்ராஜ்**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*ஆறுமுகம்பிள்ளை சீதையம்மாள் கல்லூரி*
*திருப்புத்தூர், சிவகங்கை மாவட்டம்*

நடராசன், பங்காரு அம்மாள் தம்பதியரின் அறிவுப் புத்திரனாய் சின்னக்காஞ்சிபுரத்தில் 15.09.1909 இல் பிறந்து. இராணி அம்மையாரின் பொறுப்புள்ள கணவனாய் வாழ்ந்து, சிறந்த பேச்சாளராய், கவிதையாளராய், நாவலாளராய், நாடக ஆசிரியராய், நடிகராய், பத்திரிகையாளராய், அரசியல் மேதையாய் பவனி வந்ததோடு, சமூகத்தில் நடக்கும் அழுக்குகளையும், பெண்களின் கண்ணீரையும் குறித்து பெரிதும் அக்கறையுடையவராய் திகழ்ந்தார்.

அண்ணா, பெரியாரின் பாசறையில் பயின்று, பெரியார் பெண்விடுதலை குறித்துச் சமுதாயத்தில் முன்வைத்த கடுமையான சாடலை மென்மையாகத் துடைத்தார் எனில் அது மிகையாகாது. அந்த வகையில் வறுமையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ள “குமாஸ்தாவின் பெண்” - (1942) எனும் நாவலில் காந்தா என்பவளைத் தலைமையாக்கி ஒரு பெண்ணிற்கு ஏற்படக்கூடிய காதல்போராட்டங்களையும் அதோடு வறுமையும் இணைந்து சண்டை போடும் கொடுமையும், இறுதியாக அவளின் நிலை என்ன என்பது குறித்து யாரும் யூகிக்க முடியாத அளவிற்கு வரையறுத்துத்தந்துள்ளார். அவற்றை இக்கட்டுரை விவரிக்கிறது.

**‘குமாஸ்தாவின் பெண் ஒரு பார்வை’**

“ஒரு பெண்ணைத் தெய்வமாக, தாயாக, குழந்தையாக, கருவியாக, வேலைக்காரியாக, போகப்பொருளாக இவ்வனைத்து நிலைகளிலும் பார்க்கும் ஆண் வர்க்கம், அவளும் ஒரு தனித்துவமுள்ள பிறவி என்பதை மறந்துவிடுகிறது” என்பார் தார் அலிபெய்க்.

“பெண்ணை ஒரு தாயாகப் பார்க்கிறோம், மனைவியாகப் பார்க்கிறோம், மகளாகப். பார்க்கிறோம், சகோதரியாகப் பார்க்கிறோம்எனினும் அவளை ஒரு சுதந்திரமுள்ள தனிமனிதப் பிறவியாகப்பார்க்கிறோமா என்றால் இல்லை. அவன் சிந்திக்கமாட்டாள், தன் பொருட்டு முடிவெடுக்கமாட்டாள் என்பதனாலேயே அவள்தலைமைப்பாத்திரம் காலங்காலமாக மறுக்கப்பட்டு. வந்திருக்கிறது என்கிறார் நாவலாசிரியர் பிரபஞ்சன்.”

இதனை மையமாகக் கொண்டே அண்ணா “குமாஸ்தாவின்பெண்: எனும் குறுநாவலை (1942) நாவலைப் படைத்துள்ளார்.

அண்ணா காலக்கட்டத்தில் பெண்கல்வி என்பது எட்டாக் கனியாகவே காணப்பட்டது. தமிழ்நாட்டில் சுயமரியாதை இயக்கம்மகளிர் விடுதலைக்காகப் போராடிய தருணங்களில் அதன்பிரதிபலிப்பாக இந்நாவலைப் படைத்திருக்கலாம் எனக் கருத முடிகிறது.

கதையின் தொடக்கத்திலே ஒரு திகில் செய்தியானது வாசகனைக் கண்ணீர் சொட்டச் செய்வதோடு, அடுத்து என்ன நிகழும்என்ற போக்கில் படைக்கப் பெற்றுள்ளது. இவற்றில் காந்தா என்ற பெண் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாகவே சித்திரிக்கப்பட்டிருப்பது புலனாகிறது.

“காந்தா கொலைக்களத்தில் நின்றபடி, வீர வசனம் உரைக்கிறாள். தான் சோமுவைக் கொலை செய்துவிட்டேன் என்பதற்காக நீதிமன்றம் தூக்குத்தண்டனை விதித்தற்கு நான் கவலைப்படவில்லை என்று சூளுரைக்கிறாள். அவளை விபச்சாரி என பத்திரிகை வெளியிடுகிறது. பின்னர் காந்தாவின் கதையைப் புத்தகமாக சாந்தாவும் சாந்தாவின் காதலரும் வெளியிட, சிலர் கண்ணீ வடிக்கின்றனர். படித்த சிலர் வெட்கமின்றி இவற்றை வெளியிட்டுள்ளனர் என்று தூசிக்கின்றனர்.

**காந்தாவின் வறுமையும் காதலும்**

காந்தா - பக்கத்து வீட்டு வாலிபன் சோமுவைக் காதலிக்கிறாள். வசதி வாய்ப்பு நிறைந்தது சோமுவின் குடும்பம். காந்தா அழகானவள். ஆனால் அவளுக்கு வறுமை மட்டுமே இடைஞ்சல் செய்து கொண்டிருக்கிறது. இருந்தும் மனமாளிகைக்குள் குடியமர்த்தி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் சோமுவை மறக்கமுடிய வில்லை. சோமு ஆன்மிகத்தை நேசித்து, வேதாந்தம் பேசுபவன். காந்தாவின் காதலை ஏற்க மறுக்கிறான். இந்தச் செய்தி அவள்மனத்தில் ஆராத வேதனையை ஏற்படுத்துகிறது.

காந்தாவின் பெற்றோர் ஆச்சாரங்களில் மூழ்கியவர்கள். வெளியில் தெரிந்தால் தங்கள் குடும்பத்தை

அவதூறு பேச நேரிடும்என்பதால் முதியவர் ஒருவருக்கு நான்காம் தாரமாக காந்தாவை மணமுடிக்கின்றனர்.

**"காண்கமன் கொண்களைக் கண்ணாரக் கண்டபின்**
**நீங்கும் என் மென்றோள் பசப்பு''**
**(திருக்ககுறள் 1265)**

என்ற வாய்மொழிக்கேற்ப காந்தாவின் இளமையை அனுபவித்த முதியவர் ஒருநாள் கால்தவறி' மரணமடைகிறார். காந்தா விதவைக்கோலம் பூணுகிறாள்.

குடும்பத்தில் வறுமை வாட்டியெடுக்கிறது. அந்த சமயங்களில்மிராசுதார் வேதகிரி முதலியார் காந்தாவின் குடும்பத்திற்குள் அடியெடுத்து வைக்கிறார். கடன்களைத் தான் களைகிறேன் என்று சொல்வதோடு, காந்தாவின் இளமையை அடைய எண்ணுகிறார். காந்தாவை நான் கல்யாணம் செய்துகொண்டால் வறுமையை போக்குமளவிற்குப் பணம் என்னிடம் இருக்கிறது என்கிறார். வறுமையால் தனது அப்பாவும் இறக்க, அம்மா அமங்கலியாகவும், வயதுக்கு வந்த தங்கையின் நிலை பரிதாபத்திற்குரியதாகவும் காணப்பட, தம்பியும் வேலையின்றி அலைவதையும்பொறுத்துக்கொள்ள முடியாத நிலையில், வேதகிரி முதலியாரின் வார்த்தைகளுக்கு இசைந்து, தன் குடும்பத்தை நிலைநிறுத்த, கைம்பெண்டாட்டியாக வேதகிரிக்குத் தேவைப்படும் போதெல்லாம்தன் தேகத்தை காணிக்கையாக்கி, முதலியார் கொடுக்கும் பணத்தைத்தன் தம்பி சம்பாதித்து அனுப்புவது போலவே அனுப்ப முற்படுகிறாள்

திடீரென ஒருநாள் சோமு காந்தாவைப் பார்க்க வருகிறான். அவன் முன்பு இருந்த சோமு அல்ல. ஒரு திருமணம் முடித்தும், லிலி என்ற வயது அதிகமான ஒரு பெண்ணோடு சகவாசம் வைத்திருப் பதோடு காந்தாவையும் மணம்முடிக்க முற்படுகிறான் . அவளின்அழகை அடைய வேண்டும் என்று முற்படும்போது, அவள் நான்பழைய காந்தா அல்ல, உனக்காகவே வாழ்ந்தேன் அப்போது என்னை ஏறெடுத்தும் பார்க்காமல் உன்னுடைய பணம் கண்ணை மறைத்து விட்டது இப்போது நான் வேதகிரி முதலியாரின் வைப்பாட்டி என்று மறுத்துவிடுகிறாள். பின்னாளில் அவளே தன் உடம்பைச்சோமுவிடமும் அர்ப்பணிக்கிறாள்.

பிறகு காந்தாவின் பெயரில் இன்சூரன்ஸ் பணம் இருப்பது தெரிந்து, காந்தாவை ஒரு ரோஜாவில் விசத்தை தடவி அவளிடம் உறவுகொள்ள வரும்பொழுது அவளைக் கொன்றுவிட்டால் அந்தப் பணத்தை அபகரித்துக்கொள்ளலாம் என்ற சோமுவின் எண்ணம்வேலைக்காரி மூலம் காந்தாவின் காதுக்கு எட்டுகிறது. ஒருகாலத்தில்அவனுக்காகவே வாழ்ந்தேன். தான் இன்னொரு வனின் கைம்பெண் டாட்டி என்ற நிலையிலும், என்னை சோமுவுக்கு தாரைவார்த்த தன்னை அற்பப் பணத்திற்காக கொலை செய்ய முற்படுகிறானே, தான்அவனைக் கொன்றால் என்ன, என்ற எண்ணம் வருகிறது. அவன்தன்னை அனுபவிக்க முற்படும்போது அவனை கொன்று விடுகிறாள்காந்தா. இதன் காரணமாக காந்தாவுக்கு சமூகம் கொடுத்த கொலைகாரி, விபச்சாரி என்ற பட்டங்களைப் பெற்றதோடு மரண தண்டனையையும் அடைந்தாள் என்ற நிலையில் கதையை நிறைவு செய்கிறார் அண்ணா.

இன்று இந்நிலையை நாட்டில் பாதிப் பெண்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது திண்ணம். இந்தக் காந்தாவை கொன்றுவிட்டாள் இனி வேறு காந்தா கிடைக்கமாட்டாள் என்று எண்ணுகிறீரகளோ? என்று நீதிமன்றத்தில் காந்தா உரக்க உரைத்தது, இன்றைய காந்தாக்கள், பல சோமுக்களுக்குத் தண்டனை வாங்கிக்கொடுத்துத் தன் வாழ்க்கையைப் பதிவு செய்து வருவது இதன் வழி புலனாகிறது.

**அண்ணாவின் புலப்பாட்டு உத்தி**

நீதிமன்றத்தில் காந்தா வாதிடும்போது, பிளேக் வந்தவனுக்கு ஊசி (போட்டுவிட்டால் ஊரிலே வேறு யாருக்கும் "பிளேக் வராது என்று கூறிவிட முடியுமா? என்னைப் போன்ற இன்னும் எத்தனையோ காந்தாக்கள் கிளம்பமாட்டார்கள் என்றா எண்ணுகிறீர்கள்?" என்கிறாள்.

காந்தா, சோமுவைக் காதலிப்பதை அறிந்த தம்பி கேசவன்அவர்கள் வசதியானவர்கள் நாம் ஏழைகள் என்பதனை,

**"எண்ணாத எண்ணமெல்லாம்**
**எண்ணி எண்ணி**
**எட்டாத கோட்டைக்கு**
**ஏணியிட்டு"**

என்பதன் மூலம் வறுமையை அண்ணா மறைமுகப் படுத்துகிறார்.

காந்தா, தான் வறுமையானவள்தான், என்னை ஏற்றுக்கொள்ளக் கூடாதா என்று சோமுவிடம் கெஞ்சுவதை, ''குப்பையில் கிடக்கும் மாணிக்கத்தை எடுத்துக் கொள்ளக் கூடாதா?'' என்று கேட்பது போலக் கூறியிருப்பார்.

''மணமில்லா மலரும், மதிப்பில்லா இரவும், சுவையற்ற வாழ்வும், என்ன பயன்! உப்பில்லா பண்டம் நான், எந்தக் குப்பையில் கிடந்தாலென்ன!

என்று காதலை ஏற்றுக்கொள்ளாத சோமுவிடம் கூற இருப்பதை காந்தா தனக்குள்ளே சொல்லிக்கொள்வதாய் அமைத்துள்ளார்.

"எனக்கு வீடே ஜெயில், அப்பா அம்மா காவலாளிகள், உறவினர் போலீஸ், ஊரார் தண்டனை தரும் நீதிபதிகள்" என்று விதவையான நிலையில், பெண்கள் வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாது, சமூகம் அவளைத் தவறாகப் பேசும் என்பதனை முறைப்படுத்தி இவ்வாறாகப் படைத்திருக்கிறார்.

"அம்மாவின் வயிற்றுக்கே பெருந் தீ! நான் அபலை மட்டுமல்ல, அபயக்குறி!" என்று அவள், தன்னைத்தானே நொந்து கொள்ளும் நிலையில் படைத்திருக்கிறார். இதன் மூலம், சமூகத்தில் பெண்ணின் நிலை, காதல்நிலை, வறுமை, வறுமையால் வழிதவறும் நிலை, பெண்ணின் வறுமையைத் தன் சொந்த நலனுக்குப் பயன்படுத்தும் ஆண் வர்க்கம் முதலிய செய்திகள் இந்நாவலின் அப்பட்டப்படுத்தப்பட்டிருக்கிறது.

## முடிவுரை

காப்பியம், சமய இலக்கியம் ஆகியவற்றில் பெண்ணடிமையானது நாகரீகத்துடனும் நயத்துடனும் புகுத்தப்பட்டுள்ளது. பெண்களும் "விட்டில் பூச்சி விளக்கில் விழுதல் போல்" அடிமைத்தனத்தைச் சமயத்தின் பெயராலும், பண்பாட்டின் பெயராலும் இயல்பாகவே தழுவிக் கொள்கின்றனர். ஆனால் அண்ணா "குமாஸ்தாவின் பெண்" நாவலில் உரிமை கேட்டுப் போராடும் அபலைப் பெண்ணைச் சித்தரிக்கும் வகையில் படைத்துள்ளார். "வாழ்க வசவாளர்கள்" என்று வைதாரையும் வாழ்த்தும் பண்பு படைத்த அண்ணா, தனது படைப்பில் நீதிக்காக போராடும் நிலையிலும், சமூகத்தில் பெண்களுக்காகக் குரல் கொடுக்கும் போக்கிலும், ஒருவள் இறந்தால் இன்னொரு பெண் நீதி கிடைக்கும்வரை போராட ஆயத்தமாவாள் என்று உணர்த்துவதோடு பெண் விடுதலை பெறுவதற்குரிய வழிகளையும் வலியுறுத்தியுள்ளார்.

# நா.முத்துக்குமாரின் திரையிசைப் பாடல்களில் நட்பு

**சோ.சதிஸ் குமார்**
*பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை*
*நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு*

**முனைவர் அ. மோகன்ராஜ்**
*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), ஈரோடு*

## முன்னுரை

இலக்கியங்கள் வகைப்படுத்தியிருக்கும் உறவுகளில் நட்பு சிறப்பிடம் பெறுகின்றது. தாய் - பிள்ளை, கணவன் - மனைவி என்ற உறவுகளுக்கு ஈடாகப் போற்றப்படுகின்ற உயர் உறவு நட்பாகும்.எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் கருத்துகளையும் உணர்வுகளையும் பகிர்ந்து கொள்ளும் உறவே நட்பு. உலகின் உன்னதமான உறவுகளில் இதுவும் ஒன்று. நட்பில் சிறந்தது அந்த தன்னலமற்ற பண்பு தான். இன்று சொந்தகாரர்களிடம் உதவி கேட்க தயங்கும் மனது நண்பர்களிடத்தில் உரிமையாக கேட்கிறது.

நட்பின் அரியணை எது என்றால், ஒருவர் எப்போதும் மாறாமல் ஒரே மனநிலையில் தன்னால் இயன்றவரை அதாவது முடிந்தபோது எல்லாம் ஒருவர்க்கு ஒருவர் உதவுவதேயாம். இதனையே வள்ளுவர் கீழ்கண்ட குறளின் மூலம் விளக்குகிறார்

**“நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி**
**ஒல்லும்வாய் ஊன்றும் நிலை”.**[1]

தமிழும் தமிழரும் உள்ளவரை பேசப்படும் அளவுக்கு உயர்வான நட்பு. ஔவை அதியமான் நட்பு. அதியமான் என்றதும் நமக்கு ஔவையும், நெல்லிக்கனியும் நினைவுக்கு வரும்.

‘‘நெல்லி அமிழ்து விளை தீங்கனி ஔவைக்கு ஈந்த அதியன்” என்று சிலருக்கு சிறுபாணாற்றுப் படையில் நல்லூர் நத்தத்தனாரின் வரிகள் நினைவுக்கு வரும்.

ஔவை அதியமானைப் புகழ்ந்து பாடிய பாடல்

**“வலம்படு வாய்வாள் ஏந்தி, ஒன்னார்**
**களம்படக் கடந்த கழல்தொடி தடக்கை,**
**ஆர்கலி நறவின், அதியர் கோமான்**
**போர்அடு திருவின் பொலந்தார் அஞ்சி!**
**பால் புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**
**நீல மணிமிடற்று ஒருவன் போல**
**மன்னுக, பெரும! நீயே தொன்னிலைப்**
**பெருமலை விடரகத்து அருமிசை கொண்ட**
**சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது,**
**ஆதல் நின்னகத்து அடக்கிச்,**
**சாதல் நீங்க, எமக்கு ஈத்தனையே”.**[2]

களத்திலே பகைவரை வென்று வீரவளை அணிந்திருக்கும் தலைவனே! வீரச் செல்வமும் பொன்மாலையும் உடைய அஞ்சியே! மலைச்சரிவிலே கடுமுயற்சியுடன் பெற்ற நெல்லியின் இனிய கனி அது. அதனைப் பெறுதற்கு அரிது என்றும் கருதாது, அதனால் விளையும் பேற்றினையும் கூறாது, நின்னுள்ளத்திலேயே அடக்கிக்கொண்டு, எம் சாதல் ஒழிய எமக்கு அளித்தனையே! பெருமானே! பிறையணிந்த நீலமணிமிடற்று இறைவனைப்போல, நீயும் நிலைபெற்று வாழ்வாயாக!

நம்மிடம் இனிக்க இனிக்க பேசிவிட்டு நாம் இல்லாதபோது நம்மை பற்றி தவறாக பேசுவது. நம்மைப் பற்றிய பல முயற்சிகளை இவர்களே உருவாக்குவர். இவர்களிடம் கவனமாக இருக்க வேண்டும். நட்பு என்றுமே அழகான ஒன்று. அதை நல்ல காப்பது அவசியம். ஒரு நல்ல நட்பை இழந்தால் அதனால் வரும் துன்பம் சொல்லில் அடங்காது. நட்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதனைக் குறிப்பிடும் விதத்தில் கவிஞர் நா.முத்துக்குமார் அவர்கள்.

**“கண்ணாடி என்றும் உடைந்தாலும் கூட**
**பிம்பங்கள் காட்டும் பார்க்கின்றேன்**
**புயல் போன பின்னும் புது பூக்கள் பூக்கும்**
**இளவேனில் வரை நான் இருக்கின்றேன்**
**முகமூடி அணிகின்ற உலகிது**
**உன் முகம் என்று ஒன்றிங்கு என்னது**
**நதி நீரிலே அட விழுந்தாலுமே**
**அந்த நிலவென்றும் நனையாதே வா நண்பா**[3]

நட்பில் இருவர் என்பது மறைந்து ஒருவர் என்ற நிலைக்கு வரும் அளவிற்கு உண்மையான அன்புடன் பழகும் நண்பர் வேண்டும். அதுவே சிறந்த நட்பாகத் திகழ வழிவகுக்கும் என்பதும்

நட்பில் உண்மையும் வலியுறுத்தப்படுகிறது. அன்பும் நிறைந்திருக்க வேண்டும் என்பதும்

**"நண்பன் கிடைத்தால் எல்லாம் ஓசி**
**என் தவறை நீ மறைத்தாய்**
**எந்தவறை நீ வறைந்தாய்**
**எனக்காய் அர்ச்சனை வாங்கினாய்**
**உன் தோள்கள் ஏணியைப் போல்**
**ஏறி மிதித்தேன் தாங்கினாய்**
**எழும்போது கைதந்து அழும்போது**
**கடன்தந்து இளைப்பாற மடிதந்து**
**எனக்கென வாழ்வது நீதானே"**[4]

நல்ல ஒரு நண்பன் கிடைத்துவிட்டால் வாழ்வில் அனைத்தையும் எளிதாக அடைந்து விடலாம். வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் சூரியனைக் கண்ட பனியைப் போல விரைவில் மறைந்துவிடும். தான் செய்யும் தவறுகளைப் பொறுத்துக் மட்டுமல்ல. கொள்பவன் அத்தவறின் தண்டனையையும் தானாக முன் வந்து ஏற்றுக் கொள்பவன் நல்ல நண்பன் ஆவான் வாழ்வில் முன்னேற்றமடைவதற்கு ஏணியைப் போல் தோள் கொடுத்து தாங்குபவன் நண்பன் ஆவான் இடர் வருகின்ற போது உதவி புரிந்து இளைப்பாறுவதற்கு மர நிழலைப்போல் மடிதந்து வாழ்பவனே நல்ல நண்பன் என மேற்கண்ட பாடலின் வாயிலாக நட்பின் சிறப்பை எளிய நடையில் கவிஞர் நா.முத்துக்குமார் விளக்குகின்றார்.

**"நல்ல நண்பன் வேண்டும் என்று**
**அந்த மரணமும் நினைக்கின்றதா?**
**சிறந்தவன் நீதான் என்று**
**உன்னை கூட்டிச் செல்ல துடிக்கின்றதா?**
**இறைவனே இறைவனே**
**இவனுயிர் வேண்டுமா?**
**எங்கள் உயிர் எடுத்துக் கொள்**
**உனக்கது போதுமா?"**[5]

தன்னோடு ஒன்றற கலந்து விட்ட நண்பனை மரணம் அழைக்கின்றபோது அந்த மரணத்தையும் நட்பு வெல்லும் என்றும் நல்ல நண்பன் இருப்பின் அவனை மரணம் நட்பாக்கிக் கொள்கிறது. அத்தகைய மரணமே என் நண்பனுக்குப் பதிலாக என்னை எடுத்துக்கொள் என ஒருவன் வேண்டுவதாக நட்பின் ஆழத்தை மேற்கண்ட பாடலின் வழி இனிமையான முறையில் கவிஞர் விளக்குகின்றார்

அமைதியான வாழ்விற்கு நட்பு இன்றியமையாதது. இதனால் மனித நேயம் நல்லுணர்வுகள் செழித்தோங்கும். ஆதலால் நட்பைப் போற்றி அனைவரும் உண்மையான நட்புடன் பழக வேண்டும் என்பது தெளிவாகிறது. அதுவொரு அற்புதமான காலமாய் கண் முன் விரிகிறது. அங்கே மலர்ந்த பூக்களும் அழகாய் இருக்கிறது. உதிரும் இலைகளும் அழகாய் இருக்கிறது.

### முடிவுரை

ஒரு வாசனை போல் மனமெங்கும் பரவும் இருவரது நட்பின் காட்சிகளை நினைவுகூர்ந்து நான் இன்னும் நினைத்து நினைத்து ரசித்துக் கொண்டிருக்கிறேன்.

**வா நண்பா வா நண்பா**
**தோள்களில் சாயவா!**
**வாழ்ந்திடும் நாளெல்லாம்**
**நான் உன்னைத் தாங்க வா!!6**

அமைதியான வாழ்விற்கு நட்பு இன்றியமையாதது. இதனால் மனிதநேயம் நல்லுணர்வுகள் செழித்தோங்கும். ஆதலால் நட்பைப் போற்றி அனைவரும் உண்மையான நட்புடன் பழக வேண்டும்.

### அடிக்குறிப்புகள்

1. திருக்குறள் - பொருட்பால் - நட்பு - குறள் - 786.
2. புறநானூறு - 91. எமக்கு ஈத்தனையே!.
3. பாடல்: நெஞ்சோடு கலந்திடு - படம்: காதல் கொண்டேன் - எழுதியவர்: நாமுத்துக்குமார்.
4. பாடல்: நண்பா நீ ஒரு இலவச - படம்: சக்கரக்கட்டி - எழுதியவர்: நாமுத்துக்குமார்.
5. பாடல்: நல்ல நண்பன் வேண்டுமென்று - படம்: நண்பன் - எழுதியவர்: நாமுத்துக்குமார்.
6. பாடல்: நல்ல நண்பன் வேண்டுமென்று - படம்: நண்பன் - எழுதியவர்: நாமுத்துக்குமார்.

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# சங்க இலக்கியங்களில் பெண்ணியம்

**திருமதி நா. சுதா,** *M.A., M.Phil.,(Ph.D).,*
*உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை*
*பி.கே.என். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம், மதுரை*

## முன்னுரை

சமூகங்கள் ஆதிக்க தலைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொண்டு பெண்கள் தங்களுடைய உரிமைக்காகப் போராடும் தன்மையே பெண்ணியம் ஆகும். அவனைப் போலவே பெண்ணும் தன் எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் ஏற்ப சுதந்திரமாக வாழும் வாழ்வியல் முறையே பெண்ணியம் ஆகும். பெண்ணியமானது அடிமைகளாகவே வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்களுக்கு விழிப்புணர்வையும் சுதந்திர வேட்கையும் ஊட்டுகிறது. பெண்ணியம் என்பது பெண்ணொருத்தியின் சிக்கல்களை மட்டும் ஆராயாமல் ஒட்டுமொத்த பெண்ணினத்தின் சிக்கல்களை ஆராய்கிறது.

## பெண்ணியம் பற்றி அறிஞர்களின் கருத்து

கார்டன் என்பவர் “பெண்களின் தாழ்நிலையை ஆராய்ந்து அதனை மாற்ற மேற்கொள்ளப்படும் வழிமுறைகளை பெண்ணியம்”[1] எனக் கூறுகிறார். சார்லட் பன்ச் பெண்ணியம் என்பது “பெண்களுக்கான உரிமைகளைப் பெற்றுத் தர மட்டும் அல்ல சமூகத்தையே மாற்ற அமைக்க முயலுதாகும்”[2] என்கிறார்.

பெரியார் உரிமை என்பது ஒருவர் கொடுப்பது, மற்றொருவர் வாங்குவதும் அன்று. அ∴து எவிடத்தும் எல்லாவிடத்தும் இயல்பாய் அமைந்திருப்பது “பெண் விடுதலை என்பதும் பெண்ணுரிமை என்பதும் பெண்களின் செயல்பாடுகளில் உள்ளன”[3] என்று கூறுகிறார்.

“பெண் மகளாகத் தோன்றி, மனைவியாக வாழ்ந்து, தாயாகத் தொண்டு செய்து, தெய்வமாகப் போற்றக்கூடியவள் எல்லாம் பெண்கள் எல்லாம் பெண்ணில்”[4] என்று திரு.வி.க கூறுகிறார்.

## சங்க இலக்கியங்களில் பெண் கல்வி

தமிழ் இலக்கியத்தில் பொற்காலம் எனச் சித்தரிக்கப்படும் சங்க காலம் தமிழ்ப்புலவர்கள் நிறைந்து வழிந்த காலம், அக்காலத்தில் ஆண்பாற் புலவர்களுக்குச் சளைக்காமல் பெண்பாற் புலவர்களும் இலக்கிய ஆளுமை மிக்கவர்களாகக் காணப்பட்டனர். சங்க கால பெண்கள் கல்வி சுதந்திரமும், படைப்பு சுதந்திரமும் பெற்றிருந்தனர். ஔவையார், வெள்ளி வீதியார், நப்பசலையார், ஆதிமந்தி, ஒக்கூர் மாசாத்தியார், காக்கைப்பாடினியார் நக்கண்ணையார் ஆகிய பெண்களின் பாடல்களை நாம் சங்க இலக்கியங்கள் வழி அறியமுடிகிறது.

ஆண் படைப்பாளர்கள் பெண்களுக்கு ஒழுக்கத்தையும், நன்னடத்தையும் அறிவுறுத்தி இருந்ததை போலவே ஔவையார் என்ற பெண் கவிஞர்

**“எவ்வழி நல்லவர் ஆடவர்,**
**அவ்வழி நல்லை வாழிய நிலனே”[5]** (புறம்.187)

ஆண்களுக்கு அறிவுரை வழங்கியிருப்பது பெண்மையின் இலக்கிய ஆளுமைக்கு சான்றாக அமைகிறது.

## சங்க கால பெண்களின் வீரம்

சங்க கால மகளிர் வீரமுடைய பெண்மணிகளாகவும், விவேகம் உடையவர்களாகவும் பல இடங்களில் திகழ்கின்றனர். பகற்குறி, இரவுக்குறி, தலைவனைச் சந்தித்தல், தினைப்புனம் காத்தல், என தனது எல்லைகளை மீறாதவளாக இருந்தாலும் புலியைப் புறமுதுகிட்டு ஓடச் செய்பவளாகவும் விளங்கினர்.

**“ஒருமுகன் அல்லது இல்லோள்,**
**செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே”[6]**
(புறம்.279)

பழந்தமிழ் பெண் ஒருத்தி தன் நாட்டைக் காக்கத் தந்தையைப் போர்களத்திற்கு அனுப்பினாள். அவருடைய தந்தை யானையை வீழ்த்தி போர்களத்திலே இறந்தான். தன்னுடைய கணவனை அனுப்பினாள். அவனும் போர்களத்திலே வீரமரணம் அடைந்தான். ஆனாலும் அவள் கலங்கவில்லை. இன்றும் போர்ப் பறை கேட்டுத் தன் மகனை – ஒரே மகளை இளம்பிள்ளையை அழைத்துக் கையில் வேலைக் கொடுத்துக் களத்திற்கு அனுப்பினாள். இப்பாடல் மூலம் சங்க காலப் பெண்களின் சிறப்பையையும் பெருமையையும் அறிய முடிகிறது.

**“மீன் உண் கொக்கின் தூவி அன்ன**
**வால் நரைக் கூந்தல் முதியோர் சிறுவன்**
**களிறு எறிந்து பட்டனன் என்னும் உவகை**
**ஈன்ற ஞான்றினும் பெரிதே” கண்ணீர்”[7]**
(புறம் 279)

மீனைத் தின்னும் கொக்கின் இறகு போன்ற வெண்ணிற நரையையுடைய வயதான தாய், தன்னுடைய சிறுவனாகிய மகன் போர்களத்தில் யானையை அழித்துத் தானும் இறந்தான் என்ற செய்தி கேட்டவுடன் அவள் அடைந்த மகிழ்ச்சி அவனைப் பெற்ற பொழுது அடைந்த மகிழ்ச்சியை விட அதிகமானது. அவளுடைய கண்ணீர்த் துளிகள், வலிய மூங்கிலில் தொங்கிச் சொட்டும் மழைத்துளிகளை விட அதிகமானவை. தன்னுடைய மகன் இறந்துவிட்டான் என கலங்காமல் வீரமரணம் அடைந்தான் என மகிழ்ச்சி அடைந்த பெண்களின் வீரத்தினை காண முடிகிறது.

**பெண்களின் விருந்தோம்பல்**

இல்லறத்துக்குரிய அறங்களுள் ஒன்றாக கருதப்படுவது விருந்தோம்பல், விருந்தோம்பலில் தமிழ்களே சிறப்பு வாழ்ந்தவர்கள் சங்க காலங்களில் விருந்தோம்பலை தங்களது வாழ்க்கையின் உயிர்நாடியாக கொண்டு வாழ்ந்தனர்.

> **"அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்**
> **முல்லை சான்ற கற்பின்**
> **மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே"[8]**
> (நற்.142)

இரவு, பகல் பாராமல் எல்லா நேரங்களிலும் விருந்தினர்கள் வீட்டிற்கு வந்தால் அவர்களுக்கு உணவளிக்கும் பழக்கத்தினை உடையவர்கள் சங்ககாலப் பெண்கள் என்பதை இப்பாடல் மூலமாக அறிய முடிகிறது.

**பெண்களின் பண்புநலன்கள்**

சங்க இலக்கியங்களில் பிரிந்து சென்ற தலைவன் தலைவியிடம் கார்காலம் திரும்பி வருவதாகக் கூறிச் சென்றான். காடுகளில் மலர்கள் பூத்துக் குலுங்கி கார்காலம் வந்துவிட்டது என தெரிவித்தாலும் என்னுடைய தலைவன் பொய் கூறடமாட்டான் நான் இதை நம்ப மாட்டேன் என்று தலைவி மறுக்கிறாள்.

> **"கதுப்பில் தோன்றும் புதுப்பூங் கொன்றைக்**
> **கானம் கார்என கூறிறும்**
> **யானோ தேறேன் அவர் பொய் வழங்கலரே"[9]**
> (குறு.21)

இப்பாடலின் மூலம் தலைவன் தெளிந்த மன உறுதியையும் கணவன்பால் அவள் கொண்ட நம்பிக்கையையும் அறியலாம். உண்மையில் அது கார்காலத் தொடக்கமே என்பதை வருணனை காட்டி விட்டாலும் அதை ஏற்க மறுத்து மகளிருக்கு உரிய பண்புநலன்களில் சிறந்தவளாகக் காணப்படுகிறாள்.

**விதவைகளின் நிலை**

சங்க இலக்கியத்தில் கணவனைப் பிரிந்த பெண்கள் தாங்களை அலங்கரித்துக் கொள்ளும் உரிமையை பெற்றிருக்கவில்லை. அணிகலன்கள், மலர்கள், திலகம், போன்றவற்றை சூடுவதற்கு அவர்கள் அனுமதிக்கப்படவில்லை.

> **"எம்மினும் பேர் எழில் இழந்து வீனை எனப்**
> **பிறர்மனை புகுவல் கொல்லோ**
> **அளியல் தானே பூவிலைப் பெண்டே"[10]**
> (புறம்.293)

கணவனைப் பிரிந்த மகளிர் வீடுகளுக்கு பூ விற்கும் மகளிர் கூட வர மாட்டார்கள். அவள் இரக்கத்திற்குரியவளாகவே வாழ்ந்தாள் என்பதை இப்பாடல் மூலம் அறியமுடிகிறது.

**பெண்களின் துணிச்சல்**

தலைவன் தலைவியைப் பிரிந்து சென்று பரத்தையர் வீட்டில் இருந்து திரும்பி வந்தாள்.

> **"பல்வேல் மத்தி கழாஅர் அன்ன எம்**
> **இளமை சென்று தவத் தொல்ல: தே**
> **இனிமை எவன் செய்வது, பொய்ம்மொழி**
> **எமக்கே"**
> (அகம்.6)

தான் செய்த செயல் தலைவிக்குத் தெரியாதென எண்ணித் தலைவியைப் புகழ்ந்தபோது அவன் பரத்தையர் இல்லம் சென்று திரும்பினான் என்பதை அறிந்த தலைவி ஒரு காலத்தில் நான் இளமைப் பொருந்தியவளாக இருந்தேன். ஆனால் இப்போது இளமை என்னை விட்டு நீங்கிப் பழமை ஆகிவிட்டது. எனவே என்னைப் புகழ்வதால் உன்னுடைய புகழ்மொழிகள் எனக்கு இனிமை தராது என்று தனது கோபத்தை துணிச்சலாக தலைவனிடம் வெளிப்படுத்துகிறாள். சங்க இலக்கியப் பெண்கள் தனது உள்ளத்தில் உள்ள கருத்துக்களை துணிச்சலாக வெளிப்படுத்தும் முறையை அறிய முடிகிறது.

**முடிவுரை**

ஆண்களுக்கு நிகராக பெண்களும் கல்வி, வீரம் போன்றவற்றில் சிறந்து விளங்கினாலும் பல இடங்களில் ஆண், பெண் இருவருக்குமிடையே உயர்வு, தாழ்வு கற்பித்துள்ள போக்கை சங்க இலக்கியங்களில் காணமுடிகிறது. இப்போக்கை மரபு என்று இக்காலத்தினர் போற்றிப் பாராட்டாமல் பெண்களை அடிமைப்படுத்தும் செயல்களை மாற்ற முற்படவேண்டும்.

**அடிக்குறிப்புகள்**

1. முனைவர், பிரேமா, இரா: பெண்ணியம், ப.12
2. மேலது, ப.14.
3. அரங்க மல்லிகா: பெண்ணும் பெண்மையும், ப.95.
4. மேலது: ப.103.
5. இளங்குமரன், சங்க இலக்கியம், ப.317.
6. மேலது, ப.420.
7. மேலது, ப.418.
8. முனைவர். மகாதேவன். கதிர்: சங்க இலக்கியம் ப.188.
9. முனைவர். தமிழண்ணல், சங்க இலக்கியம் ப.47.
10. இளங்குமரன், சங்க இலக்கியம், ப.434.
11. முனைவர், மீனவன்.நா. சங்க இலக்கியம் ப.16.

**துணைநூற்பட்டியல்**


1. அரங்கமல்லிகா - பெண்ணும் பெண்மையும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிமிடெட், சென்னை
2. இளங்குமரன் - சங்க இலக்கியம், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராயர் நகர், சென்னை-17
3. தமிழண்ணல் - சங்க இலக்கியம், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-17
4. பிரேமா. இரா: - பெண்ணியம் தமிழ்ப் புத்தகாலயம், சென்னை. மு.ப. ஏப்ரல் 2000.
5. மகாதேவன். கதிர்: - சங்க இலக்கியம், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-17
6. மீனவன்.நா - சங்க இலக்கியம், வர்த்தமானன் பதிப்பகம், தியாகராய நகர், சென்னை-17

# THE ROLE OF TRANSLATION FOR THE DEVELOPMENT OF TAMIL LITERATURE

**T. Suganya**
*Ph.D Research Scholar (Full Time)*
*Department of Translation,Tamil University,Thanjavur*

## Introduction

*"**Among all the languages I know, I never found anywhere, any as sweet as Tamil**"*

Tamil Literary works are being translated into other languages Currently, translation is very essential part to transport the sweetness of Tamil into other languages. Tamil literature has a long and illustrious tradition, with works dating back to the Sangam period (3rd Century BCE to 3rd Century CE). The Sangam literature, comprising both poetry and prose, encompasses diverse themes such love, war, ethics and nature. These ancient literary works, including the famous " Tirukkural" by Thiruvalluvar, continue to be revered for their profound wisdom and ethical teachings.

**Avvaiyar Said,**

***The Tamil language is an***
***Ocean where one can Dive deep***
***And Discover Hidden Treasure***

\- **Avvaiyar.**

**Mahakavi Bharathi Said**

*"சென்றிடு வீரஎட்டுத் திக்கும் - கலைச்*
*செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"*

"The other Country's goodwill should be translated into tamil language. The epics and the moral works are should be translated into tamil. Spread out the Tamil language and literature to worldwide The Tamil grammar and Literature should be translated to other language. Because translation is a link bridge to find out literary grammar, science, technology, heritage and development. So, translation is an essential part for the development of a language.

## Translation

Translation is the process of Converting the meaning of a written message (Text) from one language to another. It is the Communication of the meaning of a Source – language text by means of an equivalent Target – language text. The English word " 'Translation' derives from the Latin word '**Translatio**'

Translation of novels, short stories, plays, poems etc. are considered a literary pursuit in its own right.

## Definition of Translation

Roman Jakobson, a leading linguist and noted expert in the subject of translation, defined translation as **'The interpretation of verbal signs by means of some other language'.** Through this process of translation, texts in one language are transformed into text in another language with the same meaning. These materials range from the isolated words in a language to the complex network of sentences of philosophical texts. It is called an art as all good translations are expressions of the creative urge of the translators.

The Oxford university Dictionary defines translation as **'The process of translating words or text from one language into another'.** The Cambridge Dictionary also endorses that. This can mean the word to word rendering of the text in one language to another or replacing the equivalents of the words or phrases in one text to another. The translated text may have formal equivalence when the source text and the translated text look alike in form. It may have functional equivalence when the source text and the target text or translated text convey the same sense or perform the same function.

though they have formal differences. It is often seen that the idioms and usage of the source language creep into the target language through translations which often enrich and shape the target language.

According to Bassett translation dose not only involve the replacement of lexical and grammatical elements between two languages, but also requires conveying the cultural settings of the texts. Eugene Nida define translation as "**Translating consists in reproducing in the receptor language the closest natural equivalent of the source language message, first in terms of meaning and secondly in terms of style**".

Mona Baker's Perspective of translation in more linguistic and descriptive. She specifies the equivalence theory posed by Nida and gives the standard of translation quality assessment. She says in her work that the role of translator should be more visible, and in the future translation should connect more and more with humanity. In the newest version of "In other words", Baker adds a new chapter on translation ethics. Translation is a very young discipline in academic terms. In the translation of film subtitles, more and more people find the importance of context, because in different context words may have different meanings.

In her "In other words" Baker pays great attention to textual equivalence. To the same problem, linguists usually have their own opinions. To the equivalence , Baker prefers to use examples and analyzes according to Halliday's systemic functional grammar. There must be various kinds of "non-equivalence", which can be understood as a contrastive difference.

**Early History of Translation**

The translation is as ancient as the literature itself. The origin of translation began during the Mesopotamian era, with the translation of Gilgamesh (a Sumerian poem) into Asian language. Additionally, Buddhist monks translated Indian texts into Chinese in the ancient period. Translation Services were prevalent in ancient societies throughout the middle East, and the proliferation of languages between ancient kingdoms created a need for people to communicate across language barriers. Around 2500 BC. clay tablets were used to decipher symbols from the ancient Semitic languages Sumerian and Eblaite. Jean – Francois Champollion a French scholar. Was one of the most renewed translators who worked on translating Egyptian hieroglyphics from the Rosetta stone.

The West and East boast of a history of translation dating back to the ancient time. The West people are known to translate Holy Bible and the Indians translated the Vedanta. The history of translation in the West can be divided into three parts. Before the birth of Christ and up to $2^{nd}$ or $3^{rd}$ century AD. This period was the time of the literary and religious translation. The Literature and texts were translated from Hebrew to ancient Greek. In the $5^{th}$ century the old testament, the epics, tragedy, comedy, songs, prose narratives etc. were translated to Greek. The Second Part is between Fifth Century to 15 th century.

It Called the dark times of European History. Some books are translated in Latin and Greek. The Third part is The Renaissance and Modern Age. The poetry were the aim of translation. Later they spread to various disciplines such as Science, Law and Order, Banking, Technical, etc.,

**Translation of Tamil Literature**

Tamil Literature has a rich and ancient tradition that spans over two millennia. Tamil language is among the oldest in the world, with early works dating back to at least the $3^{rd}$ Century BCE. Tholkappiyar says about translation in his work Tholkappiyam.

தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அவைமர பினவே

(தொல்.1597)

The Sangam Literature historically known as "The Poetry of the noble ones" was first recorded in south India and is written in the ancient Tamil Language. It divides Akam and Puram. The verses in Akam is concerned with feelings and sentiments. The verses in Puram is feats and heroism in the context of

conflict and public life. It reflects the Social, Political and Cultural life of ancient tamil society. Tamil literature encompasses a wide range of genres, including Poetry, Prose, Drama and Philosophy. It includes devotional literature, Epics and Modern Novels. Showcasing a variety of Themes and Styles. Then, The notable Epics such as "Silappathikaram" "Manimekalai" tell rich stories that explore Morality, Love and the human condition. These works are significant for their narrative depth and cultural insights. Tamil literature is not just about story telling , it also delves into Philosophy and Spirituality. The Tiruklkural by Thiruvalluvar offer profound ethical and moral teachings. The Bhakti Poetry of the medieval period emphasized personal devotion to God and Contributed significantly to Tamil Literature. The 20th Century saw a flourishing of Modern Tamil Literature with the authors like Subramania Bharati, S.R. Ranganathan, Sujatha Rangarajan , Janakiraman, A.Dhakshinamorthi, Ambai, Jayamohan, Ponneelan, Vairamuthu, Sandilyan, Sujatha etc.

**French Translation of Tamil Texts**

| S.No | Tamil Text | Translator |
|---|---|---|
| 1. | Paripadal ( 1968) | Francois Gros |
| 2. | Thirumurukatruppadai | Jean Fillizoat |
| 3. | Thirukkural | E.S Ariel(1848), Dumast (1854), Pierre – Eugene (1867), Jacolliot (1867) |
| 4. | Aathichudi, Kondraiventhan, Nalvali, Moothurai | Paul Adam |
| 5. | Kandapuranam | Tesignus, Pattabiraman (1967) |

**German Translation of Tamil Texts**

| S.No | Tamil Text | Translator |
|---|---|---|
| 1. | Thirukkural | A.F. Cammera (1803), Fredrick Richard (1847), Karl Graul (1854), Norgate (1866), Albert Benson (1977) |

**English Translation of Tamil Texts**

| S.No | Tamil Text | Translator |
|---|---|---|
| 1. | Thollkappiyam | V.Murugan, P.N.Subramaniya Sasthri, S.V.Subramaniyam |
| 2. | Thollkappiyam ( Agam Chapter, Puram Chapter) | A.Manavalan |
| 3. | Thollkappiyam ( Porulathigaram) | E.S.Varadharaja iyar |
| 4. | Sangam Literature | J.Vasak & S.V.Subramaniyam |
| 5. | Tamil Heroic Poems (Puraporul Venbamalai, Selected Poems From Purananuru) | G.U. Pope |
| 6. | Iyngurunooru | P.N. Appusamy |
| 7. | Sangam Songs (Agananooru, Kurunthogai, Nattrinai, Iyngurunooru) | A.K.Ramanujam |
| 8. | Sillapathikaram | V.R. Ramachandra Deekshithar |
| 9. | Manimegalai | G.U. Pope (1911) |

**Hindi Translation of Tamil Texts**

| S.No | Tamil Text | Translator |
|---|---|---|
| 1. | Akilan's Short Stories | Gopur Kathip, Sarashwathi Ramanath |
| 2. | Jayakanthan Stories | Naari |

**Malayalam, Telugu, Sanskrit Translation of Tamil Texts**

| S.No | Tamil Text | Translator |
|---|---|---|
| 1. | Silapathikaram (Malayalam,Sanskrit) | V.Narayana Nayar (1931) |
| 2. | Silapathikaram (Telugu) | Poothalapattu Shri Ramalu Reddi |
| 3. | Puharkandam (SansKrit) | Sri RamaDesikan (1968) |
| 4. | Manimegalai (Malayalam) | V.Narayana Nayar |

**Conclusion**

Translation has made a greatest Contribution to the development of Tamil Literature. It is the transformation of convey the message from one language to another language. Translation is as ancient as the literature itself. The oldest example is Rosetta Stone. Tamil has a very unique place among the classical language in the world. While translating a text it had many difficult to find out the equivalent of source text. Tamil is not only a language, it is Culture. Like Bharathi said, Tamil literary works should be translated into other languages and other literary works should be translated into Tamil language. Because, Translation played a Key role in the spread of Tamil language world level. G.U.Pope translated "Thirukkural" after that the world known Tamil language, Translation is convey the message and cultural of the language. It greatly support to the development of knowledge and national integrity.

**Book References**


1. Tholkappiyam – Puliyur Jeasikar Pathikam, Paari Nilaiyam – Chennai
2. Tamil Ilakkiya Varalaru – S. Aanathan, Kanmani Pathippakam, Trichy
3. Bassnett Susan"Translation Studies", 3rd edition. Rutledge Taylor and Francis Group London and New York.
4. Mozhipeyarpiyal C.Sivasanmugam,V.Dhayalan.Bharathiyar University,Coimputhur.

# கவிஞர் வாலியின் திரையிசைப் பாடல்கள் காட்டும் சமூகம்

**திருமதி சௌ. சுருதி**
*பகுதி நேர முனைவர்பட்ட ஆய்வாளர்*
*அருள்மிகு மீனாட்சிஅரசினர் மகளிர்கலைக் கல்லூரி, மதுரை*

**முனைவர் அ. வளர்மதி**
*உதவிப்பேராசிரியர்*
*அருள்மிகு மீனாட்சி அரசினர் மகளிர்கலைக் கல்லூரி, மதுரை*

**முன்னுரை**

இயல், இசை, நாடகம் இவை முத்தமிழின் சிறப்பாகும். தமிழ் திரைப்பட உலகம் தனக்கு முன்பிருந்த கலை ஊடகமானநாடகத்தையும் சேர்த்தே வளர்த்து வந்துள்ளது. இசை என்பது நாடகத்திற்கு மிகவும் தேவையாக இருக்கிறது. இசைப் பாடல்களைத் திரைப்படத்திற்கு உயிரோட்டத்தைக் கொடுத்தன. சங்கப்பாடல்கள் பக்தி இலக்கிய பாடல்கள் பாரதியார் பாரதிதாசனின் பாடல்களும் திரைப்படத்தில் பயன்படுத்தப்படுகின்றன. பாரதியாரின் பாடகளும் பெருமளவு மக்களிடம் பரவ திரைப்படமே பெரும் ஊடகமாக திகழ்ந்தது. நம் மொழியிலிருந்து காதலையும் வீரத்தையும் பிரிக்க இயலாதது போன்று நமது சமூகத்தில் இருந்து ஏற்றத்தாழ்வினை பிரிக்க இயலாது என்பதை கவிஞர் வாலி அவர்களின் பாடல் வரிகளைக் கொண்டு இக்கட்டுரை ஆராய்கிறது.

**பெண்ணியப்பார்வை**

பெண்மை விலகவென்று கூத்திடுவோமடா என்றார் பாரதியார். கவிஞர் வாலியின் திரை இசை பாடல்களிலும் பெண்ணியம் போற்றப்படுகிறது.

ஆட்டமும் பாட்டமும் குடும்பப் பெண்ணிற்கு ஆகாது என்று தடுக்கப்பட்டது. அக்காலம் முதல் பெண்கள் ஆடுவதையும் பாடுவதையும் கட்டுப்படுத்த சமூகத்தால் பலசட்டங்கள் விதிக்கப்பட்டு வருகிறன.

**“அன்னமயில்களில் சின்ன குயில்களில்**
**பெண்ணும் ஒரு ஜாதி அவள்**
**ஆடித்திரிவதும் பாடி பறப்பதும்**
**இயற்கையின் நீதி”**

என்ற வரிகளில் மூலம் கவிஞர் வாலி பெண்களும் தன் விருப்பம் போல் பல துறைகளில் சாதனை படைக்கலாம் என்பதை விளக்குகிறார்.

புதுமைப் பெண்கள் பூமிக்கு கண்கள். ஆண்டவன் மேனியில் பாதி பெண் பதவிக்கும், உதவிக்கும், பட்டத்துக்கும் சட்டத்துக்கும், கவிதைக்கும், கணக்குக்கும், காதலுக்கும், கடமைக்கும் பெண்கள் வேண்டும்.

**“தன்மானத்தை உயிரினும்மேலென பேணி**
**மரணத்தில் வாழ்ந்தவள் ஜான்சி ராணி**
**மதுரையை ஆண்டவள் மங்கம்மா வீர**
**மங்கையர் பரம்பரை எங்கம்மா”**

கவிக்குயில் சரோஜினி, கணக்கிற்கு சகுந்தலா, ஐநா. தலைமைப் பதவியிலே அமர்ந்தவள் விஜயலட்சுமி, கணவன் நிழலிலே மாளிகையாய் கொண்டு காலத்தை கழித்தவள் கஸ்தூரிபாய் என்று இன்னும் பெண்கள் பல துறைகளில் சாதனைகளைப் படைக்கின்றார்கள் என்று பட்டியலிடுகின்றார் கவிஞர் வாலி.

வீரத்தில் பெண்கள் புலிகள்வண்ணக் கால்கள் வெற்றி நடை போடும் சின்னக் கண்கள் சிந்து கவி பாடும்என்பதை

**“கொஞ்சும்போதுகொஞ்சுவது பெண்மை**
**மிஞ்சும்போதுமிஞ்சுவதும் உண்மை”**

திருமணம் என்ற பெயரில் பெண் அடிமையாக்கப்படுவதை வெறுக்கிறாள் ஒரு பெண். மஞ்சளை பூசிக்கிட்டு, காலிலே மிஞ்சிய அணிஞ்சுகிட்டு, அஞ்சி நடந்துக்கிட்டு மாமியார் சொன்னதைக் கேட்டுக்கிட்டு வீட்டுச்சிறைதனில் கூட்டு குயிலெனப் பெண் இருக்க் கட்டிய கணவன் அவளை ஆட்டிப்படைப்பதை எந்த பெண்ணும் விரும்பவில்லை சுதந்திரமான பெண்ணாக இருப்பதையே விரும்புகிறார்கள்.

**“பட்டுச்சிறகடிக்கும் -நானொரு**
**சிட்டுக்குருவியடி**
**கட்டுக்கடங்காமல் மலையில்**
**கொட்டும் அறிவியடி**
**பாடி பறக்கவும்ஆடித்திரியவும்**
**ஆசை பிறக்குமடி”**

உலகம் மிகவும் பெரியது அதில் பெண்களின் கனவு மிகப் பெரியது அதில் அவர்களின் கனவுகளைகட்டுப்பாட்டிற்குள்ளோ அல்லது வரைமுறைக்குள்ளோ கொண்டு வர இயலாது என்பதை கவிஞர் இவ்வரிகளின் மூலம் புலப்படுத்துகிறார்.

**சமூகப் பார்வை**

மக்கள் மனதில் நேர்மையைவளர்க்க வேண்டும். அரசியலை வியாபாரமாக எண்ணி மக்களை ஏமாற்றும் அரசியல்வாதிகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இளைஞர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். தீயவழியில் வரும் இன்பம் என்றுமே நிலைக்காது. சோம்பலை வளர்த்தால் நாட்டுக்கு நஷ்டம் வீட்டுக்கு நஷ்டம் எனவே நேர்மையோடு உண்மையோடும் உழைக்க வேண்டும் ஜாதி மத பேதமில்லாமல் மக்கள் அனைவருடனும் ஒற்றுமையுடன் இருக்க வேண்டும். என்று தனது பாடல் வரிகளின் மூலம் மக்கள்மனதில் விதைத்தவர் கவிஞர் வாலி.

மனிதன்சுயநலத்திற்காகஅனைத்தையும் மாற்றி அமைக்கின்றான் என்பதை

**"வைக்கோலைத்திணிக்கின்றான் கண்ணு குட்டியாக்குறான்**
**ககத்திலேநிக்கவச்சுப் பாலை கரைக்கிறான்**
**வெட்கங்கெட்டவிதத்திலேரொக்கப்பணம் சேர்க்கிறான்"**

பாரதியார் மீண்டும் வந்து நம் சமூகத்தின் சீர் அழிவினைக் கண்டு மனம் வருந்துவதாக ஒரு கற்பனைப் பாடலாக எழுதியுள்ளார். பாரதியாரின் கவிதை வரிகளைத் தவறாகப் பயன்படுத்துவதாக மனம் வேதனைப்படும் வகையில் வரிகளை வெளிப்படுத்துகிறார் கவிஞர்.

**"கண்ணன் பாட்டை காமுகன் பாடி**
**ஊரைக்கெடுத்தானே– என்**
**பேரை கெடுத்தானே"**

என்ற வரிகளின் மூலம் இன்றைய சமூக அவலங்களை வெளிப்படுத்துகிறார்.

**"சிங்க கூட்டம் தூங்கிக் இருந்தால்**
**சிறு நரி ஆடும் வாலை - அது**
**தூக்கம் கலைத்தால்நடப்பதென்ன**
**சரித்திரம் சொல்லும் நாளை"**

ஏமாற்றுகிறவர்கள் இருப்பதாலேயே தான் ஏமாறுபவர்கள் அதிகம் இருக்கிறார்கள். நாட்டில் பல பேர் ஏதும் அறியாத கேணி தவளையாகவே இருக்கிறார்கள். அதனால் தான் பொய்களை வாரி அள்ளி விடுகிறார்கள்புழுகுமூட்டையை அவிழ்த்து விடுகிறார்கள் என்று தனது பாடல் வரிகளின் மூலம். சமூக அவலங்களைகட்டவிழ்கிறார்.

**குடும்ப அமைப்பு**

ஒவ்வொரு மனிதனுக்கும் நாதமாய் விளங்குவது அவனது குடும்பமே. பிறப்புக்குப் பின்னர்கல்வி, நட்பு, புகழ், வசதி போன்றவற்றை எல்லாம் ஒரு மனிதன் தானாகத் தேடிக்கொள்ள முடியும். ஆனால் உறவுகள் மட்டுமே நாம் பிறக்கும் முன்பே இறைவனால் நிர்ணயிக்கப்படுவது. பிறக்கும்போதே இரத்த சம்பந்தம் உடையவர்களைச் சுற்றி உருவாகும் உறவுகளின் தன்மைகளைத் தனது வரிகளில் புலப்படுத்துகிறார்.

**"கருவறை தொடங்கி காலங்கள் தோறும்**
**கடவுள் மாட்டியகைவிளங்கு - இது**
**ஒருவரை ஒருவர் பிரிந்து விடாமல்**
**உறவுகள் பூட்டிய கால் விலங்கு"**

இறைவன் பூட்டிய உறவு விலங்குகளை அது தெரியாமல் மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டு வாழ்வினை நடத்துவதே மனிதனின் இயல்பாக கடவுள் படைத்துள்ளார் என்பதை விளக்குகிறார்.

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று பெற்றோரைப் போற்றாத இலக்கியமும் கவிஞர்களும் இல்லை என்றே கூறலாம். மேலும் குழந்தையின் முதல் ஆசிரியர் பெற்றோர்தான்.

**"பாலூட்டு மண்ணை அவள்**
**நடமாடும் தெய்வம்**
**அறிவூட்டும்தந்தை நல்**
**வழிகாட்டும் தலைவன்"**

பெற்றோரைத்துணைக் கொண்டு நடந்தால் நல்ல எதிர்காலம் நிச்சயம் உண்டு என்பதை வெளிப்படுத்துகிறார். அம்மா என்று அழைக்காத உயிர்கள் இல்லை் பெற்ற தாய் மட்டுமே நேரில் நின்று பேசக்கூடியத் தெய்வம்: எதை வேண்டுமானாலும் பணம் கொடுத்து வாங்க முடியும் பெற்ற தாய் அன்பு கிடைக்காது. பசுந்தங்கம், புது வெள்ளி, மாணிக்கம், மணி, வைரம் இவை எதுவுமே ஒரு தாய்க்கு ஈடாகாது இன்று தாய்மையின் புனிதம் பற்றி தனது வரிகளில் விளக்குகிறார் கவிஞர்.

**வாழ்க்கை தத்துவங்கள்**

வாழ்க்கை என்பது முரண்பட்ட நிலைதான் கடவுள் தனி ஒரு மனிதனுக்காக உலகினைப் படைக்கவில்லை மண் குடிசை வாசலில் என்றால் தென்றல் வர வெறுத்திடுமா? உனக்காக இன்று எனக்காக ஒன்று ஒருபோதும் தெய்வம் கொடுத்ததில்லை.

**"படைத்தவன் மேல் பழியுமில்லை**
**பசித்தவன் மேல் பாவமில்லை**
**கிடைத்தவர்கள்பிரித்துக்கொண்டார்**
**உழைத்தவர்கள் தெருவில் நின்றார்"**

இன்று பாடுவதன் மூலம் சுரண்டல் வாதிகள் தான் ஏழைகளின் வாழ்க்கையை சூழலுக்கு காரணம் என பாடுகிறார்.

ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை உண்டு என்பது நியூட்டனின் விதி வாழ்க்கையில் ஒவ்வொரு நிகழ்விற்கும் எதிர் விளைவு உண்டு என்பது இயற்கையின் விதி. உறவு என்றொரு சொல்லிருந்தால் பிரிவு என்றொரு பொருள் இருக்கும் காதல் என்றொரு கதை இருந்தால் கனவு என்றொரு முடிவு இருக்கும்.

**"இதயம் என்றொருஇடமிருந்தால்**
**ஏக்கம் என்றொரு நிலை இருக்கும்**
**இன்பம் என்றொரு வழி நடந்தால்**
**துன்பம் என்றொரு ஊர் போகும்"**

மனிதன் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும். நாம் நினைத்தது நடக்காவிட்டால் அதற்காக சோர்ந்து போகாமல் உன் தொடர்ந்து முயல சொல்கிறார் வாலி.

'பணம் பத்தும் செய்யும். ஈட்டி எட்டும் மட்டும் பாதாளம் மட்டும்" என்பது பணத்தின் அதிவேகத் தன்மையை கூறும் பழமொழிகள் அதனால் தான் வாலி

**"காசேதான்கடவுளப்பா - அந்தக்**
**கடவுளுக்கும் இது தெரியுமப்பா"**

எனப்படுகிறார். பணத்தின் மீது வெறி இல்லாவிட்டாலும் பற்று இருந்து தான் ஆக வேண்டும். இல்லாவிட்டால் இல்லற வாழ்வு இனிதாக இருக்க முடியாது என்ற நடைமுறை எதார்த்தத்தை இதன் மூலம் உணர்த்துகிறார்.

### உழைப்பின் வலிமை

கோழியைப் பாரு காலையில் விழிக்கும். குருவியை பாரு சோம்பலை பழிக்கும். காக்கையை பாரு கூடிப் பிழைக்கும். அ∴றினை உயிரிகளே உழைக்கும்போது மனிதப் பிறவியும் உழைப்பினை மூச்சாக கொள்ள வேண்டும். தலைவனாக விரும்புகிறவன் ஏழைகள் வேதனைபடாமல் இருக்க,

**"உடல் உழைப்பு சொல்வேன்**
**அதில் பிழைக்கச் சொல்வேன்**
**அவர் உரிமைப் பொருள்களை தொட மாட்டேன்"**

என்று கூறுகிறார்.

பிறருக்காக வாழும் நெஞ்சம் இருந்திட வேண்டும். அந்த எண்ணம் குன்றினைப் போல் உயர்ந்திட வேண்டும், என்ற தனது உள்ளக்கிடக்கையை

**"ஊருக்காகஉழைக்கும் கைகள்**
**உயர்ந்திட வேண்டாமோ – அவை**
**உயரும்போது இமயம் போல**
**தெரிந்திடவேண்டுமோ"**

என வெளிப்படுத்துகிறார்.

### முடிவுரை

பெண்கள் துணிவுடன் நடக்க வேண்டும். அடுப்பாங்கரை வேலையை மட்டும் செய்தால் போதாது. சரித்திரம் படைத்திடும் துணிவும் வர வேண்டும் என்று பெண்ணியகருத்துக்களை நன்கு விளக்கியுள்ளார். மனசாட்சியின் பார்வையை அடைத்து அடுத்தவன் பொருளுக்கு ஆசைப்படுவது மனிதனின் இயல்பாகாது என்பதை வலியுறுத்துகிறார். நம்பிக்கையுடன் பொறுமையாக உழைத்தால் நிச்சயம் வாழ்வில் வெற்றி பெறலாம். நேர்மை தான் வெற்றியின் ரகசியம் நம்மை தொடர்ந்து வரும் என்று நம்பிக்கை கொடுக்கும் கருத்துக்களை மக்களிடம் தெளித்துச்சென்றுள்ளார்.

### துணை நூல்

1. எஸ்.வைரவன், வாலி – 1000 திரையிசைப் பாடல்கள் (தொகுதி -1), முதல்பதிப்பு - 2010, குமரன்பதிப்பகம், சென்னை.

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# நாட்டுப்புறக் கும்மிபாடல்களில் - பக்தி

**முனைவர் க. சரவணன்**
*கௌரவ விரிவுரையாளர், தமிழ்துறை*
*ம.கா. பல்கலைக்கழகக் கல்லூரி*

## முன்னுரை

**'மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**படுதிரை வையம் பாத்தியப் பண்பே'**

என்பர் தொல்காப்பியர்

நானிலம் என்று போற்றக் கூடிய தமிழ் நாட்டில் நான்கு தெய்வம் உண்டென்பர். அடுத்தபடியாக கொற்றவையாகக் கூறுவீர் எனலாம். கொற்றவை பற்றித் தான் அதிக பாடல்கள் கும்மிப்பாடலில் அமைந்துள்ளன மாயோன் முல்லை நிலத் தெய்வமாகவும், சேயோன் என்பவர் குறிஞ்சிநிலத் தெய்வமாகவும் வேந்தன் எனப்படும் இந்திரன் மருதநிலத் தெய்வமாகவும் வருணன் என்பவர், நெய்தல் நிலத்தின் தெய்வமாகவும், கொற்றவை என்பவள் பாலை நிலத்தெய்வமாக நம்மக்கள் வணங்கி வருகின்றன. இத்தெய்வங்கள் நிறுவனத் தெய்வமாகவும் நாட்டுப்புற தெய்வமாகவும் வழிபடப்படுகின்றன எனலாம்.

கலைகள் தோன்றுவதற்கு அடிப்படையாக அமைவன பக்தி என்பர். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது தமிழகப் பழமொழியாகும். எனவே நமது மக்கள் தங்களால் வழிபடப்படும் தெய்வங்களின் மீது பக்தி கொண்டு பாடல்களை இயற்றி இருக்கின்றார்கள் என்பதை இதன் மூலம் அறிந்து கொள்ளலாம். நம்மக்கள் நாட்டுப்புற சிறுமரபு தெய்வங்களலானது முன்னோர்களால் வழிப்பட்டு மரபுவழியாகக் கொண்டாடப்படுவதாகும்.

நாட்டுப்புறத் தெய்வ உருவங்களை எடுத்துக் கொண்டோமேயானால் போருக்குச் செல்வது போலவும், காவல் காப்பது போலவும் அமைந்து உள்ளன. அத்தெய்வங்களுக்குமனிதர்கள் அணிந்த ஆடைகளை உடுத்திவிட்டு அழகுபார்க்கின்றனர். உதாரணத்திற்கு அய்யனர், மதுரைவீரன் கருப்பசாமி, பாண்டிமுனி, மாரியம்மன், காளியம்மன் துர்க்கையம்மன், பிடாரியம்மன் ஆகியவற்றிற்கு தமிழ்மக்கள் பயன்படுத்திய ஆடைகளை உடுத்தி விட்டு அழகு சேர்க்கின்றனர் எனலாம்.

நாட்டுப்புறத் தெய்வங்கள் அனைத்தும் தமிழ் மக்களின் உருவம் அமைந்து இருப்பதைக் காணலாம். உருவமைப்புகளின் அடிப்படையில் நாட்டுப்புற சிறுமரபு தெய்வம் பெருமரபு தெய்வம் என்கிற வேறுபாட்டை அறிந்து கொள்ளலாம். அத்தெய்வங்கள் அணிந்திருக்கும் ஆடை கையில் வைத்திருக்கும் ஆயுதங்கள் இவைகளின் அடிப்படையில் கண்டுணர்ந்து கொள்ளலாம்.

## தெய்வங்களில் இருவகை

நாட்டுப்புறத் தெய்வங்களில் இருவகை காணப்படுகின்றன.

1. ஆண் தெய்வம்
2. பெண் தெய்வம் எனப் பிரித்துள்ளனர்.

ஆண்தெய்வங்கள் பெரும்பாலும் போருக்குச்சென்று இந்த சமூகத்திற்காகப் போராடி உயிரை மாய்த்துக் கொண்டவர்களைதெய்வமாக வழிபடுகின்றனர், இதைத்தான் நடுகல் என்று ஆய்வாளர்களால் அறியப்பட்டது எனலாம். நடுகல் என்பது பசுக்களை பகைவர்கள் கவர்ந்து செல்லும் பொழுது அவர்களோடு போரிட்டு வீரமரணம் அடைந்தவை என்றுபுரிந்து கொள்ளலாம்.

## மதுரை வீரன் கும்மி

**'காசிராசா பெற்றெடுத்த கண்மணியே**
**மருதவீரா உன்னை**
**மாலை சுற்றி பிறந்ததினால் மன்னருக்கு**
**ஆகாத என்றார் – கொடி சுத்தி பிறந்தனால்**
**கோட்டைக்கு ஆகாது என்று**
**வனத்தினிலே கொண்டு போட்டார்**
**அங்க கரடி புலி சிங்காமல்லாம்**
**காவல் காத்து கொண்டிருக்கும் - கருநாகம்**
**குடை பிடித்து காத்திருக்க**
**சின்னானும் சின்னாளும் பட்டாவட்ட**
**போயிக்க கண்டெடுத்த பாலகனோ'.**

**(களப்பணி)**

மேற்குறித்த பாடலை மதுரை வீரனைப் பற்றிய கும்மி பாடலாக அமைந்திருக்கக் காணலாம். மதுரை வீரனின் பிறப்பு வளர்ப்பை கும்மிப் பாடலாக நமக்கு பக்தியின் மூலம் வெளிப்படுத்தி உள்ளனர் எனலாம். காசிராசா வீட்டில் பிறந்ததாகவும் அவருக்குக் கழுத்தில் தொப்புள் கொடியானது சுற்றிப்பிறந்ததினால் மன்னருக்கு ஆகாது என்று காட்டில் போட்டனர் அப்பொழுது சின்னான் என்பவர் எடுத்து

வளர்த்தாகப் பாடல் கூறுகின்றது ஆனால் இவர் மாதாரி வீட்டில் பிறந்து உயர்சாதி பெண்களை மணந்ததால் எடுத்து வளர்க்கப்பட்டவர் என கதை கட்டியுள்ளனர் என்பார் வானமாலை.

### கருப்பசாமி கும்மிபாடல்

கருப்பசாமி தென் மாவட்டங்களின் காவல் தெய்வமாக விளங்குகின்றார். இத்தெய்வம் காவல் தெய்வமாக இருந்து கொண்டு மக்களுக்கு அருள் ஆசிவழங்குகின்றார் எனலாம். மூன்று அண்ணன் தம்பிகள் என்றும் கூறுவர். இவரைப் பற்றிய கும்மிபாடல் கீழே வருகின்றது.

**'யானை வருவதை பாருங்கம்மா**
**யானை அசஞ்சு வாரதைப்பாருஙகம்மா**
**யானை மேலிருக்கும் நம்மசாமிக்கு**
**அட்டிகை மின்னலைப் பாருங்கம்மா**
**காருவாரதைப் பாருங்கம்மாகாரு**
**கதறிவாரதைப் பாருங்கம்மா காருக்குள்ள**
**இருக்கும் நம்மசாமிக்கு கண்ணாடி**
**மின்னலைப் பாருங்கம்மா**
**தூக்கி வைக்கும் கால்களுக்கு துத்திப்பூ**
**சல்லடமா சல்லடமா**
**மாந்தி வைக்கும் கால்களுக்கு மகிழம்பூ**
**சல்லடமா சல்லடமா'(களப்பணி)**

கருப்பசாமியன் சிலையைப்பார்த்தால் முறுக்கு மீசை, திரட்டிய விழிகள், கோபம் கொண்ட முகத்தோடு. போருக்குச் செல்வதைப்போல ஆடை அணிந்து அணிகலன் பூட்டி அரிவாளை ஓங்கியபடியும் குதிரை மேல் அமர்ந்துள்ளதைப் போல சிலை அமைந்துள்ளது. நாட்டுப்புற மக்கள் கருப்பசாமியின் அழகையும் வர்ணித்து கும்மிப் பாடல் பாடியிருக்கின்றனர் எனலாம்.

### அய்யனார் கும்மி

சபரிமலை அய்யப்பன் குழந்தை வடிவாக திருமணம் ஆகாத கன்னிப் பையனாகக் காட்சி தருகின்றார். ஆனால் தமிழ்நாட்டில் அய்யனார் என்ற பெயரில் பூரணத்தால் புட்கலையாய் ஆகிய இருவரையும் மணந்துள்ளார் எனப் பார்க்க முடிகின்றது. **நாட்டுப்புறத் தெய்வங்கள்** வேட்டைக்கு செல்வதைப்போல சிலைகளை அமைத்திருக்கின்றனர். அழகர். அய்யனார் போன்ற தெய்வங்களின் சிலைகளில் குதிரையில் அமர்ந்து வாளை ஓங்கி குதிரை இரண்டு கால்களையும் தூக்கிய வண்ணம் உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

**'குதிரை வாரதைப் பாருங்கம்மா**
**குதிரை குதிச்சு வாரதைப் பாருங்கம்மா**
**குதிரை மேல இருக்கும் நம்ம அய்யானார்க்கு**
**குஞ்சரம் மின்னலைப்பாருங்கம்மா**
**போரு குதிரை ஏறி புகைச்சுருட்டை**
**வாயிலிட்டு வேட்டைக்குப் போய்வாரார்**
**வீரமுள்ள அய்யனாருக்கு போடுங்கம்மா**
**ஒரு குலவை'**

குதிரை வாகனம் என்பது அரபு நாட்டில் இருந்து கொண்டுவரப்பட்டதாகக் கருதப்படுகின்றது. ஆனாலும் நாட்டுப்புறப் பாடல்களில் குதிரை ஏற்றம் இருந்ததைப் பல இடங்களில் குறிப்பிட்டு உள்ளனர். தெய்வங்களுக்குப் பாடப்படும் பாட்டு ஒன்றோடொன்று தொடர்புடையதாகக் காணப்படுகின்றது எனலாம்.

### மாரியம்மன் கும்மி

நாட்டுப்புற மக்கள் கிராமத்து காவல் தெய்வங்களாக காளி, மாரி, துர்கை, பிடாரி, இப்படிப்பட்ட பெண் தெய்வங்களை வழிபாடு செய்கின்றனர் இவற்றில் பொங்கலிடுதல், கரகம் எடுத்தல், மாவிளக்கு எடுத்தல், முளைப்பாறி போடுதல் ஆகிய வளமைச் சடங்குகள் செய்கின்றனர். இம்மக்கள் முளைப்பாரி போட்டு எட்டு நாட்களுக்கு கும்மியடிக்கின்றனர். கும்மியடிக்கும் பொழுது நிறை செம்பு தண்ணீல் வேப்பிலையை வைத்து பெண்கள் கூடிகும்மி அடிக்கின்றனர் இப்பாடலில் அம்மன் பிறப்பு வளர்ப்பு முளைப்பாரி போடுதல் ஆகியவற்றை சொல்லி கும்மிப்பாடல் பாடுகின்றனர்.

**'உழன்னு முத்தெடுப்பா எங்கண்ணஈரா**
**அவசக்தி சங்கர காளி அவசந்தனப் பூமாரி**
**அவபெத்தவளே தாயே அவபேனரயூரு மாரி**
**ஈருழக்கு முத்தெடுப்பா எங்க கண்ணூரா**
**அவசக்தி சங்கர காளி அவசந்தனப் பூமாரி**
**அவபெத்தவளே தாயி அவ பேரையூருமார'**– என்ற மாரியம்மனை அம்மை நோயோடு தொடர்புப்படுத்திப்பாடுகின்றனாள் எனலாம். அம்மை என்ற நோய் மக்களுக்க உடல் சூட்டினால் உண்டாகும் ஒரு வகையான கொப்புளம் இவற்றை ஒரு வகையான முத்து என்றும்அதை குணமாக்கும் சக்தி உடையவள் என்றும் கூறுகின்றனர் ஒருழக்கு இரொழக்கு மூவுழக்கு என்று வரிசையாக சொல்லி அம்மனை வழிபடுகின்றனர். தமிழர்களால் வழிபடப்படும் அனைத்துமே வளமைச் சடங்கு என்றே அறிஞர்கள் கூறுகின்றனர். வளமை பெருக்கத்தற்காக உருவாக்கப்பட்டதை இந்த சக்தி வழிபாடு ஆகும்.

துர்க்கை அம்மன்

**‘அம்மா வாரா அம்மா வாராகம்மா**
**கரையோரம் கம்மா கரையோரம்’**
**சிங்க முகம் தண்டியலேறி சீமைபாக்கவார**
**அம்மா படுத்துறங்கும் கனகரத்தின மேடை**
**கண்குளிர்ந்த ஓடை சிங்கமுகம்**
**தண்டியலேறி சீமை பாக்கவாரா**
**லைட்டு வெளிச்சம் நாலோர் திக்கும் அடிக்க**
**பூவால் கரகம் செய்து ஊரு சுத்திவாரா**
**வீச்சருவா கொண்டு சக்தி கிடாய் வெட்டி.’**

நமது இலக்கணங்கள் கொற்றவையைத் தான் துர்க்கை யம்மனாக வழிபடுகின்றனர் இது பாலை நிலத் தெய்வமாகவும் ஊர்காக்கும் கடவுளாக கீழ்நிலையாக்கம் செய்யப்படுகின்றது. மேல்நிலையாக்கம் செய்யப்பட்ட தெய்வக் கோயில்களில் ரத்தப்பலி கொடுப்பதில்லை ஆனால் நாட்டுப்புற காவல் தெய்வங்களுக்கு சத்திகிடாய் வெட்டி பலி செலுத்தவதாக நம்புகின்றனர். இதன் மூலம் இயற்கையை பணிய வைக்க முடியும் என நம்பினர்.

நமது நாட்டுப்புற மக்கள் அரக்கனை பலிவாங்கும் நோக்கத்திலும், தீய சக்தியை அழித்து மக்களை காப்பற்றுவதற்காகவும் மனிதப்பிறப்பெடுத்து வந்ததாக புராணச் செய்திகளில் அறிந்து கொள்ள முடிகின்றது. நாட்டுப்புற மக்கள் தெய்வங்களை புகழ்ந்து பாடி மகிமை படுத்துவதற்காக இக்கும்மி பாட்டு அமைந்துள்ளது எனலாம்.

நமது மக்களால் வழிபடப்படும் கோயில்கள் வீட்டிற்கு அருகில் இருக்கும் அல்லது காட்டில் இருக்கும் ஏனென்றால் ஊர்மக்களைக் காக்கவும் மற்றொன்று விளைச்சல் அதிகமாக வேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்டுள்ளது எனலாம்.

முருகன் வள்ளி தெய்வனென

முருகனின் ஆறுபடை வீடுகள் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. இவைகளில் முருகன், வள்ளி, தெய்வானையை திருமணம் முடித்தசெய்தியை நாட்டுப்புற மக்கள் கும்மிப்பாடலாக பாடியுள்ளனர், இதை குரவை என்று இலக்கியங்களில் கூறுகின்றனர். இப்பாடலில் முருகன், வள்ளியை மணந்த செய்தியைப் பாட்டாக பாடி கும்மியடிப்பது நாட்டுப்புற மக்கள் பண்பாட்டு பழக்கவழக்கமாக உள்ளது எனலாம்.

**‘வள்ளி வள்ளி வனந்தனிலே**
**கிள்ளி முள்ளி கிழங்கெடுத்து**
**கிழங்கெடுத்த குழிதனிலே – மான் தடமே மயில்தடமே**
**தேன் தடமே தெய்வதடமோ**
**ஓடினாள்வள்ளி ஒழிஞ்சாலோ**
**வனந்தேடி – தேடினார் வேலவரு**
**திருப்பால் கடலருகே – வள்ளி அழகுக்கோ**
**வலதுபுறம் தேமலுக்கோ கூந்தல் அழகுக்கோ**
**ஆசை கொண்டேன் - ஒன்மேல**
**வள்ளிக்கும் தெய்வானைக்கு மயிருபிடி**
**சண்டைகளாம் வள்ளிமேல் குத்தமில்லை**
**மயிரை விடுதெய்வானை.’ (களப்பணி)**

வேடர் குலத்தில் பிறந்த வள்ளியை கந்தன் கந்தருவத்திருமணம் செய்து கொள்கிறார் எனலாம். இச்செய்தியை சங்கரதாஸ் சுவாமிகள் நாடகமாக எழுதினார், நடிக்கவும் இப்புராணம் உதவுகிறது. வள்ளியின் மீது காதல் கொண்ட வேலன் வேட்டைக்குச் சென்று தினைப்புமை காக்கும் வள்ளியை திருமணம் செய்து கொண்ட செய்தியை கும்மிபாடலாகவும் நமது மக்கள் பாடுகின்றனர். மேற்கண்ட பாய் அதன் தொடர்ச்சியாக அமைந்துள்ளன எனலாம்.

முடிவுரை

மனிதன் வழிபாட்டுச் சடங்குகளால் இயற்கையயை கட்டுப்படுத்த முடியும் என்று நம்பினான், எனவே நம்மக்கள் இறைவனை கும்மிப்பாடலாகப்படி புகழ்ந்த வழிபாடுசெய்தனர் என்பதை அவர்களிடையே பாடப்படும் பாடலாக அமைந்துள்ளது எனலாம்.

அடிக்குறிப்பு

1. தொல்காப்பியம் - தொல்காப்பியம்
2. வேலம்மாள் - கே.கே.பட்டி
3. காளியம்மாள் - கே.கே.பட்டி
4. கடவுளம்மாள் - கே.கே.பட்டி
5. பாப்பம்மாள் - கே.கே.பட்டி
6. தங்கவேலம்மாள் - கே.கே.பட்டி
7. கூத்தனாட்சி – கே.கே.பட்டி

# பட்டினப்பாலையில் சொற்புலங்களும், புலச்சொற்களும்

**முனைவர் இர. ஷீலாராணி**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ் உயராய்வு மையம், அரசு கலைக் கல்லூரி, மேலூர்*

**ஆய்வுச் சுருக்கம்**
சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும், பத்துப்பாட்டும் தமிழ்ச் சமுதாயத்தின் இலக்கிய மரபையும், பண்பாட்டு மரபையும் செறிவாகவும் சிறப்பாகவும் எடுத்துரைக்கும் ஆற்றல் கொண்டவை. பழந்தமிழ் இலக்கியங்கள் பல்வேறு தலைப்புகளில் ஆய்வை மேற்கொள்வதற்குரிய களங்களாக என்றென்றும் விளங்கி வருவதால், காலந்தோறும் சங்க இலக்கிய ஆய்வுகள் தொடர்ந்து வருகின்றன. அந்த வகையில் அக்காலச் சமுதாய அமைப்பையும், அகவாழ்வையும், அரசியல் செய்திகளையும் ஆதாரமாகக் கொண்டு பத்துப்பாட்டில் உள்ள பட்டினப்பாலையில் இடம் பெற்றுள்ள **"சொற்புலங்களையும் புலச்சொற்களையும்"** ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## முன்னுரை

ஒரு பொதுச் சொல்லில் அடங்கும் ஒத்த தொடர்புடைய பல்வேறு சொற்கள் ஒரே புலத்தில் அடக்கப் பெறுவதனால் அவை புலச்சொற்கள் எனப்படும். ஒரு புலத்தின் சொற்கள் பொருள் விரிவு பெற்றிருப்பது மட்டுமல்லாமல் விரிவு பெற்று மற்றொரு புலத்துடன் தொடர்புடையதாகவும் செயல்படுகின்றன. அவ்வகையில் பட்டினப்பாலையில் வழங்கப்பெறும் சொற்கள் பல சொற்புலங்களுக்கு வழிவகை செய்வதாக உள்ளன. பட்டினப்பாலையின் தனித்துவத்திசை சுட்டுவனவாக இப்புலச் சொற்கள் உள்ளன. தெய்வப் பெயர்களை முதன்மையாகக் கொண்டு அதன்பின் மக்கள், விலங்குகள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள், மரவகைகள், செடி கொடி வகைகள், பூ வகைகள், இசை மற்றும் போர்க்கருவி ஆகியனவும் இடம் பெற்றுள்ளன.

## தெய்வப் பெயர்கள்

தெய்வப் பெயர்கள் எனும் புலத்தில் செவ்வேள் (முருகன்) கந்து (சிவலிங்கம்) வல்லிணங்கினான் (வருணன்) போன்றவைகள் இடம் பெற்றுள்ளன.

செவ்வேள் : முருகன்

''செறி தொடி முன்கை கூப்பிச் செவ்வேள்'' (154)

கந்து : சிவலிங்கம்

''வம்பலர் சேக்கும் கந்துடைப் பொதியில்'' (249)

(கடவுள் இருக்கும் கம்பங்களையுடை (சிவலிங்கங்கள் உடைய) மன்றங்களில்)

வல்லணங்கினான் : வருணன்

''மனைச் சேர்த்திய வல் அணங்கினால் மனையில் சேர்த்த வலிமையான கடவுளின் பொருட்டு இடம் மூன்று தெய்வங்களின் பெயரும் பட்டினப் பாலையில் இடம் பெற்றுள்ளன.''

## மக்கட் பெயர்கள்

மக்கட் பெயர்கள் பல்வேறு இடங்களில் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக

கோ = அரசன் என்ற வரி பட்டினப்பாலையில்

**"இருங்கோ வேள் மருங்கு சாயக்" (282)**

எனவும் இரும்பரதவர் = மீனவர் என்பதற்கு

**"புன்தலை இரும்பரதவர்" (90)**

என்றும்

எயினர் = வேடர் கொடுவில்எயினர் கொள்ளை உண்ட (266)

என்றும்

குழவி = குழந்தை என்தற்கு

**தாய்முலை தழுவிய குழவி போலவும் (98)**

எனவும் காட்டப்பட்டுள்ளது. மேலும்

கொண்மகளிர் = பகைவர் மனைவியர் (246)

கோடியார் = கூத்தர் (253)

திருமாவளவன் = கரிகாற் பெருவளத்தான் (299)

துணை = கணவன் (106)

தென்னவன் = பாண்டியன் (277)

நண்ணார் = பகைவர் (225)

நான்மறையோர் = அந்தணர் (202)

புதல்வர் = மக்கள் (295)

புன்பொதுவர் = இடைக்குலவேந்தர் (281)

மடமங்கையர் = இளமையான பெண்கள் (106)

மாமகளிர் = கரிய மகளிர் மீனவர் (91)

மைந்தர் = ஆடவர் (110)

வயங்கிழை= அணிகலன் பூண்ட தலைவி (219)

விலைஞர் = மீனவர் (198)

என பட்டினப்பாலையில் மக்கட் பெயர்களாக இடம் பெற்று விளங்குகின்றன.

**விலங்குகள்**

பட்டினப்பாலையில் விலங்குச் சொற்கள் காட்டு விலங்கு, வீட்டு விலங்கு, நீர்வாழ் விலங்கு என மூன்று பிரிவுகளாக காட்டப்பட்டுள்ளது.

**காட்டு விலங்கு**

**"அரிமா அன்ன அணங்குடைத்துப்பிற்" (298)**

அரிமா - சிங்கம்

**"அடில் வாயோரி அஞ்சு வரக்கதிர்ப்பு" (257)**

ஓரி - நரி

**"நீறாடிய களிறு போல்" (48)**

களிறு - ஆண் யானை

**"பொற்காற் புதல்வர் புரவியின் உருட்டு" (224)**

புரலி - குதிரை

**"கொடுவரிக் குருளை கூட்டுள் வளர்ந்தாங்குப்" (229)**

குருளை - புலிக்குட்டி

**"தறுகோட்டி இரலையோடு மான்பினையுகளவிங்" (245)**

இரலை - மான்

**வீட்டு விலங்கு**

**"நல்லானொடு பகடோம்பியு" (201)**

ஆன் - பசு

**"மோட்டெருமை முழுக்குழவி" (14)**

எருமை - எருமை

**"கூருகிர் ஞமலிக் கொடுந்தாளேற்றை" (140)**

ஞமலி - நாய்

**"மேழகத்தகரொடு சிவல் விளையாடக்" (77)**

தகர் - ஆட்டுக்கிடாய்

**"பகட்டெருத்தன் பல்சாலை" (52)**

பகடு - எருது

**நீர் வாழ்வன**

**"வயலாமைப் புழுக்குண்டும்" (64)**

வயலாமை - ஆமை

**"கரா அங்கலித்த கண்ணகன் பொய்கை" (242)**

கராம் - முதலை

**"மீன்றடிந்து விடக்கறுக்" (176)**

விடக்கு - மீன்கள்

**"மலவனாட்டியு முரவுத்திரை உழக்கியும்" (101)**

முரவு - நண்டு

**தாவரங்கள்**

| மரம் | கொடி | செடி | புல்வகை |
|---|---|---|---|
| ஆரம் (சந்தனம்) (188) | அடம்பு (65) | இஞ்சி (19) | நெருஞ்சி (256) |
| கமுகு (பாக்கு) (17) | காந்தள் (153, 236) | கரும்பு (9)(162, 240) | புதவம் (கோரை) (243, 256) |
| தெங்கு (தென்னை) (16) | நெய்தல் (11, 241) | சேம்பு (19) | |
| பனை (18, 89) | வெண் கூதாளி (85) | தாழை (84, 88, 118) | |
| மா (18) | | நெல் (13) | |
| வாழை (16) | | மஞ்சள் (17) | |

**மலர்கள்**

மலர்கள் எனும் புலத்தின் கீழ் 2 வகையான மலர்கள் இடம் பெற்றுள்ளன.

காட்டுமலர் - 3
நீரில் மலரும் மலர் - 2

**காட்டுமலர்**

**உழிஞை, பூளை பூ, வெண்கூதாளம்**
**வேறுபல் பூளையோ உழிகை சூடிப் (235)**
**வேறுபல் பூளையோடுழிகை சூடிப் (235)**
**வெண்கூதாளத்துத் தண் பூங்கோதையர் (85)**

**நீரில் மலரும் மலர்**

**குவளை**
**ஆம்பல்**
**மாயிதழ்க் குவளையொடு நெய்தலுமயங்கி (24)**
**புனலாம்பற் பூச்சூடியு (66)**

பட்டினப்பாலையில் இடம்பெற்றுள்ள வரிகளின் வாயிலாக இம்மலர்களின் பெயர்களை அறிய முடிகின்றது.

**பறவைகள்**

காட்டுப் பறவைகளாக ஆண்டலை, குயிறம், கூகை, சிவல், பருந்து, மயில் முதலியனவற்றையும் வீட்டுப்பறவைகளாக கிளி, கோழி, புறா போன்றவற்றினையும் பட்டினப்பாலை வரிகளின் மூலம் இனம் காண முடிகின்றது.

**மழுசூரற் கூகையோ ஆண்டலை விளிப்பவுங் (258)**

ஆண்டலை - ஆந்தை
கூகை - கோட்டான் எனவும்

**மாவுதி நறும்புகை முனை இக்குயிறம் (55)**

குயிறம் - குயில் எனவும்

**மேழகத் தகரொடு சிவல் விளையாடக் (77)**

சிவல - கவுதாரி எனவும்

**மயிலியன் மானோக்கிற் (149)**
**பெருநல்வானத்தைப் பருந்துவாய் நடப்பத் (233)**
**கிளி மழலை மெனசாயலோர் (150)**
**கோழியெறிந்த கொடுங்காற்கனங்குழை (23)**
**தூதுணம் புறவொடு துச்சிற் சேக்கு (158)**

இவை தவிர இசைக் கருவிகளும், போர்க் கருவிகளும் உவமைகளாகக் கையாளப் பெற்றுள்ள தன்மையினையும் பட்டினப்பாலை வழியாகக் கண்டு ஆய்வு மேற்கொள்ளலாம்.

### முடிவு

சொற்பொருண்மைக் கூறுகளில் தெய்வப் பெயர்களும், மக்கட் பெயர்களும் சிறப்பான முறையில் கையாளப் பெற்றுள்ளன.

விலங்குகள், பறவைகள், மலர்கள் போன்றனவும் பல்வேறு நிலைகளில் எண்ணிப் பார்க்கும் அளவில் இடம் பெற்றுள்ளன.

### துணை நூற்பட்டியல்

1. மறைமலையடிகள் பட்டினப்பாலை (ஆராய்ச்சி உரை) மணிவாசகர் பதிப்பகம் சென்னை. 1998

### குறிப்பு

பட்டினபாலையில் இடம்பெரும் வரிகளுக்கான எண் அந்தந்த பாடல் வரிகளுக்கு கீழே தரப்பட்டுள்ளது

# திணைக்கோட்பாட்டுப் பார்வையில் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் - ஒரு பார்வை

**ச. சங்கர லெட்சுமி**
*முழுநேர முனைவடீ பட்டடீ ஆய்வாளர், தமிழியற்புலம்*
*மதுரை காமராசடீ பல்கலைக்கழகம்,மதுரை*

**முனைவர் உ. கருப்பத்தேவன்**
*உதவிப்பேராசிரியடீ (ம) தலைவர் (பொ)*
*இலக்கியத் திறனாய்வியல் துறை, தமிழியற்புலம்*
*மதுரை காமராசர் பல்கலைக்கழகம்,மதுரை*

## முன்னுரை

தமிழின் அனைத்துவகை இலக்கியப்படைப்புக்களிலும் சங்க அகத்திணை, புறத்திணை வாழ்வியல் மரபுகளின் தொடர்ச்சியும் நீட்சியும் உள்ளன. இவை பதினெண்கீழ்க் கணக்கின் அறநூல்களிலும், அந்நூல்கள் வலியுறுத்தும் அறக்கருத்துக்களுக்குப் பின்புலமாக உள்ளன. சங்கத்திணை மரபுக் கருத்தாக்கங்களை உள்வாங்கி, அம்மரபின் தொடர்ச்சியாக் திணைமரபு வாழ்க்கையின் நோக்குகளையும் அடிப்படைகளையும் கோட்பாட்டியல் அணுகுமுறை (Theoreticalapproach) விளக்கமுறைத் திறனாய்வு ஆகிய இலக்கியத் திறனாய்வு முறைகளில் நுணுகிஆராய்ந்து பதினெண்கீழக்கணக்கு நூல்களில் திணைக்கோட்பாட்டுச் செய்திகளை வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## திணைக்குடிகள்

மனிதர்களின் ‘வாழ்தல்’ என்பது உணவு மற்றும் இதரத்தேவைகளுக்கான போராட்டமாகவே அமைந்துள்ளது. ஆதலால் மனிதர்கள் குறிப்பிட்ட நிலம் சார்ந்து வாழவேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளன. இதனைத் தமிழ் இலக்கண, இலக்கியங்கள் திணைசார் வாழ்க்கை என்கின்றன. மனிதன் சமூகத்தோடு தொடர்ந்து நடத்தும் போராட்டமே திணை இலக்கிய வகைமைகளின் களமாகும். நிலத்தைச் சார்ந்து வாழும் மக்கள் கூட்டம் ‘திணைக்குடிகள்’ என்றழைக்கப்படுகின்றன. திணைசார் வாழ்க்கை விளக்கம், திணை- கருத்தாக்கங்கள், திணை வரையறையின் முக்கூறுகள், திணைவாழ்க்கை தமிழிலக்கியப் படைப்புக்களின் தொடர்ச்சி இயற்கை சார் வாழ்க்கை, கீழ்க்கணக்கு அறநூல்களில் திணைசார் வாழ்க்கை, திருக்குறளில் திணை வாழ்வின் அடிப்படைகள், நாலடியாரில் திணைவாழ்வின் அடிப்படைகள் முதலியன ஆராயப்பட்டுள்ளன.

## திணைசார் வாழ்க்கை

பழந்தமிழகத்தின் நானிலப் பாகுபாடுகளும், நிலங்களின் தன்மைகளுக்கேற்ப வேறுபடும் முதல், கருப்பொருள்களும் மனிதர்கள் வேறுபட்ட வாழ்க்கை முறைகளைக் கொண்டவர்கள் என உணர்த்துகின்றன. நானிலப் பாகுபாடுகளிலும் நிலம் சார்ந்த மக்களினங்கள், அவர்தம் அக, புற வாழ்வியல், நம்பிக்கைகள், சடங்குகள், பழக்க வழக்கங்கள், தொழில்கள் ஆகியன அமைகின்றன. இதனைச் சங்க அகபுறத்திணைப்பாடல்கள் துலக்கமாகக் காட்டுகின்றன. மானிடவியல் ஆய்வுகளும் குறிப்பிட்ட இனக்குழு மக்களின் பண்பாட்டு வாழ்க்கை முறைகளையே ஆய்வுப் பொருள்களாகக் கொண்டுள்ளன. சங்கத்திணைப் பாடல்களைத் தொடர்ந்து பதினெண்கீழ்க்கணக்கு அறநூல்களிலும் திணைசார் வாழ்க்கைப் பின்புலங்களே காணப்படுகின்றன.

## திணை- கருத்தாக்கங்கள் (Concepts)

திணை என்னும் சொல்லிற்குக் களஞ்சியங்களும் அகராதிகளும் பல்வேறு பொருள் விளக்கங்களைத் தந்துள்ளன. “திணையை நிலம் சார்ந்த புனைவு” (துரை.சீனிச்சாமி, திணைக்கோட்பாடு, ப-4) எனத் துரை.சீனிச்சாமி வரையறை செய்திருப்பதும் அதன் கருத்துநிலை சார்ந்ததே ஆகும். “திணை என்பது நிலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புனைவுநெறி” (துரை.சீனிச்சாமி, திணைக்கோட்பாடு, ப-6) என்னும் கூற்றில் இலக்கியப்படைப்பு, இலக்கிய வெளி, கருத்துச்சார்பு ஆகியன அடங்கியுள்ளன. ஆனால் திணை என்னும் சொல் ‘ஒழுக்கம்’ என்னும் உரிப்பொருளையும் குறிக்கின்றது.

தொல்காப்பியர் ‘அன்பின் ஐந்திணை’ என்ற சொல்லால் குறிப்பிட்டுள்ளார். ஐந்து நிலங்களின் அகத்திணை ஒழுக்கங்களே அன்பின் ஐந்திணையாகும். ‘ஒழுக்கம்’ என்னும் பொருளினைத் திணை என்று

குறிக்கும்போது நிலங்களின் தன்மைகளும் அதன் குணங்களும் மனிதவயப்படுத்தப்படும் பண்பே (Humanization of lands and its character) ஆகும். நிலத்தின் இயல்பினை மனிதர்களுக்கு ஏற்றும்போது நிலத்தினை வாழிடமாகக் கொண்ட மனிதன் அதனோடு வினையாற்றும் செயலிலிருந்து அதனைத்தன் சொந்த உறவாகக் கருதும் நிலையில் ஏற்படுவதாகும். இதுவே மண்ணும் மனித உறவுகளுமாகும்.

அகத்திணை, புறத்திணை ஆகிய இருதிணைகளிலும் சூழல்களும் அதன் நுவல்பொருள்களும் காதல், கற்பு வாழ்க்கை என்பன அகத்திணைகளாகவும், வீரம், போர், அறம்,ஈகை என்பன புறத்திணைப் பொருள்களாகவும் அமைகின்றன. தனக்கெனத் தனிநிலம் இல்லையாயினும் தட்பவெப்ப சூழலுக்கேற்ப மனிதர்களது குணம் வேறுபடுவதை, "ஆண்டின் குறிப்பிட்ட பருவத்தில் நடக்கும் பிரிவினைக் குறிப்பிடுவதற்கான இலக்கியத்தேவையே இவ்வாறு அமைவதற்குக் காரணம், கோடைக்காலத்தில் குன்றுப்பகுதிகளில் வாழும் மக்களோ அல்லது இவர்களிடையே உள்ள சில குழுவினரோ பிழைப்பிற்காக வழிப்பறியினை நடத்தியிருப்பது சாத்தியமே" (கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத்தமிழ்ச் சமூகம், பக்-15-16) என கா.சிவத்தம்பி, இளம்பூரணர் உரைவழி நின்று விளக்கியுள்ளார்.

பாலைநிலத்திற்கான பிரிவும் பிரிவு நிமித்தமும் இலக்கியத்தேவை கருதியே பாலைத்திணையாகக் கொள்ளப்பட்டது. அவருடைய பார்வையில் பாலைத்திணை என்பது பருப்பொருள் நிலையில் நிலத்தையும் கருத்தியல் நிலையில் பாலைநில மக்களின் ஒழுக்கத்தையும் குறிப்பதாகின்றது.

## 'திணை' வரையறையின் முக்கூறுகள்

ஐந்திணைகளுக்கு மட்டுமே முதல், கருப்பொருள்கள் சார்ந்த பின்புலங்களில் உரிப்பொருள்கள் வகுக்கப்பட்டுள்ளன. இவை நிலத்தை அடிப்படையாகக் கொண்ட திணைவாழ்க்கையை மையமிட்டவை. அகவாழ்வின் செயற்பாடுகள் உரிப்பொருள்கள் ஆகும். நிலங்களில் வாழும் பறவைகள், விலங்குகள், உணவு, உடை, இருப்பிடம் ஆகியன கருப்பொருள்களாகும். தலைவன்- தலைவி என்னும் பண்பாட்டுத் தன்னிலைகள், அவர்தம் காதல் தவிர்த்த பிறயாவும் புறத்திணைகளாகும்.

## திணை வாழ்க்கை-தமிழிலக்கியப் படைப்புக்களின் தொடர்ச்சி

தமிழிலக்கியச்சூழல் திணைவாழ்வை அடிப்படையாகக் கொண்டது என்பதால் அது சங்ககால இலக்கியங்களோடு முற்றுப்பெறவில்லை. அது சமூக வாழ்க்கையில் பல்வேறு இனக்குழுக்களின் வாழ்க்கை முறையாகத் தொடர்ந்து வருகின்றது. திணை, துறை சார்ந்த சங்க இலக்கியச்சூழல் பிந்தைய இலக்கியப் படைப்புக்களிலும் தமிழர்களிடம் திணை சார்ந்த பன்மைத்துவ வாழ்வாக நீடிக்கின்றது. இதனை ஜவஹர், "திணை வாழ்வென்பது பன்மைத்துவப் பண்பு கொண்டதை தொல்காப்பியம் முதலான நூல்கள் வெளிப்படுத்தின. திணை என்பதைப் பன்மைத்துவச் சொல்லாடலாகத் தொல்காப்பியமும் பிறகு வந்த பழமை மரபும் வளர்த்தெடுத்திருக்கின்றன" (க.ஜவஹர், திணையுணர்பருவம், ப-15)

## இயற்கைசார் வாழ்க்கை

திணைவாழ்வியலில் இயற்கைசார் வாழ்க்கையே முதன்மை பெறுகின்றது. புலமைமரபு சார்ந்த பழந்தமிழ் இலக்கியங்களில் தமிழர் வாழ்வியல் அனுபவங்களும் கூரறிவும் நானில இயற்கை சார்ந்ததாகும். இயற்கையின் நிகழ்வுகள் மனித வாழ்வியல் செயல்பாடுகளுக்கு ஒப்புமைப்படுத்தப் பெற்றுள்ளன. சங்க இலக்கியத்தில் 'மழை' பாரியின் கொடைத்தன்மைக்கும், ஊர்நடுவே பழுத்தபழமரம், ஊருணி ஆகியன திருக்குறளில் ஈகைக்கு ஒப்புமையாகக் கூறப்பட்டிருப்பதும் இதற்குச் சான்றுகளாகும். இத்தகைய அறியப்பட்ட திணையோர்மையே வாழ்வியல் கூறுகளைப் பழந்தமிழ் இலக்கியங்களில் பதிவு செய்துள்ளன. சங்க இலக்கியத்தில் ஐந்திணை வாழ்வுமுறைகளும் நிலமையங்களில் விளக்கப்பெற்றுள்ளன.

## கீழ்க்கணக்கு அறநூல்களில் திணைசார்வாழ்க்கை

திணை, துறை வகைப்பாடுகளைத் தவிர்த்து, திணை சார்ந்த சொல்லாடல்கள் கீழ்க்கணக்கின் அறநூல்களில் காணப்படுகின்றன. திருக்குறளின் களவியல், கற்பியல் கூறுகள் அகத்திணை மரபுகளை உட்கொண்டவை, கருப்பொருள்களும் திருக்குறளில் சிறப்பான ஆளுகைகளைப் பெற்றுள்ளன.

**"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு**
**கற்றனைத்து ஊறும் அறிவு"** (குறள், 396)

என்னும் குறளில் **"மணற்கேணி"** என்னும் கருப்பொருளைக் கூறலாம். மணற்கேணி, விவசாய நிலத்தில் காணப்பெறும் ஒரு நீர்நிலையாகும். அது கற்றவரின் அறிவுக்கு ஒப்புமையாகக் கூறப்பெற்றுள்ளது. மணற்கேணி நிலத்தின் இயல்பையும், நீர் இறைத்துச் செய்யப்படும் வேளாண்மைத் தொழிலையும் குறிக்கின்றது.

“கீழ்க்கணக்கு நூல்களின் அமைப்பில் இலக்கணங்கள் முறைப்படுத்திய அகத்திணை, புறத்திணை வாழ்வை ஒட்டுமொத்தமாக வரையறைப்படுத்த முயற்சித்தன எனலாம். திணை என்பதற்கு ஒழுங்கு என்னும் பொருள் வழங்கப்படுவதால் மாந்தர்க்கு ஒழுங்குகளையும் அறமதிப்பீட்டுகளைக் கடைப்பிடிக்க வேண்டியதன் தேவையையும் எடுத்துரைக்கின்றன. எனவே திணை வாழ்வில் மனிதர்கள் வரையறை செய்யப்பட்டது போலவே இங்கு அகவாழ்வும் புறவாழ்வும் வரையறைக்கு உட்பட்டு இருத்தலை வெளிப்படுத்துகின்றன. தனிமனிதர் சார்ந்தும் சமூகம் சார்ந்தும் இற இலக்கியங்கள் கூறும் இறங்கள் யாவும் ஒழுங்குகள் மீறப்படக்கூடாது என்பதை முதன்மையாகக் கொண்டிருக்கின்றன” (சு.இராமர்(தொகு.ஆ), திணைக்கோட்பாடுகளும் தமிழ் ஆய்வுச் சூழல்களும், பக்-162-163) என்பர் சு.இராமர். அவரது இக்கூற்று இயற்கையோடியைந்த திணைவாழ்க்கையை மனிதர்கள் சங்கம் மருவிய காலத்தில் ஒதுக்க நினைத்த பான்மையை வெளிப்படுகின்றன.

“பேரரசுகளின் உருவாக்கப் பின்புலத்தில் நிகழ்ந்த இயற்கை அழிவுகள், அதனோடு ஒத்திசைத்து வாழ்ந்த மனித வாழ்வின் பேரலவங்கள், அதிலிருந்து மனித சமூகம் முன்னெடுத்த அறிவு- புலமை மரபு முதலான அறிவியல் கூறுகள் என்ற நிலைகளில் இவற்றைப் பார்க்கலாம். இயற்கையுடன் ஒத்திசைந்து வாழ்ந்த இனக்குழு வாழ்வியலின் முந்தைய போக்கு மீண்டும் கிடைத்தற்கறிதாகப் பேரரசுகளின் காலத்தில் மாறுகிறது”[6] (க.ஜவஹர், மு.நூ.,ப-38) என்னும் ஆய்வாளர் க.ஜவஹரின் கூற்று, திணைநிலை வாழ்வியலின் அழிவு, இயற்கையை அழித்தலில் நிலைகொண்டிருப்பதைப் போல, அறங்களின் அழிவு, சமூகத்தின் அழிவிற்கு இட்டுச் செல்வதை உணர்த்துகின்றன. திணைநிலை வாழ்வும் அறவழிப்பட்ட வாழ்வும் ‘ஒழுங்கு’ என்னும் இருந்தாக்கத்தில் ஒன்றெனக் கருத இடமுள்ளது.பதினெண்கீழ்க்கணக்கின் அறநூல்கள், அறச்சிந்தனைகளை மையப்படுத்தி திணை வாழ்வின் கூறுகளை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றுள்ளன. மிகக்குறுகிய அடிகளால் வெண்பாவால் இயற்றப்பட்ட அற இலக்கியங்களில் புறப்பாடல் ஒன்றும் அகப்பாடல் ஆறும் உள்ளன. இவை ஏழும் அறஇலக்கியங்கள் இல்லை.

### திருக்குறளில் திணைவாழ்வின் அடிப்படைகள்

கி.பி.மூன்று -ஆறாம் நூற்றாண்டுகளை அற இலக்கிய காலமெனக்கொண்டால் சங்க இலக்கிய காலத்ததாக ஏற்கப்படும் திருக்குறள் திணைவாழ்வின் அடிப்படைகளைக் கொண்டதாகும். திருக்குறளில் ஒப்புமைகள், உவமைகள், உருவகங்களுக்கு ஆளப்பெற்றுள்ள இயற்கை சார்ந்த பொருட்கள் திணைவாழ்விலிருந்து பெற்ற அனுபவங்களாக உள்ளன, இவ்வாறே பிற அறநூல்களும், அகநூல்களும் திணைவாழ்வின் அடிப்படைகளை வெளிப்படுத்துகின்றன. ‘தமிழண்ணல்’ இராம.பெரியகருப்பன், “திணைப் பாடல்களில் அணிகள், உவமைகள், உருவகங்கள், உள்ளுறைகள், இறைச்சிகள் ஆகியன இருப்பது கொண்டு அவற்றின்வழியே பாடல்களுக்கு உரிய திணை அறியப்படும். ஏனெனில் இவ்வணிகள் முதலாயின தெய்வத்தைத் தவிர்த்த ஏனையக் கருப்பொருள்களைச் சார்ந்தே வருவன” (தமிழண்ணல். இராம.பெரியகருப்பன், சங்கமரபு, ப-192) எனக் குறிப்பிட்டுள்ளார். கருப்பொருள்களின் துணையைக் கொண்டு திணையை அறியலாம் என்பதே அவரது விளக்கமாகும்.

அகவாழ்க்கை, புறவாழ்க்கையாக இருந்தாலும் மனிதர்களைப் பற்றிய எந்தக் கதையாக இருந்தாலும், அதில் அகம், புறம் சார்ந்த திணைக்கூறுகள் இருக்கும். ஆயினும் வருணனை மரபுகளைக் கொண்ட இலக்கியங்களில்தான் திணைக்கூறுகள் மிகுந்து காணப்படும். பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் திணைக்கூறுகள் விரிவாகப் பயின்று வருவது கடினமே. சட்ட நூல்கள் வருணனை மரபுகளைக் கொண்டிருப்பதில்லை. அவை சட்ட விதிகளைக் கறாராகக் கூறுபவை. ஆயினும் திருக்குறள், நாலடியார், பழமொழிநானூறு ஆகிய அறநூல்களில் வருணனை மரபுகள் உள்ளன. அறநூல்களில் திணைக்கூறுகள் கருப்பொருளாகவும், அகப்புறத்திணை உணர்வுகளாகவும் காணப்படுகின்றன.

நிலமும் நிலம் சார்ந்த புனைவும் திணைச் செய்யுட்களாகும், இதில் கருப்பொருள்கள் என்பன புறத்தில் காணப்படும் இயற்கைப் பொருட்கள் ஆகும். ஒவ்வொரு திணைக்கும் ஒவ்வொரு விதமான கருப்பொருள்கள் கட்டமைப்புக்கள் உள்ளன.

**“விரிநீர் வியனுலகத்து“ (குறள், 13)** கடல் சூழ்ந்த நெய்தல் உலகம், கடல் பற்றி வரும் குறள்கள் அனைத்தும் நெய்தல் நிலத்தைப் பற்றியன,

**“நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்”**
**(குறள், 17)**

**“சிறப்பொடு பூசனை செல்லாது வானம்**
**வறக்குமேல் வானோர்க்கும் ஈண்டு” (குறள், 18)**

என்னும் குறள் திணைவாழ்க்கைப் பாங்குடையது. மழைபொய்த்தால் வறட்சி ஏற்பட்டு மக்கள்

தெய்வங்களுக்கும் தேவர்களுக்கும் விழா எடுக்கமாட்டார்கள். இக்கருத்தானது பெருப்பாணாற்றுப் படையில் மலையின் பகுதியானது கடுமையான வெப்பத்தால் கஞ்சங்கொல்லைத் தீப்பிடித்தலை ஒத்துள்ளது. குறிஞ்சி முறைமையில் திரிந்து பாலையானால் மக்களும் மனம் அழிவர் எனக் கூறுவதாக உள்ளது. இவ்வாறே,

**தானம், தவம் இரண்டும் பொய்க்கும்**
(குறள், 19)

**“நீர்இன்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்**
**வான்இன்று அமையாது ஒழுக்கு”** (குறள், 20)

என்னும் குறளில் மக்கள் ஒழுக்கமழிந்து பாலைநிலக் கள்வர்போல ஆவர் எனத் திணைச்சார்ந்த வாழ்க்கை கூறப்பெற்றுள்ளது.

**“என்பிலதனை வெயில் போலக் காயுமே**
**அன்பிலதனை அறம்”** (குறள், 77)

என்னும் குறளில் என்பில்லாததனை வெயில் சுட்டெரிக்கும் என்பது, அதாவது எலும்பில்லாத புழுவை வெயில் சுட்டெரிக்கும் என்பது பாலை நில வெங்கொடுமைக் காட்சியாகும்.

**“அன்பகத்தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
**வற்றல் மரம்தளிர்ந்தற்று”** (குறள்,78)

என்னும் குறளில் அன்பில்லாதவர் மனம் கொடிய பாலை நிலம் போன்றது எனக் கூறப்பெற்றுள்ளன.

**“கொக்குஒக்க கூம்பும் பருவத்து மற்றதன்**
**குத்துஒக்க சீர்த்த இடத்து”** (குறள், 490)

என்னும் குறளில் மருதநிலத்து ஆற்றங்கரையில் வரும் கொக்கும் என்னும் பறவை (கருப்பொருள்) கூறப்பெற்றுள்ளன.

**“நெடும்புனலுள் வெல்லும் முதலை அடும்புனலின்**
**நீங்கின் அதனைப் பிற“** (குறள், 495)

என்னும் குறளில் நெய்தல் நிலம் சார்ந்த ஆழ்கடலும் அதன் கருப்பொருளான முதலையும் கூறப்பெற்றுள்ளன.

**“வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்**
**கோலொடு நின்றான் இரவு”** (குறள், 552)

என்னும் குறளில் பாலைநிலத்தவர்களின் ஆறலைத்தல் தொழில் கூறப்பெற்றுள்ளது.

**“தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இலாச்**
**செல்வமும் சேர்வது நாடு“** (குறள், 731)

என்னும் குறளில் விளைச்சல் நிறைந்த செழுமையான மருதநில வளம் சார்ந்த வாழ்க்கை கூறப்பெற்றுள்ளது.

**“மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடையது அரண்”** (குறள், 748)

இக்குறளில் நெய்தல் சார்ந்த நீர்வளப்பகுதி மணிநீர் சமவெளிப் பகுதியான மருதம்(மண்) குறிஞ்சிப் பகுதியான மலை (மலை), முல்லை நிலமான காடும் உடையதே நல்லநாடு எனக் கூறப்பெற்றுள்ளன. ஐந்நில வளமும் ஒரு நாட்டிற்குத் தேவையான வலியுறுத்திக் கூறப்பெற்றுள்ளன.

**நாலடியாரில் திணைவாழ்வின் அடிப்படைகள்**

நாலடியாரில் அறம், பொருள், இன்பம் என்னும் பால் பகுப்புகள் உள்ளன. **“வான்தோய் மலைநாட”** (நாலடி 10) எனக் குறிஞ்சி நிலத்தலைவன் விளிக்கப்படுகின்றான். சங்க இலக்கியக் குறிஞ்சிப் பாடல்களில் இவன் **“மலைநாடன்”** ஆவான். **“உய்த்து ஈட்டு தேனீக் கரி”** (நாலடி 10) என மலையிலெடுக்கும் மலைத்தேன் கூறப்பட்டுள்ளது. **“ஆழ்கலத்து அன்ன கலழ்”** (நாலடி 12) என நெய்தல் நிலம் சார்ந்த ஆழ்கடலில் அமிழ்ந்துவிடும் கப்பல் கூறப்பெற்றுள்ளன. குறிஞ்சி நிலத்து வெறியாட்டினை,

**“வெறியார் வெங்களத்து வேல்மகன் பாணி**
**முறிஆர் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க**
**மறிகுளகு உண்டன்ன மன்னா மகிழ்ச்சி”**
(நாலடியார், 6)

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன. வெறியாட்டு அயர்தல், வெறியாட்டினை நிகழ்த்தும் வேல்மகனாகிய வேலன் மறியறுத்துப் பலியிடல் ஆகிய செய்திகள் கூறப்பெற்றுள்ளன. குறிஞ்சி நிலத்தின் அருவிநீர் சூழ்ந்த மலைவளம்,**“கோதை அருவிக் குளிர்வரை நல்நாடா!”** (நாலடி 71) எனக் கூறப்பெற்றுள்ளது. கடற்கரைச் சோலையில் பூக்களின் அமர்ந்து தேன் உண்ணும் வண்டுகளின் இரைச்சல் நெய்தல் திணைச்சூழலில்,**“மாதர்வண்டு ஆர்க்கும் மலிகடல் தண்சேர்ப்ப”** (நாலடி 73) எனக் கூறப்பெற்றுள்ளன. குறிஞ்சிப் பகுதியான மலையில் ஒல்லென ஒலித்து வீழும் அருவி, **“ஒல்லென் அருவி உயர்வரை நல்நாட”** (நாலடி, 77) எனவும், முல்லை நிலமான காட்டுப்பகுதி **“கலந்தாரைக் கைவிடுதல் கானகநாட“** (நாலடி 74) எனவும் கூறப்பெற்றுள்ளன. நாலடியார் வெண்பாக்களில்,

**“பெயற்பால மழைபெய்யாக் கண்ணும் உலகம்**
**செயற்பால செய்யாவிடினும் கயல்புலால்**
**புன்னைகடியும் பொருகடல் தண்சேர்ப்ப”**
(நாலடியார். 97)

**“மலிகடல் தண்சேர்ப்ப”** (நாலடியார். 98)

**“அன்னம் கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப”**
(நாலடியார். 107)

**“நெய்தல் நறவு உயிர்க்கும் நீள்கடல் தண்சேர்ப்ப”** (நாலடி 108) என்னும் பாடலடிகளில் நெய்தல் திணைசார் சூழல்களும் பின்புலங்களும் விளக்கிக் கூறப்பெற்றுள்ளன.

**“கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தழல்**
**ஒல்காவே ஆகும் உழவர் உழுபடைக்கு”**
**(நாலடியார். 178)**

என்னும் பாடலடிகள் மருதநிலத்து (மருதத்திணை உழவர்கள்) உழவுத்தொழில் சார்ந்த செயல்களை விளக்குகின்றன. வயல்களாகிய தோட்டங்களில் மரக்கட்டைகளை ஒட்டியுள்ள புற்கள் உழுவதால் அழிவதில்லை எனக் கூறப்பெற்றுள்ளன. ஆற்றுநீர், ஊற்றுநீர் என மருதநிலத்தில் பாயும் நீரகள் பற்றியும், ஆறு நீர் வற்றிய பின்னர் ஊற்றுத்தோண்டி அதன்மூலம் நீரபெறுவதையும் பின்வரும் நாலடியார்ப் பாடலடிகள் கூறுகின்றன.

**“உறுபுனல் தந்து உலகுஊட்டி அறும்இடத்தும்**
**கல்லூற்றுழி ஊறும் ஆறே போல்”**
**(நாலடியார். 185)**

இவ்வாறு பழமொழிநானூறு, திரிகடுகம், சிறுபஞ்சமூலம், நான்மணிக்கடிகை, ஏலாதி, முதுமொழிக்காஞ்சி, இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களிலும் திணைவாழ்வின் அடிப்படைகள் காணப்படுகின்றன.

**முடிவுரை**

பதினெண்கீழ்க்கணக்கின் அறநூல்களில் சங்கத்திணை மரபுப்பின்புலங்கள் நிலம் சாரந்த குறிப்புக்களாக உள்ளன. நிலத்தின் இயல்புகள், தொழில்கள், விளையும் பயிர்கள், திணைமக்கள் ஆகியோர் குறிக்கப்பெற்றுள்ளனர். இவற்றைத் திணைச்செய்யுட்கள் எனத் துல்லியமாகக் கூறமுடியாவிட்டாலும் திணை வாழ்க்கைச் சார்ந்த பதிவுகள் உள்ளன. சங்கத்திணை மரபின் தொடர்ச்சியாக படைப்பூக்கமற்ற அறநூல்களிலும் திணை சார்ந்த வருணனைகள் காணப்படுகின்றன.

**பயன்பட்ட நூல்கள்**


1) இராமர்.சு (தொகு.ஆ), திணைக் கோட்பாடுகளும் தமிழ் ஆய்வுச் சூழல்களும், பிறழ் வெளியீடு, 2018
2) கார்த்திகேசு சிவத்தம்பி, பண்டைத் தமிழ்ச்சமூகம், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2012.
3) ஜவஹர்.க, திணைக்கோட்பாடும் கவிதையியலும், காவ்யா பதிப்பகம், 2010.
4) ‘தமிழண்ணல்’ பெரியகருப்பன், இராம., சங்கமரபு, சிந்தாமணிப் பதிப்பகம், மீனாட்சி புத்தக நிலையம், 2009.
5) சீனிச்சாமி, துரை., திணைக்கோட்பாடு, நியூசெஞ்சுரி புக்ஹவுஸ், 2016.

# தமிழ் இலக்கியத்தின் போக்கு

**முனைவர் த. சுந்தரராஜ்**
*விரிவுரையாளர், ஆசியமொழிகள் ரூ பண்பாட்டுத்துறை*
*தேசிய கல்விக்கழகம், நன்யாங் தொழில்நுட்பப்பல்கலைக்கழகம், சிங்கப்பூர்*

ஓர் இலக்கியத்தின் அமைப்பை நிர்ணயிக்கும் கூறுகளாக பல காரணிகள் இருக்கின்றன. வாழ்விடம், காலம், சமூகச்சூழல், மொழிச்சூழல் போன்ற எண்ணற்ற காரணிகள் இலக்கிய உருவாக்கத்தில் முக்கியப்பங்கு வகிக்கின்றன. தமிழ் இலக்கிய வரலாற்றின் கடந்த காலங்களிலும் நாம் இவற்றைப் பார்க்கலாம். சங்க இலக்கியம், அற இலக்கியம், காப்பிய இலக்கியம், சைவ-வைணவ இலக்கியம், சிற்றிலக்கியம், தற்கால இலக்கியம் என ஒவ்வொரு இலக்கிய வகைமையையும் வடிவமைத்ததில், மேலே குறிப்பிட்ட பல காரணிகளின் பங்கு உண்டு.

தமிழின் முதன்மையான இலக்கியமாகத் திகழும் சங்க இலக்கியத்திலேயே மிகச்சிறந்த இலக்கியக்கோட்பாடுகள் இருக்கின்றன. ஓர் இலக்கிய உருவாக்கத்திற்கு அடிப்படையாக விளங்கும் கூறுகளை, முதல்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மிகச்சிறப்பாக வரையறுக்கப்பட்ட இலக்கியக் கோட்பாட்டிலிருந்து தோன்றியது தான் “திணை இலக்கியம்” என சிறப்பிக்கப்படும் சங்க இலக்கியம். இலக்கிய உருவாக்கத்திற்கான அடிப்படைகளாக, திணைக்கோட்பாடு வரையறுக்கும் கூறுகள், இன்றுவரை தோன்றிக் கொண்டிருக்கும் பல்வேறு வகையான இலக்கிய உருவாக்கங்களில் முக்கியத்துவம் பெற்றிருப்பதை நாம் உய்த்துணரலாம்.

தமிழிலக்கிய வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் தோன்றிய இலக்கியங்களுக்கு சமூகச்சூழல் முதன்மையான பின்புலமாக இருந்து வந்திருக்கிறது. சங்க இலக்கியத்தில் இலக்கிய வடிவங்களை தீர்மானித்ததில் யாப்பு முதன்மையான பங்கு வகித்தது. பாடுபொருளை அகம்-புறம் என இரண்டாக வகைப்படுத்தினாலும், அவை மனித வாழ்வியலின் ஒட்டுமொத்தக் கூறுகளையும் உள்ளடக்கும் பெரும்பரப்பைக் கொண்ட பாடுபொருள்களாகத் திகழ்கின்றன.

அற இலக்கியங்கள் தோன்றியதற்கான சமூகச்சூழல், சங்க இலக்கியங்கள் தோன்றியதற்கான சமூகச்சூழலிருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருக்கிறது. சங்க இலக்கியத்திலிருந்து இலக்கிய வடிவம், பாடுபொருள் என அனைத்திலும் வேறுபட்டு உருவாகிறது அற இலக்கியம். யாப்பிலிருந்து பாவடிவத்தை எடுத்துக்கொண்டாலும், முதன்மையிடம் பெறும் பா வகையில் வேறுபடுகிறது. அதாவது சங்க இலக்கியத்தில் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என நான்கு வகைப்பாக்களும் பரவலாகப் பயன்படுத்தப்பட்டாலும், அகவற்பா என்னும் ஆசிரியப்பாவே அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் அற இலக்கியத்தில் பிற பாக்களை விட, வெண்பாவும், அதன் ஒரு வகையான குறள் வெண்பாவுமே இலக்கிய வடிவத்தைத் தீர்மானிப்பதில் முதன்மை இடம் வகிக்கின்றன. மனித வாழ்வியலின் அறங்களை வரையறுப்பதே முதன்மையான பாடுபொருளாக உருவெடுக்கிறது.

அற இலக்கிய காலகட்டத்திலேயே தொடங்கிய காப்பிய இலக்கியம், வடிவத்தில் நீண்ட தொடர்நிலைச் செய்யுள்களாக நீண்டன. ஒரு கதையை விரிவாகச் சொல்லும் போக்கு காப்பிய காலத்தில் தோன்றியது. தமிழில் தோன்றிய காப்பியங்கள் தங்கள் வடிவங்களாலேயே பெருங்காப்பியங்கள், சிறு காப்பியங்கள் எனப் பெயர் பெற்றன. இக்காப்பியங்கள் தோன்றிய காலகட்டத்தில் செல்வாக்குப்பெற்றிருந்த சமண, பௌத்த மதங்களின் கொள்கைகள் காப்பியங்களின் பாடுபொருளைக் கட்டமைத்தன. சிலப்பதிகாரத்தில் தமிழர் ஒற்றுமை முதன்மையாகப் பேசப்பட்டாலும், கதையில் சமண சமயக்கருத்துகள் விரவி வருவதையும் காணலாம்.

சமண, பௌத்த சமயங்களுக்கு எதிராக எழுந்த வைதீக மரபு தமிழகத்தில் செல்வாக்குப் பெற்ற காலகட்டத்தில் சைவ-வைணவ இலக்கியங்கள் தமிழில் தோன்றின. சிவனும், திருமாலும் உறைந்திருக்கும் இடங்களைப் போற்றிப்பாடி, அவர்களின் சக்தியையும் அவர்கள் மீது அடியவர்கள் கொண்ட பக்தியையும் விதந்தோதிப்பாடும் போக்கு பக்தி இலக்கியங்களாக உருவெடுத்தன. தமிழின் மரபார்ந்த செய்யுள் வடிவத்தையே வைதீக இலக்கியங்கள் பின்பற்றின. ஆனால் வைதீக மரபை தமிழில் தீவிரப்படுத்த முயன்ற வைணவ இலக்கியங்களும், அவற்றின் உரைகளும் “மணிப்பிரவாள நடை” என்றொரு மொழி வடிவத்தை மிகுந்த பெருமிதத்தோடு தமிழில் பல்க்கின. ஆனால் அது செல்வாக்குப் பெறாமல் குறுகிய காலத்திலேயே வழக்கொழிந்து போயிற்று.

தமிழில் தோன்றிய அற இலக்கியங்கள், காப்பியங்கள், தொல்காப்பியம், நன்னூல் முதலிய இலக்கணங்கள் முதலியவற்றில் சமணர்களின் பங்களிப்பு முதன்மையாகவும், அவர்களைத் தொடர்ந்து பௌத்தர்களின் பங்களிப்பு இரண்டாம் நிலையிலும் இருப்பதைக்காணலாம். அதற்குப்பின் தான் வைதீக மரபினரான நாயன்மார்களும், ஆழ்வார்களும் தமிழில் பங்களித்தனர்.

தமிழ்நாட்டை ஆட்சிசெய்த ஆட்சியாளர்களை வைத்துத் தமிழ்நாட்டு வரலாற்றைப் பகுக்கும்போது சிற்றிலக்கியங்கள் தோன்றியகாலத்தை (பொ.ஆ. 1500-1800), 'நாயக்கர்காலம்' என்று வகைப்படுத்துவர். 96-வகையான சிற்றிலக்கிய வடிவங்கள் தமிழில் தோன்றின. பல்வேறு பாடுபொருள்களில் தோன்றிய சிற்றிலக்கிய வகைகள் பல்கிப்பெருகின.

தமிழ் இலக்கிய வரலாற்றில் சிற்றிலக்கியங்கள் செல்வாக்குப் பெற்ற காலகட்டத்தில் இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் தமிழ்ச்சிற்றிலக்கியங்களான கலம்பகம், பிள்ளைத்தமிழ், சதகம் முதலிய வடிவங்களில் இலக்கியம் படைத்ததோடு மட்டுமல்லாமல், புதுவகையான இலக்கியவடிவங்களையும் தமிழில் அறிமுகப்படுத்தினார்கள். தங்கள் இஸ்லாமிய மரபின் மூலமான அறபுமொழியோடும், பாரசீகம், உருது ஆகிய மொழிகளோடும் அவர்களுக்கு இருந்தமொழி-இலக்கியத் தொடர்புகள் தங்கள் தாய்மொழியான தமிழில் புது வகையான இலக்கியவடிவங்களையும், மொழிவடிவங்களையும் உருவாக்குவதற்குத் தூண்டுகோல்களாக அமைந்தன. அவ்வாறு அவர்கள் தமிழில் அறிமுகப்படுத்திய புதுவகை இலக்கியங்களும், மொழியும் இன்றும் தனித்துவத்தோடு திகழ்கின்றன. அவை:

1. மசலா (வினா-விடை)
2. கிஸ்ஸா (கதை)
3. நாமா (வாழ்க்கைவரலாறு)
4. முனாஜத் (உரையாடல்)
5. படைப்போர்
6. நொண்டிநாடகம்
7. திருமணவாழ்த்து
8. அறபுத்தமிழ்

இந்த எட்டு வடிவங்களும் இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் தமிழில் உருவாக்கியவையாகும். இவற்றுள் மசலா, கிஸ்ஸா, நாமா, முனாஜத், ஆகிய நான்கு வடிவங்களும் அறபு, பாரசீகம், உருது ஆகிய மொழிகளின் தாக்கத்தினால் தமிழில் உருவாகிய இலக்கிய வடிவங்களாகும். பழந்தமிழ் மரபில் உள்ள பரணி இலக்கியத்தில் 'போர்பாடியது' என்னும் பகுதியையும், இஸ்லாமிய வரலாற்றில் உள்ள போர் நிகச்சிகளையும் இணைத்து தமிழில் உருவானது 'படைப்போர்' என்னும் இலக்கியம். நொண்டி நாடகமும், திருமண வாழ்த்தும் முழுமையாக தமிழ் மரபிலிருந்து இஸ்லாமியத் தமிழ்ப்புலவர்கள் வளர்த்தெடுத்த புதுவகை இலக்கியங்களாகும். இறுதியாக வரும் 'அறபுத்தமிழ்' ஒருமொழி வடிவம் ஆகும். தமிழ்ஒலிகளை (மொழியை) அறபு எழுத்தில் எழுதும் முறையே அறபுத் தமிழ்ஆகும்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் இரு மொழித்துவம் உடையவர்கள் ஆற்றியபங்களிப்பு அளப்பரியது. அதில் முக்கிய இடம் தமிழும் அறபும் அறிந்த இஸ்லாமியத் தமிழறிஞர்களுக்கு உண்டு. தமிழில் அவர்கள் அறிமுகப்படுத்திய மொழி-இலக்கிய வடிவங்கள் அனைத்தும் புதுமையானவை.

இந்த இஸ்லாமிய இலக்கிய வடிவங்கள் தமிழில் அறிமுகமாகிக் கொண்டிருந்த காலகட்டத்தில், கிறிஸ்தவர்களின் இலக்கியப் பங்களிப்பும் தொடங்கியது. தமிழ்க் கிறிஸ்தவர்கள், தமிழ் இஸ்லாமியர்களைப் போல புதுமையான இலக்கிய வடிவங்களை அதிகம் அறிமுகப்படுத்தவில்லை. மரபார்ந்த வடிவங்களிலேயே கிறிஸ்தவ மதம் சார்ந்த பாடுபொருள்களைக் கட்டமைத்தனர்.

இருபதாம் நூற்றாண்டு, இரண்டாயிரம் ஆண்டு இலக்கிய வரலாறு கொண்ட தமிழ் இலக்கியத்தில் மரபையும் புதுமையையும் இணைத்தது. உ.வே.சாமிநாதையர், பாரதியார் போன்ற முதன்மையான தமிழ் ஆளுமைகள் இவ்விணைப்பை உற்றுநோக்கினர். மரபார்ந்த நடையில் எழுதிவந்த உ.வே.சா. பாமரனுக்கும் புரியக்கூடிய எளிய தமிழ் நடைக்கு மாறினார். மரபார்ந்த வடிவத்திலும், ஐரோப்பிய இலக்கியங்களின் அறிமுகம் வழி புதுமையான வடிவத்திலும் கவிதை படைத்தார் பாரதி. ஒட்டுமொத்தத் தமிழ் இலக்கியத்தின் போக்கை மடமாற்றி, தற்கால இலக்கியம் என்றொரு வகைமையை தோற்றுவித்தது இருபதாம் நூற்றாண்டு. புதுக்கவிதையில் வசனக்கவிதை முதல் ஹைக்கூக் கவிதை வரை பல்வேறு வடிவங்களையும், சிறுகதை, புதினம், நாடகம் முதலிய உரைநடை வடிவங்களும் கிளைத்தன. இலக்கியப்படைப்பின் மொழியை பண்டித வடிவத்திலிருந்து பாமர வடிவத்திற்கு மாற்றிய இருபதாம் நூற்றாண்டு தான் இலக்கியத்தின் போக்கில் பெரும்பாய்ச்சலை உருவாக்கியது. உருவம், உள்ளடக்கம் முதலிய ஒரு படைப்பின் அனைத்துக்கூறுகளிலும் பல புதுமைகளுக்கு வித்திட்டது. இலக்கிய வடிவங்களை விட

இலக்கியப் பாடுபொருளில் பெருகின. மனித வாழ்வின் கோடிக்கணக்கான சூழல்கள், உணர்வுகள், எண்ணங்கள், கருத்தியல்கள் என அனைத்தும் இலக்கியமாக உருவெடுத்தன. தமிழகம் மட்டுமன்றி தமிழர்கள் வாழும் பல நாடுகளிலும் வெவ்வேறு வகையான, புதுமையான பாடுபொருள்களில் இலக்கியம் படைக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பா, அமெரிக்கா, கனடா என ஒவ்வொரு நிலத்திலிருந்து படைக்கபடும் தமிழ் இலக்கியம், புதுமையான பார்வையையும், ரசனையையும் உருவாக்கி வருகின்றன. தமிழகத்திலிருந்து வரும் தற்கால இலக்கியங்கள் பன்னோக்கில் பயணித்துக் கொண்டிருக்கின்றன. அவ்விலக்கியங்களை ஆய்வுக்கு உட்படுத்தும் இலக்கிய ஆய்வாளர்கள், பொருண்மையை வைத்து, அமைப்பியல், பின்னை அமைப்பியல், நவீனத்துவம், பின்னை நவீனத்துவம், தலித்தியம், அம்பேத்கரியம், பெண்ணியம், பெரியாரியம் என பல்வேறு வகைகளாக வகைப்படுத்துகின்றனர்.

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# பெண்ணிய வாசிப்பில் ஔவையாரின் பாடல்கள்

**இரா. ஸ்ரீவித்யா**

*உதவிப் பேராசிரியர், சுப்பிரமணிய பாராதியார் தமிழியற்புலம்*

*புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி*

## முன்னுரை

பல்வேறு பொருள் அடுக்குகள் ஆன பனுவலை வாசிப்பதற்கு இலக்கியத் திறனாய்வு அணுகுமுறைகள் உதவி புரிகின்றன. அவ்வகையில் வர்க்க ஒடுக்க முறையை மார்க்சியத் திறனாய்வும், இன ஒடுக்கமுறையையைக் கறுப்பினத் திறனாய்வும், சாதிய ஒடுக்குமுறையைத் தலித்தியத் திறனாய்வும் கேள்விக்குட்படுத்துவதைப் போல பாலின ஒடுக்குமுறையைப் பெண்ணியத் திறனாய்வு விமர்சனத்துக்கு உட்படுத்துகிறது. கலை இலக்கியத்தில் பெண்களின் சித்தரிப்பையும் யதார்த்த வாழ்க்கையில் பெண்களின் இருப்புக்குமான தொடர்பைப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு வெளிச்சத்திற்குக் கொண்டுவருகிறது. அத்தகைய பெண்ணியத் திறனாய்வை ஔவையாரின் பாடல்களில் பொருத்தி ஆராய்கின்ற முயற்சி இக்கட்டுரையில் மேற்கொள்ளப்படுகிறது. சங்க இலக்கியத்தின் வளத்திற்கும், மேன்மைக்கும் பெண்பாற் புலவர்களின் பங்களிப்பு கணிசமான வகையில் பயன்பட்டிருக்கிறது. பெண்பாற் புலவர்களுள் மிகுதியான பாடல்களைப் பாடிய புகழ்பெற்ற புலவராக ஔவையார் விளங்குகிறார். கட்டுரை எல்லை கருதி ஔவையாரின் குறுந்தொகைப் பாடல்களை மட்டும் இக்கட்டுரை பெண்ணிய வாசிப்பிற்கு உட்படுத்துகிறது.

## குறுந்தொகையில் ஔவையாரின் பாடல்கள்

தொகை இலக்கியங்களுள் ஏறத்தாழ சரிபாதி இலக்கியத் தொகுப்புகளில் (குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு) ஔவையாரின் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அகத்தை விடப் புறத்தில் (புறம் – 33 பாடல்கள்) மிகுதியான பாடல்களைப் பாடிய புலவராக ஔவையார் விளங்குகிறார். குறுந்தொகையில் பதினைந்து பாடல்களைப் பாடியுள்ளார். பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தவரை அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. அள்ளூர் நன்முல்லையார், ஆதிமந்தியார், ஊண்பித்தை, ஒக்கூர் மாசாத்தியார், ஔவையார், கச்சிப்பேட்டு நன்னாகையார், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், நன்னாகையார், பூங்கணுத்திரையார், வருமுலையாரித்தி, வெள்ளிவீதியார் ஆகிய பதினோரு பெண்பாற் புலவர்கள் பாடல்கள் குறுந்தொகை தொகுப்பில் இடம்பெற்றுள்ளதாக உ.வே.சா கருதுகிறார். குறுந்தொகையில் ஔவையாருக்கு அடுத்த நிலையில் அள்ளூர் நன்முல்லையார் (9 பாடல்கள்), வெள்ளிவீதியாரும் (8 பாடல்கள்), கச்சிபேட்டு நன்னாகையாரும் 6 பாடல்கள், ஒக்கூர் மாசாத்தியாரும் (5 பாடல்கள்), மிகுதியாக பாடியுள்ளனர். ஏனையோர் (ஆதிமந்தியார், ஊண்பித்தை, காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், வருமுலையாரித்தி) ஒரு பாடலை மட்டும் பாடியுள்ளார்கள். இவர்களுள் அள்ளூர் நன்முல்லையார், ஔவையார், காக்கைப்பாடினியார் நச்செள்ளையார், வெள்ளிவீதியார் ஆகியோர் புகழ்பெற்ற பெண்பாற் புலவர்கள் என உ.வே.சா குறிப்பிடுகிறார். (உ.வே.சா, ப. VII) இவர்கள் மிகுதியான பாடல்களைப் பாடியவர் என்ற வகையிலும் தனித்தன்மை மிக்க படைப்பாக்கத் திறனிலும் மேம்பட்டவராக விளங்கும் ஔவையாரின் பாடல்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றன. நான்கடி சிற்றெல்லையும் எட்டடி பேரெல்லையுமாக விளங்கும் குறுந்தொகையின் 401 பாடல்களில் ஐம்பத்தியொரு பாடல்கள் பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் ஆகும்.

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து திணைகளிலும் ஔவையார் பாடல்களைப் புனைந்துள்ளார். பாலைத் திணையில் ஐந்து பாடல்களையும் முல்லையிலும் நெய்தலிலும் இரண்டு இரண்டு பாடல்களைப் பாடியுள்ளார். குறிஞ்சியிலும் மருதத்திலும் மூன்று மூன்று பாடல்களையும் பாடியுள்ளார். கூற்று என்ற வகையில் தலைவி கூற்றில் எட்டு பாடல்களையும் தோழி கூற்று, தலைவன் கூற்று, பரத்தை கூற்றில்

இரண்டிரண்டு பாடல்களையும் செவிலி கூற்றில் ஒரு பாடலையும் பாடியுள்ளார். தலைவி, தோழி, பரத்தை, செவிலி, தலைவன் ஆகிய அகத்திணை மாந்தர்களில் கூற்றிலும் பாடல்களைப் பாடியுள்ளார். பரணர், மாமூலனார் போன்று உவமை வாயிலாக வரலாற்றுச் செய்திகளையும் பதிவு செய்துள்ளார். 'நாலூர்க்கோசர் நன்மொழி போல' (குறுந்.15), 'பல்வேல் எழினி முனைஆன் பெருநிரை போல' (குறுந்.80), 'நெடுந்தேர் அஞ்சி கொன்முணை இரவூக் போல' (குறுந்.91) – என்றெல்லாம் நாலூர்க்கோசர் குறித்தும் அதியமான் அஞ்சி குறித்தும் பாடியுள்ளார். பின்வந்த புலவர்களும் பின்பற்றுகின்ற அளவிற்குத் தலைசிறந்த சொற்றொடர்களை பாடல்களில் பயன்படுத்தியுள்ளார். 'நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு' என்ற இராமாயணச் சொற்றொடருக்கு மூலம் 'கானமும் இனியவாம் நும்மொடு வரினே (குறுந்.388) என்ற ஔவையாரின் வரிகளே ஆகும். 'மறந்தோர் மன்ற, மறவாம் நாமே' (குறுந்.200), 'முடையிடை முனிநர்' (குறுந்.39), 'வான் தோய்வற்றே காமம் (குறுந்.102) முதலான புகழ்பெற்ற சொற்றொடர்கள் ஔவையாரின் சொல்லாட்சிக்கு சிறந்த உதாரணங்கள் ஆகும்.

**பெண்ணிய இலக்கியத் திறனாய்வு**

பெண்கள் சமூக ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஒடுக்கப்படுவதை எதிர்த்து, பாலின சமத்துவத்தைக் கோருகின்ற அரசியல் செயல்பாட்டைப் பெண்ணியம் என்றால், பெண்ணிய இலக்கியத் திறனாய்வு என்பது கலை இலக்கியத்தில் வெளிப்படும் பெண்களின் ஒடுக்குமுறைக்கு எதிராக இயங்கும் மொழிவழிச் செயல்பாடு ஆகும். பெண்களை மென்மையானவர்களாக, பணிந்தவர்களாக, பாலியல் பாவையாக, பகுத்தறிவற்றவளாக, உணர்ச்சி வசப்படுபவளாக சித்திரிகின்ற இலக்கியம் உள்ளிட்ட பண்பாட்டுப் பிரதிகள் பெண் ஒடுக்குமுறையை இயல்பானதாக்கி, அதனை ஆண்களின் மனதிலும், பெண்களின் மனதிலும் உண்மையென நம்ப வைக்கிற கருத்தியலை உருவாக்கியுள்ளன. சமூக ரீதியான பெண்களின் ஒடுக்குமுறைக்கு இலக்கியம் வழியாக நிகழ்த்தப்படும் கருத்தியல் பிரச்சாரம் முதன்மையான பங்கு வகிப்பதாகப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு கருதுகிறது. குடும்பம், சமயம், கல்வி, கலை முதலான சமூக நிறுவனங்கள் வாயிலாக இத்தகைய கருத்தியலை இயற்கையானதாக்கி ஆண்கள் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளனர். சாதி, மதம், இனம், வர்க்கம், பாலினம் முதலான எந்தவொரு ஒடுக்குமுறையிலும், ஆதிக்கம் செலுத்துவோர் வன்முறையால் மட்டுமல்லாமல், கருத்தியல் (Ideology) ரீதியாகவும் தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளனர். ஒடுக்குதலுக்கு உள்ளானவர்கள் தங்களின் கீழ்நிலையை இயற்கையானதாகக் கருதி உட்செரித்துக் கொள்ளும் மனப்பான்மையை இத்தகைய கருத்தியல் தான் கட்டமைக்கின்றன. பெண்களுக்கு எதிரான இந்த மொழிவழிக் கருத்தியலைப் பெண்ணிய இலக்கியத் திறனாய்வு கேள்விக்குட்படுத்துகிறது.

ஆண்களால் உருவாக்கப்பட்ட கலை இலக்கியப் பிரதிகளில் பெண்கள் தேவதை X சூனியக்காரி என்கிற இருமை எதிர்வுகளின் வாயிலாகவே (இந்திய தொன்மங்களின் அடிப்படையில் சொல்வதென்றால் சீதை X சூர்ப்பனகை) சித்தரிக்கப்பட்டுள்ளார். 1970 கள் வரை பெண்ணியத் திறனாய்வாளர்கள் ஆண்களின் பிரதிகளில் உள்ள அரசியலை அம்பலப்படுத்தினர். சிமொன் தெ பெவாயர், கேட் மில்லட் உள்ளிட்ட பெண்ணியத் திறனாய்வாளர்கள் இதற்கு உதாரணமாகக் கொள்ள முடிகிறது. எழுபதுகளுக்கு பின்பு எல்லன் மோர், எலைன் ஷோவால்டர், சூசன் குபார் மற்றும் சாண்ட்ரோ கில்பர்ட் போன்றோர் ஆண்களின் பிரதிகளை வாசிப்பதை விடுத்துப் பெண்களின் பிரதிகளை ஆராயத் தலைப்பட்டனர். அத்தகைய பெண்ணிய இலக்கியத் திறனாய்வு 'பெண் மையத் திறனாய்வு' (Gyno Criticism) எனப்படுகிறது. பெண்களால் எழுதப்பட்ட பிரதிகளை 'கைனோ டெக்ஸ்டு' (Gyno Text) என்றும் அதனை முதன்மைப்படுத்தி ஆராய்கிற திறனாய்வுப் போக்கினை 'கைனோ கிரிட்டிசிசம்' (பெண் மையத் திறனாய்வு) எனவும் அழைக்கப்பட்டது. ஆண்களின் கலை இலக்கியப் பிரதியால் (Andro Text) ஓரத்து நிலைக்குத் தள்ளப்பட்ட பெண்களின் கலை இலக்கியப் பிரதிகளை இத்திறனாய்வு மையத்திற்கு கொண்டு வருகிறது. பெண்களின் படைப்புகளுக்குப் பின்னால் உள்ள உள இயங்கியல், நடை, கரு, படைப்பாக்கத் திறன் முதலானவற்றை இத்திறனாய்வு கவனத்தில் கொள்கிறது. கில்பர்ட்

மற்றும் குபார் பெண்களால் எழுதப்பட்ட பிரதிகள் தந்தையாதிக்கத்தை ஏற்றுக்கொள்வது போன்று தோற்றமளித்தாலும், அதன் மறைப்பிரதி அதற்கு எதிரான நிலையில் வினைபுரிகிறது என்றும். ஆணாதிக்கத்துக்கு எதிரான பொருண்மையை, அரசியலை பெண்களின் ஆழ்மன விழைவை மறைப்பிரதி பிரதிபலிக்கிறது என்றும் கூறுகின்றனர். ஆண்களின் ஆதிக்கப் பண்பாட்டுக்கு எதிரான மாற்றுப் பண்பாட்டை, ஆண்களின் கருத்தியலைத் தலைகீழாக்கும் மாற்றுக் கருத்தியலை அம்மறைப்பிரதி உருவாக்குகிறது என்கின்றனர். (Pramod K. Nayar, P.96) பெண்களின் பிரதிகள் ஆண்களின் இருமை எதிர்வை (சீதை X சூர்ப்பனகை) ஏற்றுக் கொள்வதில்லை. படைப்பாக்கத் திறன், இலக்கிய வரலாறு, இலக்கியப் பொருட்கோடல் ஆகிய அனைத்திலும் ஆண்களின் நோக்குநிலையை மட்டுமே பிரதிபலிக்கும் இலக்கியத் திறனாய்வுக்கு மாற்றாக பெண்களின் அனுபவத்தை, நோக்குநிலையை பெண்மையத் திறனாய்வு மையப்படுத்துகிறது.

**ஔவையாரின் பாடல்களில் அகத்திணைப் பெண் மாந்தர்கள்**

ஓர் இலக்கியப் பிரதியிலுள்ள முதன்மையான பெண் பாத்திரப் படைப்புகள் எவ்வாறு உருவாக்கப்பட்டுள்ளன? அவை ஆணாதிக்க கருத்தியலை உட்செரித்த பாத்திரங்களாக விளங்குகின்றனவா? ஆணாதிக்கத்தை மறுதலிக்கும் பாத்திரங்களாகப் படைக்கப்பட்டுள்ளனவா? என்று ஆராய்வது பெண்ணிய இலக்கியத் திறனாய்வின் முதன்மையான நோக்கங்களுள் ஒன்றாகும். அதன் மூலம் படைப்பாளியின் அரசியல் நிலைப்பாட்டையும் நோக்கு நிலையையும் அறிந்துகொள்ள முடிகிறது. ஆண்களின் பிரதிகள் படைத்துள்ள பெண் மாந்தர்கள் பெரும்பாலும் செயலூக்கமற்றவர்களாக, தியாகிகளாக, கற்புடையவர்களாக, பாலியல் மீறலுக்கு ஆட்படுபவர்களாக விளங்குகின்றனர். அடிப்படையில் அவ்விலக்கியப் பிரதிகள் பெண்களைப் பத்தினி X பரத்தை என்கிற இருமை எதிர்வுக்குள் தள்ளுகின்றன. மாறாக, பெண்களின் இலக்கியப் பிரதிகள் படைத்துக் காட்டும் பெண் பாத்திரப் படைப்புகள் செயலூக்கமானவர்களாக (Active), சுயாதீனம் (Autonomous) உடையவர்களாகச் சித்தரிக்கப்படுகின்றனர். ‘வினையே ஆடவர்க்கு உயிரே; வான்நுதல் மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்’ (குறுந்.135) என்ற பாலை பாடிய பெருங்கடுங்கோவின் பாடல் சமூக உற்பத்தியில் ஆணை முதன்மையானவனாகவும் பெண்ணைச் சமூக உற்பத்தியிலிருந்து விலக்கி, மனைக்குரியவள் ஆக்கியதன் மூலம் இரண்டாம் நிலைக்கும் தள்ளுகிறது. பொதுவெளிபெண்ணிற்கு அந்நியமாக்கப்படுகிறது; வாழிடம் (மனையுறை) வரையறுக்கப்பட்டு ஆணைச் சார்ந்திருக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார். திணைக் கவிதையியலை வரையறுக்கும் தொல்காப்பியரும் பெண்ணிற்கு அச்சம், மடம், நாணம் ஆகிய பண்புகளை அளித்ததுடன் பெண்ணின் மொழியைக் குறிப்பாக பெண்ணின் பாலியலை தலைவன் போன்று மொழியாடாமல் குறிப்பு மொழியால் (அல்லது கூற்று மொழியால்) வெளிப்படுத்த வேண்டும் என்கின்றார். புதுமட்பாண்டம் எவ்வாறு தண்ணீரைத் துளித்துளியாக வெளிக்கசிய வைக்குமோ, அது போல பெண்ணின் மன உணர்வுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும் என்கிறார்.

> **“உறைபதி அன்று இத்துறைகெழு சிறுகுடி**
> **கானலஞ் சேர்ப்பன் கொடுமை ஏற்றி**
> **ஆனாத் துயரமொடு வருந்திப் பானாள்**
> **துஞ்சாது உறைநரொடு உசாவத்**
> **துயிர்கண் மாக்களொடு நெட்டிரா உடைத்தே.”**
>
> **(குறுந்-145)**

என்ற கொல்லன் அழிசியின் பாடலில் தலைவனது கொடுமையை நினைத்து, பரிவுத்துயரோடு வருந்தி, நடு இரவிலும் துயிலாது இருப்பவர்களை அணுகி, ஏன் என்று வினவாமல் உறங்கிக்கொண்டிருக்கும் மக்களை உடைய இச்சிறுகுடி நாம் தங்கியிருந்து வாழ்வதற்குரியதன்று என்று வருந்தும் தலைவியைக் காண முடிகிறது. பரிவுத்துயரால் செயலற்ற நிலையில் (Passive) வருந்தும் தலைவியாகக் கொல்லன் அழிசியின் தலைவி காட்சியளிக்கிறாள். மாறாக, இதே சூழல் பொருண்மையைப் பயன்படுத்திய ஔவையாரின் தலைவியோ

> **“முட்டுவேன் கொல்? தாக்குவேன் கொல்?**
> **ஓரேன் யானுமோர் பெற்றி மேலிட்டு**
> **ஆஅ ஒல் எனக் கூவுவேன் கொல்?**
> **அலமரல் அசைவளி அலைப்ப என்**
> **உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.”**
>
> **(குறுந்.28)**

எனத் தன் கோபத்தை வெளிப்படுத்தும் செயலூக்கமான (Active) வளாக வெளிப்படுகிறாள்.

**"உள்ளின் உள்ளம் வேமே உள்ளாது**
**இருப்பின் எம் அளவைத்து அன்றே வருத்தி**
**வான் தோய்வற்றே காமம்**
**சான்றோர் அல்லர் யாம் மரீஇயாரே."**

**(குறுந்.102)**

'தலைவனைப் பிரிந்துறையும் நிலையை எண்ணினால் உள்ளம் வேகிறது உள்ளாமல் இருப்போம் எனில் பிரிவுதுன்பம் தாங்கொணாததாய் உள்ளது. வானத்தைத் தொடுவது போன்று காம உணர்வு வளர்ந்துவிட்டது. தம்மை நினையாது பிரிந்து சென்ற தலைவர் சான்றோர் அல்லர்' என வெளிப்படையாகத் தலைவனைக் குற்றம் சாட்டுகின்ற நிலையிலும் 'வான் தோய்வற்றே காமம்' எனக் காம உணர்வின் கரை கடந்த நிலையை வெளிப்படுத்துவதிலும் ஔவையாரின் தலைவி செயலூக்கும் மிகுந்த பங்கை வகிக்கிறாள்.

**மறைபிரதி வெளிப்படுத்தும் மாற்று அரசியல்**

சங்கக் கவிதையியல் மரபில் உள்ளுறையும் இறைச்சியும் மறை பிரதி சார்ந்ததேயாகும் . கவிதையின் மேற்பரப்பில் தெரியும் பொருளுக்கு அடியில் மற்றொரு பொருள் உறைந்திருப்பதையே உள்ளுறையும் இறைச்சியும் காட்டுகின்றன. 'அன்புறு தகுள இறைச்சியுள் சுட்டலும் வன்புறையாகும் வருந்திய பொழுதே' (தொல்.1177) என்னும் தொல்காப்பிய நூற்பா, விலங்கினங்களின் அன்பு நிறைந்த காட்சிகளைக் காணும் தலைவன் தலைவியின் நினைவு வந்து விரைவில் வீடு திரும்புவான்' எனப் பொருள் தேடச் சென்ற தலைவனின் பிரிவால் வருந்தும் தலைவியை ஆற்றுவிக்கின்ற தோழியின் கூற்று வாயிலாக இறைச்சி சுட்டப்படுவது சங்கக் கவிதையியல் மரபாகும். ஆனால் பெண்ணிய நோக்கில் இறைச்சியை வாசிக்கும் போது ஆணாதிக்க அரசியலின் கருத்தியல் புலப்படுகிறது. 'பிடிபசி களைஇய பெருங்கை வேழம்' (குறுந்.37) எனப் பாலை பாடிய பெருங்கடுங்கோவின் இறைச்சிப் பொருளை வாசிக்கும் போது, 'உணவீட்டும் பொறுப்பு ஆணைச் சார்ந்தது' என்ற கருத்தியல் விலங்கினங்களின் உலகு வரை நீட்டிக்கப்படுகிறது. மனித இனத்தில் மட்டுமல்ல; விலங்கினத்திலும் பிடியின் பசியை வேழமே போக்குகிறது என்னும்போது 'பாலின பங்கு நிலைகள்' இயற்கையானது போல வாசிப்பவரால் உட்செரிக்கப்படுகிறது. இவ்வாண்களின் பிரதிகளுக்கு மாற்றாகப் பெண்களின் பிரதியில் 'சிறுதலைப் பிணையும் நெறிகோட்டு இரலையும் 'சேர்ந்துறையும் காட்சிகளே (குறுந்.183) சித்தரிக்கப்படுகின்றன. 'மகவுடை மந்திபோல அகனுறத் தழீஇக் கேட்குளர்ப் பெறினே' (குறுந்.29) என்று விலங்கினங்களின் தாய்-சேய் உறவு காட்சிப்படுத்தப்படுகின்றன.

மருதத் திணையில் மூன்று பாடல்களைக் குறுந்தொகையில் இயற்றியுள்ள ஔவையார் அவற்றுள் இரண்டு பாடல்களைப் பரத்தைக் கூற்றில் அமைத்துள்ளார். பத்தினி X பரத்தை என்கிற ஆண்களால் புனையப்பட்ட இருமை எதிர்வு இம்மருதத் திணையில் காணப்படுகிறது. தலைவியின் நோக்குநிலையில் இருந்து தலைவியை (குறுந்.80,364) அணுகுகின்றன. 'அரில்பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய்' எனத் தொடங்கும் பாடலுக்கு (364) 'வேறு ஒரு பரத்தை தன்னைப் புறங்கூறினாள் எனக் கேட்ட இற்பரத்தை அவட்குப் பாங்காயினார் கேட்பக் கூறியது' என்ற துறைக்குறிப்பு கூறப்பட்டுள்ளது. சங்கப் பாக்களில் துறைக்குறிப்புகள் ஆசிரியரால் உருவாக்கப்பட்டதன்று. துறை சார்ந்த மாறுபட்ட கருத்துக்கள் உரையாசிரியர்களிடையேயும் காண முடிகிறது. எனவே 'வேறு ஒரு பரத்தையிடம் இற்பரத்தை கூறினாள்' என்று கொள்வதை விட தலைவி கேட்ப பரத்தை கூறியாதாகவும் இப்பாடலை வாசிக்க வாய்ப்புள்ளது. அத்தகையதொரு வாசிப்பை நிகழ்த்தும் போது பரத்தை கூற்றாக அமைந்த இரண்டு பாடல்களிலும் பரத்தையின் பெருமித போக்கு வெளிப்படுவதைக் காண முடிகிறது. "விழாக்காலம் வந்தால் ஆடல் மகளிர் துணங்கை, குரவை முதலான கூத்துக்களை ஆடுவர். மன்னர்கள் (வீரர்கள்) சேரிப்போர் விளையாட்டில் ஈடுபடுவர். அப்போது ஆடவர்கள் தாம் விரும்பும் மகளிருக்குத் தலைக்கை தந்து சேர்ந்தாடி மகிழ்வர்" (தமிழண்ணல்(உ.ஆ), ப.428) அத்திருவிழாக் காலத்தின்போது தலைவன் தனக்கே தலைக்கைத் தந்து ஆடுவான்; தன்னை மணத்தற்குப் போராடும் மன்னர்களின் சேரிப்போரும் அங்கு நிகழ்வதைக் கண்டால் தலைவன் தன்னை விரும்பிய உண்மை தெரிந்துவிடும் என்கிறாள் பரத்தை. அவளுடைய

இச் செம்மாந்த நிலை மற்றொரு பாடலிலும் (குறுந்.80) புலப்படுகிறது.

**"கூந்தல் ஆம்பல் முழுநெறி அடைச்சிப்**
**பெரும்புனல் வந்த இருந்துறை விரும்பி**
**யாம் அஃது அயர்கம் சேறும் தான் அஃது**
**அஞ்சுவது உடையளாயின் வெம்போர்**
**நுகம்படக் கடக்கும் பல்வேல் எழினி**
**முனைஆன் பெருநிரை போலக்**
**இறையொடும் காக்க நின் கொழுநன்**
**மார்பே." (குறுந்.80)**

இப்பாடலில் பரத்தை, 'ஆம்பல் பூச்சூடி' தலைவனுடன் புனலாடச் செல்கிறோம். தலைவி அஞ்சினனாயின் எழினி போர்முனையில் ஆநிரை கூட்டத்தைக் காத்தது போலத் தன் கொழுநன் மார்பைச் சுற்றத்தோடும் வந்து காத்துக் கொள்க' எனக் கூறுகிறாள். கவிதையின் மேல் தளத்தில் பரத்தையின் செருக்கை வெளிக்காட்டுவது போலத் தோன்றினாலும் ஆழ்நிலையில் இப்பாடல் பல்வேறு அர்த்த அடுக்குகளைக் கொண்டுள்ளது. 'எழினி போர்முனையில் ஆநிரை காத்தது போல் தலைவி காக்கட்டும்' எனும்போது தலைவி 'மற்றமை' நிலையில் நிறுத்தப்படாமல், தன்னிலையாக்கப்படுகிறாள். (Subject) 'நுகம்படக் கடக்கும் பல்வேல்' என்கிற அடைமொழி போர்முனையில் துணிவுடன் நடுவே நிற்கும் காட்சியைச் சித்தரிப்பதன் மூலம் தலைவியை செயலூக்கமற்ற நிலையிலிருந்து விலக்கி செயலூக்கமான நிலைக்கு வரும்படியாக அறைகூவல் விடுக்கப்படுகிறது. 'எழினி ஆநிரையைக் காத்தது போல' என்ற உவமைப் வழியாக , பெண் ஆணின் உடமைப் பொருளாக நிறுத்தப்படாமல் ஆண் பெண்ணின் உடைமைப் பொருளாகிறான். (ஆநிரை) 'ஆநிரை காத்தல்' என்ற நிலையில் போரின் அழிவுச் செயல்பாட்டை முன்னிறுத்தாமல் காத்தல் செயல்பாடு முன்னிறுத்தப்படுகிறது. இத்தகைய அர்த்த அடுக்குகளோடு பிரதியை வாசிக்கும் போது ஔவையாரின் மறைபிரதி ஆணாதிக்க கருத்தியலைத் தலைகீழாக்கும் பணியைச் செய்வதை உய்த்துணர முடிகிறது.

இதே போல் மருதத்திணையில் அமைந்துள்ள மற்றொரு பாடல் தலைவியின் கூற்றாக அமைந்துள்ளது. பரத்தையர் பிரிந்த வழி வேறுபட்ட கிழத்தியைத் தோழி கூறியதுமாம் என்ற மற்றொரு துறைக்குறிப்பும் இப்பாடலுக்குச் சுட்டப்படுகிறது. தோழியின் கூற்றாக கொள்ளும் இரண்டாவது குறிப்பே சிறப்புடையது என்கிறார் உ.வே.சா (ப.187)

**"அரில்பவர்க் பிரம்பின் வரிப்புற விளைகனி**
**குண்டுநீர் இலஞ்சிக் கெண்டை கதூஉம்**
**தந்துறை ஊரன் பெண்டினையாயின்**
**பலவாகுக நின் நெஞ்சில் படரே**
**ஓயாது ஈயும் மாரி வண்கைக்**
**கடும்பகட்டு யானை நெடுந்தேர் அஞ்சி**
**கொன்முனை இரவூர் போலச்**
**சிலவாகுக நீ துஞ்சும் நாளே!." (குறுந்.91)**

'புறத்தே வரிக்கோடுகளை உடைய பிரப்பங் கனியைக் கெண்டை மீன் எளிதாகக் கவ்வுகின்ற தண்ணிய நீர்த்துறையை உடைய ஊரனை, 'மனைவி' என எண்ணி இரக்கம் காட்டுவையாயின் உன்மனத் துயரம் மேலும் பலவாகுக' என்று தலைவி தன் நெஞ்சிற்குச் சொல்வது வாயிலாகத் (அல்லது தோழி தலைவியை எச்சரித்ததன் வாயிலாக) தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைத் தலைவி மறந்து மன்னித்தால் அத் தவறு மீண்டும் மீண்டும் அரங்கேறிக் கொண்டே இருக்கும் என்கிற எச்சரிக்கையை இப்பாடல் விடுக்கிறது. 'பல இல்லறக்கடமைகள் உள்ள முது பெண்டிராகிய நமக்குத் தலைவர் கொடியர் என்று இன்னாத கடுஞ்சொற்களைப் பேசுவதினால் என்ன பயன்? தலைவனைக் குறை கூறுதலை விடுத்து நமது இல்லற கடமைகளை ஆற்றுவோமாக' (குறுந்.181) என்ற கிளிமங்கலங்கிழாரின் தலைவி கூற்றுக்கு மறுதலையாக அமைந்துள்ளன ஔவையார் பாடல் குறிக்கத்தக்கது. தலைவனின் பரத்தமை ஒழுக்கம் கடியத் தகுந்தது. அது கடியப்பட்டால் மட்டுமே அவ் வொழுக்கம் மீண்டும் நடைபெறாது. மாறாக மன்னித்து ஏற்றுக்கொண்டால் அக்கொடிய ஒழுக்கம் மீண்டும் மீண்டும் அரங்கேறும் என்கிற பொருண்மை இப்பாடலின் ஊடாக வெளிப்படுகிறது.

இவ்வாறு செவிலி அறத்தோடு நிற்கும் பாடல் பாலைத் திணையிலும் (குறுந்.15) தோழி அறத்தோடு நிற்கும் பாடல் குறிஞ்சித் திணையிலும் (குறுந்.23) அமைந்துள்ளது. களவு கற்பில் முடிந்த மனநிறைவு செவிலி கூற்றின் வாயிலாகவும் கட்டுவிச்சி மலைவளம் கூறிக் குறி சொல்லும் இடத்தை தலைவியின் மறையொழுக்கத்தை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும் தோழியின் அறிவார்ந்த திறத்தையும்

ஔவையாரின் பாடல்களில் காண முடிகிறது. தலைவி, தோழி, செவிலி, பரத்தை எனச் செயலூக்கம் மிகுந்த பெண் பாத்திர வார்ப்புகளை ஔவையாரின் பாடல்கள் வெளிப்படுத்தியுள்ளன.

**முடிவுரை**

பெண்பாற் புலவர்களுள் தனது சொல்லாட்சித் திறத்தாலும் படைப்பாக்க ஆற்றலிலும் தனித்தன்மை கொண்டவராக ஔவையார் விளங்குகிறார். ஆண்களின் பிரதிகள் உருவாக்கியிருக்கும் பெண் பாத்திரப் படைப்புகள் ஒரே மாதிரியான வார்ப்புகளாக தந்தையாதிக்க கருத்தியலுக்கு ஏற்ற வகையிலான மாந்தர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். அதற்கு மாறாக பெண்களால் உருவாக்கப்பட்ட பிரதிகள் செயலூக்கமான பெண் பாத்திரப்படைப்புகளை உருவாக்கியுள்ளன. ஆண்களின் இலக்கியப் பிரதிகளை ஆராய்ந்த பெண்ணியத் திறனாய்வின் முதற்கட்டத்திற்கு மாறாக எழுபதுகளுக்குப் பிறகான இரண்டாவது காலக்கட்டத்தில் எலைன் ஷோவால்டர், சாண்ட்ரா கில்பர்ட் மற்றும் சூசன் குபார் போன்ற பெண்ணியத் திறனாய்வாளர்கள் பெண்களால் எழுதப்பட்ட பிரதிகளை (Gynotext) ஆராய்வதற்கென முறையியல்களை உருவாக்கினர். பெண்களின் இலக்கியப் பிரதிகள் ஆணாதிக்க கருத்தியலைத் தலைகீழாக்கும் பணியைச் செய்துள்ளன. படைப்பின் மேற்பரப்பில் வெளிப்படையாகத் தெரியும் பொருளுக்கு மாறாக, அதன் ஆழ்நிலையில் செயல்படும் மறை பிரதி (Subtext) ஆண்களின் நோக்கு நிலைக்கு மாறான பெண்களின் விழைவுகள், அனுபவங்களை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளதை கில்பர்ட் மற்றும் குபார் தங்களுடைய ஆய்வின் (The Madwoman in the Attic) வழியாக வெளிப்படுத்தியுள்ளனர். அவ்வகையில் ஔவையாரின் பாடல்களும் ஆழ்நிலையில் ஆணாதிக்க கருத்தியலை மறுதலிக்கும் நிலையில் அமைந்துள்ளதை பெண்ணிய வாசிப்பின் ஊடாக அதன் மறை பிரதியைக் கட்டவிழ்ப்பு செய்வதன் மூலம் இக்கட்டுரை எடுத்துக்காட்டியுள்ளது.

**பார்வை நூல்கள்**


1. **சாமிநாதையர், உ.வே. (உ.ஆ),** குறுந்தொகை மூலமும் உரையும், டாக்டர் உ.வே.சா நூல் நிலையம், சென்னை: 2009
2. **தமிழண்ணல் (உ.ஆ)** , சங்க இலக்கியம் தொகுதி-2 குறுந்தொகை, கோவிலூர் மடாலயப் பதிப்பு, கோவிலூர்: 2022
3. **Nayar, Pramod K,** Contemporary Literary and Cultural Theory, Pearson, Noida:2010

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# அகநானூற்றில் மருதத்திணைப் பாடல்களில் உவமைகள்

**முனைவர் இ. செல்வி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*வி.இ.நா.செ.நாடார் கல்லூரி, (தன்னாட்சி), விருதுநகர்*

சங்கத் தொகை நூல்களில் ஒன்றான அகநானூற்றில் அமைந்துள்ள மருதத்திணைப் பாடல்கள் பல புலவர்களால் பாடப்பெற்றவை. இவர்கள் பாடிய படங்களில் அமைந்த உவமைகளைத் தொகுத்ததன் அடிப்படையில் அவற்றால் விளக்கம் பெறும் செய்திகள், சிறப்புக்கள் ஆகியன இப்பகுதியில் எடுத்துக்காட்டப்படுகின்றன. அதற்கு முன்னதாக உவமை பற்றிய விளக்கம், வகைப்பாடு பற்றிய செய்திகள் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

### உவமை விளக்கமும் வகைப்பாடும்

தான் பாடிய பாடல்களில் அமைந்த பொருளினைச் சிறப்பாகப் புலப்படுத்துவதற்கும். தன் புலமைத்திறத்தை வெளிப்படுத்துவதற்கும் அமையும் பல கூறுகளில் உவமையும் சிறப்புக்குரிய ஒன்றாகும். ஒரு பொருளை விளக்குவதற்காக மற்றொரு பொருளைக் குறிப்பிட்டுச் சொல்வது உவமையாகும். இது அகத்திணைக்குச் சிறப்புடையதாயினும் யாப்பு நோக்கு உலக வழக்கனும், செய்யுள் வழக்கனும் இது அமையும் என உரையாசிரியராகிய பேராசிரியர் குறிப்பிடுகிறார். தொல்காப்பியர் உவமவியல் என்னும் இயலில் உவமை வகை, உவமை கூறுவதற்கான நிலைக்களம், உவமைக்குரிய உருபுகள், அவை இடம்பெறும் சூழல்கள் பற்றியெல்லாம் விரிவாகக் கூறுகிறார். உவமை பற்றிய விளக்கம் தொல்காப்பியத்தில் வெளிப்படையாக இல்லையாயினும் உவமயியலை முழுமையாக நோக்கும்போது உவமையின் விளக்கம் பற்றி விளங்கிக் கொள்ளலாம். தண்டியலங்காரம் உள்ளிட்ட பல அணி இலக்கண நூல்கள் உவமையின் விளக்கம், வகைகள் பற்றிக் கூறுகின்றன

### தலைவி குறித்த உவமைகள்

இலக்கியங்கள் குறிப்பிட்ட சில பொருள்களுக்குக் குறிப்பிட்ட உவமைகளைச் சுட்டுவது மரபாக உள்ளது. அந்த உவமைகளை விளக்கும் தொடர்கள் ஒரே மாதிரியாகத் திரும்பத் திரும்ப வருவதைக் காணலாம். நுதலுக்குப் பொன்னையும், தோளுக்கு மூங்கிலையும், நிறத்துக்கு மாந்தளிரையும், கண்களுக்கு குவளை மலரையும் உவமிப்பது பெருவழக்காகிவிட்டது. தான் கண்ட கவியுணர்வில் கிளைக்கெழுந்த பாங்கில் புக்கம் புதிய இளர்ச்சியுடன் தெள்ளத் தெளிந்த எழிலுடன்அஞ்சித் தோழியிடம் வாயில் வேண்டினான். அது கேட்ட தோழி, “நீ பெரிதும் ஐயமுடையவன். ஆதலால் தலைவியின் ஊடலைத் தவிர்த்தல் இயலாது” என்று சொல்லி மறுத்தாள். பின்னர்த் தலைவன் தான் ஆற்றாமை காரணமாகத் தலைவியைத் தானே நேரில் அணுகினான். பொய்மொழி பலவற்றைச் சொன்னான். அதைக் கேட்ட தலைவி மனம் நெகிழ்ந்து ஊடல் தீர்ந்து அவனுடன் மகிழ்ந்திருந்தாள். மறுநாள் தோழி உன் ஊடல் தீர்ந்தது எப்படி என்று தலைவியிடம் கேட்கிறாள். ஊடல் தீர்ந்தமைக்குக் காரணத்தைத் தலைவி கூறுவதாகக் கீழ்வரும் பாடலடிகள் அமைந்துள்ளன.

> **“தண்துளிக்கு ஏற்ற பலஉழு செஞ்செய்**
> **மண்போல் நெகிழ்ந்து அவற் கலுழ்ந்தே**
> **நெஞ்சுஅறை போகியே அறிவி னேற்கே”**
>
> (அகம் . 26 : 24-26)

தலைவனை நோக்ககி, நீவிர் பரத்தையர்க்குப் பொருத்தமானவர் யாம் இம்மகளுக்குத் தாயாவதற்குப் பொருந்துவோம் என்றேன். அதைக் கேட்ட அவன் யாமும் அவனிடம் அன்புடையவன் என்று சொல்லி பின்பக்கமாக வந்து என்னைத் தழுவிக் கொண்டான். இதைக் கேட்ட நான் மிக்க பெயலான மழையை ஏற்றுக்கொண்ட பலமுறையும் உழப்பட்ட வயலின் செம்மண் போல் என் உள்ளம் நெகிழ்ந்தது. எனவே ஊடல் தீர்ந்து கூடல் கொண்டேன் என்கிறாள் தலைவி. தோழி கேட்க, தலைவி சொல்வதாக அமைந்த பாடலில் தலைவியின் உள்ளம் செம்மண்ணக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

### இறால் மீனும் நாணும்

கள்ளை உண்ட கலம் கழுவப்பட்ட நீரை உண்ட இரால்மீன். செருக்குக் கொண்டு நாண் அறுபட்ட வில் தெறிப்பதைப் போல தெற்கூடுகளின் அடியில் துள்ளி விழும். அத்தகைய இடத்தை உடையதாக மருதநிலத்துப் பகுதி விளங்குகிறது எனக் கூறப்படுகின்றது.

**நறவுஉண் மண்டை நுடக்கலின் இறவுக்கலித்து**
**பூட்டுஅறு வில்லின் கூட்டு முதல் தெறிக்கும்”**
**(அகம் 96:1-2)**

இப்பாடலில் இறால்மீன் நாணுக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**கிளியும் கயல்மீனும்**

பரத்தமை ஒழுக்கம் கொண்ட தலைவன், தோழி வாயிலாகத் தலைவியைக் கூட எண்ணினான். தலைவி ஊடல் தணிய மறுத்ததால் அவன் தன் நெஞ்சிற்குச் சொல்லிய பாடலாகப் பின்வரும் பாடல் அமைந்துள்ளது.

**“விளிகுவை கொல்லோ நீயே கிளிஎனச்**
**சிறிய மிழற்றும்ம் செவ்வாய்ப் பெரிய**
**கயல்என அமர்த்த உன்கண்”**
**(அகம். 126:17-19)**

இங்கு கிளியைப் போன்று இனிமையாகச் சில சொற்களைப் பேசும் சிவந்த வாயையும் கயல்மீன் போல ஒன்றுடன் ஒன்று போரிடுகின்ற மையுண்ட கண்களை உடையாள் தலைவி எனத் தலைவியின் உறுப்பு நலன்கள் கூறப்படுகின்றன. இங்கு தலைவியின் வாய்க்குக் கிளியின் வாயையும், கண்ணுக்கு கயல்மீனையும் உவமிக்கறான் தலைவன்.

**பரத்தைத் தொடர்புடைய உவமைகள்**

தலைவன் தான் பரத்தையுடன் நீராடவில்லை என்று வேளூர் தெய்வத்தின் மீது அணையிட்டுக் கூறுகிறான். அப்படியானால் நேற்று என்றுடன் நீராடியவன் யார் என்று பரத்தை கேட்கிறாள். இங்ஙனம் தலைவன் தன்னுடன் நீராடினான் என்று தன் தோழியருக்குகேட்கும்படியாகப் பரத்தை கூறுவதாகப் பின்வரும் பாடலடிகள் அமைந்துள்ளது.

**“ ---------------------------------நெஞ்சம்**
**தார்புண் களிற்றின் தலைப்புண் தழீஇ**
**வதுவை ஈரணிப் பொலிந்த நம்மொடு**
**புதுவை வந்த காவிரி**
**கோடுதோய் மலர்நிறை ஆடி யோரே”**

புதிதாக வந்த காவிரியின் கரை உச்சியைத் தோய்த்து வரும் வெள்ளத்தில் மாலை அணிந்த யானையைப் போல விளங்கும் புணையின் தலையிடத்தைத் தழுவியிருந்து கூட்டத்திற்குரிய பெரிய அணியால் பொலிவுற்ற நம்முடன் புனலாடியவர் யாரோ? என்று பரத்தை கூறுகிறாள். இங்கு யானைக்குப் புணை உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**தலைவன் தொடர்புபட்ட உவமைகள்**

அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் தலைவனது இயல்பு, செயல் பற்றி விளக்குவதற்கு அமைந்த பல உவமைகள் இடம்பெறுகின்றன.

**வேட்டுவன் போலும் தலைவன்**

தலைவன் பரத்தையர் சேரியில் தங்கியிருந்து தன் இல்லத்துக்கு வந்தான் என்றுதலைவி ஊடல் கொண்டிருக்கிறாள். அப்போது தலைவனிடம் புலந்து கூறும் பாடல்,

**“தூண்டில் வேட்டுவன் வாங்க வாராது**
**கயிறுஇடு கதச்சேப் போல மதம்மிக்கு**
**தான் பயம் உழக்கு” (அகம். 36: 6 - 6)**

தூண்டிலை இட்ட மீன் பிடிப்பவன் இழுக்கவும் இழுபடாது, மூக்கில் கயிறு கட்டி இழுக்கப்படும் சினம் கொண்ட எருதினைப் போன்று செருக்கு மிக்கு நாள்காலையில் தெளிந்த நீரைக் கலக்கும். இத்தகையே செயல் போலத் தான் தலைவனின் செயலும் உன்ளதாகக் குறிப்பிடுகிறாள். இங்கு மீன் எருதிற்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

**முழவின் இசைப்பும் அழைப்பும்**

தலைவன், தலைவியைப் பிரிந்து பரத்தையருடன் இருந்து கொண்டிருந்தமையால் தலைவனுடன் தலைவி ஊடல் கொண்டிருந்தாள். பின்பு பரத்தையை விட்டுத் தலைவியிடம் சென்று உடல் தணிக்க வேண்டுகிறான். தலைவி ஊடல் தணிக்க மறுக்கிறாள். அப்போது பரத்தையிடம் பிரிந்து வந்த தலைவனை ஏற்றுக்கொள்ளும் படியாகத் தலைவிக்குத் தோழி கூறுகிறான். அத்தோழிக்கு தலைவி வாயில் நேர்கிறாள். தலைவன் முன்னம் செய்த ஒன்றைக் கூறும் செய்த அமைந்த அடிகள் பின்வருமாறு

**“இமிழிகண் முழவின் இன்சீர் அவர்மனைப்**
**பயிர்வன போலவந்து இசைப்பவும் தவிரான்**
**கழங்குஆடு ஆயத்து அன்று நம்அருளிய**
**பழங் கணோட்டமும் நலியே**
**அழுங்கென் அல்லனோ அயர்ந்ததன் மணனே”**
**(அகம். 66:23 - 27)**

மணம் நிகழும் அவர் மனையில் ஒலிக்கும் கண்ணை உடைய முழவின் இனிய ஓசை தம்மை அழைப்பைப் போல முழக்கிற்று. முன்னொரு நாள் நாம் கழங்கு ஆடும் தோழியர் கூட்டத்தினின்று நீங்கி அவரை முதன் முதலாகக் கண்டபோது நம்மைத் தேற்றி அருள் செய்தற்காகக் கூறியச் சூளுரைதான் தம் மனத்தே தோன்றிச் சுடுவதால் அவர் விரும்பிய மணத்தையும் மேற்கொள்ளாமல் கைவிட்டார் அல்லவா. ஆகவே உன் ஊடலைத்

தணித்து விட்டுத் தலைவனை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறான் தோழி, முழவின் ஒலி அழைப்பது போல் இருப்பதாக உவமையாகக் கூறப்பட்டுள்ளது.

### போர் ஆரவாரமும் அவரும்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பரத்தையர் சேரியில் ஓர் இளம் பரத்தையோடு கூடியிருந்தான். இதைக் கேள்வியுற்ற தலைவி கூடல் கொண்டிருந்தாள். தலைவன் மீண்டும் வந்து தோழியை வாயில் வேண்ட, அவர் தாம் அறிந்த செய்தியைச் சொல்லி வாயில் மறுத்துக் கூறுகிறான்.

**“ஒண்தொடி ஆயத்துள்ளும் நீநயந்து**
**கொண்டனை என்ப ஓர்குறுமகள் அதுவே**
**செம்பொற் சிம்பின் செறிந்த குறங்கின்**
**அம்கலும் மாமை, அ்.தை தந்தை**
**அண்ணல் யானை அடுபோர்ச் சோழர்**
**இருபெரு கேந்தரும் பொருதுகளத்து ஒழிய**
**ஒளரிவாள் நல் அமர்க் கடந்த ஞான்றை**
**களிறு கவர் கம்பலை போல**
**அவர் ஆகின்றது பலர் வாய்ப்பட்டே”**

(அகம். 96: 9 -1)

தலைவனைப் பார்த்து தோழி, நீ ஓர் இளம் பரத்தையைக் கூடியிருந்ததை அறிந்தவர்கள் உரைக்கின்றனர். சேர, சோழ, பாண்டியரை வென்றபோது எழுந்த ஆரவாரத்தை விட அச்செய்தி பலர் வாயிலும் பொருந்தி எழுவதாயிற்று. ஆதலால் தலைவியினது ஊடலைத் தீர்க்க இயலாது என்று தோழி வாயில் மறுத்துக் கூறுவான். இங்கு போர் ஆரவாரம் தலைவியின் ஊரார் கூறும் அலருக்கு உவமையாகக் கூறப்பட்டுண்னது.

### தலைவனும் நண்டும்

வயலில் உள்ள வேப்ப மரத்தின் அரும்பைப் போன்ற நீண்ட கண்ணை உடைய நண்டு இரையை எதிர்பார்த்திருந்த வெண்நாரையைக் கண்டு அஞ்சிகிறது. அஞ்சிப் பக்கத்தில் உள்ள பகன்றைக் கொடி படர்ந்த கரிய சேற்றுப்படியில் தேமல் போல வரியுண்டாக ஓடிப்போய் மறைகின்றது. இத்தகைய இயல்பினை உடையவனாகத் தலைவன் கூறப்படுகன்றான். இதனால் தலைவி ஊடல் தணியமாட்டாள் என்று தலைவனுக்கு, தோழி வாயில் மறுத்துக் கூறுகிறாள். இச்செய்தி கூறும் பாடலடிகள் பின்வருமாறு:

**“வேப்புதனை அன்ன நெடுங்கண் ஈர்நெண்டு**
**இரைதேர் வெண்குருகு அஞ்சி,**
**அயலது ஒலித்த பகன்றை இருஞ்சேற்று அள்ளல்**
**திதலைவின் வரிப்ப ஓடி விரைந்துதன்**
**நீர்மலி மண் அளைச் செறியும் ஊர**

(அகம்.176: 8 - 12)

தலைவன் நண்டினைப் போன்ற செய்கை உடையவன் என்று தோழி கூறி வாயில் இங்கு நாரை பரத்தைக்கு உவமையாகக் கூறபபட்டுள்ளது.

### பாடல்களில் இடம்பெறும் உவம உருபுகள்

அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் போல, இன், அன்ன, கடுப்ப,போல் என போன்ற உவம உருபுகள் பயின்று வந்துள்ளன. உவம உருபுகள் அமைந்து சில பாடல் அடிகள் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**கயிறு இடு கதச் சேப்போல (அகம்.36.7)**
**தாதின் அல்லி அவிர் இதழ் புரையும்**

(அகம். 162)

**மீன்முள் அன்ன வெண்கால் மாமலர்**

(இகம் 262)

**கயல் என அமர்த்த உன்கண் (ஆகம் 126-18)**
**மண்போல் நெகிழ்த்து அவற் கலுழ்ந்தே**

(அகம். 2625)

### முடிவுரை

தலைவியரின் மேனி நலச்சிறப்புக் கூறுதற்கும் குறிப்பாக அவர்தம் அங்கச் சிறப்புகளைக் கூறுதற்கும் தலைவன், தோழி, தலைவி, பாங்கன் கூற்றுக்களில் அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் உவமைகள் இடம்பெறுகின்றன. தலைவன், தலைவியன் வாழிடமான மருத நிலச் சிறப்புகளும் உவமைகளாகக் கூறப்படுகின்றன. பரத்தையர் மற்றும் தலைவன்மார் தம் இயல்புகள், செயல்கள் ஆகியவற்றை விளக்குவதற்கு உவமைகள் அகநானூற்று மருதத்திணைப் பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

### குறிப்புகள்

1. (பேரா (உ. ஆ) தொல். பொருள். ப.7
2. உ தொல். பொருள். 272
3. சுப்பிரமணிய தேசிகர் (உ. ஆ) தண்டியலங்காரம். 38
4. தொல். பொருள். 275
5. மேலது, 282
6. சுப்பிரமணியதேசிகர் (உ.ஆ) மு.நூ. 32

# மாணிக்கவாசகர் மத நல்லிணக்கம்

**கு. தேன்மொழி**
*முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்துறை*

**சி. குமார்**
*இணைப்பேராசிரியர், மாநிலக்கல்லூரி, சென்னை*

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் பொதுமை நெறிப் பாதையில் வாழ்ந்து காட்டியவர் மாணிக்கவாசகர். மனம் உருகி ஒவ்வொரு பாடலையும் அழுதுகொண்டே பாடி இறைவன் திருவடியை அடைந்தவர்.

> **வான்கலந்த மாணிக்கவாசக! நின் வாசகத்தை**
> **நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ்சற்றினிலே**
> **தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து என்**
> **ஊன்கலந்து உயிரகலந்து உவட்டாமல் இனிப்பதுவே!"**

என்று இராமலிங்க அடிகள் மாணிக்கவாசகர் அருளிய திருவாசகத்தின் பெருமையைக் கூறுகிறார். இராமலிங்க அடிகள் மாணிக்கவாசகரின் கொள்கையை பின்பற்றி ஜோதியில் அடைந்தவர். பொருளீட்டலாம் ஆனால் உணர்வுகள் தான் சாலச் சிறந்தது. இறைவனின் வழிக்காட்டுதல்களோடு மாணிக்கவாசகர் செய்த உண்மை நிகழ்வுகளை அவர் எழுத்தின் மூலமாக இருக்கின்ற திருவாசகம், திருக்கோவையார் நூலில் இருக்கின்ற சில பாடல்களை முன்னிறுத்தி "மாணிக்கவாசகர் மதநல்லிணக்கம்" என்ற தலைப்பில் காணலாம்.

**வாதவூராரின் வரலாறு**

"திருவாதவூரார் பாண்டிய நாட்டில் சம்புபாத சரிதருக்கும், சிவஞானவதிக்கும் மகனாகப் பிறந்தார். இவர் கல்வி கேள்விகளில் சிறந்து, மன்னன் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராகப் பதவி அமர்ந்தார். அரிமர்த்தன பாண்டியன் மதுரையை இருப்பிடமாகக் கொண்டு ஆண்டுவந்தான். தன் புலமையால் "தென்னவன் பிரமராயன்" எனும் பட்டத்தையும் பெற்றார்.தல புராணத்தில் இருந்து அபிதான சிந்தாமணி கூறுகிறார்.

இறைவன்பால் மாறாத அன்பு கொண்ட வாதவூரார் ஒரு நாள் பாண்டியனுக்கு குதிரைகள் வாங்கப் புறப்பட்டார். திருப்பெருந்துறை என்னும் தலத்தில் குருந்த மரத்தடியில் இறைவன் இவருக்கு சிவம், ஞான, போதம் போன்ற உபதேசம் செய்து அருளினார். பின்னர் வாதவூரார் பக்தி வெள்ளத்தில் மூழ்கிப் பாடல் பலவற்றை இயற்றினார். வாதவூராரின் மணி போன்ற வாசகங்களைக்கேட்ட இறைவன் "மாணிக்கவாசகர்" என்ற பெயரை இவருக்கு சூட்டினார், திருப்பெருந்துறையில் ஆட்கொண்ட நிகழ்வினை

> **"ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே"**

என்றுஇறைவனுக்கும்வாதவூரருக்கும்இருக்கும்பந்தத் தைஉணரலாம்

மாணிக்கவாசகர் பரி வாங்கும் வேலையை மறந்து கோயில் கட்டிக் கொண்டிருப்பதை அறிந்த பாண்டியன் வெகுண்டு இவருக்கு இன்னல் பலவற்றை உண்டாக்குகிறான். இறைவனின் அருளால் நரிகள் பரிகளாயின மீண்டும் நள்ளிரவில் பரிகள் நரிகளாகி ஊளையிட்டன. இது கண்ட மன்னன் மீண்டும் சினந்து மாணிக்கவாசகரை ஆற்றுச் சுடு மணலில் நிறுத்த ஆற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது கரை உடைந்தது. அதை அடக்கப் பிட்டுக்கு மண்சுமந்து வந்து பிரமபடிப்பட்ட இறைவன் தம்மைப் பாண்டியனுக்கு உணர்த்தி மறைந்தார். இதனை

> **பிட்டு நேர்பட, மண் சுமந்த பெருந்துறைப் பெரும் பித்தனே!**
> **சட்ட நேர்பட, வந்திலாத சழக்கனேன் உனைச் சார்ந்திலேன்**
> **சிட்டனே! சிவலோகனே! சிறு நாயினும் கடை ஆய வெம்**
> **கட்டனேனையும் ஆட்கொள்வான், வந்து, காட்டினாய், கழுக்குன்றிலே!**

என்று இறைபக்தியைநிலைநாட்டுகிறார்.

இவருக்கு அருள்வாசகர், மாணிக்கவாசகர், திருவாதவூரடிகள், மணிமொழியார், தென்னவன் பிரமராயன் என்ற பெயர்களும் உண்டு.

**மாணிக்கவாசகரின் தீராதகாதல்**

மாணிக்கவாசகர் இறைவன் மீது தீராத பற்று உடையவராக திகழ்ந்தார். எவ்விதச் செயலுமின்றி பிணம் போல் கிடக்கிற நெஞ்சே உனக்குத் தில்லைக் கூத்தன் திருவடிமீது ஒரு சிறிதும் அன்பில்லை. அன்பு மேலிட்டு நீ ஆடுவதுமில்லை, எலும்புருகப் பாடுவதுமில்லை. உணர்ச்சி மிகுந்தவனாய் பதை பதைப்படைவதுமில்லை. இறைவனை வணங்குவதில்லை. அவனுடைய செங்கமலத் திருவடிகளைச் சிரமீது

தரிப்பதில்லை. அந்த திருவடிகளை மலர்த்தூவி அலங்கரிப்பதும் இல்லை. அவனுது நாமங்களை இசைத்தபடி வீதிகளில் போவதில்லை. இறைவனிடம் நாட்டமில்லாத உன்னை வைத்துக்கொண்டு நான் என்ன செய்வது. இறைவுணர்வு இல்லாத மனம் பிணத்துக்குச் சமம். அது இறைவனின் துணையின்றி உயர்நிலையை எட்ட முடியாது. இதனை

**ஆடுகின்றிலை கூத்துடையான் கழற்கு**
**அன்பு இலை என்புருகிப்**
**பாடுகின்றிலை பதைப்பதும் செய்கிலை**
**பணிகிலை பாதமலர்**
**சூடுகின்றிலை சூட்டுகின்றதும் இலை**
**துணையிலி பிண நெஞ்சே**
**தேடிகின்றிலை தெருவுதோறு அலறிலை**
**செய்வதொன்று அறியேனே.**

என்றுபாடிபுலம்புகிறார்.

**ஈழநாட்டிலும் சைவசமயத்தை நிலைநிறுத்துதல்**

மாணிக்கவாசகர் ஈழ நாட்டை அடைந்தார் அங்கும் தில்லையின் நினைவாகவே இருந்தார். ஈழ மன்னனிடம் ஈசனைப் பற்றிக் கூறினார். ஞானத்திலும் தலத்திலும் சிறந்தவர்கள் தில்லை ஆனந்தக் கூத்தனைக் காணவருமாறு ஓலை வந்தது. அதுகேட்டு ஈழ அரசனும் தன் ஊமைப் பெண்ணை அழைத்துக் கொண்டு வந்திருந்தான். அடியார்கள் கூடியிருந்த கூட்டத்தில் சோழர் வாதவூரரை வணங்கி “சைவ சமயத்தை நிலை நிறுத்துவது அடிகள் கடமை, புத்தரை வெல்லுதல் என் கடமை” என்று கூறினான். புத்த குரு தன் பௌத்த சமயமே உயர்ந்தது என்று வாதிட்டான். வாதவூரர் திருநீற்றின் பெருமையையும் சிவனின் பெருமையும் கூறினார். இதனை

**ஒண்மைய னேதிரு நீற்றையுத்**
**தூளித் தொளிமிளிரும்**
**வெண்மைய னேவிட் டிடுதிகண்**
**டாய்மெய் யடியவர்கட்கு**
**அண்மைய னேயென்றுஞ் சேயாய்**
**பிறர்க்கறி தற்கரிதாம்**
**பெண்மைய னேதொன்மை ஆண்மைய**
**னேயலிப் பெற்றியனே.**

என்றுசாம்பலின்பெருமையைக்கூறுகிறார்.

வாதவூரார் இந்தக் கீழ்மக்கள் நாவை விட்டுக் கலைமகளே அகல்வாயாக என்றுக் கூறினார். புத்த சமயத்தோர் ஊமைகளாயினர். வியப்புற்ற ஈழ மன்னன் என் பெண், பிறவி முதல் ஊமை, அவளைப் பேச வைத்தால் நான் உமக்கு அடிமையாவேன் என்று கூறினான். வாதவூரரும் மகளே புத்தர் கேட்கும் கேள்விகட்கு எல்லாம் விடை கூறுக என்றார். அதே போலப் புத்தர் கேட்ட கேள்விகளுக்கு ஊமைப் பெண் பதில் கூறினாள் அதன் வாயிலாக “திருச்சாழல்” பதிகம் பாடினார். புத்தர்கள் அனைவரையும் பேச வைத்தார். சைவமே உயர்ந்தது என்பதனை நிலை நாட்டினார்.

இறைவன் அன்பு வலையில் அகப்படுவன் என்கிற பாடல், இதனை

**சலமுடைய சலந்தரன்தன் உடல்தடிந்த நல்லாழி**
**நலமுடைய நாரணற்கன் றருளியவா றென்னேடீ**
**நலமுடைய நாரணன்தன் நயனம்இடந் தரனடிக்கீழ்**
**அலராக இடஆழி அருளினன்காண் சாழலோ.**

என்று இறை பக்தியை நிலைநாட்டுகிறார்.

**சிந்தை மகிழ சிவபுராணம் பாடுதல்**

தில்லையில் வாழ்ந்து வரும் நாளில் தான் சிவபுராணத்தை பாடத் தொடங்கினார்.

**சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்**
**அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்**
**சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை**
**முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்**

இந்த பாடல் சிவபுராணப் பாடலாகும். பரிணாம வளர்ச்சியில் வளர்ந்து வளர்ந்து இன்று இறைவனின் திருவடிகளை கண்ணாரக் கண்டதால் வீடுபேறு அடைந்ததாகக் கூறுகிறார்.

புல்லாகவும், சிறு செடிகளாகவும், புழுவாகவும், மரமாகவும், பலவகை மிருகங்களாகவும், பறவைகளாகவும், பாம்பாகவும், கல்லில் வாழும் உயிராகவும், மனிதராகவும், உடல் நீங்கிய பேய்களாகவும், பலதரப்பட்ட கணக்கூட்டங்களாகவும், வலிமை மிகுந்த அசுரர்களாகவும், முனிவராகவும், தேவராகவும்இந்த அசையும் மற்றும் அசையாதவற்றால் ஆன (அண்டம்) முழுதும் சென்று எல்லாப் பிறப்பும் பிறந்து களைத்துவிட்டேன், எம்பெருமானே! இதனை

**புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்**

என்று பாடிபுலம்புகிறார்.

ஐம்பொறிகளையும் இறைவனை அடையலாமென்று திருவள்ளுவர் கூறுகிறார். இதனை

**“பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர்ஒழுக்க**
**நெறிநின்றார் நீடுவாழ்வார்”**

சிவன் இருப்பது சுடுகாடு, அவன் உடுப்பது புலித்தோல் தாய் தந்தை இல்லாத தனியன் எனினும் அவன் சினம் உற்றால் உலகமே கற்குவியலாய்

குவியும் என்கிறார் மாணிக்கவாகர். உலகம் ஒரு சுடுகாடு இங்கே எல்லாமும் அழியக் கூடியவை இந்த அழிவுத் தன்மையை உணர்த்தவே ‘‘கோயில் சுடுகாடு’’ எனக் குறித்தார். ஆணவம் அழித்தற்குக் கொல் புலித்தோலைக் குறியாகச் சுட்டி உள்ளார். பிறப்பும், இறப்பும் இருந்தால் பெற்றோர்கள் இறப்பார்கள். இறைவன் முழுமுதற் கடவுள் என்ற காரணத்தால் ‘‘தாயுமிலி தந்தையிலி தான்தனியன்’’ என்று பதிவு செய்தர் மாணிக்கவாசகர். இத்தகு உலகியல் உண்மையை, நிலையாமையை இறைவன் மீது கொண்ட பக்தியால் இவ்வுலகிற்கு உணர்த்தி உள்ளார் இதனை,

**‘‘கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை**
**தாயுமிலிதந்தையிலிதான் தனியன் காணேடீ**
**தாயுமிலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்**
**காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ’’.**

என்று இறைபக்தியை நிலை நாட்டுகிறார்.

**மாணிக்கவாசகரின் பக்தியும் பாமாலையும்**

மாணிக்கவாசகர் முதன்முதலாக பெண்களின் விளையாட்டுகளைக் கொண்டும் அவர்களின் செயல்களைக் கொண்டும் பதிகம் பல அமைத்து சிவனுக்கு பாமாலைச் சூட்டி உள்ளார். திருஅம்மானை, திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருக்கோத்தும்பி, திருத்தெள்ளேனம், திருச்சாயல், திருப்பூவல்லி, திருத்தோள்நோக்கம், திருப்பொன்னூசல், முதலிய பெண்கள் விளையாட்டுக்களை முதன்முதலில் பக்தி இலக்கிய உலகிற்கு அறிமுகப் படுத்தியவர் மாணிக்கவாசகர் ஆவார்.

பிரபஞ்சத்தில் தோற்றம், இருப்பு, மறைவு என்ற மூன்றுக்கும் கட்டுப்பட்டு உள்ள எல்லாப் பொருள்களும் அழிந்த பின்னரும், தான் ஒருவனாக நிலைபெறுதலின் “முற்றுக்கும் பின்னானை“ என்றார். இதனை

**‘‘முன்னானை மூவர்க்கும் முற்றும் ஆய் முற்றுக்கும்**
**பின்னனைப் பிஞ்ஞகனைப் பேனு பெருந்துறையின்**
**மன்னானை வானவனை மாது இயலும் பாதியனைத்**
**தென் ஆனைக்காவானைத் தென் பாண்டி நாட்டானை**
**என்னானை என் அப்பன் என்பார்கட்கு இன் அமுதை**
**அன்னானை அம்மானைப் பாடுதும் காண் அம்மானாய்’’**

என்று இறைவனை உருகிபாடுகிறார்.

கண்ணப்பருடைய அன்புக்கு நிகரான பேரன்பு என்னிடத்தில் இல்லை. இதனை அறிந்தும் என் தந்தை ஆன இறைவன் எதனோடும் ஒப்பில்லாத என்னையும் அடிமையாகக் கொண்டருளினான். ஒழுக வேண்டிய வகைகள் எல்லாம் தெரிவித்து என்னைத் தில்லைக்கு வா என்றார். இதனை

**‘‘கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்**
**என்னப்பன் என்னொப்பில் என்னையும்ஆட் கொண்டருளி**
**வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்**
**சுண்ணப்பொன் நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ’’.**

என்று இறைவனை உருகிபாடுகிறார்.

உள்ளம் வெதும்பி’, ‘பொய் தவிர்ந்து’ என்றமையால் மன வழிபாடும், “போற்றி சய சய போற்றி” என்றமையால் மொழி வழிபாடும், “மெய்யரும்பி, விதிர்விதிர்த்து” என்றமையால் மெய்வழிபாடும் ஆகிய முக்கரண வழிபாடும் கூறப்பட்டன. இந்நிலை இறைவன் ஆட்கொள்ளுதற் கேற்ற நிலைதான் என்பார், ‘கண்டுகொள்’ என்றார்.முக்கரணங்களும் இறைவன் பணியில் நின்றமை கூறப்பட்டது.இதனை

**‘‘மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்கழற்கென்**
**கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பியுள்ளம்**
**பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங்**
**கைதான் நெகிழ விடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே’’.**

என்று இறைபக்தியை நிலைநாட்டுகிறார்.

உயிர்களுக்குத் தேவையானது எது என்று உணர்பவன் இறைவனாதலின், அவை அவன்பால் ஒன்றையும் வேண்ட வேண்டுவது இல்லை என்பார், “வேண்டத் தக்கதறிவோய் நீ“ என்றும், அவ்வாறு இருப்பினும் உயிர்கள் தம் அறியாமையால் பலவற்றை வேண்ட அவற்றைக் குறைவற அளித்து வருகிறான் என்பார், “வேண்ட முழுதும் தருவோய் நீ" என்றும் உனது திருவுள்ளக் குறிப்பின்படி நடப்பதே அடியவர் கடமை என்பார், “நீ யாது அருள் செய்தாய் யானும் அதுவே வேண்டின் அல்லால்“ என்றும், இத்தகைய நிலையில் அடியவர்கள் தங்கள் பெருவிருப்பால் தாங்களாக இறைவன்பால் வேண்டிக்கொள்வது அவனிடத்தில் உண்டாக வேண்டிய அன்பே என்பார், “வேண்டு பரிசு ஒன்று உண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே?” என்றும் கூறினார். இறைவன் அடியார்களது அன்பின் நிலை கூறப்பட்டது. இதனை

**வேண்டத் தக்க தறிவோய்நீ வேண்ட முழுதும் தருவோய்நீ**
**வேண்டும் அயன்மாற் கரியோய்நீ வேண்டி என்னைப் பணிகொண்டாய்**
**வேண்டி நீயா தருள்செய்தாய் யானும் அதுவே வேண்டினல்லால்**
**வேண்டும் பரிசொன் றுண்டென்னில் அதுவும் உன்றன் விருப்பன்றே.**

என்று பாடிபுலம்புகிறார்.

திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த வரானஜி. யு. போப் மாணிக்கவாசரைப் பற்றி, ”உலக வரலாற்றிலேயே மேதையான மாணிக்கவாசகரை விடப் புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலைத்த பக்தி ஆகிய பண்புகளுடன் நம் மனத்தைக் கவர்கின்றவர் வேறு யாரும் இல்லை” என்று குறிப்பிடுகின்றார்.

நாயிற் கடையாம் நாயேனை“ என்றது, மிகக் கீழான தன்மையுடையேன் என்றபடி. “இப்பிறவியில் வைத்தது ஏன்? இதனின்றும் ஏன் நீக்கவில்லை? என்று ஆராய்வதற்கு எனக்கு உரிமை இல்லை என்பார், “ஆயக்கடவேன் நானோதான் என்னதோ இங்கதிகாரம்” என்றார். இறைவன்பால் பொறுப்பினை ஒப்புவித்து, அவன் அருள்வண்ணம் நடப்பதே உயிரகளின் கடமை என்பதாம். இதனால், இறைவன் சுதந்தரத்தன்மை கூறப்பட்டது. இதனை

**“நாயிற் கடையாம் நாயேனை நயந்து நீயே ஆட்கொண்டாய்**
**மாயப் பிறவி உன்வசமே வைத்திட்டிருக்கும் அதுவன்றி**
**ஆயக் கடவேன் நானோதான் என்ன தோஇங் கதிகாரங்**
**காயத் திடுவாய் உன்னுடைய கழற்கீழ் வைப்பாய் கண்ணுதலே.”**

என்று இறைவனை உருகிபாடுகிறார்.

மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் திருவண்ணாமலையும் திருவண்ணாமலைக்கு வருகை புரிந்த மாணிக்கவாசகர் மலை சுற்றும் பாதையில் உள்ள அடிஅண்ணாமலையில் தங்கி தன்னைப் பெண்ணாக மாற்றிக் கொண்டு சிவபெருமான் மீது திருவெம்பாவை பாடுகிறார். பாவை என்பது ஒரு வகை நோன்பு, பெண்கள் தனக்கு நல்ல கணவன் அமைய வேண்டியும் மாதம் மும்மாரி பெய்ய வேண்டுடியும் நோற்கும் நோன்பே பாவை நோன்பு. அடிஅண்ணாமலையில் உள்ள அனைத்தும் இளம் பெண்களையும் பாவை நோன்பு நோன்பு நோற்க அழைக்கும் இவரது பக்தித் திறம் உலகறிந்ததே தென்கிழக்கு ஆசிய நாடுகளின் ஆண்டாள் பாடிய திருப்பாவையையும், இவரது திருவெம்பாவையையும் பாடிய பின்னரே அரசர்க்கு முடிசூட்டு விழா நிகழ்த்தும் மரபு தற்போதும் பின்பற்றப் படுகிறது. முதலும் முடிவும் இல்லாத அறியாப் பேரொளியை நாங்கள் பாடினோம். நீ கண்டு கொள்ளாது உறங்கி கொண்டிருக்கிறாய் நாங்கள் மகாதேவனை வாழ்த்தும் ஒலி உன்காதில் கேட்கவில்லையா? அது தெருவெல்லாம் கேட்கிறதே அதை கேட்ட வேறொரு பெண் எழுந்தாள் தேம்பி அழுதாள், படுக்கையில் இருந்து புரண்டு விழுந்து மயங்கி கிடந்தாள் என் தோழியே உன் நிலை என்ன? இதுவோ உன் தன்மை சொல்வதை ஏற்று ஆராய்ந்து பார் என்று அறை கூவல் விடுக்கிறார் இதனை,

**“ஆதியுமந்த முமில்லா வரும்பெருஞ்**
**சோதியை யாம்பாடக் கேட்டயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**மாதேவன் வர்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து**
**போதார் அமளியின் மேல்நின்றும் புரண்டிங்ஙன்**
**ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேஎன்னே**
**ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய்”**

என்ற பாடல் வழியாக ஆண்டவனை ஆராதனை செய்கிறார்.

பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக என்று கேட்டார். அதையும் கேட்டு சுவடியில் எழுதி மணிவாசகர் சொல்ல சிற்றம்பலத்தான் கையொப்பம் இட்டு சுவடியுடன் மறைந்தார். இதனை அறிந்தவர் மனமுருகி அழுதுப்பாடி திருவடி அடைந்தார். இதனை

**முத்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்**
**பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்**
**சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனைஆண்ட**
**அத்தனெனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே!**

என்று இறைபக்தியை நிலை நாட்டுகிறார்.

## முடிவுரை

மாணிக்கவாசகரின் சுருக்கமான வரலாற்றை எடுத்துக்கூறி, திருப்பெருந்துறையில் அவருடையபக்தி எத்தகையது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அதன் பிறகு சிவநெறி, சிவபக்தி எத்தகையதென்பதையும் எடுத்துக்கூறியுள்ளது. ஈழத்தில் சைவநெறியை எப்படி நிலைநிறுத்தினார் என்பதையும், மாணிக்கவாசகரின் பாவையும், இறைவன் மீது தீரா காதல் பற்றியும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் திருவண்ணாமலையும் பற்றியும் இக்கட்டுரையில் விரிவாக எடுத்துக்காட்டியுள்ளன. அழுதுவேண்டினால் இறைவனை அடையலாம் என மாணிக்கவாசகர் ஓர் எடுத்துக்காட்டாக வாழ்ந்து இருக்கிறார் என்பதை இக்கட்டுரையின் மூலமாக அறியலாம்.

# புறநானூறு உணர்த்தும் உயர்சிந்தனைகளும் வாழ்வியல் நெறிகளும்

**முனைவர் வெ. திலகம்**
*இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை ஆய்வுமையம்*
*ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்*

### முன்னுரை

தொன்மையான காலந்தொட்டு உலகில் வளமாய் வாழ்ந்த சில மொழிகளே ''செவ்வியல் மொழி'' என்று அழைக்கப்பட்டன. முதன்முதலில் கிரேக்க மொழியையே மேனாட்டார் செவ்வியல் மொழி எனப்போற்றினர். தொன்மையான மொழிகளான இலத்தீன். சீனம், சமஸ்கிருதம், அரேபியம் முதலியனவும் இவ்வரிசையில் இடம்பெற்றன. வேறு எந்த உலகமொழிகளிலும் காணக்கிடையாத தனித் தன்மை வாய்ந்தது நம் தமிழ்மொழி. அவற்றுள் புறநானூறு எனும் தொகைநூலுள் வலியுறுத்தப்படும் வாழ்வியல் நெறிகளையும், உயர் சிந்தனைகளையும் பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

### புறநானூற்றுச் சிறப்பு

தமிழ் இலக்கியங்களின் முதன்மையாகப் போற்றப்படுவது சங்க இலக்கியம். பண்டைய மன்னர்களால் சங்கம் அமைக்கப்பட்டு. புலவர்கள் கூடிய அவையால் திட்டமிட்டு தொகுக்கப் பட்டவை தாம் சங்க இலக்கியம் என்றழைக்கப்படுகின்ற எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் ஆகும். எட்டுத்தொகை நூல்களில் புறம் சார்ந்தது புறநானூறு எனும் தொகை நூல் தென்னகத்து வீரவரலாற்றை சுட்டுவதோடு நில்லாமல் தனிமனித வாழ்வு செழிக்க உயர்வான சிந்தனைகளை மக்களுக்குத் தருவதில் ஓர் ஒப்பற்ற அறிவுச் சுரங்கம் ஆண்மைத்திறம் மட்டுமல்லாது அன்பையும் அருளையும், வீரம் மட்டுமல்லாது பண்டைய கால மன்னர்களின் ஈரத்தையும் வள்ளண்மையையும் காட்டும் இணையற்ற தொகை நூல் புறநானூறு ஆகும். அந்தவகையில் புறநானூற்றில் உள்ள பாடல்களில் உயர்ந்த சிந்தனைகளையும், வாழ்வியல் நெறிகளையும் எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### பொதுவுடைமை

இரப்போர், ஈவோர் என்ற பாகுபாடற்ற சமுதாயம் இருந்தால் தான் உலகில் மக்கள் இன்பமாக வாழமுடியும் என்பதைப் பண்டைத் தமிழர்கள் நன்கு உணர்ந்திருந்தனர். இதனைக் கழைதின் யானையார் என்னும் புலவர் புறநானூற்றில்,

> **"ஈயென இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்**
> **ஈயேன் என்றல் அதினும் இழிந்தன்று**
> **கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதனெதிர**
> **கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று"**
> (புறம். 204)

என்ற பாடலின் வழியே எடுத்துக்காட்டுகிறார்.

### ஈதல் சிறப்பு

உலகிலேயே மிகவும் மகிழ்ச்சியைத் தரக்கூடியது ஈகையினால் பயன் பெறும் ஏழையின் சிரிப்பினைக் காண்பது ஆகும். அரசனானாலும், ஏழையானாலும் அவர்கள் உண்பது நாழி அளவு உணவே ஆகும். உடுப்பதற்கு இரண்டு உடைகளாகும். எனவே செல்வத்தை தனக்கென வைத்துக் கொள்ளாமல் பிறருக்கு ஈதல் என்பது உயர்ந்த சிந்தனைகயாகும் என்பதைப் புறநானூற்றில் சுட்டப்படுகின்றது. இதனை,

> **"தெண்கடல் வளாகம் பொதுமை இன்றி**
> **வெண்குடை நிழற்றிய ஒருமை யோருக்கும்**
> **நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்**
> **கடுமாப் பாக்கும் கல்லா ஒருவற்கும்**
> **உண்பது நாழி, உடுப்பவை இரண்டே**
> **பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே**
> **அதனால் செல்வத்துப் பயனே ஈதல்**
> **துய்ப்பேம் எனினே தப்புந பலவே"**
> (புறம். 189)

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள் எடுத்துரைக்கின்றன.

### சகோதரத்துவச் சிறப்பு

மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் சமமான அன்போடு வாழ்ந்தால் இவ்வுலகமே அன்புமயமாக மாறிவிடும். அதற்கு அடிப்படையாக விளங்குவது சகோதரத்துவம் ஆகும். ஒருவருக்கு நடக்கும் நன்மைகளும், தீமைகளுக்கும் அவர்களே காரணம் என தேற்றிக்கொள்ளக் கூடிய தாராள மனப்பான்மை வரவேண்டும். இதனைப் புறநானூற்றில் கணியன் பூங்குன்றனார் கூறுகையில்,

> **"யாதும் ஊரே யாவரும் கேளிர்**
> **தீதும் நன்றும் பிறர் தர வாரா"** (புறம்.192)

என்ற புறநானூற்றில் பாடலில் எடுத்துக்காட்டுகிறார்.

### செய்ந்நன்றி மறவாதிருத்தல்

பிறர் தமக்குச் செய்த நன்றியை மறவாதிருப்பவனே மற்றவர்களுக்கு நன்றி செய்ய முன்வருவான். நன்றியறிதலைப் பற்றி அறநூல்கள் பல கருத்துக்களை எடுத்தியம்பியுள்ளன. அதேபோன்று நன்றி மறப்பதை அறநூல்கள் மிகவும் கடிந்து காட்டுகின்றன. இதனை வள்ளுவர்,

> **"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
> **செய்ந்நன்றி கொன்ற மகற்கு"** (குறள். 110)

என்று கூறியுள்ளார். இதேபோன்று புறநானூற்றிலும் நன்றி மறவாமை ஒவ்வொரு மனிதனும் கடைப்பிடிக்க வேண்டும் என்ற செய்தியை ஆலந்தூர் கிழான் கூறுவதை அறியமுடிகின்றது.

பசுவின் மடியால் பெறும் பயனலை அழித்தவருக்கும் சிறந்த நகைகளை அணிந்த பெண்களின் கருவைச் சிதைத்தவர்க்கும், அந்தணர்க்கு தீமை செய்தவருக்கும், அவர்கள் செய்த பாவத்தைப் போக்கும் வழிகள் உண்டு எனவும், உலகம் தலைகீழாக மாறினாலும் ஒருவன் செய்த நன்றியை மறந்தவர்க்கு அந்த தீமையிலிருந்து விடுபட வேறுவழியில்லை என்றும் புறநானூற்றுப் பாடலில் எடுத்துக்காட்டுகிறது. இதனை,

> **"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
> **மாண்இழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
> **குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**
> **வழுவாய் மருங்கின் கழுவாயும் உளஎன**
> **நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
> **செய்தி கொன்றோர்க்கும் உய்தி இல்என"**
> (புறம்.34)

என்ற புறநானூற்றுப் பாடலின்மூலம் செய்ந்நன்றி மறவாமையை ஒவ்வொரு மனிதனும் கடைபிடிக்க வேண்டிய வாழ்வியல் நெறியாகும் என்று குறிப்பிடுகிறார்.

### சுயநலமில்லா வாழ்க்கை

பிறருக்கு உதவி செய்யவேண்டும் என்ற எண்ணத்துடன் சுயநலமில்லா வாழ்க்கை வாழவேண்டும். பெரியோர்கள் வாழ்க்கைத் தரத்தில் தங்களை உயர்த்திக் கொள்ள காரணம், பிறருக்காகத் தங்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்ததன் காரணமாகத் தான். தமக்கென வாழாமல் பிறருக்கென வாழும் மனிதர்கள் சங்ககாலத்தில் வாழ்ந்திருக்கின்றனர். சுயநலமின்றி வாழும் மனிதர்கள் ஒரு சிலர் இருப்பதால்தான் இவ்வுலகம் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இதனை, புறநானூற்றில் இளம்பெருவழுதி கூறுகையில்,

> **"உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
> **அமிழ்தம் இயைவ தாயினும் இனிது எனத்**
> **தமியர் உண்டலும் இலரே முனிவிலர்**
> **துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
> **புகழ்எனில் உயிருங் கொடுக்குவர் பழியெனில்**
> **உலகுடன் பெறினும் கொள்ளலர் அயர்விலர்**
> **அன்ன மாட்சி அனைய ராகித்**
> **தமக்கென முயலா நோன்தாள்**
> **பிறர்க்கென முயலுநர் உண்மை யானே"**
> (புறம். 182)

என்ற பாடலில் சுயநலமில்லா வாழ்க்கையை ஒவ்வொரு மனிதனும் கடைபிடித்து வாழ்ந்தால் வாழ்வியல் உயர்ந்த நெறியுடன் வாழமுடியும் என்பதை சுட்டுகின்றது.

### வறுமையில் செம்மை

பழந்தமிழ் புலவர்களின் வாழ்விற்கு கொடை வள்ளல்களையும், சிற்றரசர்களையும் நம்பி இருந்தனர். எனினும் புலவர்கள் பலர் வறுமையில் வாடினாலும் தம் தன்மானத்தை விட்டு எனக்கு உதவி செய்யுங்கள் மன்னா என்று யாரிடம் உதவி கேட்டதில்லை. மேலும் வள்ளல்கள் கொடுக்கும் பரிசுப்பொருட்கள் சிறிதெனினும் அதனைப் பெற்றுக் கொண்டு சோர்வதும் இல்லை. இதனை,

> **"யானும் பெற்றது ஊதியம் பேறியாது என்னேன்**
> **உற்றனென் ஆதலின் உள்ளிவந் தனெனே**
> **ஈயென இரத்தலோ அரிதே"** (புறம்.154.6-8)

என்ற பாடலடிகளால் அறியமுடிகின்றது. மேலும் பரிசில் பெறுவதற்காக ஒரு காலமும் புலவர்கள் பொய் உரைத்ததில்லை. இதனை,

> **"வாழ்தல் வேண்டிப்**
> **பொய் கூறேன், மெய் கூறேல்"** (புறம். 138.5-6)

என்ற புறநானூற்றுப் பாடலில் மருதனிளநாகனார் உரைப்பதை அறியமுடிகின்றது.

### சொல் திறம்பாமை

சொல் திறம்பாமை என்னும் பண்பானது அக்கால மன்னர்களிடம் இருந்த மானம் சார்ந்த பண்பாகும். சொல் திறம்பாமை என்பது சொல்லிய சொல்லைக் காப்பாற்றும் பண்பை உடையதாகும். சொன்ன சொல்லைக் காப்பாற்ற உயிர் ஈந்த மன்னர்கள் வரலாற்றில் மட்டுமல்ல மக்களின் மனதிலும் நீங்கா இடம்பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிகின்றது. இதனை,

**“நிலம் பெயரினும் நின்சொற் பெயரால்**
**பொலங் கழங்காற் புலர்சாந்தின்**
**விலங் ககன்ற வியன் மார்ப”** (புறம்.3.14-16)

என்னும் பாடலடிகளில் உலகமே நிலை பிறந்தாலும் தான் சொன்ன சொல் பிறழாது மன்னர்கள் உயர்ந்த நெறியில் வாழ்ந்தனர் என்பதை அறியமுடிகின்றது.

**நிலையாமை**

மக்கள், மன்னர்கள் என்ற பாகுபாடு இல்லாமல் பொதுவாகப் புலவர்களால் வலியுறுத்தப் படுவது நிலையாமை என்ற நிலைபெற்ற தத்துவமாகும். உலகில் பிறந்த உயிர்கள் அனைத்தும் இறந்து படுதல் உறுதி வாழும் காலத்தில் நல்லவராய் வாழவேண்டும் என அறிவுறுத்தும் கடமை புலவர்களுக்கு உள்ளது. இதனை,

**“பல்சான் றீரே பல்சான் றீரே**
**கயல் முள் அன்ன நரைமுதிர் திரைகவுள்**
**பயனில மூப்பின் பல்சான் றீரே**
**கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்**
**பிணிக்கும் காலை, இரங்குவீர் மாதோ**
**நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன**
**சாதலும் புதுவது அன்றே”** (புறம்.195)

என்ற பாடலடிகளில் செல்வம், அழகு, இளமை, இவ்வுடல், உயிர் எதுவும் நிலையில்லாதது. எனவே தனக்குத் தேவையானது போக, எஞ்சியதைப் பிறருக்குக் கொடுத்து உதவவேண்டும் என்பதை இப்புறநானூற்றுப் பாடலடிகள் உணர்த்துகின்றன.

**விருந்தோம்பல் பண்பு**

தமிழர்கள் விருந்தோம்புதலில் மிகச் சிறந்தவர்கள். இல்லறத்தில் வாழ்வோருக்குரிய கடமைகளில் விருந்தினரைப் பாதுகாத்தல் என்பதைத் தமிழர் சிறப்பாக கடைபிடித்து வந்திருக்கின்றனர். விருந்தினர்க்குக் குறைவுபடாமல் வழங்கும் குற்றமற்ற வாழ்க்கை உடையவர்கள் தமிழக மகளிர் என்பதை,

**“அமிழ்து அட்டு ஆனாக் கமழ்குய் அடிசில்**
**வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை**
**மகளிர்”** (புறம். 10.7-8)

என்னும் அடிகளின்வழி அறியமுடிகின்றது.

தேவர்கள் உண்ணுதற்குரிய அமிழ்தமே கிடைத்தாலும் விருந்தினரை நீக்கித் தானே தனித்து உண்ணாதவர்கள் பண்டைய தமிழர்கள் என்பதை சங்கஇலக்கியப் பாடல்கள் உணர்த்துகின்றன. இதனை,

**“. . . . . . . . . . இந்திரர்**
**அமிழ்தம் இயைவ தாயினும் இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே”** (புறம்.182.1-3)

என்ற புறநானூற்றுப் பாடலடிகள் உணர்த்துவதை அறியமுடிகின்றது. பண்டையத் தமிழர்கள் விருந்தினரை வரவேற்கும் நிகழ்வினை, பலநாட்கள் பலரோடு விருந்தினர் வந்தாலும் முதல்நாள் வரவேற்பது போன்று இன்முகத்தோடு வரவேற்கும் உயர்ந்த நெறியினை உடையவர்கள் தமிழர்கள் என்பதை பாடல்களின்வழி அறியமுடிகின்றது.

**தீயது செய்யாதிருத்தல்**

நாம் பிறருக்கு நன்மை செய்யாவிட்டாலும் தீமையை ஒருபோதும் செய்யாமல் இருப்பது நல்லது. இதனை பண்டைய இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன. பிறருக்கு நன்மை செய்யா விட்டாலும் தீமையை ஒருபோதும் செய்யாமல் இருக்கவேண்டும். அதுதான் எல்லாராலும் போற்றிப் புகழ்ந்து பாடுவதுதாகும். மனிதர்களை உயர்ந்த சிந்தனையில் வழிநடத்துவது தீமை செய்யாமல் இருப்பதுதான். இதனை,

**“நல்லதுசெய்தல் ஆற்றீர் ஆயினும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்பது அன்றியும்**
**நல்லாற்றுப் படூஉம் நெறியுமார் அதுவே”**
(புறம். 195.6-8)

என்ற புறநானூற்றுப் பாடலில் நரிவெரூத்தலையார் எடுத்துக்காட்டுகிறார்.

**முடிவுரை**

இவ்வாறாக, புறநானூற்றுப் பாடல்களில் உயர்ந்த சிந்தனைகளும் வாழ்வியல் நெறிகளையும் எடுத்துரைக்கும் பாடல்களும், அவற்றைப் பாடிய புலவர்களைப் பற்றியும் இங்கு அறியமுடிகின்றது. பண்டைய தமிழர்கள் வாழ்ந்த வாழ்க்கையில் ஈதலின் பயனோடும், சுயநலமில்லாத வாழ்க்கையோடும் வாழ்ந்து வந்தனர். மேலும் செய்த நன்றியை மறவாமலும், தீயவை செய்யாமலும், விருந்தோம்பல் பண்போடு உயர்ந்த சிந்தனையுடன் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை இக்கட்டுரையின் வழியாக அறியமுடிகின்றது.

**துணைநூற்பட்டியல்**


1. சங்க இலக்கியம், புறநானூறு, 2004, கு.வெ. பாலசுப்பிரமணியன், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பி. லிட், சென்னை, முதற்பதிப்பு
2. சங்கஇலக்கியம், புறநானூறு மூலமும் தெளிவுரையும், 2010, ச.வே.சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# களவழி நாற்பது - போர்க்களக் காட்சி

**முனைவர் மா. உமா மகேஸ்வரி**
*உதவிப்பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை*
*அருள் ஆனந்தர் கல்லூரி, கருமாத்தூர்*

**முன்னுரை**

பதினெண் கீழ்கணக்கு நூல்களிலேயே புறத்திணை கூறும் போர்க்களம் பாடுகின்ற ஒரே நூல் களவழி நாற்பது. தொல்காப்பியர் வாகைத் திணையை விளக்கும் போது “களவழி குறித்த குறிப்பு ஒன்றைக் கூறியுள்ளார். போரில் வெற்றியைக் கொண்டாடும் துறைகளை வரிசைப்படுத்தும் போது ஏர்க்களம், போர்க்களம் என இரண்டு களங்களைக் கூறுகின்றார். உழவரைச் சிறப்பித்து ஏர்களம் பாடுவதுண்டு. அது போல் போர்க்களத்தில் வெற்றியைக் கொண்டாடும் களவழியும் உண்டு என்பார்.

**ஏரோர் களவழி அன்றிக் களவழி**
**தேரோர் தோற்றிய வென்றியும்**

என்று கூறுவர் தொல்காப்பியர். அத்தகைய போர்க்களத்தை முன்னிறுத்திப் பாடுவதால் களவழி நாற்பது எனப் பெயர் பெற்றது. நீதி நூல்களில் மக்களை நல்வழிப்படுத்தும் வாழ்வியல் அறங்களையே பெரும்பாலும் சுட்டிக்காட்டியுள்ளது. போரும், போரியல் வாழ்வும் அக்காலத்தில் தவிர்க்க இயலாத காரியமாகும். அவ்வகையில் களவழி நாற்பதில் கூறியுள்ள போர்க்களக் காட்சிகளைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுல் புறப்பொருள் இலக்கணத்துடன் அமைந்த நூல் களவழிநாற்பதாகும். சோழ மன்னன் கோச்செங்கணானுக்கும், சேர மன்னன் கணைக்கால் இரும்பொறைக்கும் இடையே கழுமலம் என்னும் இடத்தில் நடைபெற்றப் போரினை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல். களவழி நாற்பதைப் பாடியவர் பொய்கையார் ஆவார். சங்க காலப்பொய்கையார் வேறு, களவழி பாடிய பொய்கையார் வேறு. களவழி பாடிய பொய்கையாரைப் பற்றி கலிங்கத்துப்பரணி, மூவருலா, தமிழ்விடுதூது போன்ற நூல்களின் வழி அறியலாம். பொய்கையார் பாடிய நாற்பது பாடல்களும் அக்காலத்திய போர்க்களக் காட்சியைக் கவித்துவமாகக் காட்சிப்படுத்தியுள்ளார். பெரும்பான்மையான பாடல்களில் யானைப் படையின் சிறப்பு கூறப்பட்டுள்ளது.

**நூல் சிறப்பு**

சங்க காலத்துச் சோழ மன்னன் கோச்செங்கணான், சேரமான் கணைக்கால் இரும்பொறையோடு போரிட்டான். திருப்போர்ப்புறம் என்ற இடத்தில் போர் நிகழ்ந்தது. போரில் சேரமான் தோல்வியுற்றான். அவனைக் கோச்செங்கணான் குடவாயில் கோட்டம் என்ற இடத்தில் சிறை வைத்தான். பொய்கையார் என்ற புலவர் கோச்செங்கணானிடம் சென்று அவன் வென்ற களச்சிறப்பைப் பாடி சேர மன்னனை விடுவித்தான் என்று கலிங்கத்துப்பரணியில் செயங்கொண்டார்,

**“களவழிக் கவிதை பொய்கை உரைசெய உதியன்**
**கால்வழித் தளையை வெட்டி அரசிட்ட அவனும்”**

என்று குறிப்பிடுகின்றார். மூவருலாவில்

**“பொறையனைப் பொய்கைக் கவிக்குக் கொடுத்த**
**களவழிப்பா கொண்டோனும்”**

என்று கூறப்பட்டுள்ளது.

**போருக்கான காரணம்**

மன்னர்கள் பலரும் பல்வேறு வகையான காரணங்களுக்காகப் போரினை மேற்கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. மன்னர்களுக்குள் ஒற்றுமையின்மை, மண்ணாசை ஆகியவை பெருபாலும் காரணமாக அமைகின்றது. தானே சிறந்தவன் என்ற காரணத்தினாலும், தன் படைபலத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற காரணத்தினாலும் போர் நடைபெறுகின்றது. இங்கு தன் நிலப்பரப்பை விரிவு படுத்த வேண்டி போர் நடைபெற்றிருக்கலாம். தற்காலத்தில் ரஷ்யா – உக்ரைன் போர், ஈரான் – ஈராக் போர், போன்ற போர்களெல்லாம் என்ன காரணங்களுக்காக நடைபெற்றன என்பது உங்களுக்கேத் தெரியும்.

**போர்களக்காட்சி**

போர் வீரர்கள் தன் சகபடைவீரர்களுடன் போரிடுவர். அவ்வாறு போரிடும் பொழுது அங்கம் குறைவு படுவது போரில் தடுக்க இயலாத காரியமாகு. இந்நிலை வீரர்களுக்கு மட்டுமின்றி நான்கு வகையான படைகளுக்கும் பொருந்தும். போரில் எப்படியாவது வென்றுவிட வேண்டும் என்ற நோக்கில் நாற்படை வீரர்களும் செயல்படுவர். யானையின் துதிக்கைகள் வெட்டப்பட்டு அவற்றில் இருந்து குருதி வழிகின்றது. யானையின் இந்நிலையைக் காணும் போது

பையில் இருந்து பவளம் இடைவிடாது சிந்துவது போல் இருப்பதாக காட்சிப்படுத்துகின்றார் இதனை, ஆசிரியர்

**கவளம் கொள் யானையின் கைகள் துணிக்க**
**பவளம் சொரிதரு பை போல திவள் ஒளிய**
**ஒண் செங்குரதி உமிழும்**
**(களவழி நாற்பது -14)**

என்று கூறுகின்றார். மேலும் நிலமகள் சிவந்த நிறமுள்ள போர்வையை விரும்பிப் போர்த்திக் கொள்வது போல போர்க்களம் முழுவதும் வீரர்களின் இரத்தம் படிந்து காணப்படும் நிலையை,

**மையின் மா மேனி நிலமென்னும் நல்லாள்**
**செய்யது போர்த்தாள் போற் செவ்வந்தாள்**
**(களவழி நாற்பது -32)**

என்ற பாடலடிகளில் நிலமகளைச் சிறப்பித்துக் கூறும் நிலையைக் காணமுடிகின்றது. போர் வீரர்களால் வெட்டப்பட்ட யானையின் துதிக்கைகள் கீழே விழுந்து அசைகின்றன. அக்காட்சியைக் காணும் பொழுது மலைமீது இடி விழுந்த அதிர்ச்சியில் பாம்புகள் கீழே விழுந்து புரள்வது போலக் காணப்படுகின்றது. இதனை,

**வரை புரை யானைக் கை நூற வரை மேல்**
**உரும் அறி பாம்பின் புரளும்**
**(களவழி நாற்பது -13)**

என்று கூறப்படுகின்றது. யானையின் துதிக்கைகள் பகைமன்னனின் வெண்கொற்றக் குடைக்கு அருகில் வீழ்ந்து கிடக்கின்றன. இந்நிலையைக் காணும்பொழுது நிலவினைப் பாம்பு தொட்டுச் சுவைப்பது போலக் காட்சிப்படுத்தியுள்ளார்.

**"ஓடா மறவர் துணிப்ப துணிந்தவை**
**கோடு கொள் ஒண் மதியை நக்கும் பாம்பு**
**ஒக்குமே"(களவழி நாற்பது-22)**

என்ற பாடலடிகளின் வாயிலாக யானைகளின் போர்க்கள நிகழ்வுகளையும், போரில் இறந்து கிடக்கும் யானைகளின் நிலையையும் காட்சிப்படுத்தியுள்ளார்.

**போர்க்கள வருணனைகள்**

போர் நடைபெறும் இடத்தினை நாம் நேரிடையாகக் காண இயலாது. ஆனால் பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு போர்க்களம் எப்படி இருந்தது. அதில் எப்படி போர் செய்தார்கள் என்பதை நூலின் வாயிலாக அறிய முடிகிறது. போர்க்களத்தில் போர்புரியும் வீரர்கள், விலங்குகள், படைகளின் நிலை எவ்வாறிருந்தன என்பதனை மிக அழகாக காட்சிப்படுத்தியுள்ளார். உண்மையும் கற்பனையும் கலந்த போர்க்கள நிகழ்வுகளை காட்சிப்படுத்தியுள்ளார். நாற்பது பாடல்களில் பல போர் நிகழ்வுகள் சுட்டிக்காட்டப்பட்டு இருப்பினும் அவற்றில் சில பாடல் காட்சிகளைச் சான்றாகக் காணலாம். வாளால் குத்தப்பட்டு இறந்த பகைவர்களின் குருதியானது பல இடங்களில் பரவிக்காணப்படுகின்றது. யானைகள் இந்தக் குருதிக் குழம்பினை சேறாக்கி மகிழ்கின்றது. மாலைப்பொழுதில் இந்தக் குருதி காய்ந்து தூளாகப் பறக்கின்றது. இதனை,

**"முற்பகல் எல்லாம் குழம்பு ஆகி, பிற்பகல்**
**துப்புத்துகளின் கெழுஉம்"**
**(களவழி நாற்பது -1)**

என்ற பாடலடிகள் புலப்படுத்துகின்றது.

குருதி நிரம்பிய போர்க்களத்தில் வீரர்கள் நடக்க முடியாமல் தடுமாறும்பொழுது ஊன்றுகோலாகப் போர்க்களத்தில் இறந்து கிடக்கும் யானைகளின் தந்தங்களை பயன்படுத்தினர் என்று கூறப்படுகின்றது. போர்க்களத்தில் இறந்து கிடக்கும் வீரர்களின் உடலில் இருந்து வழியும் குருதியைக் காகங்கள் தம் அலகினால் கொத்திக்குடிக்கின்றது. இதனால் காக்கையின் நிறம் மாறி செம்போத்து போல காட்சியளித்ததாக கூறியுள்ளார். மீன்கொத்திப் பறவையின் சிவந்த மூக்கினைப்போல அதன் அலகுகள் மாறிப் போனதாகவும் கற்பனை செய்திருக்கின்றார் ஆசிரியர்.

**"தெரிகணை எ∴கம் திறந்த வாயெல்லாம்**
**குருதிபடிந்துண்ட காக மரவிழந்து**
**குக்கிற் புறத்த சிரல்வாய செங்கண்மா**
**றப்பியா ரட்ட களத்து**
**(களவழி நாற்பது -5)**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றது.

போர்க்களத்தில் பகைவர்கள் குடல் சரிந்து இறந்து கிடக்கின்றனர். இந்தக் குடலினை குள்ளநரிகள் கவ்விக்கொண்டு அங்கும் இங்குமாக இழுத்து விளையாடி மகிழ்கிறது. இச்செயலைக் காணும்பொழுது தூணில் கட்டப்பட்ட நாயானது தனது சங்கிலியை இழுப்பது போல இருப்பதாகக் காட்சிப்படுத்தியுள்ளார். இதனை,

**"குடக்கொடு வாங்கும் குறு நரி கந்தில்**
**தொடரொடு கோள் நாய் புரையும்**
**(களவழி நாற்பது - 34)**

மேலும் தேரைச் சிதைத்த அதன் சக்கரத்தோடு எழும் யானைகள் சூரியனை மறைக்கும் மலைகள் போல் இருந்தன என்பார் புலவர். இதனை,

**"உருவக் கடுந்தேர் முருக்கி மற்றதேர்ப்**
**பருதி சுமந்தெழுந்த யானை இருவிசும்பில்**
**செல்சுடர் சேர்ந்த மலை போன்ற செங்கண்மால்**
**புல்லாரை அட்ட களத்து"**
**(களவழி நாற்பது - 34)**

வீர்களின் வேல்களால் குத்தப்பட்ட யானைகள் தளர்ந்து போய் கலக்கமான நிலையில் தன்காதுகள் நிலத்தில் படும்படியாகச் சாய்ந்து கிடக்கின்றன. இக்காட்சியானது நிலமகள் தமக்குக் கூறும் அறக்கருத்துக்களை யானைகள் பணிவோடு கேட்பது போல இருப்பதாகக் காட்சிப்படுத்துகின்றார்.

**"வயவரால் ஏறண்டு**
**கால் நிலை கொள்ளாக் கலங்கி செவி சாய்த்து**
**மாநிலம் கூறும் மறை கேட்ப"**

**(களவழி நாற்பது -41)**

என்ற இவ்வரிகள் யானையின் துயர்நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளது. களவழி நாற்பது என்னும் இந்நூலின் வாயிலாக அக்காலத்திய மன்னர்களின் யானைப்படைச் சிறப்பும் பேசப்படுகின்றது.

**நிறைவாக**

இந்நூல் தரும் போர்க்களக் காட்சிகளில் யானைப் போரே பெரிதும் இடம்பெறுகின்றது. சேரமான் யானைப் படை உடையவனாகக் கருதப்படுவதால் யானைப் போர் மிகுதியும் பாடப்பட்டிருக்க வேண்டும். "சேரநாடு தந்தம் உடைத்து" "வேழம் உடைத்து மலை நாடு' என்பது வழக்கு எனவே யானைப் போர் மிகுதியும் பாடப்பட்டுள்ளது. யானைப்படைகளின் பலமும் போர்க்களத்தில், அவை போரிட்ட தன்மையும், போரிடும் பொழுது ஏற்பட்ட சிக்கல்களும் அவற்றின் துயர நிலையும், யானைப் படையின் சிறப்பினையும், ஆசிரியரின் கற்பனை வளத்தினையும் இந்நூலின் வாயிலாக அறிந்து கொள்ள முடிகின்றது

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# ஔவையருளிய ஓரடியறங்கள்

**திரு. எஸ். உமாபதி**
*முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)*
*கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, முத்தூர்*

**ஆய்வுச் சுருக்கம்**
பழந்தமிழ்ச் செய்யுட்கள் நம் மக்களின் வாழ்வியல் முறைகளையும் நம் மொழியின் சிறப்புகளையும் தொன்மையையும் பறைசாற்றும் சான்றாவணங்களாக உள்ளன. இவ்வுலகில் சற்றேறக்குறைய ஆறாயிரத்தைநூறு மொழிகள் பேச்சு வழக்கிலும், சுமார் இருநூறு மொழிகள் நுட்பமான இலக்கண விதிகளைக் கொண்டவையாகவும் உள்ளனவென்று ஒரு தரவு பகர்கின்றது. அவற்றுள் மூவாயிரமாண்டு தொன்மையுடன் ஒப்புயர்வற்று நிற்கும் நம் தமிழின் இலக்கண இலக்கிய வளங்களுக்கு மற்ற மொழிகள் ஈடாகா. நம் நற்றமிழ் கூறும் அறங்கள் அகில உலகத்திற்கும் பொருந்துவனவாகவும், எக்காலத்திற்குமேற்றவையாகவும் இருப்பது நாம் கண்கண்ட பெருமை. ஈரடியறமாய் வள்ளுவன் ஈந்ததைப் போல ஓரடியறமாய் ஔவையார் அருளியவை தாரக மந்திரங்கள். ஔவையின் அமுத மொழிகளான ஆத்திசூடியையும் கொன்றை வேந்தனையும் கூர்ந்தாய்ந்து, இவ்விரண்டனுள் பொதுமைக் கருத்துகளுடன் பொதிந்து வரும் பக்தி, பெண்மை, விருந்தோம்பல், கூட்டுணர்வு போன்ற கூறுகளைத் தொகுத்தும் வகுத்தும் காண்பிப்பதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முகவுரை**

ஓவ்வொரு காலகட்டத்திலும் ஓவ்வொரு நாட்டிலும் வாழ்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள், பண்பாடு, உணவுமுறை, வழிபாடு, நாகரிகம், திருமண வாழ்கை, குடும்ப வாழ்கை, சமூக அமைப்பு, சடங்கு சம்பிரதாயங்கள் போன்றவற்றைக் காட்டும் கண்ணாடிகளாக இருப்பவை இலக்கியங்களே. கல்வெட்டுகளும் செப்பேடுகளும் சிறந்த வரலாற்று ஆவணங்களாக இருந்தாலும் அவற்றில் மேற்கண்ட பொருண்மைகளை விளாவரியாகப் பதிவு செய்ய வாய்ப்பு அமைந்திருக்காது எனக் கருதலாம். ஆனால், ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுள்ள காப்பியங்கள் மற்றும் பெரிய இலக்கியங்களில் இவற்றை விளக்கமாக அறிய முடியும். ஆனாலும், பழங்காலக் கோவில்களில் கல்வெட்டுகளாகப் பொறிக்கப்பட்டுள்ள பக்தி இலக்கியப் பாடல்களின் துணையுடனும் அரண்மனைகள், கோட்டைகள், கோவிற் சுவர்களில் உள்ள கல்வெட்டுகள் மூலமாகவும் பண்டைய வாழ்வியல் நெறிமுறைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

பண்ண்டைத் தமிழ் இலக்கியங்களுள் அறக் கருத்துகளைக் கூறும் செய்யுட்கள் தமிழில் ஏராளம். அவற்றுள் ஈரடியில் உலகப் பொதுமறை கொடுத்த வள்ளுவப் பெருந்தகை போல் ஒற்றையடியில் வாழ்வியல் நெறிமுறைகளை அறவுரையாகக் கூறும் ஆத்திசூடி மற்றும் கொன்றை வேந்தன் ஆகிய இரு அறநெறியிலக்கியங்களும் ஔவையாரால் அருளப்பட்டவை. இவை காட்டும் சில பொதுவான தமிழர் வாழ்வியற் கருத்துகளை இக்கட்டுரையின் கண் காண்போம்.

**ஔவையார் சொல்லும் வாழ்வியல் நெறிமுறைகள்**

ஔவையார் என்பது தமிழுக்காகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு திருமணம் புரியாமல் வாழ்ந்த பெண்பாற் புலவருக்கான பொதுவான பெயர் எனவும், புராண காலம், சங்க காலம், சங்கம் மருவிய காலம், பிற்காலம் போன்ற வெவ்வேறு காலகட்டங்களில் வெவ்வேறு ஔவையார்கள் வாழ்ந்தனர் எனவும், இயற்பெயர் பிறிதொன்றாகவும் தாங்களே இட்டுக்கொண்ட பெயரே ஔவையார் எனவும் பல்வேறு கருத்துகள் வலம் வந்த வண்ணம் உள்ளன. ஆயினும், செய்யுட்களில் பொதிந்து வரும் கருத்தொப்புமையைக் கூர்ந்து நோக்குங்கால் நீதி நூல்கள் இயற்றிய ஔவையார் ஒருவரே என்போரும் உளர்.

அது எவ்வாறாயினும், அவர் எழுதிய நூல்களில் பயின்று வரும் கருத்துகளைக் காண்போம். கி.பி. பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான ஔவைப் பெருமாட்டியார் அருளிய ஓரடிச் செய்யுட்களே ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும். இவ்விரு இலக்கியங்களும் வெவ்வேறு ஔவையார்களால் எழுதப்பட்டவையாக இருக்கலாம் என்று ஒரு சாரார் கூறினாலும், இவ்விரு செய்யுட்களிலும் கூறப்பட்டுள்ள கருத்துகளும் மொழிநடையும் பெரும்பாலும் ஒரே விதமாகத் தான் உள்ளனவென்பதால் இவ்விரண்டையுமியற்றியது ஒரே ஔவையாரேயெனும் துணிவுக்கு வரலாம். இன்றிலிருந்து சற்றேறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அப்போது நிலவிய சூழல்களுக்கும் வாழ்வியல் முறைகளுக்குமேற்ப இச்செயுள்கள் அமைக்கப்பட்டுள்ளன. இச்செய்யுட்களுள் பல இன்றைய காலகட்டத்திற்குப் பொருந்தாதவை

என்றும் பிற்போக்குத் தனங்களையும் ஆணாதிக்கத்தையும் பெண்ணடிமைத் தனத்தையும் வளர்க்கும் பாங்கில் இவை உள்ளனவென்றும் இவற்றை ஒதுக்குவோரும் உள்ளனர். ஆயினும், "தீது விலக்கி நன்றேற்று" என்பது போல், இவற்றுள் பொதுவான - இன்றைக்கும் ஏற்புடைய - அறம் சார்ந்த செய்யுட்களை வாசித்து வாசித்துப் பெருமை கொள்வோம்.

ஆத்திசூடி பெரும்பாலும் ஒவ்வொரு அடியிலும் இரண்டு சீர்களைக் கொண்ட செய்யுளாகவும், கொன்றை வேந்தன் ஒவ்வொரு அடியிலும் நான்கு சீர்களால் ஆக்கப்பட்ட செய்யுளாகவும் உள்ளன. ஆத்திசூடியில் மொத்தம் 108 அடிகளும், கொன்றை வேந்தனில் 91 அடிகளும் உள்ளன. பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிய சொற்கள் கொண்டு புனையப்பட்டுள்ள நூல்கள் இவை.

**ஆன்மீகம்**

அக்காலங்களில் இயற்றப்பட்ட எல்லாச் செய்யுட்களுமே இறை வணக்கத்துடன் தொடங்கப்பட்டன. பெருங்காப்பியங்களிலும் அகப் பாடல்களிலும் கூட இலக்கியங்களின் தொடக்கத்தில் இறை வாழ்த்துகளைக் காண முடிகிறது. எனில், அற நூல்களுக்கும் பக்தி இலக்கியங்களுக்கும் சொல்லவே தேவையில்லை. இலக்கியங்கள் இன்றளவும் பாதுகாக்கப்படுவதால் தான் ஆலயங்கள் அமைத்த மன்னர்கள், பக்தி இலக்கியங்கள் எழுதிய புலவர்கள், எழுதுவித்தவர்கள், அரங்கேற்றம் செய்யப்பட்ட நிகழ்வுகள் போன்றவை பற்றி நாம் அறிய முடிகிறது.

"ஆத்தி மலர்களைச் சூடி என்னுள்ளத்தில் அமர்ந்துள்ள சிவபெருமானை வணங்கி இப்பாடல்களை எழுதுகிறேன்" என்னும் பொருளில் இயற்றப்பட்ட இறை வணக்கப் பாடலின் முதற்சொல்லே இந்நூலுக்குப் பெயராக அமைந்துள்ளது. இவ்விறை வணக்கத்திற்கு "ஆத்தி மலரைச் சூடிய சிவபெருமானை உள்ளத்தில் கொண்டுள்ள விநாயகப் பெருமானை வணங்குகிறேன்' எனப் பொருள் கூறுவோரும் உள். அதே போல் தான் சரக்கொன்றை மலர்களை விரும்பியணியும் சிவபெருமானின் மகனான விநாயகப் பெருமானை வணங்குவதாகத் தொடங்கப்பட்டுள்ள செய்யுள் கொன்றை வேந்தன்.

காப்பது விரதம் (ஆ:33)
திருமாலுக் கடிமைசெய் (ஆ:56)
தெய்வ மிகழேல் (ஆ:60)
ஆலயந் தொழுவது சாலவு நன்று (கொ.வே:2)
சிவத்தைப் பேணின் தவத்திற் கழகு (கொ.வே:28)
செய்தவ மறந்தாற் கைதவ மாளும் (கொ.வே:32)
தெய்வஞ் சீறின் கைதவ மாளும் கொ.வே:43)
நேரா நோன்பு சீரா காது (கொ.வே:55)
நோன்பென் பதுவே கொன்றுதின் னாமை (கொ.வே:58)
வையந் தோறுந் தெய்வந் தொழு (கொ.வே:89)

ஆகியவை ஆன்மீகக் கருத்துகளைக் கொண்டவை. அரி, அரன் என்ற வேற்றுமைப் பாகுபாடின்றி இருபெருங் கடவுள்களையும் ஔவையார் சிறப்பித்துள்ளார். நோன்பென்பது பக்தி சார்ந்தது என்பதால் இவ்வுபதலைப்பின் கீழ்க் கொணர்ந்துள்ளேன். புலால் மறுப்பு பக்தியின் பெயரால் வலியுறுத்தப்பட்டுள்ளது. உலகிலுள்ள தெய்வங்கள் எல்லாவற்றையும் அந்தந்தத் தலங்களுக்கே யாத்திரை மேற்கொண்டு தரிசனம் செய்வது புண்ணியம் மிக்கது என இப்பாடல்கள் கூறுகின்றன. தெய்வம், ஆலயம் போன்ற பொதுவான சொற்களைச் சில அடிகள் காட்டுவதால் குறிப்பிட்ட மதத்தையோ குறிப்பிட்ட தெய்வத்தையோ மட்டும் வணங்குமாறு ஔவைப் பிராட்டி நிர்ப்பந்திக்கவில்லையென்பது தெளிவாகிறது.

**விருந்தோம்பல் மற்றும் உணவுமுறை**

உலகின் எந்த நாட்டிலும் இல்லாத மிகச் சிறந்த அறங்களைக் கொண்ட மண்ணாகப் பழந்தமிழ்த் தேசம் இருந்துள்ளது என்பது யாராலும் மறுக்கவொண்ணாத கூற்று. "வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும், இங்கு வாழும் மானிடர்க்கெல்லாம்" என்ற பாரதியின் கூக்குரலுக்கு அடித்தளமாக அமைந்தது ஔவையின் வரிகள் எனலாம். திருக்குறளிலும், புறநானூற்றிலும் ஏனைய சங்கப் பாடல்களிலும் ஈகை குறித்து ஏராளமான அறவுரைகள் இருந்தாலும் சாமானிய மக்களும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையிலும் மனதில் இறுத்திக் கொண்டு வாய்ப்பாட்டாகப் பகரும் வகையிலும் பழந்தமிழ்ப் பிராட்டியார் பாங்குடன் படைத்தளித்துள்ளார் விருந்தோம்பல் பற்றிய கருத்துகளையும் உணவூட்ட முறைகளையும்.

இயல்வது கரவேல் (ஆ:3)
ஈவது விலக்கேல் (ஆ:4)
ஏற்பது (இ)கழ்ச்சி (ஆ:8)
ஐயமிட்டு (உ)ண் (ஆ:9)
அஃகஞ் சுருக்கேல் (ஆ:13)
மண்பறித் துண்ணேல் (ஆ:23)
காப்பது விரதம் (ஆ:33)
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர் (கொ.வே:4)
சையொத் திருந்தால் ஐயமிட் டுண் (கொ.வே:34)
நோன்பென் பதுவே கொன்றுதின் னாமை (கொ.வே:58)

**தொழுதூண் சுவையி னுழுதூ ணினிது (கொ.வே:46)**
**பாலோ டாயினும் காலமறிந் துண் (கொ.வே:60)**
**போனக மென்பது தானுழந் துண்டல் (கொ.வே:69)**
**விருந்திலோர்க் கில்லை பொருந்திய ஒழுக்கம் (கொ.வே:83)**
**உரவோ ரென்கை இரவா திருத்தல் (கொ.வே:85)**
**உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு (கொ.வே:5)**

ஆகிய அடிகள் விருந்தோம்பல், உழைத்துண்ணல், ஊனுண்ணாமை, பகிர்ந்தளித்து வாழ்தல் போன்ற நற்கருத்துகளைக் காட்டுபவை. இவ்வடிகளின் கருத்துகளைச் சுருங்கக் காண்போம். யாசகம் பெறுவது தாழ்வான செயல், யாசகம் அளிப்பது உயர்ந்த செயல் என்னும் கருத்தைப் புறம் முதலான அற நூல்கள் கூறியுள்ளன.

- உண்ணீ ருண்ணீரென்றுபசரியார் தம்மனையிலுண்ணாமை கோடி பெறும் (தனிப்பாடல் திரட்டு)
- வறியார்க் கொன் றீவதே யீகை (குறள்)
- முகந்திரிந்து நோக்கக் குழையும் விருந்து (குறள்)
- விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும்வேண்டற் பாட்டற் றன்று (குறள்)
- ஈயென விரத்த லிழிவு, கொள்ளெனக் கொடுத்த லுயர்வு (புறம்)
- தனியொருவனுக் குணவிலையெனில் சகத்தினை யழித்திடுவோம் (பாரதி)
- குந்தித் தின்றால் குன்றும் மாளும் (பழமொழி)

போன்ற பொன்னொத்த வரிகளின் கருத்துகளை மின்னொத்த ஓரடியில் கூறுகிறார் நம் பெருமாட்டி. நாம் உண்ணும் உணவு நேர்மையுடன் ஈட்டியதாய் இருக்க வேண்டும். ஈண்டு, உணவென்பது உணவுப் பொருளை மட்டும் குறிப்பதன்று; நாம் சேர்க்குஞ் செல்வத்தையும் குறிப்பதேயாகும். மாற்றான் மண்ணுக்கும் பொருளுக்கும் ஆசை கொள்ளக் கூடாது, பிறருக்கு ஈயாமல் சேர்த்து வைக்கும் சொத்து வீணாகும், பகிராமல் பதுக்குவது பயனற்றுப் போகும், உழைத்து வாழ வேண்டும், உயிர் காக்கும் உழவுத் தொழிலே உயர்வானது போன்ற கருத்துகளை அம்மையார் அணியென அமைத்துள்ளார். இதில் “உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு” எனெவும் “உண்டி சுருங்குதல் பண்டிக் கழகு” எனவும் இரு விதமாக மூலப் பதிப்புகள் உள்ளன. உண்டியெனும் பெயர்ச்சொல் ஈண்டு உதரம், உணவு ஆகிய இரண்டிலெதைக் கொண்டாலும் பொருந்தலாகிறது.

**பெண்மை**

இன்றைய காலகட்டத்திற்கொவ்வாத நெறிகளையும் முரண் கொண்ட கருத்துகளையும் ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் திணிக்கிறது என்று ஒருசாரார் குற்றஞ் சாட்டினால், அது பெண்ணியங் குறித்தான அடிகளாகவே இருக்கும். அக்காலத்தில் பெண்களின் எண்ணிக்கை ஆண்களின் எண்ணிக்கையை விடப் பல மடங்கு இருந்திருக்கலாம். ஆண் வாரிசு வேண்டி அடுத்தடுத்துப் பிள்ளைகள் பெற்றுக்கொண்ட காலமது. கருவில் உருவாகும் பாலினத்தை யறிந்துகொள்ளுங் கருவிகளோ, கருத்தடைச் சாதனங்களோ இல்லாத அக்காலத்தில் ஒவ்வொரு குடும்பத்தாரும் தாங்கள் எதிர்பார்க்கும் எண்ணிக்கையில் ஆண் குழந்தைகள் பிறக்கும் வரை தொடர்ந்து பிள்ளைப் பேறு கொண்டார்கள். பெண் சிசுக் கொலைகள் அக்காலத்தில் இருந்திருக்கலாமென்று கருதினாலும், ’ஒரு உயிரைக் கொன்று உணவாகத் தின்பதையே பெரும்பாவமென்று கருதிய நம் முன்னோர், தாங்களீன்ற குழந்தைகளைக் கொலை செய்திருப்பார்களா?’ என்பதும் யோசிக்க வைக்கும் கருத்தாவுள்ளது. எவ்வுயிரையும் கொல்லக் கூடாதென்னுங் கருத்தை இதே ஔவையார் “நோன்பென் பதுவே கொன்றுதின் னாமை” (கொ.வே:58) என்று இன்னொரு பாவிற் கூறுவதால் அக்கால வழக்கத்தில் சிசுக் கொலைகள் இருந்திருக்காது என்னும் தெளிவுக்கு வரலாம். ஆக, பெண்சிசுக் கொலைக ளென்னுஞ் சமூக அவலம் கடந்த ஓரிரு நூற்றாண்டுகளில் தான் நடந்திருக்கும் எனக் கருதலாம்.

ஆயிரமாண்டுகளுக்கு முன்னர் இருந்த நடைமுறைக்கேற்ப ஆத்திசூடியும் கொன்றை வேந்தனும் எழுதப்பட்டதேயொழிய பெண்ணடிமைத் தனத்தினை வளர்க்கும் நோக்கில் இவை எழுதப்படவில்லையென்று நாம் வழுவமைதி கொள்ள வேண்டும். ஏனெனில், கற்பெனுங் கருவியைப் பெண்ணுக்கும் வீரமெனுங் கருவியை ஆணுக்கும் பொருத்தியது நம் இலக்கணம்.

**தையற் சொற் கேளேல் (ஆ:62)**
**மைவிழியார் மனையகல் (ஆ:95)**
**உண்டி சுருங்குதல் பண்டிக் (பெண்டிர்க்) கழகு (கொ.வே:5)**
**கற்பெனப் படுவது சொற்றிறம்பாமை (கொ.வே:14)**
**காவல் தானே பாவையார்க் கழகு (கொ.வே:15)**
**சந்ததிக் கழகு வந்தி செய்யாமை (கொ.வே:26)**

துடியாப் பெண்டிர் மடியி னெருப்பு (கொ.வே:41)
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
(கொ.வே:42)
பேதமை யென்பது மாதர்க் கணிகலன்
(கொ.வே:66)
மைவிழி யார்தம் மனையகன் றொழுகு
(கொ.வே:78)

ஆகியவை பெண்மை குறித்தான ஔவையின் செய்யுட்கள். இவற்றின் பொருள் பெண்ணுக்கு மட்டுமல்லாது ஆணுக்குரிய ஒழுக்கத்தையும் வலியுறுத்துகிறதென்பதையுங் கவனத்திற் கொள்ள வேண்டும். ஒருவனுக்கொருத்தி யென்னுங் கட்டுப்பாடு அக்காலத்தில் இருந்திருக்கவில்லை. அவ்வாறு ஒரு ஆடவன் ஒரேயொரு பெண்ணை மட்டும் மணந்திருந்தால் ஏராளமான பெண்கள் ஔவையார்களாகவே வாழ்ந்து வாழ்க்கையை நிறைவு செய்திருப்பார்கள். அதே போல வேசைத் தொழிலில் ஈடுபட்ட மகளிர் அநேகம் பேர் அக்காலத்தே இருந்துள்ளனரென்பதையும் அறிய முடிகிறது. விலை மாந்தரை மைவிழியார் என்று குறிப்பிடுகிறார் ஔவை.

“தாய்மையடையும் போது தான் பெண்மை நிறைவு பெறுகிறது’ என்னுங் கருத்தினைப் பெருமாட்டியார் சொல்வது பிள்ளைப் பேறு பெற்ற பெண்டிருக்குப் பெருமையாக இருக்கும். ஆனால், “சந்ததிக் கழகு வந்தி செய்யாமை” என்றது குழந்தைப் பாக்கியமற்ற பெண்களின் வலியை அதிகமாக்கும் என்பதாகக் கருதாமல், தன் வம்சாவளி தழைக்க மணம் முடித்துக் கொண்டு இல்லறம் பேணுவதும், தான் மணம் முடித்த பெண்ணுக்குப் பிள்ளைப் பேறு கொடுப்பதும் ஒவ்வொரு ஆணின் கடமையென்று நாவலர் உரை கூறியுள்ளார். ’தையல் சொற் கேளேல்’, ’பேதமை யென்பது மாதர்க் கணிகலன்’ என்னும் அடிகள் பெண்களின் மதிப்பை இழிவுபடுத்துவதாகத் தோன்றுவது ஏனென்றால் அக்காலத்தில் பெண்கள் வீட்டோடு இருந்துள்ளதாலும் கல்வியறிவில் குன்றியிருந்ததாலும் பரந்து பட்ட உலகியலறிவில் ஆண்களின் மட்டிற்கு இணையின்றி இருந்ததாலும் பெண்களின் ஆலோசனையோ நிர்வாகத் திறனோ சொல்லிக் கொள்ளும்படி இருந்திருக்கவில்லை யென்பதாலாகும். “எண்ணற வெண்ணி எழுத்தற வாசித்தாலும் பெண்புத்தி பின்புத்தி’ என்னும் பழமொழி அக்காலத்தில் இருந்துள்ளது. ஆனால் இன்று உடற்றிறன், மனத்திறன், ஆட்சி, கல்வி, நிர்வாகம் என எல்லாவற்றிலும் ஆணுக்குப் பெண் நிகரெனுமளவு உயர்ந்திருக்கிறார்கள் இன்றைய பெண்கள்.

துடியாப் பெண்டிரென்றது தன் கணவனுக்கு ஒரு துயர நேர்வெனில் அவனது மணவாட்டியானவள் துடிதுடித்துப் போக வேண்டுமாம். ஆனால், மனைவிக்கு ஒன்றென்றால் கணவன் துடிதுடிக்க வேண்டுமென்று பாட்டியின் பாட்டில் சொல்லவில்லயே? இது ஏனென்றால் ஒரு ஆடவனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் அக்காலத்தில் இருந்ததன் காரணமாகவிருக்கலாம். மேலும் பொருளீட்டுதல் ஆடவனின் கடமையாகவும் இல்லறம் பேணுதல் பெண்டிரின் கடமையாகவும் அக்காலத்தில் இருந்துள்ளது.

எல்லாந் தெரிந்தவளாக இருந்தாலும் எதுவுமே தெரியாதவளைப் போல் தன்னடக்கத்துடன் பெண்கள் நடந்து கொள்ள வேண்டுமாம். தான் ஒரு பெண்ணாக இருந்தும், ’பெண்ணெனப்படுபவள் அதிகப் பிரசங்கித் தனம் செய்யக் கூடாது’ என்பதை இவ்வாறு கூறுகிறாள் ஔவை. பெண்ணுக்கான இலக்கணங்களாக அச்சம் முதலான நால்வகைக் குணங்களைப் பொருத்தி வைத்தது நம் தமிழிலக்கணம். ’அஞ்சும் மூணும் அடுக்கா யிருந்தால் அறியாப் பெண்ணும் ஆக்கிடுவாள்’ என்பது பழமொழி. இப்பழமொழியை அக்காலச் சூழலுக்குப் பொருத்திப் பார்த்தோமேயானால் ஔவையின் வரிகள் சரியாக இருக்கும். அஞ்சும் மூணும் என்பது அரிசி பருப்பு முதலான எட்டு வகை மூலப்பொருட்கள். சமையலுக்குத் தேவையான மூலாதாரங்கள் எல்லாம் சரியாக இருந்தாலென்பதை, அவற்றைத் தன் கணவன் பொருளீட்டுதல் மூலமாகவோ பயிர்த்தொழில் மூலமாகவோ சேகரம் பண்ணி வைத்தால் எனக் கொள்ள வேண்டும். சுருங்கச் சொல்லின், பொருளீட்டல் ஆடவன் கடமை; உணவு செய்தல் பெண்டிரின் கடமை.

குடும்பத்தார் அனைவருக்கும் உணவு சமைத்துக் கொடுத்தாலும் பெண்களின் வயிறு சுருங்கியே இருக்க வேண்டுமாம். அஃதாவது, பெண்கள் வயிறு முட்டத் தின்னக் கூடாதெனப் பொருள்படுமாறு இவ்வடியிருந்தாலும் இதன் மறைபொருள் பிறிதொன்றாகக் கருதப்படுகிறது. உண்ட உணவு செரிமானம் ஆகிற வகையில் வீட்டுப் பணிகளையும், விறகு சேகரித்தல், நீர்நிலைக்குச் சென்று நீர் கொணர்தல், பயிர்த் தொழிலுக்குதவுதல் போன்ற வேலைகளையுஞ் செய்வது பெண்களின் உடல்நலனுக்கு நல்லது. நாம் முன்னரே பார்த்த ’சந்ததிக் கழகு வந்தி செய்யாமை’ என்பது இங்கே மறைபொருளாகக் கொள்ளப்படுகிறது. அதெவ்வாறாயின், பெண்களின் வயிற்றிலே தான் கருப்பை உள்ளது. அதிக உணவு உட்கொள்வது கருப்பைக்கு நல்லதல்ல

என்பதால் சந்ததி விருத்தம் பெண்களிடமே என்பதை இவ்வடியுடன் பொருத்திக் கொள்ள வேண்டும். அருந்தியது அற்றது போற்றி உண்டால் (குறள்:942) பெண்களின் உண்டி சுருங்கியே இருக்குமன்றோ? எவ்விதமாயினும், அற்றது போற்றி யுண்பது ஆடவர்க்கும் நன்மையே, பெண்களுக்கும் நன்மையே.

**சொல்வன்மை மற்றும் வாய்மை**

**சொற்சோர் வுபடேல் (ஆ:53)**
**நொய்யவு ரையேல் (ஆ:75)**
**பழிப்பன பகரேல் (ஆ:77)**
**பிழைபடச் சொல்லேல் (ஆ:79)**
**மிகைபடச் சொல்லேல் (ஆ:90)**
**மொழிவது (அ)றமொழி (ஆ:97)**
**வல்லமை பேசேல் (ஆ:99)**
**வாதுமுற் கூறேல் (ஆ:100)**
**வெட்டெனப் பேசேல் (ஆ:105)**
**ஓரஞ் சொல்லேல் (ஆ:109)**
**கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை (கொ.வே:14)**
**கீழோ ராயினும் தாழ வுரை (கொ.வே:17)**
**நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை (கொ.வே:50)**
**நைபவ ரெனினும் நொய்ய வுரையேல் (கொ.வே:56)**
**மொழிவது மறுக்கி னழிவது கருமம் (கொ.வே:79)**
**மோன மென்பது ஞான வரம்பு (கொ.வே:80)**
**கூரம் பாயினும் வீரியம் பேசேல் (கொ.வே:19)**

ஆகியவை பேச்சாற்றலையும் வாய்மையையும் குறிக்கும் ஔவையின் ஓரடிச் செய்யுட்கள். பேச்சில் தன்னடக்கம் இருக்க வேண்டும், பெரியோர் முன் பணிவாகப் பேச வேண்டும், சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டும், சொல்வன்மையைக் காட்டிலும் மௌனமே மேலானது, பொய் பேசுவதும் புறங் கூறுவதும் கூடாது, தற்பெருமை பேசக் கூடாது போன்ற நற்கருத்துகளை மேற்காண் அடிகளின் மூலம் வலியுறுத்துகிறார். எவ்வளவு அழகான அறங்களிவை? இவை எந்நாட்டவர்க்கும் எக்காலத்திற்கும் ஏற்ற கருத்துகளே. நடைமுறைப் பயன்பாட்டுச் சொற்கள் கொண்ட நடையிலிருப்பதாலும் சிறுசிறு சொற்றொடர்களாக விருப்பதாலும் இவை படிக்கவும், மனதிலிறுத்திக் கொள்ளவும் எளியவையெனலாம். “கோடான கோடி கொடுப்பினுந் தன்னுடை நாக் கோடாமை கோடிபெறும்” என்றதும் ஔவையாரின் தனிப்பாடலே. இவ்வடியையும் வள்ளுவப் பெருந்தகையின் வாய்மை, சொல்வன்மை போன்ற அதிகாரங்களையும் ஏனைய தமிழ்ப் புலவர்களும் கவிஞர்களும் தமிழ் வளர்த்த சான்றோர்களும் ஈரடி முதல் நீண்ட நெடிய அடிகள் வரை சொன்னவற்றையும் ஔவைப் பெருமாட்டி எத்துணை அழகாக ஓரடியில் சொல்லியிருக்கிறாள் என்பதையெண்ணி நாம் இரும்பூது கொள்ள வேண்டும்; இன்பமதை யள்ள வேண்டும்; ஏட்டின்வழி வாழ வேண்டும்!

**ஒற்றுமையுணர்வு**

என்றென்றும் உலக மக்கள் ஏற்றுக்கொண்டொழுக வேண்டிய ஒற்றுமை குறித்தான அறக் கருத்துகளை நம் முதுபெரும் பெருமாட்டியார் அழகுறக் கட்டமைத்துள்ளார். ஒவ்வொரு மனிதனும் இவரது கருத்துகளைப் பின்பற்றினால் நம் பாரதப் பெருந்தேசம் முழுவதும் அமைதியும் இன்பமும் மிக்க நற்றேசமாக விளங்கும். ஏன், உலக நாடுகளில் உள்ள மானிடர்கள் அனைவருமே பின்பற்ற வேண்டிய கருத்துகள் இவை.

**கிழமைப் படவாழ் (ஆ:34)**
**கூடிப் பிரியேல் (ஆ:37)**
**சான்றோ ரினத்திரு (ஆ:44)**
**சேரிட மறிந்துசேர் (ஆ:50)**
**நாடொப் பனசெய் (ஆ:66)**
**மூர்க்கரோ டிணங்கேல் (ஆ:92)**
**ஊருடன் கூடிவாழ் (ஆ:103)**
**தேசத்தோ டொத்துவாழ் (அ:61)**
**சுற்றத்திற் கழகு சூழ விருத்தல் (கொ.வே:30)**
**நல்லிணக்க மல்ல(து) அல்லற் படுத்தும் (கொ.வே:48)**
**பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும் (கொ.வே:65)**
**மருந்தே யாயினும் விருந்தோ டுண் (கொ.வே:70)**
**விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம (கொ.வே:183**
**ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் (கொ.வே:6)**
**ஒருவனைப் பற்றி யோரகத் திரு (கொ.வே:10)**
**குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை (கொ.வே:18)**

இவற்றுள் எதை நாம் தவறென்று கூறவியலும்? எல்லாமே சரியே. எப்போதுஞ் சரியே. இவை கற்றோர்க்கு மட்டுமோ பொருள் பெற்றோர்க்கு மட்டுமோவென்று ஒதுக்கித் தள்ள முடியாது. மன்னாதி மன்னன் முதல் அன்றாடங் காய்ச்சி வரை அனைவருக்கும் பொதுவான வாழ்வியற் கருத்துகளே. இவற்றுள் பல அடிகள் இன்றளவும் நம்மையுமறியாமல் அவ்வப்போது நம் நாவில் அச்சுப்பிசகாமல் உச்சரிப்பைப் பெற்ற வண்ணமுள்ளன. இவைதாம் ஔவைக் கிழவி நம்மோடு இன்றளவும் வாழ்வதற்கான அடையாளங்களாகவுள்ளன.

**நிறைவுரை**

நம் சீரிளமைத் தமிழ்த்தாயானவள் எண்ணிலடங்கா ஏடுகளையுஞ் சுவடிகளையும் இலக்கிய இலக்கண வடிவுகளில் அலங்கரிக்கப்பட்ட பொக்கிஷங்களாகக் கொண்டுள்ளவள். இவை இவ்வையகத்தில் வேறெந்த நாட்டவர்க்குங் கிடைக்காத வரங்கள். வாராது வந்த மாமணி போல் வாய்த்திட்ட நல்முத்து, நம் சொத்து ஔவைப் பெருமாட்டியெனுந் தமிழ் வித்து. இவ்வித்தினின்றும் வளர்ந்து விருட்சமாகி அதன் விழுதுகளும் கிளைகளுமாய் விரவி நிற்பவையே ஔவையின் அமுத மொழிகள். இவற்றை நாம் மட்டும் வாசித்தின்புற்றால் போதுமா? கூடாது. ஆழிசூழுலகிலுள்ள அத்துணை தேசங்களும் மானிடராய்ப் பிறப்பெடுத்த அத்துணை பேரும் ஔவையின் ஓரடி மொழிகளைக் கண்ணுற்றுஞ் செவிமடுத்தும் வாசித்தின்புற்றும் அவற்றின் வழி வாழ்ந்தும் தமிழுக்கும் தமிழருக்கும் ஔவைப் பெருமாட்டிக்கும் பெருமை சேர்ப்பதொன்றே நம்மைப் பீடுநடை போட வைக்கும். அதற்கு நாமென்ன செய்ய வேண்டும்? ஔவையின் அமுதவடிகளை உலகிலுள்ள எல்லா மொழியினிலும் மொழிபெயர்க்க வேண்டும். ஒலி வடிவிலும் உருவாக்கி உலகெலாம் பரவும் வகை செய்ய வேண்டும்.

**சொற்குறுக்க விளக்கம்**

1. ஆ : அத்திசூடி
2. கொ.வே : கொன்றை வேந்தன்
3. குறள் : திருக்குறள்
4. புறம் : புறநானூறு
5. நாவலர் : ஆறுமுக நாவலர்
6. பாரதி : பாரதியார்

**துணை நின்றவை**

1. மதுரைத் தமிழிலக்கிய மின்தொகுப்பு (1998-2020) தொகுத்தவர்: முனைவர் கே.கல்யாணசுந்தரம், சுவிட்சர்லாந்து
2. ஔவையார் பாடல்கள் - மூலமும் உரையும் ஆறுமுக நாவலர் உரை,புதிப்பும் வெளியீடும் : வித்யாநுபாலனயந்தர சாலை, சென்னை (1914, 1917, 1921)
3. நீதி நூல்கள் ஆக்கம்: பேராசிரியர் அ. மாணிக்கம் பதிப்பும் வெளியீடும் : வர்த்தமானன் பதிப்பகம், சென்னை-17,(2023)

# SOCIO-PSYCHO DYNAMICS OF BINARY SOCIETY IN KALKI'S VISAMANTHIRAM

**Dr.V.Vellaichamy**
*Associate Professor of English*
*Govt. Arts. College, Melur, Madurai TN*


## Abstract

*R.Krishnamoorthi @ Kalki is a prominent Tamil modern writer in Indian literature. He has written a number of historical novels and a collection of short stories in Tamil language. Kalki is one of the best in Tamil modern literary creation and earned respectable place in Tamil literature. His novels provide a significant thrust area to study the social history of Tamil Nadu. The short stories reflect the problems of pre-independent Tamil Nadu. The stories of Kalki reinforce the need of integrity between the mainstream and marginalised sections in the Tamil society. He represents the clash between the mainstream and marginalized sections in the society. In Visamanthiram, Kalki has sketched the life style of Brahmins and portrayed their discrimination against the depressed people in the respected society. He deals with the theme of Gandhian ideology, woman empowerment and he delineates how Hindu mythical belief influences the Brahmins' life in the concerned village. The research paper, Socio-Psycho dynamics of Binary Society in Kalki's Visamanthiram purports to study about the Brahmin's inner psychology of the hegemonic attitude in their characterization and it examines the need of counter arguing the idea through certain characters. The paper amplifies the thesis statement with lens of Ambedkar's idea and thought.*

***Keywords:*** *Myth, Casteism, Mainstream, Subaltern Dream, Women empowerment.*

Kaki argues the issue of casteism in his story, Vishamanthiram. He postulates the way of Brahmins to discriminate the minority people and how the Hindu Dharma executes casteism against the weaker sections of the society in Tamil Nadu. Kalki undermines the behavior of Brahmins in treating snake bite patients. The Brahmin who appears in the story, believes that he can cure the snake bite patient by performing a ritual and reciting manthra to him and he strongly believes that no Dalit caste man or woman must not be seen in front of him. He believes that he should not feel the rancid breath Dalit people towards him. He accredits that his purity and reciting sloga will not thrive to save the snake bite patient if Dalit caste man or woman approaches him. According to Ambedkar, it is the way of segregating the opposite sections in the society. He states that the Brahmins attempted to establish the myth in the air of superiority to discriminate the binary sections of the people in the society through which they fabricated false stories against the oppressed people in the society. Kalki strives to dismantle the Brahmin's myth against the subalterns in the Tamil society and he deconstructs the Brahmin's construct against the subalterns in the society.

Kalki has represented the social movements of Indian freedom struggle and reflected the contradictions of his times in his short story, Vishamanthiram. He seriously criticizes the Brahmin's grip of caste with a sense of humour in his short story, Vishamanthiram. The whole story revolves around the post master Narayana Iyer, a nameless youth and a postal inspector. The story, Visamanthiram is developed through Bramanical belief of cleanliness, reciting manthras, and performing poojas on important Hindu's festivals in the Agragara. The beginning of the story is at the residence of Narayana Iyer and the entire argument takes place in post office. Kalki records the best quality of Narayana Iyer in the story and he shows the power of Narayana Iyer in getting rid of the snake poison from a bitten person by reciting mantra

in the village. Narayana Iyer also exhibits caste differences against the depressed people in the village. Kalki records the arguments of Narayayana Iyer with a progressive youth about the effects of casteism in the same village. Postal Inspector Petha Perumal arrives to inspect the accounts of Narayana Iyer's post office. Petha Perumal and the youth converse that no casteist practices exist among the depressed people and others in the society. The youth states that India will not get freedom unless India disowns the curse of casteism in the society but Narayana Iyer affirms the principle of Varunashram in his life by stating that they have to throw away their all veda Sashtra, manthra in the river. They do not such freedom from the British. Kalki writes, "Appothu Namath vedha sasthirangal, manthirangal ellavatraiyum aatril kattivida vendiyathuthan. Aththagaiya viduthalai enakku vendam!" enrar Narayayana Iyer (Kalki Muththirai Kathaigakal, 42). Kalki records that Narayana Iyer is devoted to Gandhi and his principles. The Iyer has been strictly practising Sudesi since the partition of Bengal. He has a contradictory opinion that he has followed Gandhi and his principles. Gandhi stresses everyone in India should not hold the belief of casteism but Narayana Iyer never lets the practices of untouchability in his life. Narayana Iyer never lends his ear to Gandhi leave untouchability against depressed people in India. Moreover, Gandhi never practised what he preached in the public meeting. There are number of serious arguments going on between the youth and Narayayana Iyer with regard to the differences between Gandhi and him. He challenges Petha Perumal, the postal Inspector and the youth that his manthra will not work in the snake bitten person when the wind of oppressed people blown close to him. Kalki writes, "Aanal ishnam seitha pinnar oru paraiyanudaiya kartu mattum en peril pattuvidattum. Appothu manthiram palippathillaiye! Visham iranguvathilleye! Itharkenna solkiraai?" (Kalki Muththirai Kathaigakal ,41)He presupposes the statement that the people of Paraya do have a strain of ugliness (Theetu) in their body and he is ready to prove it in front of their eyes. The postal Inspector is convinced the statement of Iyer. At that moment, four or five people bring a snake bitten man to his office. Narayana Iyer is ready to save the snake bitten man and he instructs the people to bring turmeric and camphor and he emphasizes his belief to the people nearby not let untouchable people cross the way. Kalki writes, "Avar isnanam seithuvittu varugaiil antha pakkathileye theendathavar yaarum varathapadi parthu kola seithu irunthaar. Miga viravaaga thapal office kattatatathirkulle vanthu, eeraththuniyudan utkarnthu jabam seiya aarampithaar" (Kalki Muththirai Kathaigakal, 44). He has torn a piece from the side of his Uttariyam and has dipped it in turmeric. He has finished the twenty-one pebbles in a row and separately. Thus he has kept chanting the mantra at the end. Prayer is done like this for about fifteen minutes. All this time camphor is burning incessantly in the midst of the sacred ash spread on a plate in front. When the chanting is over, Narayanayar gets up and has wrapped the cloth made of pebbles as a garland around the neck of snake bitten man and after that he has applied the enchanted sacred ash all over it. Then, the unconscious man has regained consciousness within a few minutes. Within half an hour he has returned to his old state and gone home.

The postal Inspector, Petha Perumal, on witnessing the scene states that Narayana Iyer is greatly deceived and he affirms that he is a Paraiah. He said that he was born in Singapore. No one knew about him. He did not have relatives and he added that he had his education through father's wealth. He never said that he was a paraiya. Then, the post master looks dazed for a moment and he has happily agreed that the untouchables have no blemishes in their life. He has evasively said that he has wrongly interpreted from his master. He has also warned about the defilement of menstruating women in holy occasions. The postmaster, knowing the situation shirks from the abuse of Petha Perumal and the youth. The Brahmins not only discriminate the

subalterns but also discriminate women in their life. Women are considered as second class citizens in their house. They rigorously view women's menstruation as a dirty one. The fail to understand the natural cycle of women in menstruation and they segregate women on important occasions in their houses. Hence, the Brahmins manipulate their ideology to discriminate the opposite binary and the women in the society.

According to Dr. Ambedkar, the notion of untouchability is practised due to the practice of beef eating by Natives of India even after Brahmins had given up eating beef in their life. The Brahmins had a contempt and hatred against the natives (qtd. in *Essential Writings of B. R. Ambedkar* , 115). It is further inferred that the Brahmins were the Aryas who took beef of the cow and the beef of the buffalo and drank madhu (wine) in the past. The Aryas of north India bred horse, ox, buffalo and goat used them as their food. The food habit of early Aryans is also shown in Tamil literature (*Kaliyaperumal, Tamizhar Unmai Varalaru,* 126). It is very interesting to note about the Brahmin poet, Kabilar who also acknowledges himself for taking beef as his food (126). Thiruvalluvar also stresses the Tamil people not to eat flesh in his chapter, Pulal Maruthal (Abjuring Flesh Meat). But later on, the Aryas wished to establish a new identity against native groups by practising to negate beef eating in their food habit confronting Budhists in the past. Finally, they were accustomed to take only vegetables in due course of time. As a result, they exposed themselves to others so 'clean' in their food behaviour. They looked at the beef eaters strangely and called them 'unclean people' and at once they bred the notion of untouchability amongst beef eating native people (Dalits) and it might have scattered across India over the period of many centuries. Hence, the Brahmin, Narayana Iyer discriminates the natives in the name of Hinduism Dr. Ambedkar states that the Hindu society is a myth and the name, 'Hindu' is itself a foreign name given by Mohammedans and he underlines that the word, 'Hindu' does not occur in any Sanskrit work (*Annihilation of Caste*, 17) such as Vedas and Upanishads. Kalki stresses such people to shed the complex of casteism against the depressed people in Tamil Nadu. Moreover, Caste system is a social division of the people of same race. It is a hierarchy of Brahmins, Kshatriya, Vaishya, Sudra and Panchamars. Brahmins' superiority over other varunas had made them to act strangely in the society. Besides Varuna system, the Brahmins, on account of native's physical features, have a racial prejudice against the depressed people in India. Ambedkar states that caste is the natural outcome of certain religious beliefs of shastras and the Brahmins believe that Sashtras are the inspiration of sages endowed with supernatural wisdom and it cannot be disobeyed. Therefore, Narayana Iyer cannot disobey the words of his Guru. According to Ambedkar, the secular citizen must destroy the sacredness and destruct the invested divinity in casteism under the authority of shastras and vedas (38). Ambedkar criticizes the mind of the Hindus operating under the spell of shastras. The Hindus follow veda, smrita or sadachar and they cannot follow anything else. Ambedkar undermines that rationalism in interpreting the vedas is absolutely condemned. The Hindu cannot resort to rational thinking (*Annihilation of Caste*, 42) in actions. Hence, the Brahmins acted/ act in accordance with Manu's laws in the society. Kalki states that Narayana Iyer is a religious devotee in the village. Bhagavada Purana is his veda. Lord Krishna is his God. He has built a small mandapam and installed the picture of Kannabiran. Every day in the evening, his wife decorates the house with pictures and garlands with lights. Narayana Iyer will perform Ramajepam with a pitch on the Tambura on sadurday Egadesi days. All his students know the stories of Ramayana, Mahabharatha and Bhagavadha. He will distribute karkandu to those sing three songs of Thaumanavar. Narayana Iyer believes the shastras and he is seriously devoted to his master in not obeying instructions of vedas and his mind is under the spell of shashtra and he never allows himself to put rationalized questions to the

scriptures. He does it habitually in his house. Hence, Narayana Iyer acts against the marginalized people in the society.

Hence, the paper, Socio-Psycho dynamics of Binary Society in Kalki's Visamanthiram has studied the two societies such as the main stream and marginalised society. Narayana Iyer represents the main stream society, Petha Perumal, the marginalized society. Narayana Iyer is steeply rooted in Hindu tradition whereas Petha Perumal questions the Hindu norms in the story. The paper has seriously studied about the weakness of Narayana Iyer with a light Ambedkar's ideology. According to Ambedkar, the Hindus are under the spell of shashtras and mantras. They always associate divine qualities with their caste. The paper has also highlighted Petha Perumal's attitude in bringing out the rational truth to Narayana Iyer. Moreover, the Brahmins' key position in social hierarchy has made them discriminate/oppress/marginalize their counterparts in India.

**Works Cited**

1. Ambedkar.B.R. *Annihilation of Caste*. New Delhi: Critical Quest. 1936. Print.
2. Kaliyaperumal, S.Captain. *Tamilar Unmai Varalaru*. Chennai: Palam Publishers, 2002. Print.
3. Pope. G.U. Ed. *Thirukkural*. Chennai: Mercurysun Publications. 2010. Print.
4. Roderigues, Valerian, ed. *The Essential Writings of B. R. Ambedhkar*. New Delhi: OUP, 2002. Print.
5. Thirumalai.M .Ed. *Kalki Muththiraikathaigal*. Madurai: Chellappa Pathippagam. 2012. Print.

# சோகவனம் சிறுகதை காட்டும் உலகமயமாதல்

**திருமதி சு. வேல்தாய், M.A., M.Phil., (Ph.D).,**
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*பி.கே.என். கலை மற்றும் அறிவியல் கல்லூரி, திருமங்கலம், மதுரை*

## முன்னுரை

'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்? ஒழுங்காய் பாடுபடு வயக்காட்டில், உயரும் உன் மதிப்பு அயல்நாட்டில், "எத்தனை ஆண்டுகள் உருண்டோடினாலும், எத்தனை நூற்றாண்டுகள் கடந்தாலும் அழியாத கல்வெட்டாக நிலைத்து நிற்கும் உண்மை வரிகள் இப்பாடல் வரிகள் நமதுநாடு செல்வச்செழிப்பு மிகுந்த நாடு.

**"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்**
**காடும் உடைய தரண்"**

**(குறள்: அரண்: 742**

மணி போல தெளிந்த நீரும், வெட்ட வெளியான நிலமும், மலையும், அழகிய நிழல் உடைய காடும் உள்ளதே நாட்டின் அரண்கள் என்று வள்ளுவர் கூறுகிறார்.

மேலும் நாட்டின் வளத்தைப் பற்றிக் கூறும் பாரதிதாசன் மலைவளமும், கடல் வளமும், நில வளமும் நிறைந்த ஒரு நாடு நம் தமிழ்நாடு என்கிறார். இந்தச் சிறப்புக்களை மையமாகக் கொண்டு நாட்டை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என பாகுபாடும் செய்திருந்தனர். மருத நிலத்தைச் சொல்லும் பாரதிதாசன்,

**பாடிவரும் ஆறுகள் பல**
**பரந்து உயர்ந்த மலைகளும் பல"**

**(நாடு,மருதம், வரிகள் 5,6)**

என்கிறார்.

மேலும் நாட்டில் உள்ள சோலையைப் பற்றி வர்ணிக்கும் போது,

***தென்றல் சிலிர்க்க வரும்***
***சோலை தனிற் குயிலும்***
***தேன் சிட்டும் பாடும் அங்கு மாலை***
***மணக்கும் மலர்***

***(நாடு : எழில் மிகுநாடு, வரிகள் : 8-11)***

கனிகளும், தானியங்களும் கொடுக்கும் இயற்கை வளத்தைப் போல, சோலைகளும், சோலைகளில் உள்ள மரம், செடி ஆகியவற்றில் பூத்த மலர்களும், மரங்களிலும், மலர்களிலும் பொருந்தி இருக்கும் குயிலும், சிட்டும் பாடும் பாக்களும் இயற்கை வளர்த்திற்கு அழகு சேர்ப்பவை என்கிறார் பாரதிதாசன்.

அனைத்து வளங்களும் நிறைந்த நாடு உலகமயமாதல் என்னும் கொள்கையால் நமதுநாடு பலவித மாற்றங்களையும், விளைவுகளையும் சந்தித்துக் கொண்டிருப்பதை அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. மாறிவரும் இயந்திரமயமான வாழ்க்கைச் சூழலால் இம்மண்ணில் உலக உயிர்கள் மட்டுமல்லாமல் பறவையினங்களும் உயிர் வாழ்வதற்கு பல விதமான இன்னல்களைச் சந்திக்கின்றன.

## உலகமயமாதல்

உலகமயமாதல் இன்று உலகம் முழுவதும் பரவிவிட்ட காற்றுபோல சுற்றி வருகிறது. தொலைத்தொடர்பு, போக்குவரத்து தகவல் தொழில்நுட்பம், அரசியல், பண்பாடு ஆகிய துறைகளின் முன்னேற்றங்களினால் உந்தப்பட்டு உலக சமூகங்களுக்கு இடையேயான அதிகரிக்கும் தொடர்பையும் அதனால் ஏற்படுத்தப்பட்டு வரும் ஒருவரில் ஒருவர் தங்கிவாழ் நிலையையும் உலகமயமாதல் எனலாம். உலகமய சூழலில் ஒரு சமூகத்தின் அரசியல், பொருளாதார சமூக, பண்பாட்டு நிலமைகளும், நிகழ்வுகளும் மற்றைய சமூகங்களில் தாக்கத்தை ஏதுவாக்குகின்றது. இது உலகமயமாதல் வரலாற்றில் ஒரு தொடர் நிகழ்வுதான். உலகத்தின் பல நாடுகளின் பாரம்பரியமிக்க பல பண்பாடுகளைக் காணாமல் போகச் செய்வதில் இந்தக் கொள்கை பெரும்பங்கு ஆற்றி வருகிறது. எடுத்துக்காட்டாக பாரம்பரியத்தில் சிறந்து விளங்கிய நம் இந்திய நாடு இன்று வளங்களை இடித்து, பண்பாட்டைக் களைத்து, மனித நேயத்தை விடுத்து பணம் ஒன்றையே குறிக்கோளாய்க் கொண்டு செயலாற்றி வருகிறது. இத்தகைய உலகமயமாதல் கொள்கையின் தாக்கத்தை அடிப்படையாகக் கொண்டு சோ.தர்மன் அவர்கள் சோகவனம் என்னும் சிறுகதையை அமைத்துள்ளார்.

## ஈரம் நிறைந்த எழுத்தாளர் சோ.தர்மன்

"கலப்புல் களத்திலே என்றாலும் சாடை காட்டிலே" என்பது சொலவடை அதுபோல நான் எங்கே இருந்தாலும் பேனாவைத் தொடும்போது என் மக்களும் அவர்கள் வாழும் கரிசல் மண்ணும் தான் என் கண் முன்னே நிற்கும் என்று கூறிய மிகச்சிறந்த

படைப்பாளர். தொழில் சார்ந்த செயல்பாடுகளையும் சமூகம் சார்ந்த செயல்பாடுகளையும் முதன்மைப்படுத்தி கதைகள் எழுதி வருகிறார். ஒரு நல்ல எழுத்தாளன் வாசகனுக்குத் தன் இறக்கைகளைத் தந்து காடுகள், மலைகள், பாலவனங்களில் அழைத்துச் செல்ல முடியும். ஒரு கதையைப் படிக்கும் வாசகன் அது பற்றிய பார்வையையும் எதிர் கொள்ளும் வண்ணம், உள் வாங்கிக் கொள்ளும் வண்ணம் சிறுகதை எழுதுவதில் தன்னை அடையாளப் படுத்திக் கொள்கிறார். உலகையே உலுக்கிய கொரோனா பெருந்தொற்றில் இருந்து பாதிக்கப்பட்டோரைக் குணமாக்குவதற்கு ஆக்ஸிஜன் உருளைகளை நடைமுறையில் பயன்படுத்தினர். அது கிடைப்பதில் பற்றாக்குறை ஏற்பட்ட போது சிகிச்சையைத் தொடர்வதில் சிரமம் ஏற்பட்டது நாம் அனைவரும் அறிந்ததே. எதிர்வரும் காலங்களில் இயல்பான சுவாச நடைமுறைக்கும் ஆக்ஸிஜன் உருளையைப் பயன்படுத்தும் அவலநிலை மனித குலத்திற்கு வரலாம். இத்தகைய அவலநிலை நேர்வதற்கான அறிகுறிகளைத் தனது சோகவனம் சிறுகதையில் குறியீடாகக் காட்டியுள்ளார். இக்கதையில் முதன்மை கதாபாத்திரங்கள் என்று எதுவும் இல்லை. ஜோடிக்கிளிகளும், மயில்களும், குயில்களும் சிட்டுக்குருவிகளும் காணாமல் போன பலவகையான மரங்களும், செடி கொடிகளும் தான் இக்கதையின் கதாபாத்திரங்கள், கதைக்கான களமாக ‘வனம்’ மட்டுமே அமைகிறது. அந்த அளவுக்கு இந்தக் கதையில் காட்டில் வாழும் உயிர்களின் உலகம் நம் கண் முன் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

### கதைப்போக்கு

சூல் கொண்ட பெண் கிளியோடு ஆண்கிளி இணைந்து தம் வம்சத்தை வெளியுலகிற்குக் கொண்டு வருவதற்காகப் பாதுகாப்பான இடத்தைத் தேடி அலைகின்றது. மரப்பொந்துகள் இருக்கும் இடம் தேடி வனம் எங்கும் அலைந்தும் பாதுகாப்பான இடம் கிடைக்கவில்லை. தாம் பிறந்த தாய் வீடு இருந்த இடத்தில் இருந்த இலவம், மட்டி, கோங்கு, பிள்ளை மருது, தேக்கு போன்ற மரங்களைக் காணவில்லை. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை வெட்டிட வெளிதான் காட்சியளித்தது. இறுதியாக தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி இருந்த மொட்டை பனை மரத்தின் உச்சியில் சென்று தஞ்சமடைந்தன கிளிகள். வனங்களில் கிடைத்த பழங்கள், ஓடை நீருக்குப் பதிலாகச் சாலை, ஓரங்களில் மனிதர்கள் வாங்கிச் சாப்பிட்டுக் கீழே எறிந்த உணவுப் பொட்டலங்களில் ஒட்டியிருந்த பிரியாணித் துகள்கள், புளியோதரைப் பருக்கைகளும், பாலித்தீன் பையில் அடைபட்டு மீதமிருந்த தண்ணீருமே கிளிகளுக்கு உணவாகக் கிடைத்தன.

நெடுஞ்சாலை வாகனங்களின் இரைச்சல் வாகனங்களில் இருந்து வெளிவரும் புகை, இவற்றுக்கிடையே ஒரு வழியாகக் குஞ்சுகள் வெளியுலகை எட்டிப்பார்த்தன. கிளிகள் இரண்டும் தம் குஞ்சுகளுக்குத் தம் பாஷையான “கீக்கீ…’ என சொல்லிக் கொடுக்க முடியாதபடி வாகனங்களின் இரைச்சல் சத்தம் அதிகமாக இருந்தது. கிளிகளின் பச்சை நிறமும் கூட மாறத் தொடங்கியது. வாகனங்களின் அதிகமான சத்தத்தினால் கிளிகள் தம் பாஷையை மறந்து வாகன ஒலியைப்போல் சத்தமிடத் தொடங்கின. மனிதர்கள் ஒற்றைப் பனைமரத்தில் இருந்து வரும் ஹாரன் ஒலியைக் கேட்டு பேய் என நினைத்து அம்மரத்தை அடியோடு வெட்டிச் சாய்த்தனர். செடிகொடிகள் மட்டுமே மீதமிருந்த வனத்தில் இருந்து மயில்களும், குயில்களும், வாகன ஓசை போன்று குரல் எழுப்பத்தொடங்கின. இவ்வாறு வனத்தில் வாழும் பறவைகளின் ஓசைகள் பஸ்ஹாரன் சத்தமாகவும், ரயில் ஹாரன் சத்தமாகவும், ஆலை இயந்திரங்களின் சத்தமாகவும் வனத்தில் நிரம்பி வழிந்தன. அதனால் தன் செவிப் பறைகள் கிழிந்து ஊமையாகிப் போன வனம் நாளா வட்டத்தில் சுண்ணாம்புக் காளவாசலாக மாறி அக்னியாய் தகித்தது.

### உலகமயதாலின் தாக்கம்

நீரால் ஏற்படும் அழிவினைத் தடுக்க மரங்கள் அவசியம் தேவை. மரங்கள் நிலச்சரிவினைத் தடுப்பது மட்டுமின்றி அடர்ந்து உயர்ந்து பருத்துத் தோப்புகளாக அமைந்திருந்தால் மழை நன்கு பொழியும் என்பதையும் நம் முன்னோர்கள் அறிந்திருந்தனர். இதனால் தான் சங்க இலக்கியத்தில் மரங்கள் நிரம்பிய முல்லை நிலம் காட்டப்பட்டுள்ளது.

“சுற்றுச் சூழலை மேம்படுத்த முக்கியமான வழிமுறை மரக்கன்றுகளையும் மற்ற தாவரங்களையும் நடுதல் ஆகும்”.

காட்டு அழிவால் காற்றில் கலந்திருக்கும் கார்பன்டை ஆக்ஸைடு பிராண வாயுவாகத் தாவரங்களின் மூலம் மாற்றப்படும் நிகழ்வு தடைபடுகிறது. அதனால் சுவாசிக்கும் காற்றில் கார்பன்-டை-ஆக்ஸைடு அதிகரித்து நோய் பரவ வழிகோலும். எனவே தான் மரங்கள் பாதுகாப்பு இன்றியமையாததாகிறது.

“பத்து குளிர்சாதன கருவிகள் தொடர்ந்து ஓடுவதால் கிடைக்கும் குளிர்ச்சியானது ஒரு தனி மரத்தின் நிழல் மூலம் கிடைக்கிறது. 18 பேர்களுக்கு

ஓர் ஆண்டுக்கு சுவாசிக்கத் தேவையான பிராணவாயு ஓர் ஏக்கர் நிலத்தில் வளர்ந்த மரங்கள் தருகின்றன என்கிறார் கல்கத்தார என்பவர்.

மரத்தினைப் பாதுகாக்கும் நெறி பண்டை காலத்தில் இருந்தமை,

**"மரம் சா மருந்தும் கொள்ளார் மாந்தர்"**

**(நற்றிணை – 226)**

என்ற பாடல் மூலம் பதிவு செய்யப்படுகிறது. மருத்துவப் பொருட்கள் தயாரிப்புக்குக் கூட மரத்தினை வெட்டக் கூடாது என்ற பழந்தமிழரின் உணர்வு போற்றத்தக்கது.

**'மரம் கொல் தச்சன் கைவல்.....'**

**(புறம்-206)**

மரத்தினை வெட்டும் தொழிலை கொல்லும் தொழிலுக்கு இணையாக வைத்துப் பேசியுள்ளது புறநானூறு. 'மரம்கொல்' என்ற சொல்லாடலுக்கான அழுத்தம் உயர்திணைக்கு உரிய மரபினை மரங்களுக்கு அளித்துள்ளமை தெரிய வருகிறது.

முல்லையும், குறிஞ்சியும் தம் இயல்பில் திரிந்ததால் நேரும் பாலை நிலமாகச் சங்கப் பாடல்கள் முன்வைக்கும் சில காட்சிகளைச் சோகவனம் சிறுகதையும் நினைவூட்டுகிறது.

**"உள்நீர் வறப்பப் புலர் வாடும் நாவிற்குத்**
**தண்ணீர் பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்**
**கண்ணீர் நனைக்கும் கடுமைய காடு"**

**(கலித்தொகை -6, 4-6)**

உள்நாக்கு வறண்டு போகும் அளவிற்குத் தாகம் எடுத்து, நாக்கு வறண்டு தொடங்கிட, எங்கும் தாகம் தீர்க்க தண்ணீர் கிடைக்காமல் இறுதியாகத் தன் கண்ணீரே வழிந்து நாக்கின் வறட்சியைச் சிறிது தணிக்கும் அவலம் நிறைந்தது தலைவன் பொருள் தேடிச் செல்ல எண்ணும் காடு என்று சங்கப் பாடல்கள் கூறும் காட்டின் நிலமையைப் போன்ற அவலம் சோகவனம் சிறுகதையிலும் காணமுடிகிறது. ஆண்கிளியானது மலையருவிகள், சொட்ட, சிற்றோடைகளில் பாம்பின் நெளிவாய், சுவை கொண்டு பாய்ந்து வரும் கண்ணாடித் தண்ணீர் தேடி அலைந்தது. தூரத்தில் தெரிந்த குளத்தில் தண்ணீர் இருப்பதைக் கண்டு பறந்து சென்று உற்றுப் பார்த்தது. ஒர்க்ஷாப் கழிவுகள் சேர்ந்து எண்ணெய்ப் படலம் மிதக்கும் கருமைநிறத் தண்ணீரின் தோற்றம் பிடிக்காமல் பறந்து போனது.

**"வானிடைஓர் வானடர்ந்த வாறு – பெரு**
**வண்கிளை மரங்கள் என்ன நீறு!"**

*என்று இருந்த வனமானது*

**"வானும் கனல் சொரியும் ! – தரை**
**மண்ணும் நல் எழுப்பும்!**
**..................**
**.....................**
**ஆன திசை முழுதும் - தணல்**
**அள்ளும் பெருவெளியாம்!"**

என்ற வரிகளுக்கு ஏற்ப மரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு தணல் பொழியும் இடமானது. அந்த தணல் தகிக்கும் வனத்தை விட்டு நீர் தேடி அலையும் வேளையில் கானல் நீரினைக் கண்டும் உள்ளம் உவகை கொண்டு அதைக் குடிக்கச் சென்று ஏமாற்றம் அடைந்தது. இக்காட்சியானது,

**"வேனில் உழந்த வறிது உயங்கு ஓய்களிறு**
**வான் நீங்கு வைப்பின் வழங்காத்தேர்**
**நீர்க்கு அவாவும்**
**கானம்"** **(கலித்தொகை – 1)**

யானை கானல் நீரை உண்மையான நீர் என நம்பித் தேடி ஓடிய பாலை நிலக் காட்சியை நினைவூட்டுகிறது. "எவ்வளவு பெரிய இலவமரம், தன் தாய் வீடாக இருந்த மரம். எவ்வளவு உயரம், எத்தனை பொந்துகள், பக்கத்திலேயே கூடாரமாய் கிளை பரப்பி வெயில் முகமே தெரியாமல் எந்நேரமும் நீருக்குள் இருப்பது போன்ற குளிர்ச்சியைத் தரும் நிலவாகை மரம், சந்தன மணம் கமழும் சந்த மரம் என எதையும் காணவில்லை. அடர்ந்த மட்டி, கோங்கு, பிள்ளை மருது ஆயிரம் கைகள் விரித்தாற் போல் நின்ற தேக்கு மரம் என எதுவும் நின்ற இடம் தெரியாமல் போனது. அத்தனை மரங்களையும் உயிர்ப்பித்த பூமியா உள்வாங்கிக் கொண்டு ஏப்பம் விட்டது?" என்பது போன்ற வரிகள் எதிர்காலத் தலைமுறையின் வாழ்க்கைக் சிந்தனையற்ற அரசாங்கமும், சமூக விழிப்புணர்வு குறைந்து போன மனிதனும் வெட்கித் தலைகுனியும் படி அமைகின்றன.

வனத்தில் பல வகையான மரங்கள் இருந்து கிடைக்கப்பெற்ற பழங்களை உண்ட கிளிகள், உணவிற்காக மனிதர்கள் சாப்பிட்டுத் தூர எறிந்த பிரியாணித் துகள்களையும் புளியோதரைத் துகள்களையும் உண்ணும் அவலநிலையானது

பெருக்கெடுத்து ஓடும் நீரில்
**ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடி**
**இருக்குமாம் கொக்கு"** **(மூதுரை)**

என்ற வரிகளை நினைவுபடுத்துவதாக அமைகிறது.

தன் இருப்பிடம் அழிக்கப்பட்டு, இருக்க இடம் தேடி ஏதோ ஓர் மொட்டைப் பனையின் உச்சியில் குடியிருந்து, தன் பாஷையைக் கூட குஞ்சுகளுக்குக்

கற்றுத் தரமுடியாமல் வாகனங்களின் பேரிரைச்சல் தடைசெய்ய, அதையே தனது பாஷையாக நினைத்துக்கொண்டு, குயில்களும், கிளிகளும், பறவைகளும் அதேபோல் ஓசையிடுவது அவலத்திலும் அவலம். இவை அனைத்திற்கும் மனித இன முன்னேற்றம் என்ற பெயில் நடைபெறும் உலகமயமாதலின் தாக்கமே. மரங்கள், மலர்கள் என வளமாக இருந்த வனம் மரங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு வாகனங்களின் இரைச்சலாக மாறிய பறவைகளின் ஒலியால் பாலை வனமாக காட்சி அளிக்கிறது.

### தொகுப்புரை

இயற்கை வளம் பற்றிக் காந்தியடிகள் கூறுகையில் "இந்தப் புவி உங்கள் தேவைகளை நிறைவு செய்யப் போதுமான வளங்களைக் கொண்டுள்ளது. ஆனால் உங்கள் பேராசையை நிறைவு செய்ய அல்ல" என்கிறார். மனிதன் பேராசையால் இயற்கை அரண்களை குறிப்பாக காட்டரன்களை வெட்டிச் சாய்க்கின்றான். வனங்கள் பொருளாதர முக்கியத்துவம் வாய்ந்த பொருட்களை வழங்குவதோடு, மனித உடல் நலத்தையும், நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்படுத்துகின்றன. எனவே தான் மன்னர்கள் புலவருக்குப் பரிசாக மரங்கள் செறிந்த நாட்டினைத் தானமாக வழங்கியுள்ளனர்.

**"நல் மரம் துவன்றிய நாடு பலதரீஇ"**

**(பதிற்றுப்பத்து-85)**

பதிற்றுப்பத்தில் இடம் பெறும் 'நல்ல மரங்கள்' என்ற அடைமொழி மரங்களின் சிறப்பினை உணர்த்துகின்றது.

**குறும்பொறை, நல்நாடு**
**கோடியர்க்கு ஈந்த**
**காரிக் குதிரை**

**(சிறுபாணாற்றுப்படை, 109-110)**

கடையேழு வள்ளல்களில் ஒருவரான காரி மரங்கள் சூழப்பெற்ற நாட்டினைத் தானமாக வழங்கினான். இந்த நிகழ்வால் எதிர்கால தலைமுறையினர்க்கு காடுபாதுகாப்பு பற்றிய சிந்தனையை விதைத்துள்ளமையை அறிய முடிகிறது.

"அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின் மறவாது இது கேள். மன்னுயிர்க்கெல்லாம் உண்டியும், உறையுளும் அல்லது கண்டது இல்" என்று மணிமேகலை கூறும் அறக் கருத்தானது சூழல் நோக்கம் கொண்டது. உணவு, உடை, இருப்பிடம் என்ற தேவைகள் நமக்குக் கிடைப்பது நம்மைச் சூழ்ந்திருக்கும் இயற்கையின் தயவால்தான். நம் தேவையை நிறைவேற்றும் இயற்கையை நாம் பாதுகாத்தல் வேண்டும். மனிதர்கள் இயற்கையின் இயல்பினை தரமாற்றம் செய்யும் நடைமுறைப் போக்கு இன்று அதிகரித்து வருகின்றது. மனிதன் உண்டாக்கும் தொழில்நுட்பம் என்னும் சதியால் தான் இயற்கைச் சீற்றம் பெருஞ்சேதாரத்தை விளைவிக்கின்றன. இயற்கையின் சீற்றத்தில் இருந்து மீள இயற்கை அரண்களை மனிதன் அழித்து விடக் கூடாது என்ற நோக்கில் ஒவ்வொரு கடவுளுக்கும் ஒரு மரத்தைக் குறிப்பிட்டுள்ளனர் நம்முன்னோர்கள்.

உலகமயமாக்கச் சூழலுக்கு ஏற்ப கட்டிடங்கள் பெருக்கம், தொழிற்சாலைகள் உருவாக்கம், அதற்கேற்ப சாலை விரிவாக்கம் போன்றவற்றுக்காக வனம் அழிக்கப்படும்போது, அதனால் ஏற்படும் மாறுபட்ட வாழ்க்கைச் சூழலானது வன உயிரினங்களின் மரபணுக்களில் எவ்விதமான தாக்கத்தை உண்டு பண்ணுகின்றன என்பதை வெளிப்படுத்தி நிற்கும் கதையே சோகவனம் கதை. சோகவனம் எனும் தலைப்பும் சோக உலகம் எனும் குறியீட்டுப் பொருளாகவே கூறப்பட்டுள்ளது. சோகவனத்தில் உரிய உணவின்றி, நீரின்றி, அலைந்து திரியும் கிளிகளும், மயில்களும், குயில்களும் வருங்கால மனித குலத்தை உணர்த்தி நிற்கும் குறியீட்டுப் பொருளாகவே இச்சிறுகதையில் காட்டப்பட்டுள்ளது. காடுகள் அழிப்பு என்பது மனித இனத்தின் அழிவு என்பதனை, எடுத்துக்காட்டுவதாகவே இச்சிறுகதை அமைந்துள்ளது.

### துணை நின்ற நூல்கள்


1. குறள் - 742
2. பாரதிதாசன் கவிதைகள், மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-108
3. நற்றிணை – 226
4. புறநானூறு – 206
5. கலித்தொகை – 6 : 4-6
6. கலித்தொகை – 1
7. மூதுரை
8. பதிற்றுப்பத்து – 85
9. சிறுபாணாற்றுப்படை – 109
10. மணிமேகலை


### முதன்மை நூல்


1. சோ.தர்மன் 2020, நீர்ப்பழி (முதல் அறுபத்தெட்டுக் கதைகள்) அடையாளம் பதிப்பகம்.

# புதுக்கவிதையில் சமுதாயச் சாடல்

**முனைவர். கு. வாணி ஜமுனா**
*கௌரவ விரிவுரையாளர், முதுகலை மற்றும் தமிழாய்வுத் துறை*
*ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக் கல்லூரி(த), மதுரை*

## முன்னுரை

பண்டைய காலந்தொட்டுத் தற்காலம் வரை இலக்கியங்கள் குறிப்பாக கவிதை இலக்கியங்கள் பல்வேறு பரிமாணங்களில் சமுதாய வளர்ச்சிக்கு உதவி வந்துள்ளன. அவை அறவுணர்வுகளையும், ஒழுக்க நெறிகளையும், முருகியல் அல்லது இன்பியல் கருத்துக்களையும் உணர்ச்சியோடு உணர்த்தியுள்ளன. அக்கவிதை இலக்கியங்களினால் சமுதாயம் அடைந்துள்ள மேம்பாடு குறித்து காலந்தோறும் தோன்றிய அறிஞர்கள் தெளிவாக்கியுள்ளனர்.

## கவிதையின் மாண்பு

புதுக்கவிதை என்பது யாப்பு வழி அமையாதது, கவிதையின் பாடுபொருளைப் புதிய கோணத்தில், புதுமை நோக்கில், எதிர்மறை அணுகுமுறையில், யாப்பு ஒழுங்கில்லாமல் கூறுவது புதுக்கவிதை எனப்படும். இது காலத்தால் அண்மையானது. கருத்து வளத்தாலும், சொல் நயத்தாலும் தொன்மையான இலக்கியங்களுக்கு ஈடான சிறப்பினைக் கொண்டிருக்கின்றது. இது சொற்சுருக்கமும் வேகமும் உடையது.

கவிதை தனித்த முருகியல் இன்பம் வாய்ந்தது. அதை உணர்ந்து திளைப்பதே கவிதையின் பயன் என்று கான்ட் என்பவர் தமது மதிப்பீட்டுத் திறனாய்வு என்ற நூலில் வெளிப்படுத்தியிருக்கின்றார். ஒரு கவிதைப் படைப்பின், ஆரோக்கியமான திறனாய்வே அச்சமுதாயத்தை வளர்ச்சி பெறச் செய்யும் ஆற்றல் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

சமூகத்தில் ஏற்படும் வறுமை, தீண்டாமை, பெண் அடிமை, கொத்தடிமை, தனி உடமை, சாதி, மத, மொழி, பாகுபாடு, அதிகாரம், அடக்குமுறை, குழந்தைத் தொழில், சுரண்டல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு, விபச்சாரம், மது, போதை, தீவிரவாதம், மூடநம்பிக்கை, வரதட்சணை, போலிச் சாமியார்கள், கல்வி மறுப்பு, கோயிலில் நுழைய தடை, வழிபாட்டில் ஏற்றத்தாழ்வு, விதவை மறுமணத் தடை, என பல்வேறு வகைகளில் சமூகத்தை ஊடுருவும் பலவிதமான நச்சுச் செடிகளை களைத்திருக்கின்றன புதுக்கவிதைகள்.

பொதுவுடமை பொலிவு பெறவும், மனிதநேயம் மலரவும், எல்லோருக்கும் எல்லாம் பெறவும், பாட்டாளி தலை நிமிரவும், உழைப்பாளி உரிமை அடையவும், தன்மானம் தழைக்கவும், பகுத்தறிவு பண்புறவும், அறிவியல் உலகம் தேடவும், மனித குல பெருமை காக்கவும், தோழமை உணர்வு கை கோர்க்கவும், முயற்சியின் படிகளை வெற்றிப் படிகள் ஆக்கவும், முனைந்து செயல்பட்டுக் கொண்டிருப்பவை கவிதைகள்.

நாட்டின் விடுதலைக்காகவும், மொழிப் புரட்சிக்காகவும் மக்களை எழுச்சியுறச் செய்த கவிதைகளுக்குப் பின்னால், தன்னம்பிக்கைக் கவிதைகளும் முன்னேற்றத்திற்கான வழியைச் சொல்லுகின்ற முற்போக்கு கவிதைகளும், வெற்றியின் விதைகளைத் தூவுகின்ற இலட்சிய விளைச்சல் கவிதைகளும் இன்றைய சமூக மாற்றத்திற்கான சரியான வழிகாட்டியைக் காட்டுகின்றன.

**"புழுக்கள் கூட மிதிபட மிதிபட புலியாக மாறும்"** என்று கவிஞர் கீட்ஸ் தரும் கூற்று, குட்ட குட்ட குனிபவன் குனிந்து கொண்டே இருந்தாலும், அவன் ஒடியும் நிலை வந்தால், குட்டியவனை, குனிந்தவன் வீழ்த்துவான். இதுதான் இன்றைய சமுதாயத்தில் கவிதைகள் ஏற்படுத்திய தாக்கங்கள் ஆகும்.

ரெங்கா டங்கா என்னும் 15 ஆம் நூற்றாண்டு ஜப்பானிய மரபுக் கவிதையான ஐக்கூ (மின் மினிக் கவிதைகள்) மற்றும் இன்றைய நவீனத்துவ கவிதைகள் சமுதாய வளர்ச்சிக்கு நல்ல பங்களிப்பை செய்கின்றன.

பாடுபொருளை நேராகவே நோக்குதல், தேவையற்ற சொற்களைத் தவிர்த்தல், சொற்றொடர்களின் இசை நீட்சி, இவற்றுக்கே முக்கியத்துவம் தந்து வளர்ந்தவை தான் புதுக்கவிதை. இதனை,

**புதுக்கவிதையோ**
**விண்ணில் இருந்தாலும்**
**மண்ணையே பார்த்துக் கொண்டிருக்கும்**
**சூரிய சந்திரர்கள்!**

என்ற கவிஞர் வைரமுத்துவின் கவிதை வரிகளால் அறிய முடிகிறது.

## கல்வியின் நிலை

**"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்**
**கண்ணென்ப வாழும் உயிர்க்கு (குறள்.392)**

என்று வள்ளுவனும்,

**“குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்**
**மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து**
**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**
**கல்வி அழகே அழகு”** (நாலடி.131)

என்று நாலடியும் கல்வியின் சிறப்பை உணர்த்துகின்றன.

சமூகத்தின் அடிப்படை மதிப்புகள், விதிமுறைகள் நடைமுறைகள் ஆகியவற்றை மேற்கொள்ளும்படி இளைஞர்களையும் இளமை கடந்தவர்களையும் சமூகச் சார்பில் பயிற்றுவி க்கும் முறையான முறைசாரா அமைப்புகள் கல்வி அமைப்புகள் ஆகும். இன்றைய கல்வி அனைவருக்கும் ஒரே மாதிரி கிடைப்பது இல்லை என்பதை,

**பணமெத்தையில்**
**உறக்கும் கலைவாணி**
**இன்றைய கல்வி**

என வரும் கவிதை வரிகள் உணர்த்துகிறன.

நகரங்களில் தனியார் பள்ளிகள் போட்டி போட்டுக் கொண்டு உலக தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப பாடத்திட்டத்தினை மாணவர்களிடம் புகுத்துவதில் ஓரளவு வெற்றி காண்கிறார்கள் என்றாலும் நகரில் உள்ள ஏழை உழைப்பாளிகளின் பிள்ளைகள் பள்ளி கல்லூரி கூட முடிக்க முடியாத அளவிற்கு கட்டணங்கள் உயர்ந்து கிடக்கின்றன என்பதை,

**பத்து மாதமாய் புத்தகம் தின்று**
**சிலமணிப் பொழுதில் செரித்துப் காட்டலில்**
**கல்விக்கூடம் கட்டணச் சிறையில்**
**கால் நூற்றாண்டு கழிந்து தொலைந்தது**
**காலமும் கடந்து விடுகின்றது**

என்று வைரமுத்து காட்டுகிறார்.

பாடத்திட்டம் அறிவைத் தூண்டும் ஆற்றலை வெளிப்படுத்தவும் உதவும் வகையில் இருக்க வேண்டும். இவ்வாறு இருந்தால் தான் சிறந்த மாணாக்கர்களை உருவாக்க முடியும். ஆனால் இன்றைய கல்விமுறை இதற்கு துணை புரிவதில்லை என்பதைக் கவிஞர் அப்துல் ரகுமான் **புத்தகம்** என்னும் கவிதை மூலம் வெளிப்படுத்துகிறார். இதனை,

**உங்கள் புத்தகங்கள்**
**கண்களைத் திறப்பதில்லை**
**ஊற்றுக் கண்களைத்**
**தூர்த்து விடுகின்றன**

எனும் வரிகளின் மூலம் சாடுகின்றார்.

தனியாக ஒரு வேலையை உருவாக்கிக் கொள்ளுகின்ற அளவிற்குக் கல்வி அமைந்திருக்க வேண்டும். அல்லது கற்ற கல்விக்கு வேலை வாய்ப்பையாவது தந்திருக்க வேண்டும். இரண்டும் இல்லாத போது இந்தக் கல்வியால் என்ன பயன். அகிம்சை வழியில் இந்த தேசத்தை நடத்திய மகாத்மாவே வந்தாலும் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்காத வரை மாணவர்களின் அமைதியின்மையைப் போக்க முடியாது என்கிறார் கவிஞர் மு.மேத்தா. இதனை,

**படித்து**
**முடித்த பின்**
**வாங்கப் போகிற**
**பட்டங்களுக்கு**
**வேலை தேடித்தரும்**
**விவஸ்தையில்லை**
**என்கிற நிலைமை**
**இருக்கும் வரை**
**ஆயிரம் மகாத்மா**
**வந்தாலும்**
**மாணவர்களின்**
**அமைதியின்மையைப்**
**பார்க்க முடியாது**

என்ற கவிதை வரிகளால் அறியமுடிகின்றது.

**வேலையில்லா திண்டாட்டம்**

மனித வாழ்க்கைக்கு வேலை மிகவும் முக்கியமான ஒன்றாகும். படித்த படிப்பதற்கான மேலை கிடைக்காத நேரத்தில் வேறு வேலையினைத் தேடிக்கொள்ள விரும்பாதவர்களும் உள்ளனர் அனைவரும் எழுத்தறிவு பெற வேண்டும் என்பது அரசின் குறிக்கோளாகும். இதனால் ஏட்டுக் கல்வி வளர்ச்சி அடைந்துள்ளது. தொழில்கல்வி குறைவாகக் காணப்படுகின்றது. அதனால் வேலை வாய்ப்பு அதிக அளவில் பரவலாக்கப்படவில்லை வேலையில்லா திண்டாட்டமும் பெருகி வருகின்றது. இந்திய வீதிகளில் பட்டம் பெற்று வேலையில்லாமல் அலையும் அலையப் போகும் மாணவர்களின் அவல நிலையை சுப்பு அரங்கநாதன்,

**இருபது வருடம்**
**இனிது வாழ்ந்தவன்**
**இனி**
**இருக்கும் வரைக்கும்**
**அழுதேமாய்வான்**
**ஏன்னா**
**அடுத்த ஜுனில்**
**நான் ஒரு பி ஏ**

என்று பாடியுள்ளார்.

இன்றைய படித்த இளைஞர்களுக்கு வாழ்க்கைத் துயரம் மிகுந்ததாக இருப்பதற்கு காரணம் வேலை கிடைக்கவில்லையே என்பதால்தான் இதனால் தான் சிலர் இந்த சமுதாயத்தின் மீது கோபம் கொண்டவர்களாக இந்த சமுதாய அமைப்பையே முற்றிலும் மாற்றி விட வேண்டும் என்ற எண்ணம் உடையவர்களாக இருந்து புரட்சிவாதியாகவும் மாறிவிடுகிறார்கள்.

இந்தியாவின் எந்தத் தெருவோரத்திலும் அவர்களை எப்போதும் சந்திக்கலாம் நம்பிக்கை இழந்த நடை! வெறிச்சோடிப் போன விழிகள்! வறட்சி மிதக்கும் முகங்கள்! இவைகளே அவர்களை அடையாளம் காட்டிவிடும். அவர்கள் கண்ணில் படுவதெல்லாம் இரண்டே இரண்டு வாசகங்கள் தான்.

**நாய்கள் ஜாக்கிரதை**
**வேலை காலி இல்லை**
**இரண்டும்**
**என் தாயகத்தின்**
**வளத்திற்க்கும் குணத்திற்கும்**
**எடுத்துக்காட்டாக அமைகின்றன**

என்கிறார் கவிஞர் மு.மேத்தா. மேலும் அவர், வேலை இல்லாத இந்த இளைஞர்கள் சிம்மாசனம் கேட்கவில்லை வேலை என்கிற ஊன்றுகோல் கேட்டு தான் ஓலமிடுகிறார்கள் அவர்கள் இப்போது வாழ்வதெல்லாம் வாக்காளர் பட்டியலில் மட்டும்தான். இதிலும் சிலர் விடுபட்டுப் போகிறார்கள். இத்தகைய நிலைமைகளுக்கெல்லாம் காரணமாக இருக்கக்கூடியவர்கள் ஆட்சியாளர்களே! எனவே தான்,

**வேலை கொடு**
**அல்லது**
**நிவாரணம் கொடு**
**என்று**
**வீதியெல்லாம் முழங்கி வரும்**
**இளைஞர்களுக்கு**
**அவர்கள்**
**பதில் சொல்ல வேண்டியிருக்கும்**

என்று ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுக்கின்றார்.

ஒவ்வொரு வேலையில்லாப் பட்டதாரிகளின் மனநிலையைப் பற்றி கவிஞர் மேத்தா கூறும் பொழுது, அவர்கள் சமுதாயத்தின் பார்வையில் வெறும் தூசிகளாய் படுகின்றனர். ஆனால் சமுதாயப் பார்வையில் விழும் பொழுது அந்தத் தூசிகளுக்கும் உடம்பெல்லாம் உறுத்துகிறது என்பதை,

**வேலை தேடித் திரியும்**
**அந்த இளைஞர்கள்**
**உங்கள் கண்களில்**
**தூசியாய்ப் படுவதால்**
**உங்கள் கண்களுக்கு மட்டும்தானே**
**உறுத்துகிறது, பரவாயில்லை**
**உங்கள் பார்வையில் விழும் போது**
**அந்தத் தூசிகளுக்கு**
**உடம்பெல்லாம் உறுத்துகிறது**

என்று அவர்கள் வேதனைப்படும் உள்ளங்களின் சோக நிலையை எடுத்துரைக்கிறார்.

**சமூகப் பொறுப்பின்மை**
**தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து**
**முந்தி இருப்பச் செயல் (குறள்-67)**

என்பதற்கேற்ப பெற்றவர்கள் தாம் படிக்காவிட்டாலும் தன் பிள்ளைகள் படித்து வாழ்க்கையில் நல்ல முறையில் முன்னேறி வரவேண்டும் என்ற நோக்கில் கல்வி கற்க அனுப்பியதை,

**கல்லூரியிலிருந்து**
**மகன் கடிதம்**
**கடன்களால் படிக்கும் அப்பா**

என வரும் ஈரோடு தமிழன்பனின் கவிதை வரிகளால் அறியமுடிகிறது. ஆனால், இன்றைய மாணவர்கள் பெற்றோரைப் பற்றியோ வீட்டைப் பற்றியோ, நாட்டைப் பற்றியோ எண்ணாமல் பொறுப்பற்றவர்களாய் இருப்பதை,

**தாய் தந்தை**
**விறகு வெட்டி சேர்த்த பணம்**
**கரியாய்**
**மகனின் உதட்டோரத்தில்**
**புகைத்தப்படி சிகரெட்**

என்ற கவிதை வரிகள் காட்டுகின்றன.

**அரசியல் நிலை**

அரசியலை உயிர மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவர்களின் வலிவந்த அரசியலில் இன்று வெறும் மேடைப் பேச்சாகக் கொண்டு வாழ்பவர்கள் தான் ஏராளம் இன்றைய அரசியல்வாதிகள் தன் கட்சியின் வளர்ச்சியையும் தன் வளர்ச்சியுமே தனது வாழ்க்கையின் லட்சியமாகவும் குறிக்கோளாகவும் கொண்டு வாழ்கிறார்கள் கட்சிகளுக்கு என்று லட்சியம் எதுவும் இல்லை என்பதனை ஈரோடு தமிழன்பன் அவர்கள்,**அந்த நந்தனனை எரித்த நெருப்பின்** மிச்சம் என்னும் கவிதைத் தொகுப்பில், **வாக்குச்சீட்டுகளுக்கு அர்த்தம் வரட்டும்** என்ற கவிதையில்

**கொடிப் மரங்களைப் போலவே**
**கட்சிகளுக்கும்**
**இலட்சிய வேர் இல்லை**

என்ற சாடுகின்றார்.

தேர்தல் என்று வந்துவிட்டால் வேட்பாளர்கள் ஏராளமான வாக்குகளை அள்ளி வீசுகிறார்கள். பின்னால் பதவிக்கு வந்து விட்டால் நீரில் எழுதிய எழுத்தாய் காற்றில் விட்ட பட்டமாய் மறந்து விடுகின்றனர். அதிகாரப் போதையில் அகங்காரம் கொள்கின்றார்கள். தேர்தலினால் எந்தப் பயனும் இல்லை என்பதனை அப்துல் ரகுமான் அவர்கள் தனக்கே உரிய பாணியில் **ஐந்தாண்டுக்கு ஒருமுறை** என்னும் தலைப்பில்

**புறத்திணை சுயம்வர மண்டபத்தில்**
**போலி நளன்களின் கூட்டம்**
**கையில் மாலையுடன்**
**குருட்டுத் தமயந்தி**

என்று கூறுவதன் மூலம் வாக்காளர்களை குருடர்களாகவும் வேட்பாளர்களை போலி நளன்களாகவும் உருவகித்து உண்மையை எதார்த்தமாக படம் பிடித்துக் காட்டுகின்றார். மேலும் திட்டங்கள் எல்லாம் நிறைவேற்றப்படாமல் வேலியே பயிரை மேய்வது போல வஞ்சகமாக பலன்களை அவர்களே அனுபவிக்கின்றார்கள் என்பதனை,

**வரங்களே**
**சாபங்கள்**
**ஆகுமென்றால்**
**இங்கே**
**தவங்கள் எதற்காக**

என்ற கவிதையின் மூலம் சீறுகின்றார்.

அரசியலில் ஈடுபடுவோர் பொதுநலம் மறந்து தன்னலம் போற்றுபவர்களாகவே உள்ளனர். தங்களுடைய சுயநலத்திற்காக அடிக்கடிக் கட்சி மாறும் நிலையும் காணப்படுகிறது. இதனை கவிஞர் மீரா அவர்கள்,

**எங்கள் ஊர் எம்.எல்.ஏ ஏழு மாதத்தில்**
**எட்டு தடவை கட்சி மாறினார்**
**மின்னல் வேகம் என்ன வேகம்**
**இன்னும் எழுபது கட்சி இருந்திருந்தால்**
**இன்னும் வேகம் காட்டியிருப்பார்.**
**என்ன தேசம் இந்த தேசம்**

என்ற கவிதை வரிகளில் படம் பிடித்துக் காட்டுகின்றார். இக்கவிதை அரசியல்வாதிகளின் பச்சோந்தித்தனமான நிலையை எடுத்துரைக்கின்றது. உண்ணா விரதம் என்ற பெயரில் மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கும் அரசியல்வாதிகள் கல்லறையில் தான் உண்மையாக உண்ணாவிரத போராட்டம் இருக்கின்றனர் என்பதை,

**உண்மையைச் சொல்லப்போனால்**
**இவனது புகழ்பெற்ற உண்ணாவிரதப் போராட்டம்**
**இங்குதான் உண்மையாக நடக்கிறது**

என்ற வரிகள் மூலம் எடுத்துக்கூறி இடித்துரைக்கின்றார் கவிஞர் மு. மேத்தா.

### மனித நேயத் தொய்வு

**எண்ணியப் பிறவிதனில் மானுடப் பிறவி தான்**
**யாதினும் அரிததரிது காண்**
**இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ**
**எது வருமோ அறிகிலேன்**

என்கிறார் தாயுமானவர். **அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது** என்பார் அவ்வையார். பெறுதற்கரிய இவ்வரிய பிறவியில் மனிதன் மனிதனிடத்தும் பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் சக மனிதனை நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். மனிதநேயம் ஓங்க வேண்டும். ஆனால் நாம் வாழ்கின்ற இந்தக் காலமோ தீமைக்கு அதிகம் வழி வகுக்கிறது. மனிதம் அருகி விட்டது. அதனால் தான் மதக்கலவரம், இனக் கலவரம், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற எண்ணற்ற அராஜகங்கள் தலை விரித்து ஆடுகின்றன.

இச்சூழலில் இன்றைய கவிஞர்கள் சமுதாய சீரழிவுகளைக் களைந்து மனித நேயத்தை வளர்த்தெடுக்கும் சிந்தனைகளை தம் பாடுபொருளக்கினர். மனிதனாய்ப் பிறந்தவன் மற்றவர்களுக்காகத் தன்னையே முழுமையாக அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும். அதுவும் பிரதிபலன் எதிர்பாராத மழையைப் போல என்பதனை அப்துல் ரகுமான் அவர்கள்,

**உன்னைக் கேட்பவர்களுக்கு**
**உன்னை முழுமையாகத் தர**
**ஒப்புக்கொள்**
**நீயும் மழையாவாய்**

என்கிறார் எனவே மனிதன் சுயநலம் தவிர்த்து எவ்வுயிரையும் தன்னுயிர் போல பேணும் மனநிலையை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று விழைகின்றார்.

நாம் நமக்காக மட்டுமின்றி பிறருக்காகவும் வாழவேண்டுமென்பதை **மரங்கள்** என்னும் கவிதையில் கவிஞர் மேத்தா,

**நாங்கள்**
**சிறகுத் துடுப்புகள்**
**செலுத்திச் செல்கிற**
**படகுப் பறவைகளின்**
**பயணியர் விடுதிகள்**

என்ற வரிகளின் வாயிலாக விளக்குகின்றார்.

### சாதி மதப் பிணக்கு

இக்காலத்தில் சாதி மதம் எனும் கொடிய நோய்கள் சமூகத்தை ஆட்டிப் படைக்கின்றன. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமை சான்ற சிறப்புடையது இத்தமிழ் திருநாடு. இன்று சங்கம் வைத்து சாதி வளர்க்கும் நாடாக உருமாறிவிட்டது. **சாதி இரண்டொழியே வேறில்லை** என்ற அவ்வை மூதாட்டியின் உரையை மறந்து மக்கள் தமக்குள் சண்டைகளிட்டுக் கொள்கின்றனர். அவ்வை கூறிய வாக்கினை இன்றைய சமூகம் எப்படி பின்பற்றுகிறது என்பதை,

**சாதி இரண்டொழிய**
**வேறில்லை உண்மை**
**முக்காலும் உண்மை**
**நம் சாதி**
**நம் சாதி அல்லாத**

பிற சாதி எனச்
சாதி இரண்டே
யாரே மறுப்பார்?

எனும் கவிதை வரிகளில் சித்தரித்துள்ளார். கவிஞர் இரா.மோகன். சாதிப் பெயர்களை தங்கள் பெயருடன் இணைத்துக் கொண்டு அதனை ஒழிக்கப் போராடும் மனிதர்களை,

**கருப்பண முப்பனார்**
**ரங்கசாமி ரெட்டியார்**
**முத்துலிங்க முதலியார்**
**தவஞான கிராமணியார்**
**பழனிச்சாமி படையாட்சி**
**அழகப்பச் செட்டியார்**
**அனைவரும் பங்கு கொள்ளும்**
**ஜாதி ஒழிப்பு மாநாடு**
**நாட்டார் நகரில்**
**நாயக்கர் தெருவில்**
**நாளை நடைபெறும்**
**அனைவரும் வருக**

என்ற வரிகளில் மூலம் ஏளனம் செய்கின்றார் கவிஞர். வேலு. தகவல் தொழில்நுட்ப துறையில் உலக நாடுகளையே திரும்பிப் பார்க்க வைக்கும் அளவிற்கு உயர்ந்துவிட்டது இந்தியா ஆனால் படித்த பட்டம் பெற்று உயர்ந்த பதவிகளில் வைத்தாலும் சாதிய சிந்தனை ஏற்றத்தாழ்வு இன்றும் ஒளிந்த பாடு இல்லை.

மதங்கள் மனிதனைச் சமநிலைப்படுத்தத்தான் தோன்றின. ஆனால் இன்று அவைகள் எப்படி இருக்கின்றன என்பதை கீழ்வரும் வரிகள் கூறுகின்றன.

**பண்படுத்த வந்த ஒன்று**
**மனிதர்களைப் புண்படுத்தும்**
**மதங்கள்**

இந்திய மண்ணில் மதங்களின் வரலாறு கொலை வெறியின் வரலாறாக வருகிறது. இதனை

**சமணனைச் சைவன் கொன்றான்**
**சைவனை வைணவன் கொன்றான்**
**இவர்களை முஸ்லீம் கொன்றான்**
**முஸ்லீமை இந்து கொன்றான்**
**இந்துவைக் கிறித்துவன் கொன்றான்**
**கிறித்துவனை இந்து கொன்றான்**

என்னும் வரிகளின் வாயிலாக கந்தர்வன் வெளிப்படுகின்றார். மனித உறவுகளைக் கொல்லும் மதமெனும் மிருகம் பற்றி கவிஞர் ஞானகுரு,

**மதம் என்பது யானைக்குப் பிடிக்கலாம்**
**அது மனிதனை பிடிக்கக் கூடாது**

என்கிறார்

**முடிவுரை**

அறிவுச்செறிவுள்ள, சிந்தனையைத் தூண்டுகின்ற, தொலைநோக்குப் பார்வையுள்ள பல கவிதைகள் இன்றைய சமுதாய அவலங்களைப் புரட்டிப் போடுகின்றன.

மேடைதோறும் முழுங்குகின்ற புதுக்கவிதைகளும் நாளொரு கவிதை நாளும், பொழுதொரு வெளியீடுமாக வருகின்ற கவிதைகள் வெகு மக்களிடம் படிக்கின்ற ஆர்வத்தை தூண்டி வருகின்றன.

கவிஞர்களின் கவிதைகள், அந்தந்தக் காலத்தில் என்னென்னச் சமூக சீரழிவுகள் எங்கெங்கு ஏற்படுகிறதோ அங்கெல்லாம் போர்க்காலக் குரலாய் ஒலித்துக் கொண்டேதான் இருக்கின்றன. ஆழ உழுத நிலத்தில் சொத்தை இல்லா விதைகள்,ஈரக் காற்றையே உறிஞ்சி துளிர்ப்பதைப்போல, சமூகப் பிரச்சனைகளை உறிஞ்சி அதைத் தீர்த்து வைக்கும் மழை பொழியும் மேகங்களாகக் கவிதைகள் இருந்து கொண்டிருக்கின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

# கவிஞர் பூவண்ணனின் குழந்தைப் பாடல்களில் இலக்கிய உத்திகள்

**முனைவர் ச. வேணுகோபால்**
*உதவிப் பேராசிரியர்இ தமிழ்த்துறை*
*டாக்டர்.ஆர்.ஏ.என்.எம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, ஈரோடு*

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்களில் கவிதைகள் இயற்றும் கவிஞர்கள் தமது கருத்தினை வெளிப்படுத்தவும் பல்வேறு உத்திகளைக் கையாளுகின்றனர். செய்யுளில் பயன்படுத்தப்படும் பல்வேறு வகையான உத்தி முறைகளைப் பற்றித் தமிழ் இலக்கண நூல்கள் எடுத்துக் கூறுகின்றன.

*''முதலிப் புகுதல் ஒத்துமுறை வைப்பு*
*தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்''*[1]

என உத்திகளின் வகைகளைச் சுட்டுகின்றார் நன்னூலாசிரியர். செய்யுளைத் திறம்பட இயற்றும் புலவர்கள் தமது கருத்துகள் நிறைவாய்ச் சென்று பயன்தர வேண்டுமென்னும் எண்ணம் உருவாகின்ற போது அப்புலவனால் உத்திமுறைகள் சிறப்பாய்க் கையாளப் பெறுகின்றன. இலக்கியங்களில் பயன்படுத்தப்படும் இவ்வுத்தி முறையானது அவ்விலக்கியங்களைப் பெருமையும், அழகும் பெற்றதாய் மாற்றுகின்றன.

**இலக்கிய உத்திகள்**

கவிஞர் பூவண்ணனின்குழந்தைப் பாடல்களிலும், அவ்வகையில் பல உத்திமுறைகளும் கையாளப் பெறுகின்றன. குழந்தைப் பாடல்கள் முழுவதும் ஒரே வகையான அமைப்பில் இருத்தல் விரும்பத்தக்கதன்று. பல்வேறு வகையான உத்திமுறைகளும், பயன்படுத்தப்பட்டுப் பாடல்கள் இயற்றப்பட வேண்டும். அவ்வாறு இயற்றப்படும் பாடல்கள் குழந்தைகளால் விரும்பப்பட்டு நன்மை பயக்கின்றன.

குழந்தைகள் எளிமையாய்ச் சந்த நயத்துடன் அமைந்த பாடல்களைப் பெரிதும் விரும்புவர். சொல்லமைப்பு, அடைமொழிகள், அணி நலன்கள், கற்பனை ஆகியன அமைந்து பாடல்கள் உருவாகின்ற பொழுது அவை பயன் நல்குகின்றது. ஒலி நயமும் குழந்தைப் பாடல்களில் முக்கிய இடத்தைப் பெறுகிறது எனலாம். குழந்தைப் பாடல்களில் சில அடிப்படைப் பொதுப்பண்புகள் காணப்படும். அவை குழந்தைகளின் உள்ளங்களுக்கு ஏற்றதாய், குழந்தை மொழியில் அமைந்து அவர்களின் அறிவுக்குகந்தவையாய் அமைந்திருக்கும். அத்தகைய பண்புகளைக் பாடல்களே குழந்தைகளால் விரும்பப்படக்கூடியன.

**"பாலைப் பொழிந்து தரும் பாப்பா -அந்தப்**
**பசுமிக நல்லதடி பாப்பா**
**வாலைக் குழைத்து வரும் நாய்தான் - அது**
**மனிதர்க்குத் தோழனடி பாப்பா"**[2]

என்று பாடிய பாரதியார் வரிகளை நோக்குமிடத்து குழந்தைப் பாடல்களின் எளிமையை அறிந்து கொள்ள இயலுகின்றது. குழந்தைகள் காணும் விளையாடும் பொருட்களே பாடுபொருள்களாய் அமைதல் சிறப்புடையதாகின்றது. குழந்தைப் பாடல்களில்,

- வருணனைப் போக்கு
- விளித்தல் முறை
- உரையாடல்
- வினா விடை முறை
- உயர்திணை முடிபேற்றல்

முதலான அமைப்பு முறைகள் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கவிஞர் பூவண்ணன் பாடல்களில் மேற்காண் உத்திமுறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. தமது கருத்தினை மழலையர் அறிந்திடும் வண்ணம் சிறப்பாய் இம்முறைகளைக் கையாளுகின்றார். குழந்தைகளின் இயல்பிற்கேற்றவாறு இவ்வுத்தி முறைகளைத் கவிஞர் பூவண்ணன் பயன்படுத்தியுள்ளார்.

**வருணனைப் போக்கு**

வருணனைப் போக்கென்பது ஒரு பொருளின் இயல்பினை விரிவாக எடுத்துக் கூறும் முறையாகும். இம்முறையானது பண்டைய இலக்கியங்கள் முதல் இந்நாளில் வெளியாகும் படைப்புகள் வரை பயன்படுத்தப்படுகின்றது. காப்பியங்களில் இம்முறையானது அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளது. நீண்ட கதை அமைப்பினைக் கொண்ட இலக்கியங்களில் இம்முறையானது சுவையோடு இடம் பெற்றுள்ளது. காப்பியங்களைத் தொடர்ந்து எழுந்த இலக்கிய வகைகளிலும் இம்முறையானது தொடர்கின்றது.

தாம் கூறக் கருதிய பொருளினைத் தெளிவாகவும், மனதில் நன்கு பதியச்செய்யும் வகையிலும் உணர்த்திட வருணனை அவசியமானதாகிறது. பொருளின் இயல்பினை விரித்துரைக்கும் போது தான் அதன் இயல்பினை முழுமையாய் உணர்ந்து கொள்ள முடியும். அவ்வகையில் இம்முறையே முக்கியத்துவம் பெறுகின்றது.

குழந்தைகளுக்கு அவர்கள் காணும் பொருட்கள் புதுமையானதாய்த் தோற்றமளிக்கும். அழகு பொருந்தியனவாய்க் காட்சியளிக்கும். எப்பொருளாயினும் அதனை ஆராய்ந்து அறிந்து கொள்ளும் தன்மையோடு

தான் குழந்தைகள் வளர்கின்றன. இப்பணியானது குழந்தைகளின் அறிவாற்றலை வளர்ப்பதாயும் பொருள்களின் செயல்பாடுகளை நன்குணரவும் துணை நிற்கிறது.

இம்முறையை மையப்படுத்தி இயற்றப்படும் குழந்தைப் பாடல்கள் பொருள்களின் தன்மையினைத் தெளிவாய் மழலையர் மனதினுள் பதியச் செய்கின்றது. வருணனையில் காணப்படும் அழகுணர்ச்சியானது குழந்தைப் பாடல்களை மேன்மையுறச் செய்கின்றன. கவிஞர் பூவண்ணன் அவர்கள் தம் பாடலில் தோற்றம், செயல், பயன் போன்ற பல நிலைகளில் வருணனைகளைப் பயன்படுத்துகின்றார்.

காலத்தால் அழியாது கலைப்படைப்பின் உச்சமாய் நின்று தமிழர் தம் கட்டடக் கலைக்குப் பெருமை சேர்த்துக் கொண்டிருப்பது தஞ்சைப் பெருவுடையார் கோவிலாகும். கட்டிடக் கலையின் மாபெரும் அதிசயமாக விளங்குவது இக்கோயில். இக்கோயிலின் தோற்றத்தினைப் பற்றி ஆசிரியர் வருணிக்கும்போது,

**“வானை முட்டும் கோபுரம்**
**வண்ணச் சிற்பக் கோபுரம்**
**தேனைப் போல இனிக்குது**
**தினமும் கண்டு மகிழலாம்**
**கோயிலுக்கு முன்புறம்**
**குந்தியுள்ள நந்தியே**
**ஆயிரம்பொன் விலைபெறும்**
**யானை போலத் தோணுதே!”**[3]

என தஞ்சைப் பெருவுடையார் கோயிலின் தோற்றத்தினை வருணிக்கின்றார். கோபுரத்தின் அழகினையும் நந்தியின் தோற்றத்தினைப் பற்றியும் வருணித்துள்ளார். படிக்கும் மழலையரும் கோபுரத்தின் அழகினை அறிந்து மகிழ்வர். இப்பாடல் தோற்றம் பற்றிய வருணணையாய் அமைந்துள்ளது.

கவிஞரின் மற்றொரு பாடலில் காற்றின் செயல்கள் பற்றிப் பாடும் போது அதன் செயல்களை அழகாய் வருணித்துள்ளார். காற்றின் தன்மைகளை நன்குணர வேண்டுமென விரும்பிய கவிஞர் அதன் செயல்பாடுகளை வருணிப்பதன் மூலம் மழலையர்க்கு உணர்த்துகின்றார். வருணனை உத்தியைச் சிறப்பாய்க் கையாண்டு இப்பாடலைப் படைத்துள்ளார்.

**“மாடிவீடு மண்குடிசை**
**தேடிச் செல்லுவேன்**
**ஓடிஓடி ஓய்வில்லாமல்**
**உலகைச் சுற்றுவேன்**
**ஆலமரக் கிளைகளினை**
**அசைத்துச் சொல்வேன்**
**சோலைமலர்க் கூட்டத்திலே**
**குழைந்து நுழைவேன்”**[4]

காற்றானது அனைத்து இடங்களிலும் நுழைந்து செல்கிறது. மாடி வீடு குடிசையில் நுழைந்து செல்கின்றது. ஓய்வில்லாமல் உலகைச் சுற்றுகின்றது. ஆலமரக் கிளையில் அசைந்து செல்கின்றது. சோலை மலர்க்கூட்டத்தில் குழைந்து செல்கின்றது எனக் காற்றின் செயல்பாடுகளை எளிமையாய் வருணித்துள்ளார். காற்றின் செயல்பாடுகளை வருணித்துள்ளமையால் இப்பாடல் செயல் பற்றிய வருணணையாய் அமைந்துள்ளது. காற்றினைப் போலவே மழலையர் மனதிலும் இப்பாடல் நுழைந்து செல்கின்றது.

கவிஞரின் மற்றொரு பாடலில் பயன் பற்றிய வருணணை இடம் பெற்றுள்ளது. செய்யுள்களின் முதன்மை நோக்கம் படிப்போர்க்கு இன்பம் அளித்துப்பயன் விளைவித்தலே ஆகும். வருணனை முறையில் எழுதப்பட்ட ஒரு பாடலில் பயன் பற்றியதாய் அமைந்துள்ளது.

எல்லையில்லா வளங்களைப் பெறச் செய்து நன்மை அளித்துக் கொண்டிருக்கும். கங்கை நதியைப் பற்றிப் பாடுகிற பொழுது அதன் பயன்களை வருணனை முறையில் கூறிச் செல்கின்றார்.

**“பயிர்கள் மகிழ வருகின்றாள்**
**உயிர்கள் மகிழ வருகின்றாள்**
**நாடு செழிக்க வருகின்றாள்**
**காடு செழிக்க வருகின்றாள்”**[5]

எனப்பாடிய கவிஞரின் இப்பாடல் பயனைப் பற்றிய வருணனையாய் அமைந்துள்ளது. பயிர்கள் வளம் பெறவும் உயிர்கள் மகிழவும் நாடு செழிக்கவும் கங்கை பாய்ந்து வருவதாய்க் கூறி அதன் பயன்களைப் பற்றிக் கூறி வருணித்துள்ளார். கவிஞரின் வருணனைப் போக்கில் அமைந்த பாடல்கள் தோற்றம், செயல், பயன் பற்றியவையாய் அமைந்து சிறுவர்களின் எண்ணங்களை வளரச் செய்பவையாய் அமைந்துள்ளன எனலாம். மேலும் அவை சிந்தனை ஆற்றலைத் தூண்டுபவையாயும் அமைந்துள்ளன எனலாம்.

### விளித்தல் முறை

தனக்கு முன்னே பொருட்களைப் பார்த்து அவற்றை விளித்துப் பாடும் விளித்தல் முறையாகும். சங்க இலக்கியங்களிலும் புறப்பாடல்களிலும் பிற்காலத்துத் தோன்றிய தூது இலக்கிய வகையிலும் இம்முறையானது கையாளப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கைப் பொருள்களோடு குழந்தைகளை இணையச் செய்யும் ஒரு உத்திமுறையாகவே குழந்தைக் கவிஞர்கள் இம்முறையைக் கையாள்கின்றனர். குழந்தைப் பாடல்களில் விளித்தல் முறையானது சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

கவிஞர் பூவண்ணன் அவர்களும் விளித்தல் முறைக்குச் சிறப்பான இடம் கொடுத்துள்ளார். அம்முறையில் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

கவிஞர் இயற்றிய பாடல்களில் இயற்கையைப் பாடுபொருளாக்கிப் பாடும்போது இம்முறையானது இடம்பெற்றுள்ளது.

நிலம், மழை, வானம், விலங்குகள் என இயற்கைப் பொருள்களையும் விளிக்கும் முறையில் பாடல்களைப் பாடுகின்றனர். இயற்கைப் பொருட்களைப் பற்றிய அறிவினைச் சிறுவர் அறிந்து கொள்ள வேண்டுமெனக் கவிஞர் எண்ணுகின்றார்.

**“அளவுடன் பெய்க**
**அழகிய உலகம்**
**வளமுடன் வாழ**
**வருவாய் மழையே”**[6]

என்ற பாடலில் மக்கள் வளமுடன் வாழ மழையை விளித்துப் பாடுகின்றார்.

கவிஞரின் மற்றோரு பாடலில் வீட்டில் வைத்திருக்கும் கொலு பொம்மைகளைக் காண்பதற்கு வருமாறு விளித்துப் பாடுகின்றார். கொலுவில் வீற்றிருக்கும் பொம்மைகளைக் காண குழந்தைகள் ஆர்வம் கொண்டிருப்பர். விதவிதமான பொம்மைகள் பல்வேறு நிகழ்வுகளைச் சித்தரிக்கும் உருவங்கள் என அனைத்துமே வியப்பினை அளித்து மகிழ்ச்சி அளிக்கக்கூடியது. நவராத்திரி விழா துவங்கி கொலு முடியும் நாள் வரையிலும் பொம்மைகளோடு பொம்மைகளாய்த் தாமும் மாறிவிடுவர். மழலையரின் இப்பண்பினை நன்குணர்ந்த கவிஞர், குழந்தைகளை அழைத்துப் பாடுகின்றார்.

**“குருவிக் காரர் குடுகு டுப்பை**
**உண்டு வீட்டிலே**
**கோவில் உண்டு குளமும் உண்டு**
**எங்கள் வீட்டிலே**
**வருக வருக வருக வருக**
**தங்கை மார்களே”**[7]

என அழைக்கின்றார். குழந்தைகள் மனங்கவரும் பொருட்களே கொலுவில் வீற்றிருப்பதாயும் பாடுகின்றார். குழந்தைகள் விளித்துப் பாடும் பாடல்களைப் பெரிதும் விரும்புவர். கவிஞர் இம்முறையில் இயற்றிய பாடல்கள் குழந்தைகள் மனங்கவர்வனவாய் அமைந்து பல நற்கருத்துகளையும் விதைத்து விடுகின்றன.

**உரையாடல் முறை**

குழந்தைப் பாடல்களில் உரையாடல் முறையிலும் பாடல்கள் அமைகின்றன. ஏனெனில் உரையாடல் மூலம் உரையாடும் பொருளின் இயல்பு, அனுபவம், அறிவு ஆகியவற்றை அளவிட முடியும். உரையாடல் மூலம் ஒருவர் கருத்தினை மற்றவர்க்கு நேரிடையாக எடுத்துச் செல்ல இயல்கின்றது. இந்த உரையாடல் முறையானது மக்களிடையே மட்டுமல்லாமல் பொருட்களிடையேயும் நிகழ்கின்றது.

உரையாடல் முறையின் சிறப்பினை உணர்ந்த கவிஞர் உரையாடல் வகையில் சில பாடல்களைப் படைத்துள்ளார். சற்று வளர்ந்த சிறுவர்களால் உரையாடல்களை நன்கு விளங்கிக் கொள்ள இயலும். கருத்தினை விளக்கிட இவ்வுரையாடல் முறையும் ஓர் உத்தியாய்ப் பயன்படுத்தப்படுகிறது. இம்முறையில் ஆசிரியர் படைத்த பாடல் ஒன்றில் நெருப்பின் சிறப்பினை உணர்த்துகின்றார். தமது கருத்தினை வலியுறுத்த இம்முறையைக் கையாளுகின்றார்.

நெருப்பினை அளவறிந்து பயன்படுத்தினால் அதிக நன்மை தரும். நெருப்பே இல்லை எனும்போது என்ன நிகழும்? இதனை ஒரு கதை பாடல் வடிவில் விளக்குகின்றார் ஆசிரியர். முட்டாள் அரசன் ஒருவன் தனது நாட்டில் நெருப்பே இருக்ககூடாது எனக் கட்டளை இடுகின்றான். பின் தன் தவறை உணர்ந்து அரசனே நெருப்பின் சிறப்பினைப்பாடுவதாய் உரையாடல் வடிவில் பாடலை அமைக்கின்றார்.

**“சட்டப்படியே நடந்தோமே**
**சமைக்கும் நெருப்பே அணைத்தோமே**
**சுட்டிடும் நெருப்பே இல்லாமல்**
**சோறு உண்டோ சொல்வீரே”**[8]

என்று சமையற்காரன் வினவுவதைப் போல பாடலை அமைத்துப் பின்னர், மன்னர் அதற்குப் பதில் கூறுவதாய்ப் பாடலை அமைக்கின்றார்.

**“அமைச்சர் இதையே சொன்னாரே**
**ஐயோ கேட்க மறுத்தேனே**
**உணவும் ஒளியும் நெருப்பாமே**
**உணர்ந்தேன் உணர்ந்தேன் இப்போதே**
**இனியும் சட்டம் எதற்காக**
**இப்போ தேநான் நீக்கிட்டேன்”**[9]

என மன்னனும் சமையற்காரனும் உரையாடுவதாய் இப்பாடல் அமைந்துள்ளது. மேலும் நெருப்பின் ஆற்றலையும் இப்பாடல் சிறப்பாய்க் கதை வடிவில் உணர்த்துகிறது.

**வினா விடை முறை**

குழந்தைகள் எதையும் அறிந்து கொள்ளும் ஆர்வம் கொண்டவர். வினாக்கள் கேட்பதன் மூலம் தங்களது அறிவை வளர்த்துக் கொள்வர். வினாக்களைக் கேட்கும் முறையானது குழந்தைகளிடையே கற்கும் ஆர்வத்தினை அதிகப்படுத்துக்கின்றது. குழந்தைக் கவிஞர்கள் வினா-விடை என்கிற முறையில் புனைந்துள்ளனர். தாம் அறிய விரும்பும் கருத்தினை இம்முறையில் விரைந்து பெற்றுவிடுவதால் மழலையர் இம்முறையைப் பெரிதும் விரும்புவர். மேலும் வினாக்களைத் தொடுக்கும் முறையும் குழந்தைப் பாடல்களில் சிறப்பாகவே கையாளப்படுகின்றது.

வினாவும், விடையும் ஒன்றன் பின் ஒன்றாய்த் தொடர்ந்து வருவதுபோலப் பாடல் புனையும் முறையே வினா விடை முறையாகும். பாடலைப் பாடும் கவிஞர்கள் வினாக்களைத் தாங்களே எழுப்பிப் பின் அதற்கான விடையையும் கூறுகின்றனர். கவிஞர் பூவண்ணன் அவர்களும் இம்முறையில் பாடிய பாடல்கள் மழலையரின் அறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிவதாய் அமைகின்றது. தாயும், மகளும் உரையாடுவதாய் அமைந்த பாடல் ஒன்றில்,

**"தாய்**
**தேனே, பாகே செங்கரும்பே**
**சேரன் குட்டுவன் யாரம்மா?**
**மகள்**
**பாரில் உயர்ந்த இமயத்தையும்**
**போரில் வென்ற தீரனவன்**
**வீரக் கண்ணகிக் கோயிலினை**
**விரும்பிக் கட்டிய மன்னவனாம்"**[10]

என்று பாடுகின்றார். குட்டுவன் யார் என தாய் வினவ அதற்கு அழகாய் மகள் விடை பகர்கின்றாள். சேரன் செங்குட்டுவனைப் பற்றி மழலையர் அறிந்து கொள்ளச் செய்கின்றனர்.

கவிஞரின் மற்றொரு பாடலில் வினா-விடை அமைப்பில் விடுகதையைக் கூறி மகிழ்விக்கின்றார். அதன் சுவை என்றும் நினைவு கொள்ளுதற்குரியது. விடுகதை வாயிலாக வினாக்களைக் கேட்டு விடை கூறுவதன் நுட்பம் போற்றுதற்குரியது.

கோடைக் காலத்தில் கிடைக்கும் ஆனால் கோவா மாம்பழம் அல்ல ; குளிர்ந்த நீர் உள்ளே உண்டு ஆனால் இளநீர் அல்ல ; வெட்டித் தள்ளும் போது வெளியே கொட்டும் ஆனால் இரத்தம் அல்ல ; வழவழப்பாய் இருக்கும் ஆனால் பட்டு அல்ல என்று ஆசிரியர் கூறும்போது அப்பொருள் எதுவாக இருக்கும் என்னும் எண்ணம் சிறார் மனதினுள் எழுகின்றது. பல வகைகளையும் சிந்தித்துப் பல விடைகளைக் கூற முற்படுபவர். சரியான பதிலை அறிந்து கொள்ளவும் முற்படுவர். பாடலின் இறுதியிலேயே அதற்கான விடையையும் கூறுகின்றார்.

**"தொட்டுப் பார்த்தால் வழவ ழப்பு !**
**பட்டுத் துணியும் அல்ல**
**விந்தைப் பொருளோ? அல்ல நீங்கள்**
**விரும்பி உண்ணும் பொருளாம்**
**அந்தப் பொருளை அறிந்து கொள்க**
**அருமை நுங்கு அதுவே"**[11]

இப்பாடலைப் படித்து மகிழும் சிறுவரும் வினாவிற்கான விடையை அறிந்து மகிழ்ந்து இன்புறுவர். நுங்கின் சிறப்பினையும் உணர்ந்து கொள்வர். மேலும் மாம்பழம், இளநீர், இரத்தம், பட்டு ஆகிய பொருள்களின் தன்மையையும் உணர்ந்து கொள்வர்.

கவிஞரின் வினா-விடை அமைப்பு முறையில் அமைந்த பாடல்கள் மழலையரின் அறிவுத் திறனை வளர்ப்பதாயும் வினாக்களை எழுப்பி விடை காணும் சூழலை உருவாக்குவதாயும் அமைந்துள்ளன எனலாம். வினா-விடை என்னும் உத்திமுறையானது பூவண்ணன் பாடல்களில் சிறப்பாகவே கையாளப்படுகின்றது.

**உயர்திணை முடிபேற்றல்**

அஃறிணை உயிர்களுக்கு உயர்திணை முடிவு கொடுத்து வழங்கும் உத்தி முறையானது குழந்தைக் கவிஞர்களால் தொன்று தொட்டுப் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.

**"உவப்பினும் உயர்வினும் சிறப்பினும் செறலினும்**
**இழிப்பினும் பால்திணை இழுக்கினும் இயல்பே"**[12]

என்னும் நூற்பாவின் மூலம் இவ்வழக்கானது தொன்று தொட்டு இருந்ததை உணர முடிகின்றது. அஃறிணைப் பொருள்களுக்கு உயர்திணை முடிவு கொடுத்தல் இலக்கணத்தில் வழிவழியாகச் சொல்லப்படுவது. பசுவினைப் பார்த்து "எம் அம்மை வந்தாள்" என்பன போன்ற உரைகளை நோக்குமிடத்து இது புலனாகிறது.

இன்றும் வீட்டில் வளர்க்கப்படும் செல்லப் பிராணிகளுக்கு பெயர் கூறி அழைக்கும் முறையும் உயர்திணை முடிபேற்றலுக்குச் சான்றாய் அமைகின்றது. பறவை, விலங்கு போன்ற உயிரினங்களிடத்து குழந்தைகள் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். இயற்கைப் பொருள்களிடத்துக் குழந்தைகள் கொண்ட ஈடுபாடே குழந்தைப் பாடல்களில் இவ்வுத்தி முறையானது இடம் பெறுதற்குக் காரணமாய் அமைந்துள்ளது. பறவைகள் விலங்குகள் மற்றும் இயற்கைப் பொருட்களும் பேசும் ஆற்றல் கொண்டவையாய்ப் பாடும் முறை குழந்தைப் பாடல்களில் பெரிதும் போற்றப்படுகின்றது. குழந்தைப் பாடல்களில் நற்பயன் உருவாக்கத்திற்கும், இம்முறையானது பயன்படுகிறது.

கவிஞர் பூவண்ணன் அவர்களும், தம் பாடல்களில் இயற்கைப் பொருட்களைப் பேச வைக்கின்றார். குழந்தைகளின் எண்ணங்களை நன்குணர்ந்தே இம்முறையினைக் கையாண்டுள்ளார். நேரில் நம்மைப் பார்த்துப் பேசாத பல பொருட்கள் கவிஞர் பாடலில் பேசுகின்றன. தம்மைப்பற்றி மழலையர்க்கு உரிய சொற்களால் எடுத்துக் கூறுகின்றன.

கவிஞர் இயற்றிய பாடலில் காற்றானது தனது வலிமையைப் பற்றிப் பாடுவதாய் அமைந்துள்ளது. காற்றே முன் வந்து தனது இயல்புகளைக் கூறிச் செல்கின்றது.

**"காடுமலை நாடு கடல்**
**கடந்து செல்லுவேன்**
**ஈடு இல்லை என்றனக்கு**
**எவரும் தடுத்திடார்"**[13]

காடுமலை என அனைத்தையும் கடந்து செல்லும் காற்றினை உயர்திணை வழக்காக்கிப் பாடுகின்றார். காற்றானது நேரடியாக உரையாடுவதாய் அமைந்துள்ளதால் பாடலைப் படித்துணரும் மழலையரும் அதன் இயல்பினை நன்குணர்ந்து கொள்வர்.

**"கதைகள் சொல்வேன் கட்டுரை தருவேன்**
**படங்கள் கொணர்வேன் பாட்டுகள்**
**தருவேன் கலைகள் வளர்ப்பேன் கடையில் இருப்பேன்**
**விலைக்கு வருவேன் களிப்புத் தருவேன்**
**பாப்பா என்னைத் தெரிகிறதா?**
**பத்திரி கைநான் புரிகிறதா?"**[14]

என்ற பாடலில் ஆசிரியர் பத்திரிக்கையானது தனது செயல்களைப் பாடுவதாய்ப் பாடலை இயற்றியுள்ளார். பத்திரிக்கையின் பயன்களையும் பண்புகளையும் மிகச் சிறப்பாய் விளக்கி விடுகின்றார். அ∴றிணைப் பொருட்களே உயர்திணையாக்கிப் பாடும் பொழுது அவை மழலையர் தம் உள்ளத்தினை மேன்மையுறச் செய்பவையாய் அமைந்துள்ளன எனலாம்.

**முடிவுரை**

கவிஞர் பூவண்ணனின் குழந்தைப் பாடல்களில் இலக்கிய உத்திகள் சிறப்பான முறையில் கையாளப்பட்டுள்ளன. கருத்துக்களைச் சிறுவர் நன்குணர்ந்து கொள்ள இத்தகைய உத்திமுறைகள் பெரிதும் துணை நிற்கின்றன. கவிஞரின் வருணனைப் போக்கில் அமைந்துள்ள பாடல்கள் சிறுவர்களின் எண்ணங்களை வளர்ப்பவையாய் அமைந்துள்ளன. இயற்கையோடு குழந்தைகளை இணைக்கச் செய்யும் ஒரு உத்தி முறையாக விளித்தல் முறையானது விளங்குவதனை அறிய இயலுகின்றது. வினா விடை அமைப்பு முறையில் அமைந்த பாடல்கள் சிறுவர்களின் அறிவுத்திறனை வளர்ப்பவையாய் அமைந்துள்ளன. உயர்திணை முடிபேற்றல் என்னும் உத்திமுறையானது. குழந்தைப் பாடல்களில் சிறப்பிடம் பெறும் நிலையை அறிய இயலுகின்றது.

**அடிக்குறிப்புகள்**

2. பவணந்தி முனிவர், நன்னூல், நூற்பா எண் 14.
3. பாரதியார் கவிதைகள், ப.278.
4. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், தொகுதி-6, ப.11.
5. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், தொகுதி-5, ப.13.
6. மேலது, ப.13.
7. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம், தொகுதி-6, ப.16.
8. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-2, ப.22.
9. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-9, ப.24.
10. மேலது, ப.26
11. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-8, ப.22
12. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-10, ப.16
13. பவணந்தி முனிவர், நன்னூல் ப.379.
14. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-5, ப.14
15. பூவண்ணன், டாக்டர் பூவண்ணனின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-10, ப.22

**துணைநூற்பட்டியல்**


1. பவணந்தி முனிவர், நன்னூல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. பாரதியார், பாரதியார் கவிதைகள், திருமகள் நிலையம் சென்னை.
3. டாக்டர். பூவண்ணன், டாக்டர் பூவண்ணின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-2, பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பூங்கா, நான்காம் குறுக்குச் சாலை, சாயிபாபா காலனி, கோவை.
4. டாக்டர்.பூவண்ணன், டாக்டர் பூவண்ணின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-5, பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பூங்கா, நான்காம் குறுக்குச் சாலை, சாயிபாபா காலனி, கோவை.
5. டாக்டர்.பூவண்ணன், டாக்டர் பூவண்ணின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-6, பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பூங்கா, நான்காம் குறுக்குச் சாலை, சாயிபாபா காலனி, கோவை.
6. டாக்டர். பூவண்ணன், டாக்டர் பூவண்ணின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-8, பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பூங்கா, நான்காம் குறுக்குச் சாலை, சாயிபாபா காலனி, கோவை.
7. டாக்டர்.பூவண்ணன், டாக்டர் பூவண்ணின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-9, பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பூங்கா, நான்காம் குறுக்குச் சாலை, சாயிபாபா காலனி, கோவை.
8. டாக்டர்.பூவண்ணன், டாக்டர் பூவண்ணின் சிறுவர் இலக்கியக் களஞ்சியம் தொகுதி-10, பூவண்ணன் பதிப்பகம், 1, பாரதி பூங்கா, நான்காம் குறுக்குச் சாலை, சாயிபாபா காலனி, கோவை.

# சீவகசிந்தாமணியும் அணியும்

**முனைவர் அ. வளர்மதி**
*இணைப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை*
*ஸ்ரீ மீனாட்சி அரசினர் மகளிர் கலைக்கல்லூரி(த), மதுரை*

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று. சீவகனின் வரலாற்றைச் சொல்வது. திருத்தக்கதேவரால் இயற்றப்பட்டது. அதேபோல் கவிதைக்கு அழகு ஊட்டுவது அணியேயாகும். கவிஞர் தான் கூற வந்தக் கருத்தை அணிநயச் சிறப்போடு பொருத்தி உரைத்திடும் போது படிப்போர் உள்ளத்தில் கவிதையும் கருத்தும் பதிந்து மகிழ்ச்சியூட்டும். அப்பொழுது இலக்கியங்கள் இன்புறும் இலக்கியமாக மாறுகிறது. மொழித் திறன்களுள் அணிநயச் சிறப்பைப் பற்றி அறிஞர்கள் அறிந்ததோடு அவற்றை இலக்கணத்தின் இன்றியமையாதக் கூறாகக் கொண்டனர். அணிகள் காலந்தோறும் வளர்ந்து பல்கிப் பெருகின. ஒவ்வொரு நூலாசிரியரும் பல்வேறு அணிகளை விரித்துத் தத்தம் நூலில் தந்துள்ளனர். ஒரு நூலைப் படித்துப் பொருளை அறிகிறோம். அதன் கருத்திலே மூழ்கிச் சுவைக்கின்றோம் என்பதைக் காட்டிலும் அதனைப் படைத்தப் புலவரோடு நெருங்கிய உறவுகொண்டு அவருடைய உணர்வை நாமும் பகிர்ந்து கொள்கிறோம் என்பதே உண்மை. இதற்குக் காரணம் அணிநயங்களேயாகும். எத்தனையோ அணிகள் இருப்பினும் சீவக சிந்தாமணிக் காப்பியத்திற்கு அழகு சேர்ப்பது தற்குறிப்பேற்ற அணியாகும். இதனை அடிப்படையாகக் கொண்டு 'சீவகசிந்தாமணியும் அணியும்' என்ற தலைப்பில் ஆய்வு செய்வதே இவ் இயலின் நோக்கமாகும்.

### தொடர்நிலைச்செய்யுளே-காப்பியம்

பொருள் தொடர்ந்து வருவதும் பல அடிகளாலும் பல செய்யுட்களாலும் அமைவது பொருள் தொடர்நிலைச் செய்யுள் என்று பண்டைத்தமிழர் குறித்தனர். இதனைப் பொருட்தொடர் நிலை, முடிபொருள் தொடர்நிலை அல்லது அகலக்கவி எனக் குறிக்கும் வழக்கமும் இருந்திருக்கிறது. பொருள் தொடர்நிலைச் செய்யுளில் பொருள் மாறாது நூல் முழுவதும் தொடர்ந்து வருவதால் இப்பெயர் பெற்றது எனலாம். பழங்கால வீரப்பாடல்கள், பொருள் தொடர் செய்யுட்கள், ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுங்காப்பியங்கள் போன்றவைகளை இவ்வகையில் அடக்கலாம். தமிழ்ச் செய்யுளைத் தொல்காப்பியனார் ஏழு வகைப்படுத்தினர். அவை முறையே பாட்டு, உரை, நூல், வாய்மொழி, பிசி, அங்கதம், முதுசொல் என்பவையாகும். பாவினைத் தனிநிலைச்செய்யுள், தொடர்நிலைச் செய்யுள், நாடகச் செய்யுள் என மூன்று வகையாகப் பிரித்து வழங்கினர். வடமொழியில் உள்ள காவியப் பிரிவுகளையும் இம்மூவகையிலேயே அடக்கி விடலாம். அடிவரையறையில்லா அறுவகை யாப்பில் ஒன்றான உரையை நால்வகையினதாக விளக்குகிறது தொல்காப்பியம்.

**"பாட்டிடை வைத்தக் குறிப்பி னானும்**
**பாவின் றெழுந்த கிளவி யானும்**
**பொருளோடு புணராப் பொய்ம்மொழி யானும்**
**பொருளோடு புணர்ந்த நகைமொழி யானுமென்று**
**உரைவகை நடையே நான்கென மொழிப"[1]**

'பொருளோடு புணராப் பொய்ம்மொழியானும்' என்பது ஒரு பொருளின்றிப் பொய்படத் தொடர்ந்து அமைவதும், 'பொருளோடு புணர்ந்த நகைமொழி யானும்' என்பது பொய்யெனப்படாது மெய்யெனப்பட்டும் நகைதோன்றுமாறும் அமைவதும் தொடர்நிலையாகும். இத்துடன் அமையாது பேராசிரியர் பரணிச் செய்யுளையும், முத்தொள்ளாயிரச் செய்யுளையும் தொடர்நிலையாகக் கொள்கிறார்' எனக் கனகசபாபதிப்பிள்ளை குறிப்பிடுகிறார். 'நச்சினார்கினியரும் பேராசிரியர் கூறுயதற்கு ஏற்பத் தொடர்நிலைச் செய்யுள், பொருள் தொடர்நிலை என்னும் சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி உள்ளார்' என்கிறார் இரா.ராகவையங்கார். பொருளினால் தொடர்களும் சொல்லினால் தொடர்களும் என்று இருவகைப்படும் தொடர்நிலைச்செய்யுள் என்கிறது தண்டியலங்காரம்.

**"பெருங்காப் பியமே காப்பியம் என்றாங்**
**கிரண்டா யியலும் பொருள்தொடர் நிலையே"[2]**

என்ற சூத்திரப்பொருள் தொடர்நிலையைக் காப்பியம், பெருங்காப்பியம் என வகைப்படுத்தி அவற்றிற்கான இலக்கணங்களையும் விரிவாகவும் தெளிவாகவும் குறிப்பிடுகிறது.

### சீவகசிந்தாமணி

சீவகசிந்தாமணி திருத்தக்கதேவர் செய்து அருளிய செந்தமிழ்க் காப்பியம் ஆகும். சீவகசிந்தாமணி முப்பெரும்காப்பியங்களில் அளவால் பெரியது. 3145 பாக்களாலும் 13 இலம்பகங்களாலும் இயற்றப்பட்டுள்ளது. குணமாலை, பதுமை, கேமசரி, கனகமாலை,

விமலை, சுரமஞ்சரி, இலக்கணை ஆகியோருடன் சீவகன் தனித்தனியே மணம் செய்து கொண்டது பற்றி இவ் இலம்பகங்கள் கூறுகின்றன. கோவிந்தையைச் சீவகன் தன் தோழன் பதுமுகனுக்குத் திருமணம் செய்து வைத்தது பற்றி இரண்டாம் இலம்பகம் கூறுகின்றது. நாமகள், மண்மகள், பூமகள் ஆகியோருடன் சீவகன் மருவுவதை இவ்இலம்கங்கள் பகர்கின்றன. 13 மணங்களையும் பகர்வதால் இந்நூல் 'மணநூல்' எனப்பட்டது. மேலும் கடவுள்வாழ்த்து, அவையடக்கம், பதிகம் பெற்றுச் சிறப்புடன் விளங்குகிறது. செந்தமிழ் மொழியில் சிறந்து திகழும் பழம்பெரும் காப்பியங்களுள் ஒன்றான சீவகசிந்தாமணி, நல்லிசைப் புலவர்களுக்கு வேண்டும் அறிவுப்பொருள் அனைத்தும் ஒருங்கே வழங்குவதாய் உள்ளது. இந்நூல் தொல்காப்பிய இலக்கணப்படி வனப்பு நூலாகும்"[3] என்று சோமசுந்தரனார் கூறியுள்ளார். தொன்மை என்னும் வனப்பை அடிப்படையாகக் கொண்டு, வேறு சில வனப்புகளையும் உறுப்புகளாகக் கொண்டு திகழ்கின்ற சிறந்தத் தமிழ்க்காப்பியம் சீவகசிந்தாமணி ஆகும். 'சின்மென் மொழியாலே ஐந்தடியின் ஏறாது அமைதிப்பட்டு நிற்கும் செய்யுள்களை உறுப்பாகக் கொண்டு அறம் முதலியவற்றிற்கும் இடையிடையே இலக்கணம் காட்டித், தாவி நடத்தலாலே 'அம்மை' என்னும் வனப்பையும், செய்யுள் மொழியாலே இரண்டு முதலிய சொற்களை இணைத்துக் கற்போர் உள்ளத்தில் நிற்கும் சொற்றொடர்களைத் தன்னகத்தே தாங்கி நிற்றலின் 'அழகு' என்னும் வனப்பையும், 'இழு' என்னும் இனிய ஓசை ஒழுங்கமைந்த மொழியாலே அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கு விழுமியப் பொருள்களை உணர்த்திச் செல்லுதலின் 'தோல்' என்னும் வனப்பையும் தன்கண் பெற்றுச் செல்கின்றது' என்கிறார் இந்துமதி.

## பதிகம்

சீவகன் எண்மரை மணந்த முறையைப் பதிகம் தெளிவாக விளக்குகின்றது. காப்பியத் தலைவனான சீவகன் உயர்குணம் படைத்தவனாய் அனைத்து ஆற்றலும் உடையவனாய் மீயியல்புடன் செயலாற்றும் தெய்வகுணம் பொருந்தியவனாகக் காணப்படுகிறான். தன் ஆசிரியரால் இளம் பருவத்திலேயே காஞ்சிப் பொருண்மையாகிய நிலையாமையை உணர்ந்தவன். வெகுளியைத் தன் அறிவின் ஆட்சிக்குள்ளே அடக்கியவன். ஊழ்தர உழுவலன் உழுவலன்போடு வந்த குல மகளிர்பால் அன்றி யாண்டும் காமத்தினால் நெஞ்சு நெகிழாதவன். காமத்தைத் தன் அறிவின் ஆட்சிக்கு உட்படுத்தியவன்.

## காப்பியக் கதை

காப்பியக்கதை மிகத் தெளிவானது. ஏமாங்கத நாட்டு அரசன் சச்சந்தன் என்பவன் விசையை என்ற பெண்ணை மணம் புரிந்தான். மனைவியின் அழகில் நாட்டை மறந்து கட்டியங்காரனிடம் ஆட்சியை ஒப்படைத்ததால் கட்டியங்காரன் சூழ்ச்சியால் சச்சந்தனைக் கொன்று விடுகிறான். மயில் பொறியால் தப்பித்தக் காப்பிய அரசி சுடுகாட்டில் சீவகனைப் பெற்றெடுக்கிறாள். கந்துக்கடன் குழந்தையைக் கண்டு வளர்க்கின்றான். அவன் வாலிபம் எய்தித் தன்னிகரில்லாத் தலைவனாகத் திகழ்கின்றான். சீவகன் கட்டியங்காரனின் யானையை அடக்கிச் சிறைப்படுத்தியதால் அவனுக்கும் கட்டியங்காரனுக்கும் பகை ஏற்பட சிறையில் அடைக்கப்பட்ட சீவகன் தப்பிவிடுகின்றான். சீவகன் பெண்டிர் எண்மரை மணந்து இலக்கணையின் தந்தை உதவியுடன் கட்டியங்காரனை வென்று நாட்டை மீட்கிறான். பல ஆண்டுகளுக்குப் பின் விசயை தன் மகன் சீவகனுக்கு நாட்டை உரிமையாக்குகிறாள். பின்னர் சமணக்காப்பியத்தின் இறுதிநிலையான துறவற வாழ்க்கையை உறுதிப்படுத்தும் வண்ணம் துறவியாகிறான்.

## நடை

காப்பிய நடையே காப்பியத்தின் அமைப்புக்கும் சிறப்புக்கும் மிக இன்றியமையாததா கின்றது. கவிஞன் கருத்துக்களை எந்தச் சூழ்நிலையிலும் மிகத் தெளிவாக மக்கள் மனதில் பதியச் செய்வது சிறந்த நடையே ஆகும். சிந்தாமணி தரும் செஞ்சொற்றமிழ் நடை வேறு எந்தக் காப்பியத்திலும் கண்டு நுகர்தல் இயலாத தனிநடை எனலாம். உலகம் என்பதைக் குறிக்க 'மூவா முதலா உலகம்' என்றும், மழைத் தாரையை 'வெள்ளி வெண் கோவிரைந்தன போல் கொழுந்தாரைகள்' என்றும், துகிலைக் குறிக்கும் போது 'ஆவி என்ன பூந்துகில்' என்றும் தீந்தமிழ்ச் சொற்றொடர்கள் இடந்தோறும் கையாளப்பட்டு மனத்தைக் கவர்வனவாக உள்ளன.

## பழந்தமிழில் இலக்கணம்

பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியம் ஐவகை இலக்கண மரபுகளையும் கூறி மொழி நிலையை வரையறுக்கும். அந்நூலில் கூறப்படும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனப் பகுக்கப்பட்டுள்ள ஐவகை இலக்கணங்களும்

மொழித்திறனை வளர்க்கப்பயன்படுபவன. உவமையணியே அணிகளின் தாய்அணி எனலாம். அகப்பொருள் மரபில் கூறப்படும் உள்ளுறை, இறைச்சி ஆகியவற்றையும் அணியிலக்கணம் மரபுகளில் அடக்குவர். ஐவகை இலக்கணக் கூறுகளுள் காலப்போக்கில் பல்வேறு வளர்ச்சியும் மாற்றங்களும் பெற்றன. யாப்பு, அணி முதலியவை நன்கு வளர்ந்து தனிவகை இலக்கணங்களாகவும் உருப்பெற்றன.

### வடமொழி அணியிலக்கண நூல்கள்

வடமொழி அணியிலக்கண நூல்கள் பலவும் பிற்காலத்தில் தோன்றிய தமிழ் இலக்கண நூல்களுக்கு அடிப்படையாய் அமைந்தன. போஜன் என்பவர் இயற்றிய சரஸ்வதி கண்டாபரணமும், மம்மபட்டர் எழுதிய காவியப் பிரகாசமும், இராசன காருய்யன் இயற்றிய சாகித்திய மீமாஞ்சையும், வித்யாதரன் எழுதிய ஏகாவளியும், ஜயதேவன் எழுதிய சந்திரா லோகமும், விசுவநாதன் இயற்றிய சாகித்யதர்ப்பணமும், அப்பைய தீட்சிதர் எழுதிய சித்திர மீமாம்சை, குவலயானந்தம் முதலாய நூல்கள் பலவும் தமிழின் அணி இலக்கணக் கோட்பாடுகளுக்கு உறுதுணை புரிந்தன. இவை அனைத்திற்கும் முன்னர்த் தொல்காப்பியர் உவமைகள் பற்றி உவமயியல் எனும் இயலை வகுத்துள்ளமை போற்றுதற்குரியது. தமிழ் அணி இலக்கண நூல்களுள் வீரசோழியம் காலத்தால் முற்பட்டது. ஐந்து இலக்கணம் கூறும் இந்நூலுள் அலங்காரப்படலம் அணியிலக்கணத்தை எடுத்துரைக்கின்றது. தண்டியாசிரியர் கூறிய வண்ணமே இப்படலத்தைக் கூறியுள்ளார் என்பது, 'தண்டி சொன்ன கரைமலி நூலின் படியே உரைப்பன்' என்னும் கூற்று விளங்கும். கி.பி 12ஆம் நூற்றாண்டில் தோன்றிய தண்டியலங்காரம் காவியதர்சத்தின் மொழிபெயர்ப்பாகும். காவியதர்சத்தைத் தழுவித் தமிழில் தண்டியலங்காரம் தோன்றியது போன்றே, கன்னடத்தில் கவிராஜமார்க்கம் என்னும் நூலும், சிங்களத்தில் ஸிய-பஸ்-லகார எனும் நூலும் எழுந்தது என்பர் அறிஞர்கள். காவியா தர்ஷத்தின் மொழிபெயர்ப்பாயினும், தண்டியலங்கார நூலின் சிறப்புப் பாயிரம் இந்நூல் தொல்காப்பிய நெறிகளைப் பின்பற்றியும், 'வடநூல் வழிமுறை மரபினின் வழாதும்' இயற்றப்பட்டது என்றும் கூறுகிறது.

தற்குறிப்பேற்றவணி நோக்கணி, ஊகாஞ்சிதம் எனவும் பெயர் பெற்றுள்ளது. கவிஞர் தற்குறிப்பேற்ற அணிக்குப் பொருளாக அமைத்துக் கொண்டவை பெரும்பாலும் இயற்கைப் பொருள்களே என்றாலும், இயற்கை உயிரினங்களான பறவைகள், விலங்குகள், மரங்கள் மற்றும் மலைகள் எனப் பல்வேறு பொருட்கள் தற்குறிப்பேற்ற அணிக்குச் சிறப்பு வாய்ந்தவையாக இருந்துள்ளன. இதனைத் தண்டியலங்காரம் பெயரும் பொருள், பெயராத பொருள் என்னும் இருவகைப் பொருளிலும் இயல்பாக நிகழும் நிகழ்ச்சியினை ஒழித்துக் கவிஞர் கவிதைச் சுவைப்பிறகாகத் தன் கருத்தை அப்பொருளின் மேல் ஏற்றிக் கூறுதலாகும் என்கிறது.

> **"பெயர்ப்பொருள் அல்பொருள் எனவிரு பொருளினும்**
> **இயல்பின் விளைதிறன் அன்றி அயல்ஒன்று**
> **தான்குறித்து ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்"[4]**

என்ற நூற்பாவால் இலக்கணம் வகுப்பதைக் காணமுடிகிறது.

### தற்குறிப்பேற்ற அணியின் வரலாறு

செய்யுள் நடை சுருங்கிய சொல்லினதாய் விரிந்த பொருளை வெளியிடுகின்ற தன்மையதாய்ப் பயில்வாருக்கு மனத்தளர்ச்சி தோன்றாது. படிக்கையில் மகிழ்ச்சி உண்டாகுவதற்கு அலங்கார நடைகளை ஆசிரியர்கள் கையாளுகின்றனர். கற்றோரும் மற்றோரும் போற்றிப் புகழும் பாட்டாய் மிளிர்கின்றது. அணிகள் குணம் பற்றியும் பொருள் பற்றியும் சொல் பற்றியும் பல வகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. தொன்றுதொட்டே பழைய தமிழ் இலக்கியங்களில் அணிகள் பயின்று வந்துள்ளன.

> **"அணி எனப்படுவது துணிபு உறக் கிளப்பின்**
> **குணம் அலங்காரம் எனஇரு திறத்தால்**
> **பொருள் புலப்படுவது என்மனார் புலவர்"[5]**

என இலக்கண விளக்கம் குறிப்பிடுவதோடு இவ்வணி பொருளணி, சொல்லணி என இரு வகைப்படும் என்றும் குறிக்கப்படுகின்றது.

### உவமையணியே தற்குறிப்பேற்றவணிக்குத் தாயணி

உவமையிலிருந்து பிறந்த அணிகளில் ஒன்று தற்குறிப்பேற்ற அணியாகும். இவ்அணியில் புலவன் உவமையை ஒருசேரக் கூறித் தன் கற்பனையை அவற்றின்மீது ஏற்றி உரைக்கின்றான். தற்குறிப்பேற்ற அணியின் தொன்மையை ஆராய்வோமானால் அது உவமையிலிருந்துதான் தோன்றியிருக்க வேண்டும் என்பதை அறிய முடிகிறது. சான்றாக, சிலப்பதிகாரத்தில் கூறப்பட்ட, "போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட"[6] என்ற பாடல் வரிகள் கோவலனும் கண்ணகியும் மதுரைக்கு வந்தால் அதனால் அவர்களுக்குத் துன்பம் நேரும். ஆகையால் நீவிர் இந்நகருக்கு வாராதீர்கள் என்று கையை ஆட்டி அசைப்பதுபோல் மதுரை மாநகரக் கொடி கையசைத்து நின்றதாகக் குறிப்பிடுகிறார்

இளங்கோவடிகள். இப்பொழுது இயற்கையாக நடப்பது காற்றில் கொடி அசைவதாகும். இருப்பினும் கவிஞன் தன் கதாப்பாத்திரங்களின் உணர்வுகளையும் ஓர் இயற்கைப்பொருள் அவர்களைக் காப்பாற்றத் துடிப்பதாக இயற்றியிருப்பது அவருக்கும் அவரது படைப்பிற்கும் உள்ள தொடர்பாகும். ஆனால் இப்பாடல் வரிகள் நெடுங்கொடி வாரல் என்பனபோல் மறித்துக் கைகாட்ட என்ற தொடரில் உவமையின் உருபாகிய போல எனும் சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதால் தற்குறிப்பேற்ற அணிக்கு உவமையணியே தாயணி எனலாம்.

தொல்காப்பியர் உவமைகளில் தற்குறிப்பேற்ற உவமை என்று தனியாகப் பிரித்துக் கூறுகிறார். எனினும் பிற்காலத்தில் தண்டியலங்காரர் பொருள் அணிகள் 35 என்று குறிப்பிட்டபோது தற்குறிப்பேற்ற அணியை ஒரு தனி அணியாகக் குறிப்பிட்டதோடு உவமையணி பற்றியும் அதன் வகைப்பற்றியும் கூறும்போது, அது ஏனைய அணிகளுடன் கூடியும் வரும் என்றும் தற்குறிப்பேற்றஉவமையைக் குறிப்பிடுகின்றார். பண்டுதொட்டே கவிஞரால் பெரிதும் போற்றிக் கையாளப்பட்ட தற்குறிப்பேற்றஅணி கவிஞனின் வளமான கற்பனைக்கு உரமாக நிற்பதோடு அவன் குரலாகவும் சிந்தனையாகவும் விளங்குவதைச் சிலப்பதிகாரக் கருத்தால் உணரலாம். தற்குறிப்பேற்ற அணி பற்றிக் கூறும் தமிழ் இலக்கணங்கள் பெரும்பாலும் பிற்காலத்தில் எழுதப்பட்டனவாயினும் அவை சங்க இலக்கியக் காலங்களிலேயே பயன்படுத்தப்பட்டதையும் காணமுடிகிறது. சான்றாக,

> **“வெல் புகழ் மன்னவன் விளங்கிய ஒழுக்கத்தால்**
> **நல்லாற்றின் உயிர்காத்து நடுக்கற தான்செய்த**
> **தொல்வினைப் பயன்துய்ப்ப துறக்கம் வேட்டு எழுந்தாற்போல**
> **பல்கதிர் ஞாயிறு பகலாற்றி மலை சேர”**
> **(கலி.பா.118)**

அதாவது கதிரவன் மறைந்த செய்தியைக் கூறும் போது, வெற்றி தரும் போர்களைச் செய்து தன் நல்ல குணங்களால் தன் குடிகளைக் காத்த சிறந்த வேந்தன் ஒருவன், தன் இறுதிக் காலத்தில் தன் தொல்வினைப் பயனைத் துய்ப்பதற்காகத், துறவறம் மேற்கொண்டு கானகம் மேவினார் போல கதிரவன் தன் கடமையாற்றிப் பின் மேற்கு மலையில் சென்று மறைந்தான் என்று நல்லந்துவனார் நெய்தற்கலியில் குறிப்பிடுகிறார். அதாவது கதிரவன் மாலைநேரத்தில் மேற்கே சென்று மறைதல் இயல்பு. ஆனால் கவி இயற்கையில் நிகழும் நிகழ்ச்சியின் மீது தான் மக்களுக்குக் கூறக் கருதிய அரசியல் செய்தியை ஏற்றிக் கூறியுள்ளார். அதுவும் உவமை உருபான துறக்கம் வேட்டு எழுந்தாற்போல என்ற தொடரில் உவமையைக் கூறி தற்குறிப்பேற்ற அணி அமைந்திருப்பது உவமையணியின் சிறப்பினை நம்மால் உணரமுடிகிறது. மு.கதிரேசன் செட்டியார் தனது சங்கத்தமிழ் எனும் நூலில்,‘இக்காலத்துப் புலவர்களால் பெரிதும் கையாளப்பட்ட தற்குறிப்பேற்றம் முதலிய அணிகள் சங்கத்தமிழில் காணப்படவில்லை. இயற்கை வருணனையாகிய தன்மை நவிற்சியும், ஒன்றைத் தெளிவுபடுத்தற்கு ஒருபகுதி ஒத்ததாக எடுத்துக்காட்டுவதற்கும் பெரிதும் உவமைகளே பயன்படுத்தப்பட்டு வந்தன’ என்கிறார். இதன்மூலம் சங்ககாலத்தில் தற்குறிப்பேற்ற அணி உவமைக்குள் அடங்கியிருந்தாலும் அரிதாகவே பயன்பட்டு வந்தமையைக் காணமுடிகிறது.

அணிகளுள் ஒன்றாகிய தற்குறிப்பேற்றவணியினை முதன்முதலாகப் பெயர் வைத்துக் குறிப்பிட்டவர் தண்டியலங்காரர் என்பது வெள்ளிடைமலை. பொதுவாகப் பெயரும் பொருள், பெயராத பொருள் மீது அவற்றின்கண் ஏற்றிச் சொல்வது தற்குறிப்பேற்றவணி என விளக்குவதிலிருந்து எங்கெல்லாம் கவிஞர்கள் தங்கள் கருத்தை ஏற்றி வைத்துக் கூறுகிறார்களோ அங்கெல்லாம் இவ்வணி வழங்கி வருவதைக் காணலாம்.

> **“எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்**
> **சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்”[7]**

எனத் தண்டியலங்காரம் கூறுகிறது. எவ்வகைப்பட்ட பொருளின் இயல்பையும் உண்மையாக, நேரில் பார்ப்பது போல் தோன்றுமாறு விளங்கச் சொல்வது தற்குறிப்பேற்றவணியாகும். தற்குறிப்பேற்ற அணியினை நான்கு வகைகளில் காணலாம்.

1. பொருள்தன்மை தற்குறிப்பேற்றஅணி
2. குணத்தன்மைத் தற்குறிப்பேற்றஅணி
3. சாதித்தன்மைத் தற்குறிப்பேற்றவணி
4. தொழில்தன்மை தற்குறிப்பேற்றவணி

என்பதாகும். “அதுவே பொருள் குணஞ்சாதி தொழிலோடு புலனாம்”[8] என்கிறது தண்டி.

**பொருள் தன்மை தற்குறிப்பேற்றம்**

பதுமையார் இலம்பகத்தில் சீவகன் தன் தோழர்களை விட்டுப் பிரிந்து தான் மட்டும் தனியே செல்லலானான். வழியில் அருவியுடன் மலைகள் காட்சியளிக்கின்றன.

> **“போரேறு தனியே போந்த தெனவெண்ணி**
> **நீளருவிக் கண்ணீர்வீழ்த்து அலறி வண்ணங் கரிந்துருகிக்**
> **கோளுழுவை யன்னாருக்குக் குன்ற முன்னின் றழுதனவே”[9]**

எனும் சீவகசிந்தாமணியின் பாடல் வரியில் தற்குறிப்பேற்ற அணி பயின்று வந்துள்ளது. அதாவது போர் ஏறாகிய சீவகன் தனியே வந்தான் என்று நினைத்து அருவியாகிய கண்ணீரை விட்டு மலைகளும் அலறி நின்று அழுதென என்கிறார் திருத்தக்கதேவர். ஆரவாரத்துடன் மலைகள் மீது அருவிகள் ஒழுகி ஓடுவதைச் சீவகனின் நிலைக்கு இரங்கி மலைகளும் கண்ணீர் சொரிவதாய்ப் புலவன் புனைந்து கூறியுள்ளான். போந்ததென என்கிற வினையுடன் கூடிய சொல் உறுப்பு பயன்படுத்தப்பட்டுள்ளது. நின்று அழுதன என்ற சொல்லில் கூறக் கருதிய ஒன்றுக்கும், குறிப்பில் கொண்ட ஒன்றுக்கும் பொதுத்தன்மை அல்லது செயல் காணப்படுவதால் அதனை அடிப்படையாகக் கொண்டு புலவன் தன் கருத்தினை ஏற்றிக் கூறியுள்ளான்.

**“மிக்கார்தங் கேட்டின் கண் மேன்மை**
**யில்லாச் சிறியார் போல்**
**அங்கங்கே எயிறு அடைந்த நறவு**
**முல்லை நாள் வேங்கை**
**தக்கார் போல் கைமறித்த காந்தள்**
**அந்தோ தகாதெனவே**
**தொக்காற் போர் பன்மாவு மயிலும்**
**தோன்றித் துளங்கினவே”[10]**

பெரியோர்க்குக் கெடுதி நேர்ந்தபொழுது அதுகண்டு நகும் கீழ்மக்கள் போல, வேங்கை மரத்தின் மீது நின்று முல்லை நக, தக்கார்போல் காந்தள் அதுதகாது என்று கைகவித்து விலக்கின. அவ்வளவில் சுற்றத்தாரைப் போல் பலவகை விலங்குகளும் மயில்களும் கண்டு நடுங்கின. தனியே வந்த சீவகனைக் கண்டு இந்தநிகழ்ச்சிகள் நடந்தன என்கிறார் திருத்தக்கதேவர். இயற்கைப் பொருள்களின் இயல்பான தன்மை மீது தம் குறிப்பேற்றி, ஆசிரியர் கூறுவது பொருள் தன்னை தற்குறிப்பேற்றவணிக்கு எடுத்துக்காட்டாகும். அதாவது வேங்கை மீது படர்ந்து முல்லை பூத்ததை முல்லையின் நக என்றும், இயல்பாய்க் கைக்கவித்ததுபோல் பூமி நோக்கி பூத்த காந்தள்பூ காற்றில் அசைவதை அதுதகாது என்று தன் கையை அசைப்பதாகவும், மாவும் மயிலும் தோன்றி ஆடுவதைச் சீவகன் நிலை கண்டு இரங்கி நடுங்குவதாயும் கூறுவதில், சீரும் சிறப்புமாய் இருக்க வேண்டிய சீவகன் நிலைகுறித்துப் புலவன் இரங்கும் தன்மை புலப்படுகின்றது. இது சங்க இலக்கிய கடையெழுவள்ளல்களில் ஒருவனாகிய பேகன் மயில் ஆடுவது இயல்பான நிலையானாலும் அது குளிரில் நடுங்குகிறது எனத் தன் போர்வையை எடுத்துப் போர்த்தினான் என அவனது கொடையுள்ளம் பேசப்பட்டாலும், அதுவும் கவிஞனின் தற்குறிப்பு என நினைக்கத் தோன்றுகிறதல்லவா! இருப்பினும் முல்லை பூத்தல், காந்தள் பூமி பார்த்துத் தொங்குதல் எனும் பொருள் மாறாதிருப்பதால் இவை பொருள் தன்மைத் தற்குறிப்பேற்றவணியாகும்.

### குணத்தன்மைத் தற்குறிப்பேற்றம்

பூத்த முல்லைப் பூவில் வண்டுகள் புகுந்து துளைப்பது இயற்கை. அது அதன் குணமாகும். அதனை ஆசிரியர் குறிப்பிடும் போது,

“துமியாரை முல்லை முறுவலித்து நகுதிர் போலும் இனி நும்மைப் பல்லை யுகுத்திடுவம் என்று பைம்போத லர்சிந்தித் தொல்லை நிறம் கருகித் தும்பி பாய்ந் துகைத்தனவே”[11] என்ற பாடல்வரியில் தனித்தவர்களை முறுவல் செய்து இகழ்கின்றீர்களா, உங்கள் பல்லை உடைத்திடுவோம் என்று, முல்லை மலர்களில் வண்டுகள் புகுந்து துளைத்ததாய்க் கூறியது குணத்தன்மை தற்குறிப்பேற்ற அணி ஆகும். மலர்களில் தேன் எடுத்தல் என்பது வண்டுகளின் இயல்பான குணமாகும் என்பதால் இது குணத்தன்மைத் தற்குறிப்பேற்றவணியாகும்.

### சாதித்தன்மைத் தற்குறிப்பேற்றம்

திருத்தக்கதேவர் தேவர்களைப் பற்றிப்பாடும் பாடலில்,

**“முல்லையம் குழலார் முலைச்செல்வமு**
**மல்லன் மாநகர்ச் செல்வமும் வார்கழற்**
**செல்வன் செல்வமும் காணிய வென்பர்போல்**
**எல்லியும் இமையார் இமையா ததே”[12]**

வளமிகு மாந்தரின் செல்வமும், கழல் அணிந்த வீரரின் செல்வமும் காண வேண்டும் என்பது போல் இமையவர் இமையாது இருந்தார் என்கிறார். இமையோர் இமையாது இருக்கின்ற சாதித்தன்மை மீது ஆசிரியர் தன்குறிப்பு ஏற்றிக் கூறியது நோக்கத்தக்கது. காணிய என்பனபோல் என்ற வினையுடன் கூடிய உருபு தற்குறிப்பேற்ற அணியைச் சுட்டிக்காட்டுகின்றது. இமையவர் என்ற சாதியினர் பற்றிக் கூறப்பட்டதால் இது சாதி குறித்த தற்குறிப்பேற்றவணிக்குச் சான்றாகும்.

### தொழில் தன்மைத் தற்குறிப்பேற்றம்

சீவக சிந்தாமணியில் நாமகள் இலம்பகத்தில் மயில் முதலிய பறவைகளும் மானினமும் தமக்கு இயல்பான கொட்டாவி கொள்ளுதலையும் ஆரவாரித்தலையும் செய்கின்றன. அதனைத் திருத்தக்கதேவர் விசயையின் நிலைமைக்கு அவைகள் இரங்கி வருந்துவதாகக் கற்பனை செய்கிறார்.

**“தூவி அஞ்சரை அன்னமும் தோகையும்**
**மேவி மென்புன மானின மாதிய**
**நாவி நாறெழின் மேனியைக் கண்டு கண்டு**
**ஆவித் தூற்றுகி லாதழு திட்டவே”[13]**

எனும் பாடலில் அழகிய சிறகுகள் உடைய அன்னமும், மென்மைப் பண்புடைய மானும் விசயையின் மெய்யைக் கண்டு, அவள் நிலைக்கு இரங்கி ஆற்றாமல் கொட்டாவி விட்டு அழுதன என்று உறுதி தொனிக்கக் கூறியுள்ளார். புதிய ஒன்றைக் கூர்மையாக நோக்கிப் பின் ஆரவாரிக்கின்ற இயல்பான தொழிலை அழுததாகக் கற்பித்துக் கூறியுள்ளான் கவிஞன். இது தொழிற்தன்மைத் தற்குறிப்பேற்ற அணி ஆகும். கொட்டாவி விடுதல் என்பது இயல்பான உயிர்களின் தொழில் என்றாலும் அதனைக் கூட ஆசிரியர் அழகுற இரக்கத்தன்மைக்குச் சான்றாகக் கூறுவதால் இது தொழிலின் அடிப்படையில் தோன்றிய தற்குறிப்பேற்றவணியாகும்.

### முடிவுரை

சீவகசிந்தாமணி ஐம்பெருங்காப்பியங்களில் ஒன்று. அந்நூல் தொடக்கம் முதலே அவலச்சுவையில் தோன்றி இடையில் இன்பியல் கொண்டு விளங்கினாலும் இறுதியில் காப்பிய நோக்கமான துறவறத்தை நிலைநிறுத்துவதைக் காணமுடிகிறது. மேலும் பல்வேறு அணிகளைப் பிற்கால அணிநூல்கள் குறிப்பிட்டாலும் தொல்காப்பியம் உவமயியலையே பெரிதும் வலியுறுத்தினாலும், உவமயியலின் அடிப்படையில் தற்குறிப்பேற்றவணி இலக்கியங்களுக்கு அழகு சேர்ப்பதைச் சான்றுகளின் வழி அறியமுடிகிறது. மேலும் சீவகசிந்தாமணியில் தன்மையணியின் அடிப்படையில் தற்குறிப்பேற்றவணியை நான்கு வகைகள் உண்டு. அவை முறையே இவ்வியல் ஆய்வுகள் செய்யப்பட்டுச் சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

### அடிக்குறிப்புகள்

1. தொல்காப்பியம், பொருளதிகாரம், செய்யுளியல், நூ.485
2. தண்டி, நூ.7
3. சீவகசிந்ததாமணி, அணிந்துரை, ப.12
4. தண்டி, பொருளணியியல், நூ.12
5. இலக்கண விளக்கம், நூ.620
6. சிலப்பதிகாரம்,13:170-173
7. தண்டி, நூ.29
8. மே.கு.நூ., நூ.30
9. சீ.சி., பா.1226
10. மே.கு.நூ., பா.1227
11. மே.கு.நூ., பா.1228
12. மே.கு.நூ., பா.137
13. மேற்குறிப்பிட்ட நூல், பா.346

Vol. 9 Special Issue 2 October 2024 E-ISSN: 2456-5571

# தமிழ் இலக்கணத்தில் புணர்ச்சி

**திருமதி க. வெண்ணிலா**
*முனைவட பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வுத் துறை*
*மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர்*

**முனைவர் ம. பூபதி , M.A, M.Phil., Ph.D.,**
*தமிழ் உயராய்வுத் துறை*
*உதவிப்பேராசிரியர் மற்றும் ஆய்வு நெறியாளர்*
*மருதுபாண்டியர் கல்லூரி, தஞ்சாவூர்*

**ஆய்வுச்சுருக்கம்**
தமிழ் மொழியில் தோன்றிய பல நூல்களில் முழுமையாகக் கிடைக்கும் முதல் தமிழ் இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். இந்நூல் தொல்காப்பியரால் இயற்றப்பட்டது. தொல்காப்பியம் என்ற தமிழ் முதல் நூல் வழி வந்த பழமைத் தடங்காட்டி நிகழ்காலச் செவ்விச் சேர்த்து வளரும் எதிர்கால புதுமைப் புரட்சிக்கு இடம் வகுக்கும் இயக்க நூல். இவ்வுலக இலக்கியங்களை மானிடவினத்திற்கு எடுத்துக்காட்டும் உலக வாழ்வு நூல். தொல்காப்பியத்தை ஈன்றவள் தமிழ்த்தாய். இத்தகைய சிறப்புடைய மூவாயிரம் ஆண்டுகள் தொன்மையுடைய தொல்காப்பியத்தில் புணர்ச்சி குறித்த தகவல்கள் எவ்வாறு இடம் பெற்றுள்ளன என்பதைப் பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கமாக அமைந்துள்ளது.

**முன்னுரை**

தமிழ் இலக்கண நூல்களில் தொல்காப்பியம் காலத்தால் முற்பட்டுப் பழமையும் பெருமையும் வாய்ந்ததாகக் காணப்படுகின்றது. இந்நூலை இயற்றியவர் தொல்காப்பியர். தமிழ்த் தொன்மை வாய்ந்த முழு முதல் இலக்கண நூல் தொல்காப்பியமாகும். இந்நூல் இலக்கணத்தோடு மட்டும் அமையாது. உலக வரலாற்று நூலாகவும் ஒழுகலாற்றுப் பண்பாட்டு நூலாகவும், உளவியல் இயல்பு நிறைந்துள்ள வாழ்க்கைப் பெருநூலாகவும் திகழ்கின்றது. தொல்காப்பியம் தமிழிலக்கண முதனூல். எதனையும் கண்டும் தழுவியும் எழுதப் பெறாத தனி முதனூல். தொல்காப்பியத்தின் பெருஞ்சிறப்பு அதன் மூவதிகாரப்பகுப்பாகும். இ∴து எழுத்து, சொல், பொருள் என்னும் மூன்று பகுதிகளை உடையது. ஒவ்வொன்றும் ஒன்பதொன்பது இயல்களை உடையது. மொத்தம் ஆயிரத்து ஆறுநூற்றுப் பத்துச் சூத்திரங்கள் உள்ளன. தொல்காப்பியம் முழுமைக்கும் முதன் முதல் உரைகண்ட நல்லிசைச் சான்றோர் இளம்பூரணர். இறுதியில் முழுமைக்கும் உரைகண்டவர் நச்சினார்க்கினியராவர். இந்நூல் மொழிஇலக்கணம் மட்டுமன்று தமிழினத்தின் வாழ்க்கைப்பாங்கு இத்தகைத்து எனக்காட்டும் பாடல் சான்ற புலனெறி வழக்கின் மரபுநிலை திரியாமாட்சி கூறும் அரிய இலக்கியக் கோட்பாட்டு நூலாகும். இதன் காலம் கி.பி மூன்றாம் நூற்றாண்டு என்றும், ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கூறுவது நடுவுநிலை ஆய்வாளர் தம் கணக்கீடாகும். இந்நூலில் புணரியல் என்பது இன்றியமையாத இடத்தினைப் பெற்றிருக்கின்றது. புணரியல் என்பது பற்றியும், புணர்ச்சி என்பது பற்றியும் புணரியல் கோட்பாடுகள் எடுத்துரைக்கின்றன. புணரியலைப் பற்றி தொல்காப்பியரின் கருத்துக்கள், பிற இலக்கண நூலாசிரியர்களின் கருத்துக்கள் போன்ற செய்திகளை இலக்கண நோக்கிலும் மொழியியல் அடிப்படையிலும் புதிய நோக்கில் அணுகும் பாங்கில் ஆய்வு செய்யப்படுகின்றது.

**புணர்ச்சி இலக்கண நூல்கள்**

தொல்காப்பியத்தை அடியொற்றியே எழுந்த இலக்கணநூல்களுள் சிறந்ததெனப் போற்றப்படுவது நன்னூல். தமிழ் இலக்கண நூல்களில் புணர்ச்சி இலக்கணத்தின் பங்கு இன்றியமையாதது. இப்புணர்ச்சி இலக்கணம் பற்றி தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நன்னூல், வீரசோழியம், நேமிநாதம், மூத்துவீரியம், இலக்கணவிளக்கம், சுவாமிநாதம், தொன்னூல் விளக்கம் ஆகிய எட்டு நூல்கள் விளக்குகின்றன. தொல்காப்பியம் புணர்ச்சி பற்றி ஆறு இயல்களிலும், நன்னூல் இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம், மூத்துவீரியம், சுவாமிநாதம் என்ற ஐந்து நூல்களும் புணர்ச்சியைப் பற்றி மூன்று இயல்களிலும் விளக்குகின்றன. வீரசோழியம், நேமிநாதம் புணர்ச்சியை ஓர் உட்பகுதியாக்கிக் கூறியுள்ளன.

**புணர்ச்சியின் பொது இலக்கணம்**

தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள நிலைமொழி வருமொழி உறவுகள் பற்றிய செய்திகளும், புணர்ச்சி இலக்கணத்தின் பொதுவான விளக்கமும்,

புணர்ச்சியின் வகைகளும், சுருங்கக் கூறி விளங்கவைத்தல் என்பதை அடிப்படையாக் கொண்டு அமைந்துள்ளன. தொல்காப்பியம் புணர்ச்சியை உயிரீற்றுப்புணர்ச்சி, மெய்யீற்றுப்புணர்ச்சி, சாரியைப்புணர்ச்சி, குற்றியலுகரப்புணர்ச்சி, எண்ணுப்பெயர்புணர்ச்சி, திசைப்பெயர்ப்புணர்ச்சி என ஆறு வகையில் விளக்கியுள்ளது. மேலும் அல்வழிப்புணர்ச்சி, வேற்றுமைப்புணர்ச்சி என்றும் வகைப்படுத்தியுள்ளது.

**புணர்ச்சியின் இன்றியமையாமை**

தமிழ் இலக்கணத்தின் உயிர்போன்ற பகுதி புணரியில். புணரியில் என்பது நூணுக்கமான ஒன்று. இதனை அறிந்த தொல்காப்பியர் '**மயங்கியல்**' என முடியும் இரண்டு இயல்களும் '**இயல்**' என முடியும் மூன்று இயல்களும், '**மரபு**' என முடியும் ஓர் இயலும் கொண்டு ஆறு இயல்களாகப் பகுத்துள்ளார். புணரியல், தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளிமயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என பகுத்துள்ளது தொல்காப்பியரின் மொழியியல் பாங்கினைக் காட்டுகின்றது.

தொல்காப்பியத்திற்குப் பின் வந்த நன்னூல் புணரியிலைப் பற்றி மூன்று இயல்களில் குறிப்பிடுகின்றது. அவை உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுப் புணரியல் என்பனவாகும்.

வீரசோழியமும், நேமிநாதமும் புணர்ச்சியை எழுத்தியலின் உட்பகுதியாக்கித் தனி இயல் அமைக்காமல் பேசுகின்றன. இலக்கண விளக்கம். நன்னூலைப் போன்று மூன்று இயல்களில் புணர்ச்சியைப் பற்றி விளக்குகின்றது ஆனால் தொல்காப்பியமும் நன்னூலும் புணர்ச்சிக்கென தனி இயல்களைக் கொண்டுள்ளன. தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் ஆகிய மூன்று நூல்களும் ஓரே ஒரு இயலில் புணர்ச்சி இலக்கணத்தை விளக்கியுள்ளன.

**புணரியல் என்பதன் விளக்கம்**

புணரியல் என்பது பொதுவாக மொழிகள் புணர்தலைச் சுட்டும். இப்புணரியல் என்ற சொல்லிற்க்குப் பல இலக்கண உரையாசிரியர்களும் மொழியியல் அறிஞர்களும் பலவாறு விளக்கம் தந்துள்ளனர்.

"புணரியல் என்பது 'மொழிமரபிற் கூறப்படும் மூவகை மொழிகளும் தம்முட் புணருமாற்றை எடுத்துரைப்பது"[1] என்று விளக்கம் தந்துள்ளார் இளம்பூரணர். "மொழிமரபிற் கூறிய மொழிகளைப் பொதுவகையாற் புணர்க்கும் முறைமை உணர்த்தினமையின் புணரியல் என்று பெயர் பெற்றது"[2] என்கின்றார் நச்சினார்க்கினியார். "மொழிகள் புணர்தற்குரிய கருவியின் இயல்புணர்த்தினமையின் இது புணரியலென்னும் பெயர்த்தாயிற்று"[3] என்று விளக்கம் தந்துள்ளார் க. வெள்ளைவாரணர். "நிலைமொழி வரும்மொழிகளின் இடையில் வரும் சாரியை உருபுகளின் இயல்பு கூறுதலினாலும், புணர்மொழிகளின் பொது. இலக்கணம் கூறுதலினாலும் புணரியல் எனப்பட்டது"[4] என்று விளக்கமளித்துள்ளார் ஆ சிவலிங்கனார். இதனைத் தொல்காப்பியர் பொதுப்புணரியல், சிறப்புப்புணரியல் என்று குறிப்பிட்டுள்ளார்.

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள புணரியலைப் பொதுப்புணரியல் என்றும், மற்றய "தொகைமரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் ஆகிய ஐந்து இயல்களில் கூறப்படும் கருத்துக்களைச் சிறப்புப்புணரியல் என்றும் குறிப்பிட்டுள்ளார்[5] க. ப அறவாணன். "பொதுவாக எழுத்து மாற்றங்களையும், ஒரு சொல்லுக்குரிய எழுத்து வேறுபாடுகளையும் விளக்குவதே புணரியல்"[6] என்றுரைக்கின்றார் செ.வை சண்முகம்.

**புணர்ச்சி என்பதன் விளக்கம்**

புணர்ச்சி என்பது இரண்டு பொருள்களின் சேர்க்கை என்று பொருள்படும். இதனை "அவற்றுள் நிறுத்தசொல்லின் ஈறா கெழுத்தொடு"[7] (தொல். எழுத்து. 109) என்ற சூத்திரத்தில் தொல்காப்பியர் அமைத்திருப்பது மிகப் பொருத்தமாக அமைந்துள்ளது. இக்கருத்தினை "மெய்யுயிர் முதலீறாமிரு பதங்களும்"[8] (நன் -151) என்று நன்னூல் சுட்டிக்காட்டியுள்ளது. புணர்ச்சி பற்றிக் கூறவந்த தொல்காப்பியர் புணர்வது எழுத்தும் எழுத்துமே என்று தெளிவாகக் கூறியுள்ள நிலையில் நன்னூல் இருபதங்கள் இயைவது புணர்ப்பே என்று எடுத்துரைத்துள்ளது. பொதுவாகக் கூறினால் புணர்ச்சி என்பது நிலைமொழியின் ஈறும், வருமொழியின் முதலும் புணர்கின்ற நிலையைத்தான் சுட்டும்.

மொழியியலறிஞரான க.சாம்பசிவனார் "ஒரு கட்டுருபும் ஒரு தனி உருபும் புணர்வதை அகப்புணர்ச்சி என்றும், இரண்டு தனி உருபுகள் மட்டும் புணர்வது புறப்புணர்சி என்றும் குறிப்பிட்டுள்ளது புணரியல் இலக்கணத்திற்கு மிகுந்த பயனளிப்பதாக அமைந்துள்ளது."[9] பொன். கோதண்டராமன் "புணர்ச்சி இலக்கணத்தை சந்தி இலக்கணம் என்றும் உருபொலியனியல் என்றும் குறிப்பிட்டுள்ளார்."[10]

"புணர்ச்சிக்கு அடிப்படை வடிவங்களாகத் தேர்ந்தேடுக்கப்படுவவை தனித்து இயங்கும் கட்டிலா

வடிவமாக இருக்க வேண்டும் என்றுரைப்பதுடன் சொல்லின் மாற்று வடிவங்கள் இரண்டு என்பதையும் குறிப்பிடுகின்றார்”[11] ஹாக்கெட். தொல்காப்பியமும் நன்னூலும் எழுத்திலக்கணத்தை கருவி, செய்கை என்று இரு வகையால் பிரித்துள்ளது. கருவி என்பது சொல்புணர்ச்சிக்குரிய அமைப்பாகும். செய்கை என்பது புணர்ச்சியைக் குறிக்கின்றது.

**புணர்ச்சியின் வகைகள்**

தொல்காப்பியம் புணர்ச்சியை எழுத்து வகையால் நான்கு என்றும், சொல் வகையால் நான்கு என்றும், தொடர்வகையால் இரண்டு என்றும் குறிப்பிட்டுள்ளது. நன்னூல் புணர்ச்சி என்பது பொது வகையால் நான்கு வகைப்படும் என்று கூறுகின்றது. உயிரீற்றுப்புணரியல் இருவகைப் புணர்ச்சி பற்றியும், மெய்யீற்றுப்புணரியல் இருவகைப் புணர்ச்சி பற்றியும், உருபுப்புணரியல் நான்கு வகைப் புணர்ச்சி பற்றியும் குறிப்பிட்டுள்ளது.

தொல்காப்பியர் எழுத்து வகையால் குறிப்பிடுகின்ற நான்கையும் நன்னூல் இரண்டு இயல்களில் கூறியுள்ளது. தொல்காப்பியர் உருபுப்புணர்ச்சியையும் பொருட்புணர்ச்சியையும் வேற்றுமைப் புணர்ச்சியில் அடக்கி கூறியுள்ளார். ஆனால் நன்னூல் உருபுப் புணர்ச்சியைப் பற்றி உருபுப்புணரியலில் கூறுகின்றது.

தொல்காப்பியம் நன்னூலும் வேற்றுமைப் புணர்ச்சியைப் பற்றி எடுத்துரைத்துள்ளது. நன்னூல் வேற்றுமைப்புணர்ச்சியை வேற்றுமைத்தொகை என்றும் வேற்றுமை விரி என்றும் இருவகையில் குறிப்பிட்டுள்ளது. தொல்காப்பியம் குறிப்பிடும் உருபுப்புணர்ச்சியும், நன்னூல் காட்டுகின்றன வேற்றுமை விரியும் ஒன்றாகும். இவ்விரண்டு புணர்ச்சிக் கண்ணும் வேற்றுமை உருபுகள் ஆறும் வெளிப்பட்டு நின்றுப் புணரும். மேற்கூறப்பட்டதைப் போன்று தொல்காப்பியம் காட்டும் பொருட்புணர்சியும், நன்னூல் காட்டும் வேற்றுமைத் தொகையும் ஒன்றாகும் ஏனென்றால் இவ்விரண்டு புணர்ச்சியிலும் உருபுகளும் மறைந்து நின்று புணரும். இருப்பினும் தொல்காப்பியர் பொருள் மறையாது நின்று புணர்வதைக் குறிக்கிறது என்று குறிப்பிடுவதன் மூலம் இவ்விடத்தில் தொல்காப்பியமும் நன்னூலும் வேறுபடுகின்றன.

“புணர்ச்சியின் பொழுது ஒரு எழுத்து மற்றொரு எழுத்தாக மாற்றம் பெற்று வருதல் திரிதல் விகாரமாகும். இதனை முன்னோக்கி ஓரினமாதல், பின்னோக்கி ஓரினமாதல், இருவழி ஓரினமாதல் என பிரித்துக்காட்டியுள்ளார்”[12] செ.வை சண்முகம். புணர்ச்சியில் உள்ள ஒரு எழுத்து இல்லாமல் மறைந்து வருவது கெடுதல் விகாரமாகும் (மரம்+ வேர் = மரவேர்) சி. இலக்குவனார் “மேலை நாட்டு மொழி ஆராய்ச்சியாளர்கள் மொழிகளில் ஏற்படும் ஒலி மாற்றங்களைப் பத்து வகைக்குள் அடக்கியுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார்”[13]

இந்நூலில் விகாரப் புணர்ச்சிப் பற்றிக் கூறுபவை ஏழு ஆகும். தொல்காப்பியர் சுட்டும் மிகுதல் (தோன்றல்) விகாரத்தை மேலைநாட்டார் Insertion என்றும், Prothesis என்றும், Epen thesis என்றும், Paragoga என்றும், குறிப்பிட்டுள்ளார். குன்றல் (கெடுதல்) விகாரத்தை Dissimilation என்றும், Haplotogy என்றும், குறிப்பிட்டுள்ளார். மெய்பிரிதாதல் (திரிதல்) விகாரத்தை Assimilation என்றும், விளக்கமாக எடுத்துரைத்துள்ளார். மேற்குறிப்பிட்டவை தவிர பொது வகையில் பார்க்கும் பொழுது புணர்ச்சி என்பது ஐந்து வகைப்படும். அவை உயிரீற்றுப் புணர்ச்சி, மெய்யீற்றுப் புணர்ச்சி, சாரியைப் புணர்ச்சி, குற்றியலுகரப் புணர்ச்சி, எண்ணுப் பெயர் புணர்ச்சி என்பவைகளாகும்.

மாகறல் கார்த்திகேய முதலியார் “புணர்ச்சியைச் சந்தி என்றும் உயிரீற்றுப்புணர்ச்சியை புணர்ச்சி என்றும் குறிப்பிட்டுள்ளார்”.[14] “மொழியியலில் சாரியை வெற்றுருபு என்று குறிக்கப்படுவதாக மோ. இசரேயல் குறிப்பிட்டுள்ளார்.”[15]

**எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி**

ஒன்று முதல் ஒன்பது வரையுள்ள எண்ணுப் பெயர்கள் நிலைமொழியில் நிற்கும் பொழுது வருமொழியில் பிற சொற்கள் வந்து புணர்வது எண்ணுப்பெயர்ப் புணர்ச்சி ஆகும். இவை மட்டுமின்றி வருமொழியில் அளவுப் பெயர்களும் நிறைப் பெயர்களும் வந்து புணர்தலும் இருக்கிறது.

இதனைத் தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலில் எடுத்துரைத்துள்ளார். ஏனெனில் தமிழில் ஏழ், ஆயிரம் என்ற இரண்டு எண்ணுப்பெயர் தவிர ஒன்று முதல் ஆறு, எட்டு முதல் பத்து, நூறு ஆகியவை குற்றியலுகர ஈற்றில் முடிவு பெறும். எனவே அவைகளைக் குற்றியலுகரப் புணரியலில் வருணித்துள்ளார்.

எண்ணுப்பெயர் பற்றிச் சான்றுகள் சங்க இலக்கியங்களிலும் காணப்படுகின்றன. ஒன்று முதல் ஒன்பது வரை உள்ள எண்களுக்குச் சான்றுகள் இருக்கின்றன. ஓர் சொல் (கலி 105), ஈரிதழ் (நற் 254), மூவெயில் (கலி 2), நல் நால்கு பூண்ட கடும்பரி நெடுந்தேர் (அகம் 104), ஐயிருதலை (கலி 38), அறுதொழில் (புறம் 397), ஏழ்களிறு (புறம் 40), எண்தேர் (புறம் 87), தொண்டு படுதிவவு (மலைபடு 21) என்று சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

இவ்வாறு தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியலில் வருணித்த விதம் பாராட்டுதற்குரியது என்று மொழியியலில் குமாரசாமிராஜா குறிப்பிட்டுள்ளார்.[16] நன்னூல் எண்ணுப்பெயர் புணர்ச்சியையும், திசைப்பெயர் புணர்ச்சியையும் உயிரீற்றுப் புணரியலில் சுட்டிக் காட்டியுள்ளது.

ஒரு சொல்லினுள் நிகழும் புணர்ச்சியை அகப்புணர்ச்சி என்றும், பன்மொழிப் புணர்ச்சியை புறப்புணர்ச்சி என்றும், வேற்றுமைப்புணர்ச்சியை நெருக்கப் புணர்ச்சி என்றும், அல்வழிப்புணர்ச்சியை நெகிழ்வுப்புணர்ச்சி என்றும், மருவுப்புணர்ச்சியைத் தடுமாறு புணர்ச்சி என்றும், பிறவற்றை எல்லாம் முறைப்படுபுணர்ச்சி என்றும் மொழியியலார்கள் குறிப்பிட்டுள்ளனர் என்பதை சூ. இன்னாசி சுட்டிக்காட்டியுள்ளார்.[17]

**முடிவுரை**

தமிழ் இலக்கண நூல்களில் இடம்பெற்றுள்ள புணர்ச்சிக் குறித்த தகவல்களை இலக்கண நூலாசிரியர்களும், உரையாசிரியர்களும், மொழியியல் அறிஞர்களும் எவ்வாறு புதிவுசெய்துள்ளனர் என்பது பற்றி இக்கட்டுரையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**அடிக்குறிப்புகள்**

1. தொல்காப்பியர் - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் இளம்பூரணர் உரை. ப - 64
2. தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியர் உரை. நூற் - 103
3. க. வெள்ளைவாரணர் - தொல்காப்பியம் நன்னூல். நூற் - 124
4. ஆ. சிவலிங்கனார் - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் புணரியல். நூற் - 3
5. க. ப. அறவாணன் - தொல்காப்பியக் களஞ்சியம். ப - 9
6. செ. வை. சண்முகம் - எழுத்திலக்கணக் கோட்பாடு. ப – 203
7. தொல்காப்பியர் - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் புணரியல். நூற் - 109
8. பவணந்தி முனிவர் - நன்னூல் - நூற் - 51
9. க. சாம்பசிவனார் - தொல்காப்பியம் எழுத்ததிகாரம். நூற் - 49
10. பொன். கோதண்டராமன் - இலக்கண உலகில் புதியப்பார்வை ப – 57
11. F. HOCKET - A Course in Modern Linguistics. P – 282
12. செவைசண்முகம் - எழுத்திலக்கணக் கோட்பாடு ப - 140
13. சி இலக்குவனார் - தொல்காப்பிய ஆராய்ச்சி. ப – 70
14. மாகறல். கார்த்திகேய முதலியார் - மொழி நூல். ப - 86
15. மோ. இசரயேல் - இலக்கண ஆய்வுப் பெயர்ச்சொல். ப – 34
16. Kumarasamy Raja – Tolkapiyar's Morphophonemics. P – 172
17. சூ இன்னாசி - எழுத்தியல். ப – 148

**துணை நூற்பட்டியல்**


1. அறவாணன். க. ப - தொல்காப்பியக் களஞ்சியம், பாரி நிலையம், சென்னை பதிப்பு - 1975
2. இசரயேல். மோ - இலக்கண ஆய்வுப் பெயர்ச்சொல், சிந்தாமணி வெளியீடு, மதுரை 1976
3. இலக்குவனார். சி - தொல்காப்பிய ஆராய்ச்சி, வள்ளுவர் பதிப்பகம் புதுக்கோட்டை. பதிப்பு 1971
4. இன்னாசி. சூ - எழுத்தியல், அபிராமி பதிப்பகம் சென்னை. பதிப்பு 1983
5. கோதண்டராமன். பொன் - இலக்கண உலகில் புதியப் பார்வை, தமிழ் நூலகம் சென்னை. பதிப்பு 1981
6. சாம்பசிவனார். க - தொல்காப்பியம் எழுத்ததிகாரம், (கருத்துக் கோவை) வளவன் வெளியீடு, சென்னை 1982
7. சிவலிங்கனார். ஆ - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் புணரியல், உலகத்தமிழ் ஆராய்யச்சி நிறுவனம். சென்னை. 1982
8. தொல்காப்பியர் - தொல்காப்பியம் எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்., சென்னை. பதிப்பு 1955
9. தொல்காப்பியர், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியார் உரை, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்., சென்னை. பதிப்பு 1976
10. பவணந்தி முனிவர் – நன்னூல் - விருத்தியுரை உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை – பதிப்பு 1999.
11. கார்த்திகேய முதலியார். மாகறல் - மொழி நூல், தமிழ்ப்பல்கலைக் கழக வெளியீடு தஞ்சாவூர். பதிப்பு 1985
12. வெள்ளைவாரணர். க - தொல்காப்பியம் நன்னூல், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர். சிதம்பரம். பதிப்பு 1962
13. Hocket. F - A Course in Modern Linguistics The Macmillan Company Newyork - 1958
14. Kumarasamy Raja - Tolkapiyar's Morphophnemics Annamali University Annamalai Nagar. - 1980

# ஜி. குப்புசாமியின் மொழிபெயர்ப்பு நாவலில் (ஓரான் பாமுக்கின்)பனி என்ற நாவலில் அயலக மக்களும் வாழ்க்கையும்

**வெ. வடிவேல்**
*முனைவர் பட்ட ஆய்வாளர், மொழிபெயர்ப்புத்துறை*
*தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*

**முனைவர் சௌ. வீரலெக்ஷ்மி**
*இணைப்பேராசியர், மொழிபெயர்ப்புத்துறை*
*தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்*

## அறிமுகம்

ஓரான் பாமுக் துருக்கிய மொழியில் '**என் பெயர் சிவப்பு**' (My Name is Red) என்னும் நாவலை எழுதினார். அந்த நாவலை அமெரிக்காவின் டபிள்டே பதிப்பகம் ஓரான் பாமுக் அனுமதியோடு ஆங்கிலத்தில் எர்டாக் கோக்னர் (Erdag Gokner) என்பவரை மொழிபெயர்க்கச் செய்து 'My Name is Red' என்ற பெயரில் வெளியிட்டது. அந்த ஆங்கில மொழிபெயர்ப்புக்கு 2006-ல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு கிடைத்தது. துருக்கியல் இலக்கியத்திற்கான நோபல் பரிசு பெற்ற முதல் எழுத்தாளர் ஓரான் பாமுக்கே ஆவார். அவரது மற்றொரு நாவலான 'Snow' வை மாரீன் ∴ப்ரீலி என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அந்த நாவலைப் பனி என்னும் தலைப்பில் ஜி. குப்புசாமி தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இந்நாவலைக் காலச்சுவடு பதிப்பகம் 2013-ல் வெளியிட்டது. ஆங்கில மூலம் 426 பக்கங்களைக் கொண்டது. ஜி. குப்புசாமியின் தமிழ்மொழிபெயர்ப்பு 575 பக்கங்களைக் கொண்டது. 'பனி' என்னும் இத்தமிழ் மொழிபெயர்ப்பு நாவலில் வெளிப்படும் அயலக மக்களாகிய துருக்கியர்களின் மக்கள் இனங்கள் மற்றும் வாழ்வியலைச் சுருக்கமாகக் காண்பதே இவ் ஆய்வு கட்டுரையின் சாரமாகும்.

1915 – 1917 ஆண்டுகளில் துருக்கியின் ஓட்டாமன் இராணுவம் ஆர்மீனியர்களைக் கூட்டம் கூட்டமாகக் கொன்று குவித்தது. 1984 களில் நடைபெற்ற இனப்படுகொலையில் 30000 குர்தியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஆர்மினியர்களும் குர்தியர்களும் துருக்கியில் வாழத் தகுதியற்றவர்களாக துருக்கி ஆட்சியாளர்களால் கருதப்பட்டனர்.

## நாவலில் பின்புலமும் கதைப்போக்கும்

இந்தப் பின்புலத்தில் துருக்கியின் அரசியல் போக்கினை முன்வைத்து ஓரான் பாமுக் எழுதிய முதலும் கடைசியுமான அரசியல் நாவலை பனியாகும். அவரை இதனை 'எனது முதலும் கடைசியுமான அரசியல் நாவல்' என குறிப்பிட்டுள்ளார்.

இந்நாவலை எழுதியமைக்காக துருக்கி அரசு ஓரான் பாமுக் மீது அரசியல் ராஜதுரோக குற்றத்தைச் சுமத்தி அவருக்கு மரண தண்டனை பெற்றுத்தர முயன்றது. துருக்கியில் இம்முயற்சி ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக நாடுகளின் தலையீடுகளால் முறியடிக்கப்பட்டது. இதனால் தான் ஓரான் உலகப் படைப்பாளியாகப் போற்றப்படுகின்றார். அவரது நாவல்கள் 'உலக கிளாசிக் நாவல்கள்' என அழைக்கப்படுகின்றன.

## நாவலின் கதைக்கருவும் கதைப்போக்கும்

துருக்கியர்களின் வாழ்க்கையை மேற்குலகை நோக்கி நகர்த்த விரும்புகின்ற மதசார்பற்ற நவ-அடதுர்க்கிய அரசாங்கத்திற்கும், இஸ்லாமிய மத அடையாளத்தை / அதன்வழிப்பட்ட வாழ்க்கையைத் சுயகௌரவத்தின் சின்னமாகக் கொள்ளும் இஸ்லாமியப் பழமைவாதப் பெண்களுக்கும் இடையே நடைபெறும் மோதல்களும், அதன் விளைவான முக்காடு அணியும் பெண்களின் தற்கொலைகளுமே இந்நாவலின் கதைக்கருவும், கதைபோக்கும் ஆகும்.

எனினும் இந்நாவலில் மனித உறவுகளின் முரண்பாடுகள் கவித்துவமாகவும் இயல்பாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளன. காதலும், துரோகமும், தன்மானமும், அதிகார ஒடுக்கமுறைகளும், நம்பிக்கைகளும், தன்னிரக்கமும் எனக் கதைமாந்தர்களின் இயக்கப் போக்குகளில் இந்நாவலின் கதை உலக மக்களின் வாழ்வியலில் பன்முகப்பட்ட தன்மைகளை விளக்குவதாக அமைகின்றது. தன் சொந்த நகரமான கார்ஸ்

நகரத்தின் துயரம் நிறைந்த ஆன்மாவைத் தேடும் வேலையாக / அதில் பண்பாட்டு மோதல்களையும் இணைப்புக்களையும் புதிய உருவங்களில் இந்நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். அதை அப்படியே ஜி. குப்புசாமி தமிழில் மொழிபெயர்த்துத் தந்துள்ளார்.

**கதைக்களம்**

ஓரான் பாமுக்கின் நாவல் படைப்புகளில் தனித்தன்மை கொண்ட நாவல் 'பனி'யாகும். இந்நாவலில் சொல்லப்பட்டுள்ள கதையும், கதை நிகழும் களமும் கார்ஸ் நகரமாகும். அவர்தம் பிற நாவல்களில் இஸ்தான்புல் நகரத்தையே கதைக்களம் ஆக்கியுள்ளார். ஒரு பனிக்காலத்தில் ஜெர்மனியின் ஃபிராங்பர்ட் நகரத்தில் இருந்து இஸ்தான்புல் வந்து அங்கிருந்து எர்ஸசரும் சென்று மாகிரஸ் பேருந்தில் கார்ஸ்க்கு பயணிக்கும் கவிஞனும் பத்திரிக்கையாளனுமான கதைத்தலைவன் 'கா' வின் கார்ஸ் நகர வாழ்க்கை அனுபவங்களை 'பனி' நாவலின் கதையாகும். கதையின் இடைப்பகுதியில் 'கா' சுட்டு கொல்லப்படுகின்றான். நாவல் ஆசிரியர் ஓரான் பாமுக் ஒரு பாத்திரமாக இந்நாவலின் கதையை நகர்த்துவதோடு ஜெர்மனியில் 'கா' வின் கவிதை படைப்புகளையும் தேடுகின்றார்.

**கதைத்தலைவன் 'கா'**

'கா' வின் முழுப்பெயர் "கரீம் அலாகு ஷோலு" (பனி, ப.17) வாழ்க்கையில் எப்போதுமே வெற்றி அடையாத செக்காவின் கதைப் பாத்திரங்களை போல 'கா' வும் துயரார்ந்த இயல்பினன். அவன் கா என்னும் பெயரில் துருக்கியிலும் ஜெர்மனியிலும் கவிதைத் தொகுப்புக்களை வெளியிட்டுப் புகழ்பெற்றவன். தேசத்துரோகக் குற்றத்தில் ஜெர்மனிக்கு நாடு கடத்தப்பட்ட அவன் ஜெர்மனியில் ஃபிராங்பர்ட்டியில் இஸ்தான்புல் வருகின்றான். 'கா' வின் வகுப்பு தோழியான இபெக் ஹெனு கார்ஸ் நகரத்தில் ஸ்னோ பேலஸ் ஹோட்டலில் தங்கியிருக்கின்றாள். (பனி, ப.21). அவள் ஏற்கனவே முக்தார் பேவை மணந்து, குழந்தை இல்லை என்ற காரணத்தால் விவாகரத்துப் பெற்றவள்.

கார்ஸ் நகரத்தில் வாழும் 'ரிபப்ளிகன்' இதழில் அரசியல் கட்டுரைகளை எழுதும் டேனர் என்பவன் 'கா' வின் நண்பன் ஆவான். அவன் அங்கு வேண்டிய உதவிகளைச் செய்கின்றான். கார்ஸ் நகரில் 'கா' காப்பி இல்லங்களில் குழுமியிருந்த வேலையில்லாக் குர்துகளைச் சந்திப்பது, கார்ஸ் நகரின் உள்ளாட்சித் தேர்தலில் (மேயர்) வாக்களிக்கும் வாக்காளர்களிடம் பேட்டி காண்பது, பழைய மேயர், ஆளுநரின் உதவியாளர், தற்கொலை செய்து கொண்ட இளம்பெண்களின் குடும்பத்தார்களிடம் பேட்டிகாண்பது (பனி, ப.23) என்பதாகத் தொடக்கத்தில் அமைகின்றது. ஆயினும் பனிப்பொழிவு அவநம்பிக்கையும் அவலத்தையும் மட்டுமே அவனுக்கு அறிவித்தது. கார்ஸ் நகரில் பிரிவினைவாத குர்திய கொரில்லாக்கள் அதிகமாய் இருந்தனர். துணை நிலை ஆளுநர் காவிடம்,

இந்தப் பெண்கள் தற்கொலைக்கு விரட்டப்படுவதற்கு முக்கிய காரணம் அவர்கள் பெரிதும் சந்தோஷம் இன்றி இருப்பதே. ஆனால் இதுதான் தற்கொலைக்கு உண்மையான காரணம் என்றால் துருக்கியில் உள்ள பெண்களின் பாதிப்பேர் தற்கொலை செய்து கொண்டிருப்பார்கள். பெண்கள் தற்கொலைக்குத் தூண்டுவதற்கு காரணமே அவளைச் சுற்றி இருக்கின்ற எல்லா ஆண்களும் அப்பாக்கள், இமாம்கள், அரசாங்கம் - ஒரே குரலில்

தற்கொலை செய்து கொள்ளாதே "என் கண்டிப்பது தான்" (பனி, ப.30) எனத் தற்கொலைக்கான காரணத்தைக் கூறினார். ஏழ்மை, ஆநாதரவு, மரத்துப்போன உணர்வுகளுடன் வாழ்ந்த துருக்கியப் பெண்கள் அடி உதைகள் பட்டு தந்தைமார்களின் கட்டுப்பாடு, இடையறாது வேவு பார்க்கும் கணவர்கள் எனப் பல்வேறு தொல்லைகளை அனுபவித்து தங்களுடைய தினசரி வேலைகளுக்கிடையே பிறர் சந்தேகப் படாதவாறு தற்கொலை செய்து கொண்டனர். வேட்டைத் துப்பாக்கி, மார்டாலின் மருந்துப்பாட்டில், உத்திரத்தில் தூக்கில் தொங்குதல் எனத் தற்கொலைகள் பலவிதங்களில் இருந்தன. வேலையில்லா கணவர்கள் விரக்தியில் மனைவியரை அடித்துத் துன்புறுத்தியுள்ளனர். கார்ஸ்ஸிலிருந்து நூறு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பேட்மன் என்ற நகரத்தில் தான் முதலில் பெண்கள் அதிகமாகத் தற்கொலை செய்து கொண்டனர் (பனி, ப.28-29).

'கா' நிஷாந்தஷேயில் மேற்கத்திய இலக்கியங்களைப் படித்து அப்பண்பாட்டில் மதச்சார்பற்ற சூழலில் வாழ்ந்தவன் (பனி, ப.32,36). துருக்கியன் அங்காரவிலிருந்து கல்வி நிறுவனங்களில் முசுலிம் பெண்கள் முக்காடு அணியத் தடைவிதித்த ஆணையால் முதலில் தற்கொலை செய்த முஸ்லிம் பெண் தஸ்லிம் ஆவாள். அவள் மரியானா என்ற தொலைக்காட்சித் தொடரைப் பார்த்துக் கொண்டிருந்த போது அதன் இடைவேளையில் தற்கொலை செய்து கொண்டான் (பனி, ப.31-33). இதன் பின்னரே துருக்கியின் கார்ஸ் நகரத்தது

முஸ்லிம் பெண்கள் முக்காடு அணிவது அரசியல் இஸ்லாமின் சின்னமாகின்றது. இஸ்தான்புல் நகரில் முக்காடு அணிந்த இஸ்லாம் பெண்கள் கீழ்தட்டு பெண்களாகக் கருதப் பெற்றனர்.

**மக்களினமும் எழுச்சியும்**

ஓட்டமான் காலத்தில் துருக்கிய பெண்கள் அனைவரும் இனவேறுபாடு இல்லாமல் சகோதரர்களாகவே வாழ்ந்தனர் (சர்தார் பே). ஆனால் கடந்த சில ஆண்டுகளில் கார்ஸ் நகர மக்கள் அஸேரி, குர்த்து, தெரிக்கீமியன் என ஒவ்வொரு இனத்தவரும் தங்கள் இனப்பெருமையை எழுச்சியுடன் பேசத் தொடங்கிவிட்டனர். தெரிக்கீமியன்கள் 'கராபப்பக்கியர்கள்' ஆவார். இவர்கள் அஸேரியர்களின் சகோதர இனத்தவர்கள். குர்த்தியர்கள் பழங்குடியினர் அன்றைய துருக்கியல் துர்க்மன்கள், போஸா∴ப்லாஸ்ஸுக்கள், ஜார் மன்னனால் நாடுகடத்தப்பட்ட ஜெர்மனியர்கள் (பனி, ப.44) ஆகியோர் வாழ்ந்தனர். கம்யூனிஸ்ட்டுக்கள் தம் டி∴ப்ஸுஸ் ரேடியோ மூலம் துருக்கியைத் துண்டாக்கிய மக்களைத் தம் பழங்குடிப் பெருமையைப் பேசவைத்தார்கள்.

துருக்கியின் முன்னேற்றக் கட்சியைச் சேர்ந்த இஸ்லாமிஸ்ட்டுக்கள், நேர்மையானவர்கள், எளிமையானவர்கள், கடினமாக உழைப்பவர்கள் இவர்கள் எழ்மை நிலையில் உள்ள முஸ்லிம் பெண்களைக் குறிவைத்து அவர்களுக்குத் தேவையான அடிப்படைப் பொருட்களைக் கொடுத்து இறைவனின் கட்சியான முன்னேற்றக் கட்சிக்கு அவர்களது வாக்குகளை கேட்கின்றனர். வியாபாரிகளும் இவர்களை மதித்தனர். அன்மையில் கொலை செய்யப்பட்ட நகர மேயர் இலஞ்சம் பெற்றார். தொலைக்குப் பார்வையில் மக்கள் பிரச்சனைகளைத் தீர்க்கவில்லை. அவர் மீதான இந்த வெறுப்புணர்வை வலது, இடதுசாரி குடியரசு கட்சிகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. முன்னேற்றக் கட்சியின் வேட்பாளர் முக்தார் பே ஆவார் (பனி, ப.45). முக்தார் பே, இந்நாவலின் கதைத் தலைவி இபெக் ஹெனுமின் முன்னாள் கணவர் ஆவார். அவர் குர்த்து இனத்தவர். கார்ஸ் நகர மக்கள் தொகையில் 40 விழுக்காடு குர்த்துக்கள்

இத்தகைய அரசியல், சமய, சமூகச்சூழலில் 'கா' கார்ஸ் நகரருக்குள் நுழைந்தான். மதசார்பற்ற கொள்கையில் நம்பிக்கையுள்ள அவன் இஸ்லாமிய அடிப்படை வாத அரசு அமைந்தால் பெண்கள் முக்காடு அணிவது கட்டாயமாக்கபடும் என்பதை உணர்ந்தான்.

**கதைத்தலைவி இபெக் ஹெனு**

ஸ்னோபேலஸ் ஹோட்டாலில் உரிமையாளர் குர்துத்பேயின் மூத்த மகள் இபெக் ஹெனிவே இந்நாவலின் கதைத்தலைவி ஆவாள். கார்ஸ் வந்த பின்னர் காவும் இபெக்வும் முதன்முதலில் நியுலைப் பாஸ்ட்ரி ஷாப்பில் தனிமையில் சந்தித்து உரையாடுகின்றனர். அப்போது அங்கராவின் அரசானையை ஏற்று கல்வியியல் கல்லூரியில் முக்காடு அணியாத பெண்களை அவமதித்து வகுப்பை விட்டு வெளியேற்றிய கல்வியியல் நிறுவனர் பேராசிரியர் நூரியிலமாஸ், தொகாட்டின் 'பதாகை' இன்னும் இஸ்லாமிய வானெலி நிலையைச் செய்தியைக் கேட்டு முக்காடு அணியும் பெண்களுக்கு ஆதரவு தரும் வாஹித் சுஸ்மி என்ற சலீம் ∴பெஸ்மெக்கானால் சுட்டுக் கொலை செய்யப்படுகின்றார் (பனி, ப.61-73). இபெக்கின் தங்கை கடி∴பே, முக்காடு அணியும் முஸ்லிம் பெண்களின் தலைவி (பனி, ப.50) ஆவாள்.

காஸ் நகரில் ஆண்கள் அனைவரும் மதசேவைக்குச் செல்கின்றனர். பெண்களின் தற்கொலை தொடர்கின்றது. இபெக் கர்ப்பம் தரிக்காததால் மனவிலக்குச் செய்த முக்தார் பே, அவளை மறுபடியும் மணந்துகொள்ள விரும்புகின்றான் (பனி, ப.57-58). முக்தார் பே தீவிரவாத இஸ்லாமியன் (பனி, ப.96-97) ஆவான். 'கா' இபெக்கின் காதலுக்காக ஏங்குகிறான் (பனி, ப.97). இந்நாவலில் வரும் நீலம் என்பவான் பயங்கரவாத இசுலாமிய அரசியலாளன் ஆவான் (பனி, ப.98-99). கார்ஸில் குர்துக்கள் மார்க்சிய புரட்சிகர குர்துக்கள், இஸ்லாமிஸ்ட் குர்துக்கள் என்னும் இரு பிரிவினராகச் செயல்படுகின்றனர். 'கா' தற்கொலை செய்து கொள்ள விரும்பாத ஒரு கடவுள் மறுப்பாளன் ஆவான். இதனை 'கா'வின் கூற்றாக வரும், "நான் ஐரோப்பியர்களைப் போல இருக்க விரும்பினேன். ஆனால் பெண்கள் தம்மை முழுசாக மூடி மறைத்துக் கொண்டிருக்க வேண்டும் என்ற வற்புறுத்திகின்ற ஒரு கடவுளை வைத்துக் கொண்டு என்னால் எப்படி ஓர் ஐரோப்பனாக மாறமுடியும்" (பனி, ப.139). என்னும் பகுதியால் அறியலாம்.

கார்ஸ் நகரத்து இஸ்லாமிஸ்ட்டுகள் நீலத்தின் அடிமைகளாக உள்ளனர். கடி∴பே நீலத்தின் வைப்பாட்டியாக இருக்கின்றாள் (பனி, ப.280). இபெக்கிடம் தன் காதலை வெளிப்படுத்தும் காவின் வேலை கவிதை எழுதுவது, இபெக் பின்னால் அலைவது (பனி, ப.292) எனத் தொடர்கின்றது. இபெக்கின் தந்தை துர்குத்பே பழைய கம்யூனிஸ்ட்

அவர் இடதுசாரிகளுக்கு கெட்ட பெயர் வரக்கூடாது என நடிப்பவர் (பனி, ப.316). நீலம், காவை மேலை நாட்டு உளவாளி (பனி, ப.321) என ஐயப்படுகின்றான். துர்குத்பே இராணுவ புரட்சிக்கு எதிரானவர்.

கார்ஸ் நகரில் இருந்து தப்பித்துச் சென்ற கா, ஃபிராங்பர்ட்டில் நள்ளிரவு 12 மணிக்கு சுட்டுக் கொல்லப்படுகினறான் (பனி, ப.340-343). காவுடன் ஜெர்மனிக்கு செல்ல இபெக் விரும்பினாள். துர்குத்பே நாட்டில் நடந்த உள்ளூர்ப் புரட்சிகளைக் காட்டி மறுத்துவிட்டார். தாமஸ் கிட்டின் “The Spanish Tragedy“ நாடகத்தைத் தழுவி நடித்த நாடகத்தில் கடிஃபே முக்காட்டைக் கழற்றும் புரட்சிப் பெண்ணாக நடித்தாள் (பனி, ப.414-415). நீலத்தைக் காப்பாற்றும் நிர்பந்தம் காரணமாகவே கடிஃபே இவ்வாறு நடித்தாள்.

நீலம், மின்னணு பொறியியல் பட்டம் பெற்றவன். அமெரிக்க வெறுப்பாளன். நீலம் ஈரான் புரட்சியை ஆதரித்து இஸ்லாம் தழுவியவன். மெர்ஸுகா என்ற பெண்ணை மணந்து இஸ்தான்புல் வந்தவன் (பனி, ப.433) இபெக் ஹெனு மலரடி ; ஒரு காலத்தில் நீலத்தின் வைப்பாட்டியாக இருந்தவள் (பனி, ப.483-499). ‘கா’வின் வாழ்கையையும் புனிதமானதன்று. ஜெர்மனியின் ‘கா’வின் முதல் காதலியான நேலன் இருந்தாள்; அவளுக்குத் திருமணம் ஆகிவிட்டது. அவனுடைய இரண்டாவது காதலியான ஹில்காட் என்பவள் இன்னும் மணம் ஆகாமல் ஃபிராங்பர்ட்டில் ‘கா’ சுட்டுக் கொல்லப்பட்டட போது இருந்தாள் (பனி, ப.509). துருக்கிய மக்கள், உணவகங்களில் ‘கா’ வைச் சுட்டுக்கொன்ற துருக்கிய மக்களுக்குத் தம் பண்பாட்டில் ஆர்வமில்லை எனப் பேசிக் கொண்டார்கள்.

‘கா’வின் மரணத்தைப் பற்றிப் பலர் ஆவலோடு விசாரித்தார்கள்,“அவனது கொலையில் பல்வேறு சதித்திட்டங்கள் இருப்பதாக, அவனைக் கொன்றது இஸ்லாமிஸ்டுகள் MITC துருக்கிய புலனாய்வுத்துறை, ஆர்மீனியர்கள், ஜெர்மனிய ஸ்கின்ஹெட் அமைப்பினர், குர்துகள், துருக்கிய தேசியவாதிகள் எனச் சந்தேகப்பட்டனர்” (பனி, ப.511).

நாவலின் இறுதியில் ஓரான் பேயின் மகன் ரூயா (பனி, ப.575) ஒரு கதாபாத்திரமாக வருகின்றளாள்.

### நிறைவுரை

மனித வாழ்க்கையின் நிறைகளும் குறைகளும் கொண்ட கதாபாத்திரங்கள் ‘பனி’ என்னும் இந்நாவலில் துருக்கிய அரசியல், சமூகம், சமயச் சார்பு, சமயச் சார்பற்ற நிலை, காதல், மனவிலக்கு,கவிதை, இலக்கியம் என அனைத்து விசயங்களையும் விவாதிக்கின்றனர்.

### பயன்பட்ட நூல்கள்


1. Orhan Panuk, Snow, Mareen freely Translation into English, vintage Intenational Books, A Division of Radom House Incorporated, Newyork, 2005.
2. ஜி. குப்புசாமி (மொ.பெ.ஆ), பனி, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2013.

# அறநூல்கள் காட்டும் நல்வாழ்வியலுக்கான அனுகுமுறைகள்

**முனைவர் இரா. முருகானந்தம்**
*கௌரவ விரிவுரையாளர், தமிழ்த்துறை*
*அரசு கலைக் கல்லூரி, மேலூர், மதுரை*

**ஆய்வு நோக்கம்**
நல்வாழ்வு என்பது உடல் மற்றும் மனநல ஆரோக்கியத்துடன் தொடர்புடைய செழுமையான வாழ்க்கைத் தரத்தை மதிப்பிடுகினற ஒன்று. இவ்வாழ்வியல் அனுகுமுறையானது ஒருவருடன் மற்றொருவரை ஒப்பிடும்போதுஉள்ளார்நத மதிப்புமிக்கதாக கருதமுடியும். மேலும் இவ்வாழ்க்கைத்தர மதிப்பு ஒருவரின் நேர்மறையான மற்றும் எதிர்மறையான சிந்தனைகளினூடே அவர்களின் வாழ்வியல் மதிப்பீட்டினை உணரமுடியும். ஒட்டுமொத்தாகச் சொல்ல வேண்டுமென்றால் நல்வாழ்வு ஒரு தனிமனிதனின் ஒழுக்கத்துடன் கூடிய அவனது இன்பம்,துன்பமயமான வாழ்வியலை இயற்கைச் சூழ்நிலைகளோடு ஒன்றினைத்துப் பார்க்க வேண்டிய ஒன்று. இங்கு இன்பம் அல்லது மகிழ்ச்சி என்பது நன்முறையிலான வாழ்வியல் அனபவத்தை குறிக்கின்ற ஒன்றாகும். இந்நல்வாழ்வானது உடல் ஆரோக்கியம், நல்லெழுக்கம், அறிவு, மற்றும் ஆசைகளை நிறைவேற்றும் பல காரணிகளை உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது. இவையே வாழ்வின் உறுதிப்பொருள்களான அறம் பொருள் இன்பம் வீடுபேற்றை (பேரின்ப வாழ்வு) அற இலக்கியத்தை முன்னிறுத்தி அடுத்த தலைமுறைக்கான நல்வாழ்வியல் சூழலைக் கட்டமைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகக் கொண்டுள்ளதுத.

**கருதுகோள்**

உலகில் பல ஆய்வுகள் உடல் ஆரோக்கியத்திற்கும் மகிழ்ச்சிக்கும் இடையிலான தொடர்பை ஆராய்கின்றன. இது தனி நபர்களின் நேர்மையான மனநிலை உடல் ஆரோக்கியத்தின் வலுவான முன் கணிப்பு மற்றும் உடல் ஆரோக்கியத்திற்கும் இடையே குறிப்பிடத்தக்க தொடர்புடையது. இதனால் உலகில் மகிழ்ச்சியுடன் இருப்பவர்கள் நீண்ட ஆயுளைப் பெற்று உடல் ஆரேக்கியத்துடன் (உடல் எடைக் கட்டுப்பாடு, நோய்க்கட்டுப்பாடு, மனக்குழப்பம்) உயிருக்கு ஆபத்தான நடத்தைகளைக் கண்டறிந்து வாழ்வாங்க வாழ நம் முன்னோர்களின் அறவாழ்க்கையின் வயிலாக நல்வாழ்வு பெறுவதற்கான முன்னெடுப்புகளைக் கணலாம்.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலான நூல்கள் மருந்துகளின் பெயரைக் கொண்டுள்ளதாக உள்ளது. இதில் ஏலாதி, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் போன்ற நூல்கள் மட்டுமில்லாமல் உடல்நலத்தைப் பேணிக்காப்பதற்காக எண்ணற்ற நாட்டுப்புற மருத்துவம் சார்ந்த அறநூல்களும் உண்டு அவை திருக்குறள், பழமொழி நானூறு, ஆத்திசூடி, நீதிவெண்பா, முதுமொழிக்காஞ்சி போன்றவை மக்களின் நல்வாழ்விற்கான முன்னெடுப்புகளாக அமைகின்றன.

**ஒன்று - இரண்டு வரி வெண்பாக்கள் தரும் நல்வாழ்வு**

தமிழ் இலக்கியத்தில் ஒற்றை வரி வெண்பாக்கள் மற்றும் இரண்டு வரி வெண்பாக்கள் கொண்ட இலக்கியமான ஔவையாரின் பாடல்களும் வள்ளுவரின் திருக்குறளுமாகும். உலகப் பொதுமறையாக அனைத்து மொழிகளையும் கடந்து உலக மக்களால் அங்கீகரிக்கப்பட்டு வாழ்வாங்கு வாழ்வதற்கான நல்வழிகளை வள்ளுவம் உணர்த்துகின்றது. ஒரு மனிதன் நல்வாழ்வு வாழ்வதற்கான அடிப்படை நோய்நொடி இல்லாமல் வாழ்வதேயாகும். அவ்வாறு நோய்கள் இல்லாமல் வாழ்வதற்கும் நோய் தொறறு ஏற்படுவதற்கான காரணத்தையும் நோய் வந்த பிறகு பின்பற்ற வேண்டிய வழிமுகைளையும் எடுத்தியம்புகிறார். மேலும் இன்றைய நவீன துரித உணவுமுறை மாற்றத்தால் உண்டாகும் பல்வேறு அபரிவிதமான நோய்களில் இருந்து மக்கள் தங்களைத் தாங்களே தற்காத்துக் கொள்ளும் வழிமுறையையும் எடுத்துறைத்துள்ளார்.

**மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது**
**அற்றது போற்றி உணின் (குறள் - 942 பொருட்பால்- நடப்பியல்)**
**பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண்**
**(கொ.வே - 60)**
**நுன்மை நுகரேல் (ஆ.சூ - 76) (நோய் தரும் சிற்றுண்டிகளை உண்ணாதே)**
**மீதூண் விரும்பேல் (ஆ.சூ - 91) (மிகுதியாக உண்ணுதலை விரும்பாதே)**

உணவே மருந்து என்ற காலம் மாறி இன்று மருந்தே உணவாக உட்க்கொள்ளும் நிலைக்க மக்களின் வாழ்க்கைச் சூழல் மாறிவிட்டது. இன்று நாம் உண்ணும் உணவின் தன்மை வேதியியல் மாற்றம் செய்யப்பட்டு மலட்டுத் தன்மைகொண்ட உணவுப் பழக்கவழக்கங்கள் மக்களின் இயற்கையான வாழ்வியலும் சுற்றுப்புறத் தன்மையும் வாழ்க்கை வாழ்வதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. மேலும் இன்றைய துரித உணவுப் பழக்கத்தால் மலச்சிக்கல், அஜீரணக் கோளாறுகள், நீரிழிவு

நோய் எனப் பல்வேறு நோய்களுக்கு அடைக்கலமாக நமது உடல் மாறியுள்ளது. இவற்றை முன்னரே உணர்ந்த வள்ளுவர் மக்களின் ஆரோக்கியமான வாழ்விற்கு பசித்த பின் புசி என்னும் பழமொழிக்கு இனங்க நல்வாழ்விற்கான வழியை முன்னெடுத்துள்ளார். மேலும் இன்று உடலில் நோயடத் தொற்று ஏற்பட்டதை நவீன மருத்துவ முறையும் அறிவியல் தொழில் நுட்பத்தின் வாயிலாகத்தான் நோய் பற்றிய காரணிகளை கண்டறிய முடியும். ஆனால் இன்றைய நவீன தொழில் நுட்ப அறிவானது. பழந்தமிழர் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்புடையதாக இருந்துள்ளதை.

**மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்**
**வளிமுதலா எண்ணிய மூன்று (குறள் - 941)**

இக்குறளின் வழியாக இன்றைய நவீன மருத்துவ முறையினை பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வள்ளுவர் வரைமுறைப்படுத்தியுள்ளார். மேலும் மனித உடலுக்கு நோய்த் தொற்று ஏற்படுவதை உடலில் உள்ள மூச்சுக்காற்றின் வெம்மைத் தன்மையை அடிப்படையாகக் கொண்டு வாதம், பித்தம், கபம் போனறவை உடலில் கூடினாலும் குறைந்தாலும் நோய்த் தொற்று ஏற்படுவதற்கான முதன்மைக் காரணம் என்பதை வழியுறுத்தியுள்ளார். மேலும் வருமுன் காப்பதே சிறந்தது எனும் பலமொழிக்கு இனங்க நோய் வந்த பிறக நம் உடல் நலத்தைப் பேணிக் காப்பதற்கான வழிமுறைகளையும் வகைபடுத்தியுள்ளார். இக்கருத்தினை வழியுறுத்தும் வகையில் ஔவையாரின் ஆத்திசூடியிலும் சனி நீராடு (16) நுன்மை நுகரேல் (70) இதனை

**நோய்நாடி நோய்முதல் நாடி அது தணிக்கும்**
**வாய்நாடி வாய்ப்பச் செயல் (குறள் - 948)**
**நோய்க்கு இடங் கொடெல் (ஆ.சூ - 76)**
**சனி நீராடு (சனி - குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும்) (ஆ.சூ - 16)**
**புறத்தூய்மை நீரால் அமையும் அகத்தூய்மை**
**வய்மையால் வெள்ளப் படும் (குற் - 298)**
**உற்றவன் தீர்ப்பான் (குறள் - 950)**
**இடுக்கண் வருங்கால் நகுக அதனை (குறள் - 621)**

இவ்வாறு தனிமனிதனுடைய ஆரோக்கியம் மற்றும் உடல் நலனை பாதுகாக்கும் முறையினை புறத்தூய்மை நீரால் அமையும் அகத்தூய்மை வாய்மையால் அமைய வேண்டும் கருத்தினை எடுத்துரைக்கிறார். ஒருவன் வாய்மையோடு வாழ்வதால் அவர்களக்கு ஏற்ப்படும் (ஸ்ட்ரெஸ்) முனு அழுத்தம் இல்லாமல் நன்முறையிலான வாழ்க்கையை வாழமுடியும் என்பதை வழியுறுத்துகிறார். இம்மன அழுத்தமே நீரிழிவு, பக்கவாதம், இருதய நோய்கள் என பல்வேற நோய்கள் வருவதற்கான மூலக்காரணியாக அமைகின்றது மேலும் இன்றைய நவீன மருத்துவ முறைகளை முன்னரே கணித்து நல்வாழ்விற்கான முன்னெடுப்புகளை எடுத்துள்ளார்.

மேலும் நாம் இன்று உண்ணக்கூடிய உணவே நமக்கு ஏற்படும் நோய்க்கான காரணம் என்பதை வழியறுத்தி அந்நோயை தீர்ப்பதற்கான சித்த மருத்துவத்தின் அவசியத்தை எடுத்துரைக்கின்றார். இத்தகைய மருத்துவத்தை செய்வதற்க உற்றவன் தீர்ப்பான் (950) எனும் குறள் வழியாக நோயை உடையவன், நோயை தீர்க்கும் மருத்துவன், நோய்க்கு ஏற்ற மருந்து தயாரிப்பவன், அம்மருந்தை எப்படி எப்போது உட்கொள்வது என ஆராய்ந்து கொடுக்கும் மருந்தாளுநர், ஆகிய நால்வரின் பங்களிப்பும் இவ்வுலகிற்கு இன்றியமையாதவர்கள். மேலும் இடுக்கண் வருங்கால் நகுக எனும் இன்றைய உளவியல் ரீதியான மருத்துவ அனுகுமுறையைய ஆய்ந்து கூறியுள்ளார்.

**திரிகடுகமும் நல்வாழ்வியல் முன்னெடுப்பும்**

திரிகடுகம் என்பது சித்த மருத்துவ முறையில் சூரணம் எனும் காரத் தன்மை வாய்ந்த மக்களின் நல்வாழ்விற்கான மருத்துவமுறையாகும். இச்சூரணம் 12 வயதுக்கு மேல் உள்ள அனைவரும் உட்கொள்ளம் ஓர் அருமருந்தாகும். இச்சூரணத்தை ஒரு கிராம் அளவிற்கு வெந்நீரில் கலந்தும், தேன் கலந்தும் பொடி செய்தும் வைத்துக் கொண்டு மாலையில் தூங்கும் முன்பும் காலையில் உணவுக்கு முன்பும் உட்கொள்வது உகந்த மருந்தாகும். இது உடலில் சீரண சக்தியை அதிகரித்து உடல் ஆரோக்கியத்தைப் பேணிக் காக்கிறது. இச்சூரணத்தை கர்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கு உகந்தது அல்ல. குழந்தைகளுக்கு தேவையின் பொருட்டு சித்த மருத்துவர்களின் ஆலோசனையின் படி உட்கொள்வது நல்வாழ்விற்கான வழியாக அமைகின்றது. இம்முன்னெடுப்பினை

**உலகில் கடுகம் உடலின் நோய் மாற்றும்**
**அலகுஇல் அகநோய் அகற்றும் நிலைகொள்**
**திரிகடுகம் என்னும் தமிழ்ச் சங்கம்**
**மருவு நல்லாதன் மருந்து (திரி- பாயிரம் - 1)**

சுக்கு, மிளகு, திப்பிலிஎன்னும் மூன்று கூட்டு மருந்துவச் சிகிச்சையானது உடலுக்கு நன்மை செய்வதைப் போல் இதில் கூறப்படும் மூன்று நீத்க் கருத்துக்கள் மனிதனின் அறியாமையாகிய நோயைப் போக்கி வாழ்க்கையை செம்மையுறச் செய்யும் அருமருந்தாகும். இந்நூல் நல்லாதன் இயற்றியது. என்றும் நிலைபெற்று மக்களின் இருளைப் போக்கி நல்வாழ்வியலுக்கான நிலை பேற்றினை நல்கக் கூடியது.

**சிறுபஞ்சமூலமும் நல்வாழ்வியல் நெறியும்**

சிறுபஞ்சமூலம் என்பது ஐந்து சிறிய வேர்களாலன மருந்துப் பொருள்கள் என்று பொருள்படும். அவை சிறுவழுதுணை, நெருஞ்சி, சிறுமல்லி, பெருமல்லி, கண்டங்கத்தரி என்பனவாகும். இவற்றைப் போன்றே வில்வம், பெருங்குமிழ், தழுதாழை. பாதிரி, வாகை இவற்றின் வேர்களை பெரும்பஞ்சமூலம் என்பர். இவ்வகை வேர்களும் உடல் நலத்தைப் பேணக்கூடியது. இதன் பாடல்களில் உள்ள ஐந்தைந்து கருத்துக்களும் உயிர் நலத்தை நல்வழிப்படுத்துவது. இன்றைய வாழ்க்கைச் சூழலில் குழந்தைப் பேறு என்பது மிகவும் இன்றியமையாத ஒன்றாகப் பாக்கப்படுகிறது. குழந்தைப் பேறு இன்மையால் கணவன் மனைவிக்கு இடையே பெரிய மனத்துன்பம் ஏற்படுகிறது. இவற்றை

**சூலாமை சூலிற் பதுந்துன்பம் மீன்றபி**
**னேலாமை யேற்றால் வளர்ப் பகுமைசால்பவை**
**வல்லாமை வாய்ப்ப வறிபவ ருண்ணாமை**
**கொல்லாமை நன்றாற் கொழித்து**

(சி.ப.மூ - 74)

இன்று பிள்ளைப் பேறு இல்லாத துன்பம் பெரும் துன்பமாகக் கருதப்படுகிறது. இவற்றால் கணவன் மனைவிக்கு இடையே மனஉளைச்சலும் சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளுன், அவலங்களும் எண்ணிலடங்காதது. கருவுற்ற பின்பு குழந்தையை பத்து மாதம் தாங்கும் துன்பம்,ஈன்ற பின்பு அதனை வளர்க்கும் துன்பம், குழந்தை ஊனமாகப் பிறந்துவிட்டால் அதனால் ஏற்படும் துன்பம் ஆகியவற்றை எண்ணிப்பார்த்து குழந்தையை வயிற்றிலேயே கொல்லாமல் இருப்பது நன்று என்றுரைக்கின்றார். இன்றைய நவீன வாழ்க்கை முறையில் வயிற்றிலிருக்கும் குழந்தை ஆணா? பெண்ணா? ஏன்று பார்ப்பதும் அதனை ஆண்வாரிசு அல்லை என்று கருவிலேயே கொள்வதும் தகாத உறவுகளால் கருவுற்ற குழந்தையை கொலை செய்வதும் பிறந்த பின்பு அவற்றை வர்க்க முடியாமல் குப்பைத்தொட்டியில் வீசுவதும் இன்றைய நாகரீக வாழ்க்கையுன் உச்சகட்டமான இழிநிலையை முன்னரே உணர்ந்து வழியுறுத்தியுள்ளார்.

**புழமொழி நானூறும் நல்வாழ்வியல் கூறம்**

புழமொழி நானூறு சங்க மருவிய காலத்தில் மூன்றுரையரையனார் எனும் சமணமுனிவரால் இயற்றப்பட்ட அறநூலாகும். இதில் ஒவ்வொரு பாடலின் இறுதியிலும் ஒரு பழமொழி சார்ந்த வாழ்வியலுக்கு ஏற்ற அறக்கருத்துக்களை கூறப்படுவதால் இது கழமொழி நானூறு எனப் பெயர்பெற்றது. இந்நூல் மக்களின் வாழ்வியலை நன்முறையில் கொண்டு செல்வதற்கான முன்னோடி இலக்கியமாக காணப்படுகிறது. இது மக்களின் வாழ்வியலோடு ஒன்றோடென்று தொடர்புடையதாக அனைத்து நிலைகளிலும் கொண்டு செல்வதை

**எமக்கு துணையாவார் வேண்டுமென்றெண்ணித்**
**தமக்குந் துணையாவார்த் தாந்தெரிதல் வேண்டா**
**பிறர்க்குப் பிறர்செய்வ தூண்டோருள் றில்லை**
**தமக்கு மருத்துவர் தம்** (ப.மொ - 56)

தனக்கு ஏற்பட்ட நோயை தடுப்பது தன்னால் தான் முடியும் தீதும் நன்றும் பிறர் தர வாரா எனும் பூங்குன்றனாரின் கருத்திற்கு இனங்க வாழ்வில் நடக்கக்4டிய எல்லாம் தன்னால் தான் ஏற்படும் அவற்றை ஏற்றுக் கொள்வதும் மாற்றுவதும் தன்னால் மட்டும் தான் முடியும் என்பதை மிகச்சிறப்பாக எடுத்துரைத்துள்ளார். பிறர் ஒருவருக்குப் பிறரால் செய்யத்தக்கது ஒன்று உணடோ? துணையாக வருபவரைக் கண்டும் நன்மைகள் இல்லை தமக்குத் துணை தாமேயவர் என்றும் நமக்க வேண்டிய நன்மையை நாமே தேடிக்கொள்ள வேண்டும். துமக்கு மருத்துவர் தாம் என்னும் பழமொழியை மனிதனின் நல்வாழ்விற்கான முன்னெடுப்புகளை செய்துள்ளார். மேலும்

**உடுக்கை மருந்துறையுள் உண்டியோ டின்ன**
**கொடுத்துக் குறைதீர்த்தல் ஆற்றி விடுத்தின்சொல்**
**ஈயாமை என்ப எருமை எறிந்தொருவர்**
**காயக்கு உலோபிக்கு மாறு** (ப.மொ - 167)

நோயாளி உடுப்பதற்க உடை, நோயைப் போக்க மருந்து, நோயாளி தங்க மருத்துவமணையில் இடம். உண்ண உணவு இன்ன பல உதவிகளையும் மருத்துவமனையில் செய்து ஒருவனின் குறையெல்லாம் போக்கும் ஒருவன் அவனிடம் இனிய சொற்களைப் பேசாவிட்டால் அது எருமை மாட்டில் பால்கநற்து பயன் கொள்ளாமல் தனக்குச் சமைக்க உதவும் பெருங்காயத்துக்காக எருமை மாட்டைக் கொன்று அதன் கறியை விற்றுப் பெருங்காயம் வாங்கிக் கொள்வது போன்று யாருக்கும் பயனற்று இருக்கும். மருத்துவம் என்பது சேவை மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். உண்டிகொடுத்தோர் உயிர் கொடுத்தோரே, எல்லா உயிரும் இன்புற்று வாழ்கவே, வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்கின்ற கூற்றிற்கு இனங்க பொது நோக்குடன் மருத்துவத்தின் பால் செயலாற்ற வேண்டும். அவ்வாறு இருந்தால்தான் நல்வாழ்வு அனைத்து நிலைகளில் வாழும் மக்களுக்கும் நலம் தரும் நல்வாழ்விற்கான வழிமுறையாக அமையும் என்பதை வழியுறுத்தியுள்ளார்.

**ஆசாரக்கோவை தரும் நல்வாழ்வியல் அறம்**

ஆசாரக்கொவை மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆசாரங்களை அதாவத நல்வாழ்வியலுக்கன ஒழுக்கங்களை எடுத்துக்கூறும் நூல் இதனை பெருவாயின் முள்ளியார் எனும் புலவர் வாழ்வில் செய்யக்கூடிய, செய்யக்கூடாத வாழ்வியல் நெறிகளை எடுத்துரைத்துள்ளார். நலம் தரும் நலல்வாழ்விற்கு நோய் வேண்டாதவர் செய்யக்கூடாதவையாக

**பாழ்மனையும் தேவ குலனும் சுடுகாடும்**
**ஊரில் வழியெழுந்த ஒற்றை முதுமரனும்**
**தாமே தமியர் புகாஅர் பகல்வளரார்**
**நோயின்மை வேண்டு பவர். (ஆ.கோ - 56)**

மக்கள் நீண்ட காமாக வாழாமல் கைவிடப்பட்ட வீடு மற்றும் தெய்வங்கள் குடியிருக்கும் ஆலயங்கள், இறந்தவர்களை அடக்கம் செய்யும் இடம் அல்லது தீ மூட்டும் இடம், ஊர் இல்லாத வெற்றுப் பிரதேசத்தில் உள்ள ஒற்றை முரமும் இருக்கக்கூடிய இங்களுக்குச் செல்லமாட்டார்கள். மேலும் பகளில் தூங்க மாட்டார்கள் இவ்வாறு இருந்தால் நோய் இல்லாது நல்வாழ்வினை பெறலாம்.

**நீதி வெண்பாவும் நல்வாழ்வியல் கூறும்**

நீதி வெண்பா மகடூஉ முன்னிலையாக இயற்றப்பட்டது. இதில் உவமைகளும் உருவகங்களும் பழமொழிகளும் எடத்தாளப்பட்டுள்ளன. நீதி வெண்பாவின் கருத்துக்களால் கவரப்பட்ட சீகன் பால்க் என்பவர் ஜொ்மானிய மொழியில் மொழியாக்கம் செய்துள்ளாா்.

**ஒருபோது யோகியே ஒண்டளிர்க்கை மாதே!**
**இருபோது போகியேஎன்ப - திரிபோது**
**ரோகியே நான்குபோ(து) உண்பான் உடல்விட்டுப்**
**போகியே என்று புகழ் (நீ.வெ - 9)**
**அற்றது அறிந்து கடைபிடித்து மாறல்ல**
**துய்க்க துவரப் பசித்து.**

இப்பாடலில் ஒருவன் தன் வாழ்நாளில் உணவு உண்ணும் முறையைப் பொறுத்து மனிதனை வகைபடுத்திப் பார்கிறார். முன்பு உண்டது சீரணமாகிவிட்டதை அறிந்து நன்கு பசிக்கும் போது உடம்பிற்கும் காலத்திற்கும் ஒவ்வாத உணவினை விலக்கி வேண்டியவற்றை உண்க எனும் வள்ளவரின் கருத்திற்கு இனங்க செய்கதம்பி பாவலர். நீதி வெண்பா ஒன்பதாவது பாடலில் தளிர் போன்ற கையை உடையவளேஒருநாளைக்கு ஒரு வேளை உண்பவன் யோகியே இவன் தவம் செய்பவன், இரு வேளை உண்பவன் போகியே இவன் உலக இன்பங்களை நுகா்ந்து கொண்டிருப்பன், மூன்று வேளை உண்பவன் ரோகியே இவன் நோயாளி, நான்கு வேளை உண்பவன் போகியே இவன் உடலை விட்டு இறந்து போகக் கூடியவனே என்று மனிதன் தன் வாழ்நாளில் கடைபிடிக்கக் கூடிய உணவு உண்னும் பழக்கவழக்க முறையை எடுத்துரைத்துள்ளார்.

**முதுமொழிக் காஞ்சில் நல்வாழ்வியல் நெறி**

முதுமொழிக்காஞ்சியாவது எல்லோரும் கொண்டாடும் அறிவுடையோர் குற்றம் நீக்கி ஆராயும் உலகத்திலுள்ள முடிந்த பொருளாகிய அறம் பொருள் இன்பத்தை அறியச் சொல்வது இநூலுல்பத்துப் பத்துகள் உள்ளன. ஓவ்வெரு பத்திலும் தனித் தனிக் குறள் தாழிசைகளால் பாடப் பெற்றிருக்கும். இதில் முதல் பாடல் இரண்டடி கொணடடதாகவும் மற்றையவை ஓரடி கொண்டவையாக இருக்கும். இம்முதுமொழிகளை வாழ்க்கையில் பின்பற்றி ஒழுகின் மக்களினம் உயர்வடையும். இவற்றை

**இளமையின் சிறந்தன்று மெய்பிணி இன்மை**
**(மு.மெ.கா - சி.பத்து - 5)**
**உண்டிவெய்யோர்கு உறுபிணி எளிது**
**(பெருந்தீணியை விரும்பி உண்பவர்க்கு பெரிய நோய் எளிதில் உண்டாகும்)**
**(மு.மொ.கா - எ.பத்து 7)**
**பிணிகிடந்தோன் பெற்ற இன்பம் நல்கூர்ந்தன்று**
**(மு.மொ.கா - ந.கூ.பத்து- 4)**

பெரிய நோய் உள்ளவர்கள் பெருகின்ற இன்பம் உண்மையான பயன் உடையதாகாது.

நம் வாழும் வாழ்க்கையிலும் இளமையில் நோய் நொடி இன்றி வாழ வெண்டும். மற்றும் உணவு உடை இருப்பிடமாகும், பெரிய நோய்த் தொற்றுகளுக்கு இடம் கொடாமல் வாழ்க்கையில் வாழ வேண்டும் எனவதை வழியுறுத்தியுள்ளார்.

**முடிவுரை**

மனிதனின் அடிப்படைத்தேவையான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றை தூய்மையாக வைத்துக் கொண்டால் சுத்தம் சுகம் தரும், கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதைஇவ்வாய்வு மதிப்பிடுகின்றது. மேலும் நல்வாழ்வு என்பது ஆரோக்கியம், மகிழ்ச்சி மற்றும் அமைதியான மனம் ஆகியவற்றின் மீதான சீரான வாழ்ககைத் தரத்தை தீா்மானிக்கின்றது.

தமிழன் வாழ்வின் உறுதிப் பொருள்களான அறம், பொருள். இன்பம், வீடுபேறு (பேரின்பம்) எனும் நான்கு உறுதிப்பொருட்களை முழுவதுமாக பெறுவதற்கான முன்னெடுப்புகளை நீதி நூல்களை

ஆய்ந்து இயற்றிய புலவர்கள் உடல் மற்றும் உள்ளத்தை எவ்வாறு பக்குவப்படுத்தி நல்வாழ்க்கையை பெறுவதற்கான முன்னெடுப்புகள் மற்றும் வரும் தலைமுறைக்கான வாழ்வாதாரமாகத் திகழ்கிறது.

இன்றைய நவீன மருத்துவமுறையை அன்றே கணித்துள்ளனர். அவர்கள் இயற்கையோடு இயைந்து வாழ்வதற்கான வழிமுறைகளை உணவே மருந்து என்ற கூற்றுப்படி வாழ்வதற்கான கட்டமைப்புகளை தெளிவாகக் காணமுடிகிறது.

# தற்காலத் தமிழ் தன்வரலாறுகளின் புதிய போக்குகள்

**இரா. ஹேமலதா**
*முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்*
*செந்தமிழ்க் கல்லூரி, மதுரை*

**முனைவர் அ. நந்தினி**
*உதவிப் பேராசிரியர், நெறியாளர்*
*தமிழ் உயராய்வு மையம், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை*

**கட்டுரை நோக்கம்**
வரலாற்றை அறிந்து கொள்ளும் மரபு காலங்காலமாகத் தொடர்ந்து வருகிறது. அதன் நோக்கம் தமது முன்னோரின் வாழ்வியலை அறிந்துகொள்வதாக அமைகின்றது. பழையன கழிந்து போனாலும் புதியவர்கள் அதனைத் தேடும் மனதுக்குச் சொந்தக்காரர்கள் ஆகிப்போகிறார்கள். அவ்வகையில் தமிழில் எழுதப்பட்ட தன்வரலாறுகளை அறிமுகம் செய்யும் நோக்கத்தோடு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்:** தன்வரலாறு பொதுவாழ்வு ஆலோசகர் டி.கே.சண்முகம் சங்கப்பணிகள்-தொழிற் சங்கம்-தேசியம்-போராட்டம்-தலித்துகள்-அரவாணிகள்-சேரிப்பெண்.

**முன்னுரை**

தன்வரலாறு கூறும் மரபு காலத்தால் பழமையானது. தன்னைப்பற்றி அறிமுகம் இல்லாத நபர்களிடம் தன்னை யார் என அறிவிக்கும்போது அவர் கூறும் அவரது சொல்லில் இருந்து பிறந்ததே தன் வரலாறு ஆகும். இதன் தோற்றம் மனிதனது பேச்சின் தொடக்கத்தில் இருந்தே உருவாகியது எனலாம். உலக அளவில் புகழ்பெற்ற தலைவர்களின் வாழ்வியல் நிகழ்வுகளே தன் வரலாற்றிற்கான அடிப்படையாக அமைந்துள்ளன.

மக்களுக்காகப் போராடிய மகத்தான தலைவர்களது வாழ்க்கைப் போராட்டங்களின் பதிவுகள்தான் பெரும்பாலும் தன்வரலாறாக உருவாகியுள்ளதைக் காணமுடிகிறது. தமிழகம் எப்போதும் எந்தச் செயலுக்கும் முன்னோடியாக பல விஷயங்களில் இருந்துள்ளது. அவ்வகையில் தன்வரலாற்றை எழுதுவதிலும் அதன் பங்களிப்பு அதிகமாக இருக்கின்றது. அவ்வகையில் தமிழில் உருவாகியுள்ள தன்வரலாறுகளின் புதிய போக்குகளை அறிமுகம் செய்யும் நோக்கோடு இக்கட்டுரை அமைகின்றது.

**தற்காலத் தமிழ் தன்வரலாறுகளின் போக்குகள் (1950களுக்குப் பிறகு)**

தமிழில் வெளிவந்த தொடக்க காலத் தன்வரலாறுகள் (1950 வரை) கலை, இலக்கியம், அரசியல் அல்லது பொதுவாழ்வு இவற்றில் ஏதோ ஒரு துறையில் பயணித்தவர்களாலும், குறிப்பிட்ட ஒரு துறையில் இலக்கை அடைந்தவர்களாலும் எழுதப்பட்டன. 1950-களுக்குப் பிறகும் சில பத்தாண்டுகள் இந்நிலை நீடித்தது எனலாம்.

இரண்டு முறை பல்கலைக்கழகத் துணைவேந்தராகவும், தமிழ்நாடு அரசின் கல்வி ஆலோசகராகவும், பொதுக்கல்வி இயக்குநராகவும் பணியாற்றிய நெ.து.சுந்தர வடிவேலு ‘நினைவு அலைகள்’ எனும் தலைப்பில் தனது தன்வரலாற்றை இயற்றியுள்ளார். தமிழ்நாடகத் தலைமை ஆசிரியர் சங்கரதாஸ் சுவாமிகளின் தலைசிறந்த மாணவர்களில் ஒருவரான டி.கே.சண்முகம் ‘எனது நாடக வாழ்க்கை’ எனும் தன்வரலாற்றை எழுதியுள்ளார். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேடை நாடக நடிகராக வளர்ந்து, பின்னர் தமிழ்த் திரைப்படத் துறையில் குணசித்திர நடிகராகவும், நகைச்சுவை நடிகராகவும் கொடிகட்டிப் பறந்த வி.கே.ராமசாமி தமது நாடக வாழ்க்கை குறித்து ‘எனது கலைப் பயணம்’ எனும் தன்வரலாற்றை இயற்றியுள்ளார். திராவிட இயக்கத் தலைவர்களான தந்தை பெரியார், அறிஞர் அண்ணா ஆகியோர் சுருக்கமாகத் தங்கள் தன்வரலாற்றை இயற்றியுள்ளனர்.

ஐந்து முறை தமிழ்நாடு அரசு முதலமைச்சராக இருந்த கலைஞர் மு.கருணாநிதி அரசியல், இலக்கியம், மேடைப்பேச்சு, பொதுவாழ்வு எனப் பல தளங்களில் பயணித்தவர். 20-ஆம் நூற்றாண்டு தமிழ்நாடு அரசியலிலும், சமூக நீதி, இந்தி எதிர்ப்பு முதலிய போராட்ட வடிவங்களிலும் தவிர்க்கவியலாத ஆளுமையாகத் திகழ்ந்தவர். இவர் தமது சுயசரிதையினை ‘நெஞ்சுக்கு நீதி’ (1924-2006) எனும் தலைப்பில் ஆறு பாகங்களாக வெளியிட்டுள்ளார். இதன் முதல் பாகம் தினமணி இதழில் தொடராக வெளிவந்தது.

தமிழ்த் திரை உலகிலும், தமிழ்நாடு அரசியலிலும் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். தனது வாழ்க்கை வரலாற்றை 'நான் ஏன் பிறந்தேன்?' எனும் தன்வரலாறாக ஆக்கியுள்ளார். இது அவருடைய சொந்த வாழ்க்கையில் இளம்பருவத்தில் எதிர்கொண்ட வறுமை, சோதனைகள் முதவியவற்றுடன் மக்கள் செல்வாக்கு மிக்க தலைவராக உயர்ந்த வரலாற்றைப் பதிவு செய்துள்ளது. எம்.ஜி.ஆரின் சமகாலத்தவரான சிவாஜி கணேசனின் தன்வரலாறு 'எனது சுயசரிதை' எனும் தலைப்பில் வெளிவந்துள்ளது. இது பிற தன்வரலாறுகளைப் போல் அல்லாமல் நேர்காணல் வடிவில் அமைந்துள்ளது. சிவாஜிகணேசனை நேர்காணல் செய்தவர் டி.எஸ்.நாராயணசாமி ஆவார்.

எம்.ஜி.ஆர், சிவாஜி கணேசனின் சமகாலத்தவர் எஸ்.எஸ்.ராஜேந்திரன் ஆவார். அவ்விருவரைப் போலவே இவரும் திரைத்துறை மற்றும் அரசியலில் பயணித்தவர் ஆவார். உலக வரலாற்றில் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று முதல் சட்டமன்ற உறுப்பினரான முதல் நடிகர் இவர். நாடகத்துறையில் அறிமுகமாகி, திரைத்துறையில் பயணித்து, அரசியலில் ஈடுபட்ட இவர் தமது வாழ்க்கை அனுபவத்தை 'நான் வந்த பாதை' எனும் தன்வரலாற்று நூலாக எழுதியுள்ளார்.

அரசியல்வாதிகள் சிலர் தன்வரலாறுகளை இயற்றியுள்ளனர். சேலத்தைச் சேர்ந்த தி.மு.க.அரசியல்வாதி க.ராஜாராம் 'ஒரு சாமான்யனின் நினைவுகள்' எனும் தன்வரலாற்றை இயற்றியுள்ளார். பா.ம.க. நிறுவனரான இரா.ராமதாசு 'பாட்டாளிச் சொந்தங்களே!' எனும் தன்வரலாற்று நூலைத் தந்துள்ளார். கம்யூனிஸ்ட் இயக்கவாதியான கு.சின்னப்பாரதி 'என் பணியும் போராட்டமும்' எனும் தமது தன்வரலாற்று நூலில் தமது சங்கச் பணிகள், தொழிற்சங்கப் போராட்ட அனுபவங்கள் முதலியவற்றைப் பதிவு செய்துள்ளார்.

தமிழ் இலக்கிய வரலாற்றில் வெளிவந்துள்ள தன்வரலாறுகளில் அதிகப் பக்கங்களைக் கொண்ட நூல் ம.பொ.சி.யின் 'எனது போராட்டம்' ஆகும். **"தமிழில் தன்வரலாறு இலக்கிய நூல்களுள் எனது போராட்டம் குறிப்பிடத்தக்க வரலாற்று ஆவணமாக அமைந்துள்ளது. இந்திய தேசியம், தமிழ்த் தேசியம், திராவிடத் தேசியம் எனும் அரசியல் கோட்பாடுகளை ஆய்வு செய்ய விரும்புவோர் எவரும் 'எனது போராட்டம்' வரலாற்றைக் கற்றே தீர வேண்டும். அரசியல்வாதியாக மட்டுமல்லாமல், இலக்கியச் செல்வராகவும், தமிழ்ப் பண்பாட்டுக் காவலராகவும், தியாக வாழ்க்கையில் தொண்டாற்றிய புனிதராகவும் வாசகர் போற்றும் அளவிற்கு 'எனது போராட்டம்' தகுதி சான்ற தன்வரலாற்று இலக்கியமாகத் திகழ்கின்றது என பெ.சு.மணி சான்றளித்துள்ளதை ஒப்புக்கொள்ளும் வகையில் உள்ளது ம.பொ.சி.யின் 'எனது போராட்டம்'"**[1] இந்நூல் இரு பாகங்கள் இணைந்த முழுத் தொகுப்பாக 2010-ஆம் ஆண்டு வெளிவந்தது.

தமிழ் இலக்கியவாதிகள், கலைஞர்கள் சிலரும் 'தன்வரலாறு' இயற்றியுள்ளனர். அந்தவகையில், அகிலனின் 'எழுத்தும் வாழ்க்கையும்' (1978), கண்ணதாசனின் 'வனவாசம் எனது சுயசரிதம்', வைரமுத்துவின் 'இதுவரை நான் (1983), யுகபாரதியின் 'நடைவண்டி நாட்கள்' (2019), சிற்பக்கலைஞர் எஸ்.தனபாலின் 'ஒரு சிற்பியின் சுயசரிதை' (2019), இந்திரனின் 'இந்திரன் காலம் (2020), இளையராஜாவின் 'பால்நிலா பாதை', வல்லிக்கண்ணனின் 'வல்லிக்கண்ணன் போராட்டங்கள்' (1985), ஓவியர் புகழேந்தியின் 'நானும் எனது நிறமும்', ஜோ.டி.குரூஸின் 'வேர் பிடித்த நிலங்கள்', வா.மு.கோ.மு.வின் 'அப்பச்சி வழி', கவிஞர் கலாப்ரியாவின் 'நினைவின் தாழ்வாரங்கள், உருள்பெருந்தேர்' முதலியவை குறிப்பிடத்தக்க தன்வரலாற்றுப் பனுவல்கள் ஆகும்.

### தமிழ் தன்வரலாறுகளின் புதிய போக்குகள்

1980-களுக்குப் பிறகு அடித்தள மக்கள் ஆய்வுள், பின்காலனியம், தலித்தியம் முதலிய சொல்லாடல்கள் (கருத்தாக்கங்கள்) தமிழ் இலக்கியப் போக்குகளில் தாக்கங்களை ஏற்படுத்தின. இத்தாக்கம் 'தன்வரலாறு' இலக்கிய வடிவத்திலும் பாதிப்பை ஏற்படுத்தின. **"இன்று தன்னை எழுதுதல் என்பது ஒரு பின்காலனியச் செயல்பாடு. பழங்குடிகள், தலித்துகள், பெண்கள், அரவாணிகள், நோயாளிகள், குற்றவாளிகள் ... எனச் சமூகத்தின் விளிம்பில் வாழும் பகுதியினர் தங்களை எழுதுவதன் மூலம் தாங்கள் சார்ந்த பகுதியினரை எழுதுகிறார்கள். இந்த எழுதுதல் பண்பாட்டை எழுதும் பின்காலனிய எழுத்து முறையாக வளர்ந்து வருகிறது"**[2] என தமிழில் தன்வரலாறு இலக்கியப் போக்குகளில் நிகழ்ந்துள்ள மாற்றம் குறித்து இரா.காமராசு குறிப்பிடுவதாக எடுத்துக் காட்டுகிறார் பொன்.குமார்.

தற்போதைய தமிழ்த் தன்வரலாறு இலக்கிய வகைமையில், 'பெண் தன்வரலாறுகள், தலித் தன்வரலாறுகள், திருநங்கையரின் தன்வரலாறுகள் முதலியவை கவனம் பெறத்தக்கதாக வளர்ந்து வருகின்றன.

1990-களின் தொடக்கத்தில் இந்தியா முழுவதும் அம்பேத்கர் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. இதன் இலக்கிய விளைவாக இந்தியா முழுக்க தலித் இலக்கியம் புத்தெழுச்சியோடு வளரத் தொடங்கியது. இதன் ஓர் அங்கம் 'தலித் தன்வரலாறுகள்' ஆகும். குறிப்பாக மராட்டியம், கன்னடம் ஆகிய மொழிகளில் தலித் தன்வரலாறுகள் பரவலாக வெளிவரத் தொடங்கின. இரட்டைமலை சீனிவாசனின் 'ஜீவிய சரித்திர சுருக்கம்' (1939) தமிழில் வெளிவந்த முதல் தலித் தன்வரலாறாகக் கருதப்படுகிறது. ஒருவகையில் இந்திய அளவில் எழுதப்பட்ட முதல் தலித் தன்வரலாறாக இது இருக்கக்கூடும். எனினும் மராத்திய, கன்னட மொழிகளைப் போல தமிழில் தலித் தன்வரலாறுகள் எழுதப்படவில்லை. இரட்டைமலை சீனிவாசனைத் தொடர்ந்து பாமாவின் 'கருக்கு' (1992), விடிவெள்ளியின் 'கலக்கல்' (1994), கே.ஏ.குணசேகரனின் 'வடு' (2005), சவீதா முனுசாமியின் 'சேரிப்பெண் பேசுகிறேன்' (2020) ஆகியவை மட்டுமே தமிழில் வெளிவந்துள்ள தலித் தன்வரலாற்று நூல்கள் ஆகும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் சாதி ஆதிக்கம் கொடிகட்டிப் பறக்கும் கிராமம் ஒன்றில் பிறந்தவர் கே.ஏ.குணசேகரன். பல்கலைக்கழகப் பேராசிரியரான இவர் தமிழின் முன்னோடி தலித் கலைஞரும் ஆவார். தாம் பிறந்த கிராமப்புறத்து வாழ்க்கை தொடங்கி கல்லூரி வாழ்க்கை வரை 'வடு'-வில் பதிவு செய்கிறார் கே.ஏ.குணசேகரன். 'வடு' என்கிற தலைப்பே சாதி ஆதிக்கத்தின் கோரத் தாண்டவங்களை குறியீட்டுத் தன்மையுடன் புலப்படுத்துகிறது. **"இது அவர் அனுபவங்களின் தொகுப்பாக மட்டுமின்றி அந்தக் காலத்தின் பதிவாகவும் இருக்கிறது. ஆசிரியராக வேலை பார்த்த போதிலும் தன்னைப் படிக்க வைக்கத் தனது தந்தை பட்ட சிரமங்களைச் சொல்லும்போதும், அந்தக் காலத்திலேயே எட்டாம் வகுப்புவரை படித்திருந்த தனது தாய் சினிமா கொட்டகையில் டிக்கெட் கொடுத்து, விறகு வெட்டி விற்று, புல்லறுத்து விற்றுத் தங்களைக் காப்பாற்றியதைச் சொல்லும் போதும் நம்மிடம் இரக்கம் கோராத, ஆனால் நம் நெஞ்சின் ஆழத்தைத் தொடுகிற ஆற்றலைக் குணசேகரனின் மொழி பெற்றுள்ளது. இரட்டைமலை சீனிவாசனின் 'ஜீவிய சரித்திர சுருக்கம்'(1939) வெளிவந்தப் பிறகு தமிழில் எழுதப்பட்ட முதல் தலித் சுயசரிதை நூல் இது"**[3] என்று இந்நூலின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார் ரவிக்குமார். தலித் தன்வரலாறுகள் தமிழில் பெரிய அளவில் இல்லாத போதும்கூட, தமிழில் தலித் இலக்கியம் ஆரோக்கியமானதொரு வளர்ச்சிப் போக்கில் பயணித்துக் கொண்டிருக்கிறது.

ஆணாகப் பிறந்து பெண்ணாக மாறுபவர்களும் பெண்ணாகப் பிறந்து ஆணாக மாறுபவர்களும் 'மூன்றாம் பாலினம்' அல்லது மாற்றுப் பாலினம் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்களில் திருநங்கையர், திருநம்பியர் எனும் இரு பிரிவினர் உள்ளனர். திருநம்பியரைவிட திருநங்கையர் எதிர்கொள்ளும் சமூக ஒடுக்குமுறைகள், நெருக்கடிகள், இழிவுகள் அதிகம். நெடுங்காலம் பொதுச் சமூகத்தினரால் பேசக் கூச்சப்பட்டுக் கிடந்த இவர்தம் இடையூறுகள் 21-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இவர்களாலேயே பேசப்பட்டன. அதன் பிறகுதான் பொதுச் சமூகத்திற்கு இவர்கள் மீதான கரிசனையும், இவர்கள் குறித்த விழிப்புணர்வும் ஏற்படத் தொடங்கின. தமிழில் திருநங்கையர் சிலர் சில தன்வரலாறுகளை இயற்றியுள்ளனர். அவ்வகையில், லிவிங் ஸ்மைல் வித்யாவின் 'நான் வித்யா' (2007) தமிழில் வெளிவந்த முதல் திருநங்கையர் தன்வரலாறு ஆகும். தொடர்ந்து ரேவதியின் 'வெள்ளைமொழி' வெளிவந்தது. சுவேதா எனும் திருநங்கையின் தன்வரலாற்றை 'என்னுள் ஆணின் அகிம்சை பெண்ணின் இம்சை' (2018) எனும் நூலாக எழுத்துப்படுத்தியுள்ளார். இவ்வாறு தமிழில் திருநங்கையர்தம் தன்வரலாறு ஒரு தொடக்கநிலை வளர்ச்சியைப் பெற்று வளர்ந்து வருகிறது. அது இன்னும் வளர வேண்டும். மனித சமூகத்தின் இயல்பினை உலகிற்குக் காட்டவேண்டும்.

## முடிவுரை

தன்வரலாறு கூறும்முறை பழங்காலத்தில் தோற்றம் பெற்றது என்றாலும் அதன் இலக்கிய வடிவம் கி.பி.2-ஆம் நூற்றாண்டில் இருந்துதான் தொடங்குகிறது. இது பெரும்பாலும் சாதித்தவர்களின் வரலாறாக இருந்து, இன்று சாமானியர்களின் வரலாறாக மாற்றம் கொண்டுள்ளது சிறப்பானதாகும். அவ்வகையில் இன்று தமிழில் பல்கலைத் துணைவேந்தர்களின் வரலாறு தொடங்கி, பாலியல் தொழிலாளர்களின் வரலாறு வரையிலான பல்வேறு படைப்புகள் வந்துள்ளன என்பதை அறியமுடிகிறது.

## குறிப்புகள்

1. பொன்.குமார் (க.ஆ.), தமிழவன் (தொ.ஆ.), தன்வரலாறு - ஓர் இலக்கிய வடிவம், ப.92-93
2. மேலது., ப.85
3. குணசேகரன், கே.ஏ., வடு, ப.16

# கால வளர்ச்சியில் சித்திரக்கவியின் போக்கு

**கு. திலகவதி**
*ஆங்கில பட்டதாரி ஆசிரியர், அ.பெ.மே.நி.பள்ளி, கோவை*
*முனைவர் பட்ட ஆய்வாளர், கருப்பண்ணன் மாரியப்பன் கல்லூரி, முத்தூர்*

**ஆய்வுச் சுருக்கம்**

சித்திரம் மற்றும் கவி ஆகிய இரு வடமொழிச் சொற்களின் இணைப்பான சித்திரக்கவி எனும் தொடரில் சித்திரம் என்பது கவி என்பதை சிறப்பிக்கும் அடைமொழியாக அமைந்திருக்கிறது. சித்திரம் என்ற சொல்லானது பொது வழக்கில் ஓவியம் எனப்படும் வரையப்பட்ட உருவமைப்பை சுட்டிக்காட்டினாலும் இலக்கிய பயிற்சியிலே அச்சொல் ஓவியம் என்னும் உருவமைப்பு பொருண்மையுடன் அழகியல் மற்றும் வியப்புணர்வு சார்ந்த பொருண்மைகளையும் சுட்டும் வகையிலேயே விரிவு கொண்டிருக்கிறது. சித்திரக்கவி என்பதில் அடைமொழியாக அமைந்துள்ள சித்திரம் என்ற சொல்லும் ஓவியத்துடன் அழகியல் மற்றும் வியப்புணர்வினை உள்ளடக்கியிருக்கிறது. காட்சி பரிமாணத்தில் எழுத்து நிலையில் வாசிப்பவர் மற்றும் கேட்பவர் அனைவருமே வியப்பு சார்ந்த சுவை அனுபவத்தை உணரும் வகையில் அமைக்கப்படும் கவிதை வகையே சித்திரக்கவி. சுவை அனுபவத்தை ஏற்படுத்தக்கூடிய அழகியல் வகையான இவ்வகை சித்திரகவிகள் பண்டைய காலத்தில் இருந்தே தமிழில் நிலவி வந்துள்ளன. இலக்கியத்திற்கு இலக்கணம் காணும் வழக்கப்படி சித்திரக்கவியின் இலக்கணம் வகுக்கப் படும் முன்பே சித்திரக் கவிகளைப் படைத்து விட்டனர் நம் முன்னோர்கள். சிறப்பு வாய்ந்த இச்சித்திரக்கவியின் காலப்போக்கு வளர்ச்சியை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## முன்னுரை

**காலத்திற்கு ஏற்ற வகைகள் அவ்வக்**
**காலத்திற் கேற்ற ஒழுக்கமும் நூலும்**
**ஞால முழுமைக்கும் ஒன்றாய் எந்த**
**நாளும் நிலைத்திடும் நூல் ஒன்றுமில்லை**
**சுப்பிரமணி பாரதியார்**

"இலக்கியம் என்பது காலத்தின் கண்ணாடி" என்பர். ஒரு இலக்கியம் தான் எழுதப்பட்ட காலம் எதுவோ அந்தக் காலத்தின் போக்கை முழுமையாக உணர்த்தும் போது தான் அது முழுமையான தலைசிறந்த இலக்கியம் ஆகிறது .நாற்கவிகளுள் சிறப்பான இடத்தை பெறும் சித்திரக்கவி கால வளர்ச்சியில் எவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்பதை உணர்த்தும் விதமாகவே இக்கட்டுரை அமைகிறது.

## சித்திரக்கவி

**"கவியே கமகன் வாதி வாக்கியென்**
**றிவையொரு நான்கும் புலமைக்கியல்பே"**
**(முத்து வீரியம் 60)**

இவற்றுள் கவி என்பவன் நால்வகைப் பாக்களைப் பாடுவோன்.

**"ஆசு மதுரஞ் சித்திரம் வித்தார**
**மாகு நாற்கவி யறையுங் காலை"**
**(முத்துவீரியம்-55)**

ஆசு, மதுரம், வித்தாரம் இம்மூவகை கவிதைகளை விடுத்து சித்திரக்கவி ஒரு புதுமையானதாக நுண் திறன் பெற்றவர்கள் மட்டுமே புனையக்கூடியதாக விளங்குகிறது.

## தொல்காப்பிய வண்ணம் (சித்திரக் கவி)

தமிழின் தொல் இலக்கணமான தொல்காப்பியத்தில் இத்தகைய ஆக்க முறைகள் தொடர்பான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியத்தின் செய்யுளியலில் பிசி மற்றும் வண்ணம் என்பவை இவ்வகைகளில் அடக்கப்படுகின்றன. பிசி என்பது விடுகதை எனும் பொருள் தருகிறது. ஒரு பாடல் அல்லது வாக்கியத் தொடர்பானது வெளிப்புறமாக ஒரு பொருளையும் உட்புறமாக ஒரு பொருளையும் தரும் வகையில் சொற்கள் தொடர்களை அமைத்து சுவை கூட்டுவதாகவும் அதேபோல் வண்ணம் என்ற சொல் பொதுவாக நிறம் அழகு முதலான சொற்களில் வழங்கி வந்தாலும் தொல்காப்பிய செய்யுள்களில் வண்ணம் என்னும் சொல் ஒலியழகை சுட்டுவதற்கு பயின்று வந்துள்ளதையும் நாம் காணலாம்.

வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம், இயல்பு வண்ணம், அளபெடை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம் ,சித்திர வண்ணம் எனப்படும் வண்ண வகைகள் சிலவகை எழுத்துக்களின் மிகப் பயிற்சி மற்றும் அவை ஒன்றை ஒன்று தொடரும் முறைமையை பற்றிய ஒலிக்குறிப்பு நிலைகளை அழகாக சுட்டுகின்றன. சொற்களைப் பற்றிய இந்த சித்திரக்கவி வகைகளை தொல்காப்பியத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருந்தாலும் ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன் வரையிலான காலப்பகுதிகளில் இவை குறித்த செய்திகள் கிடைக்கப்பெறவில்லை. தொல்காப்பியம் சுட்டிய வண்ண வகைகளில் ஒன்று தான் சித்திரம் என்று அடைமொழி பெற்றிருக்கிறது. சித்திர வண்ணம் என்பதில் சித்திரம் என்பது

நெட்டெழுத்துக்களும் குற்றெழுத்துக்களும் விரைவில் பயில்வதற்கான ஒரு ஒலிச் சிறப்பை கொடுக்கின்றது என்பது சிந்திக்கத் தக்கது.

**சித்திரக் கவியின் தோற்றம்**

சித்திரக்கவி என்ற சிந்தனையின் தோற்ற காலம் ஆறாம் நூற்றாண்டுக்கு பிற்பட்டதாக இருக்க வேண்டும் என்று தான் இலக்கிய சான்றுகள் நமக்கு குறிப்பிடுகின்றன. குறிப்பாக கிபி ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தவர்களான திருஞானசம்பந்த பெருமான் இதன் தோற்றுவாயாக பல கவிதைகளை இயற்றி இருக்கிறார். அவரைத் தொடர்ந்து திருமங்கையாழ்வார் இயற்றிய திருஎழுக்கூற்றிருக்கை இதற்கான அடையாளத்தில் ஒன்றாக குறிப்பிடப்படுகிறது.

சேந்தன் திவாகரம் என்ற நிகண்டு நூலிலேயே முதன் முதலில் சித்திரக்கவிகள் சம்பந்தப்பட்ட செய்திகள் நமக்கு கிடைக்கின்றன. ஆனால் இது எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டுகளைச் சார்ந்ததாக கருதப்படுகிறது. ஆனால் ஏழாம் நூற்றாண்டிலேயே ஞானசம்பந்தப் பெருமான் எழுகூற்றிருக்கை, ஏகபாதம், கோ மூத்திரி, மாலைமாற்று ஆகிய சித்திரகவி வகைகளை பாடி இருக்கிறார். சேந்தன் திவாகரன் நூலில் மாலை மாற்று சக்கரம், சுழி குளம் ஏகபாதம் எழுகூற்றிருக்கை என தொடங்கி தொடரும் நூற்பா. விரித்து மறைத்தும் மிறைக்கவி சித்திரகவி என்று நினைவுபடுத்துகிறது.

ஏழாம் நூற்றாண்டு முதல் தமிழில் உலவ ஆரம்பித்த சித்திரக்கவி பல நூற்றாண்டுகளாக தமிழ் புலமையின் ஒரு அடையாளமாகவும் மரபறிப் புலமையின் குறியீடாகவும் கருதப்பட்டது. சித்திரகவிகள் பாடும் ஆர்வம் பலருக்கும் அந்த காலத்தில் இருந்தது. சேந்தன் திவாகரத்துக்கு பின் எழுந்த பிங்கலம் முதலிய பல நிகண்டு நூல்களும் யாப்பியல் அணி யியல் பாட்டியல் முதலிய வகைகள் சார்ந்த இலக்கண நூல்களும் சித்திரக்கவிகளின் பெயர்களை சுட்டி வரிசைப்படுத்துகின்றன. ஆனால் அதைத் தொடர்ந்த பிற்காலங்களில் இந்த சித்திரகவியின் கடினத் தன்மை காரணமாகவும் சிக்கல்கள்கள் காரணமாகவும், சில மூட நம்பிக்கைகளாலும் இதனுடைய வளர்ச்சி குறைந்திருந்தது. தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஏராளமான நூல்கள் தாராளமாக கிடைக்கும் இக்காலத்தில் சித்திரக்கவிகள் சார்ந்த நூல்கள் மிக குறைவாக இருப்பதே இதற்கு சான்று.

**மொழி விளையாட்டு**

சித்திரக்கவிகள் புனைவு இலக்கியம் மட்டுமல்ல. அது ஒரு வகை புலமை சார் மொழி விளையாட்டும் தான். (Scholary language play) என்று கூறலாம். சொல்லும் சித்திரமும் ஒன்றிணைந்தவை சொற்களும் எழுத்துக்களும் ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறையில் வரும் வகையில் செய்யுள் யாப்பதும் அச்செய்யுளை ஒரு குறிப்பிட்ட வடிவத்தில் தருவதும் சித்திரக்கவியின் அடிப்படையாகும். படைப்பு இலக்கியம் தரும் உணர்வு சார்ந்த இலக்கிய அனுபவத்தை இது தருவதில்லை மொழிமூலம் ஒரு புதிரை கட்டமைப்பதிலும் அதை அனுபவிப்பதிலும் கிடைக்கும் மொழி விளையாட்டுன் மகிழ்ச்சியே இதன் விளைபயனாகும்.

ஏழாம் நூற்றாண்டு தொடங்கி சித்திரக்கவி பற்றி இலக்கணங்களும் இலக்கியங்களும் ஆங்காங்கே கிடைத்த வண்ணமே இருக்கின்றன. எட்டாம் நூற்றாண்டில் எழுந்ததாக கருதப்படும் சேர்ந்த திவாகரன் நிகண்டில் சித்திரக்கவிகளின் பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. இலக்கண நூல்களில் பத்தாம் நூற்றாண்டில் எழுந்த யாப்பருங்கலம் முதன் முதலாக சித்திரக் கவிகளின் பெயர்களை மிறைக்கவி என்னும் தலைப்பின் கீழ் தந்துள்ளது. இவை இரண்டிற்கும் காலத்தால் முற்பட்டதான திருஞானசம்பந்தர் பாடிய மாலை மாற்று, எழுகூற்றிருக்கை, ஏகபாதம் போன்ற சித்திரக்கவி பாடல்கள் நமக்கு கிடைக்கின்றன. நாற்கவிகளுள் சிறப்பான கவி வகையான இந்த சித்திரகவிகளை சம்பந்தரின் காலகட்டத்தில் வாழ்ந்தவராக கணிக்கப்படும் திருமங்கை ஆழ்வாரும் எழுதாயிருக்கிறார். ஆதலாலேயே நாற்கவி பெருமாள் என்று இவர் சிறப்புடன் அழைக்கப்பெறுகிறார். திருமங்கை ஆழ்வார் பாடி அருளிய கூற்றிருக்கை மிகவும் சிறப்பு வாய்ந்தது.

**எட்டாம் நூற்றாண்டு**

எட்டாம் நூற்றாண்டில் எழுந்ததாக கூறப்படும் திவாகரநிகண்டு இருபது சித்திரக் கவிகளின் பெயர்களை மிறைகவி என்ற தலைப்பின் கீழ் வரிசைப்படுத்தி உள்ளது .

**ஒன்பதாம் நூற்றாண்டு**

ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராக கருதப்படும் நக்கீரர் சித்திரக்கவியான எழுகூற்றிருக்கைப் பாடி இருக்கிறார். அப்பாடல் பதினொன்றாம் திருமுறையில் வைக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஒன்பது மற்றும் பத்தாம் நூற்றாண்டில் இருந்ததாக கூறப்படும் பிங்கல நிகண்டிலும் சித்திரக் கவிகளின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

**பத்தாம், பதினொன்றாம் நூற்றாண்டு**

பத்து பதினொன்றாம் நூற்றாண்டில் யாப்பருங்கல இலக்கண நூல்களைத் தந்த அமுதசாகரர்

அந்நூலில் இருபத்து மூன்று வகையான சித்திரக் கவிகளின் பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் பதினொன்றாம் நூற்றாண்டில் யாப்பருங்கல இலக்கண நூலுக்கு உரைநூலாக எழுதப்பட்ட யாப்பருங்கல விருத்தியில் சித்திரக் கவிகளுக்கான விளக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. யாப்பருங்கல விருத்தியை குணசாகரர் செய்துள்ளார். இதன்படி யாப்பருங்கல விருத்தியில் எடுத்தாளப் பெற்றுள்ளன. சித்திரக் கவிகளுக்கான உதாரணச் செய்யுள்கள் அனைத்தும் 11ஆம் நூற்றாண்டும் அதற்கு முந்தைய காலத்தையும் சேர்ந்தவையாக இருக்கின்றன. இதே காலத்தில் வடமொழி பின்புலத்தில் எழுதப்பட்ட வீரசோழியம் இலக்கண நூலும் சித்திரக்கவிக்கான சூத்திரத்தை குறிப்பிடுகிறது.

### பன்னிரண்டாம் நூற்றாண்டு

பன்னிரண்டாம் நூற்றாண்டில் தமிழில் எழுதப்பட்ட தண்டியலங்காரமானது சித்திரக்கவி பற்றி கூறியுள்ளது. இக்காலப் பகுதியில் வீரசோழியத்துக்கு உரை எழுதியவர் சில சித்திரக் கவிதைகளை தமது உரையிலேயே உள்ளடக்கியதும் கவனத்திற்குரியது. பெருந்தேவனார் மிகவும் சிக்கலான சக்கர பந்த கவிதை ஒன்றினை தனது உரையினுள் குறிப்பிட்டு இருக்கிறார்.

### பதிமூன்றாம் நூற்றாண்டு

பதிமூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான குணவீர பண்டிதர் இயற்றிய வெண்பா பாட்டியல் என்ற இலக்கண நூலில் சித்திரக்கவி புலவர் பற்றிய குறிப்பு இருக்கிறது. இந்நூலுக்கு வச்சநந்தி மாலை என்னும் மற்றொரு பெயரும் வழக்கில் இருக்கிறது.

### பதினான்காம் நூற்றாண்டு

14ஆம் நூற்றாண்டில் நவநீத நாடனாரால் பாடப் பெற்ற நவநீத பாட்டியலில் சித்திரச் செய்யுள்களுக்கு ஆவதோருக்கான சூத்திரம் கூறப்பட்டுள்ளது. அவற்றோடு சில சித்திரக் கவிகளின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன .

### பதினைந்தாம் நூற்றாண்டு

பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ்ந்த அருணகிரிநாதர் முருகக்கடவுள் மீது பாடிய எழுகூற்றிருக்கைப் பாடலானது எண் ஒருங்கில் சிறப்பம்சம் கொண்டு பாடுவதற்கு எளிமை பெற்றுள்ளது.

### பதினாறாம் நூற்றாண்டு

பதினாறாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட மாறனலங்காரமானது முப்பத்து இரண்டு சித்திரக்கவிகளை பற்றிய விரிவான சூத்திரங்களை தருகின்றது. இந்நூலை இயற்றிய திருக்குருகை பெருமாள் கவிராயர் நூலுக்கான உரையையும் எழுதி இருக்கிறார். மாறனலங்காரத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட உதாரணப் பாடல்களோடு சித்திரக்கவிதைகள் குறிப்பிடப்பட்டு இருக்கின்றன. இந்தப் பாடல்கள் யாவும் பதின்றாம் நூற்றாண்டிலும் அதற்கு முன்னதாகப் பாடப்பட்ட சித்திரக்கவிகளும் ஆகும்.

### பதினேழாம் நூற்றாண்டு

பதினேழாம் நூற்றாண்டில் வெளிவந்த இலக்கண விளக்கம் என்ற நூலில் 20 சித்திரக் கவிகளின் பெயர்கள் வகைப் படுத்தப்பட்டுள்ளன.

### பதினெட்டாம் நூற்றாண்டு

பதினெட்டாம் நூற்றாண்டில் மாதவ சிவஞான முனிவர் அவர்களின் சித்திரக் கவிகள் இடம் பெற்றுள்ளன.

### பத்தொன்பதாம் நூற்றாண்டு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் திருச்சீரபுரம் மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் திருநாகை காரோண புராணத்தின் நந்தி நாத படலத்தில் சித்திரக்கவிகள் இருக்கின்றன. இதே காலகட்டத்தில் வாழ்ந்த தண்டபாணி சுவாமிகள் சித்திரக் கவிகள் பலவற்றை பாடி இருக்கிறார்.

சித்திரகவி வகைகளின் எண்ணிக்கையை குறிப்பிடும் இலக்கண நூல்கள் ஒன்றோடு ஒன்று வேறுபடுகின்றன உதாரணமாக யாப்பருங்கலம் 23 வகையைச் சித்திரக்கவிகளையும், தண்டியலங்காலம் 12 வகைகளையும், இலக்கண விளக்கம் 20 வகைகளையும், திவாகர நிகழ்வு 20 வகைகளையும் பிங்கல நிகண்டு 18 வகைகளையும் குறிப்பிடுகின்றன. அனைத்திலும் அதிக எண்ணிக்கையில் குறிப்பிடுவது மாறனலங்காரம் 32 சித்திரகவிகளை குறிப்பிடுகின்றது.

1983 ஆம் ஆண்டு வே ர மாதவன் அவர்கள் எழுதிய சித்திரக் கவிதைகள் என்னும் நூலில் மாத்திரை எழுத்து சொல் எண், சீர், விடுகவி வினா விடை திறனறி குறிப்பு வெளிப்படை ஓவிய வடிவில் பொருந்தவன என்னும் எட்டு தொகுதிகளுக்குள் சித்திரக் கவிகளை தொகுத்திருக்கிறார் 2007 ஆம் ஆண்டு சென்னை பல்கலைக்கழக வெளியீடாக பதிக்கப்பெற்ற சித்திரக்கவிக் களஞ்சியம் என்னும் நூல் சித்திரகவிகளை சொற்ச்சித்திரம் வடிவச் சித்திரம் எனும் தொகுதிகளாக குறிப்பிடுகிறது இவற்றை ஞானம் பாலச்சந்திரன் தன்னுடைய சித்திரக்கவிகள் திரட்டு என்னும் நூலிலே ஆறு வகைகளாக குறிப்பிட்டு இருக்கிறார் எழுத்து சித்திரக் கவிகள், சொற்ச்சித்திரக்கவிகள், பொருட்

சித்திரக்கவிகள், உருவதள சித்திரக்கவிகள், பாடலமைப்பு சித்திரகவிகள், இணைந்த சித்திரை கவிகள் என்று.

15ஆம் நூற்றாண்டு காலம் வரையில் தமிழில் காணப்பட்ட சித்திரக்கவி வகைகளில் அதிகமானவை எழுத்து சொல் பொருள் பாடல் அமைப்பு என்ற வகைகளிலேயே அடங்கியுள்ளன. சித்திரக் கவிதைகள் என்னும் தொகுதிக்குள் மாலைமாற்று, சக்கரம், நாக பந்தம் என்னும் மிகச் சில சித்திரக் கவிகளே காணப்படுகின்றன. பந்தம் என்னும் வடமொழியில் இருந்து உள்வாங்கப்பெற்ற சொல்லானது உருவத்ள சித்திர கவிதைகளை குறிப்பிடுகிறது. கோமுத்திரியே கூட சதுக்கம் மாலை மாற்று, எழுத்து வர்த்தகம், நாகபந்தம், வினாவுத்தரமெ காதை கரப்பே கரந்துரைச் செய்யுள் சக்கரம் சுழிகுளம் சர்ப்பதோ பத்திரம் அக்கர சுதகமும் அவற்றின் பால என்ற தண்டியலங்காரத்தின் 12 ஆம் நூற்றாண்டில் எழுத தண்டியலங்காரத்தின் 97வது செயலின் மூலமாகவே இந்த பந்தம் என்னும் சொல் சித்திரக் கவிக்குள் வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

சித்திரகவி வகைகளின் முதிர்ந்த நிலை 15 ஆம் நூற்றாண்டு காலம் வரையில் இலக்கண நூல்களில் கூறப்பட்ட சித்திரைக் கவிகளை சரியாக நிரல்படுத்த போதுமான அளவு சான்றுகள் இல்லை என்பதே உண்மை. 16 ஆம் நூற்றாண்டில் எழுந்த மாறன் அலங்கார சூத்திரம் ஒரு தெளிவான வகையை குறிப்பிடுகிறது சூத்திரம் 26 சித்திரக்கவிதைகளின் பெயர்களை வரிசைப்படுத்தி இருக்கிறது மாறனலங்கார நூலை எழுதி அதற்கான உரையையும் எழுதி உள்ள திருக்குறளை பெருமாள் கவிராயர் அவர்கள் 32 வகையான சித்திரக்கவிதைகளை இதன்வாயிலாக குறிப்பிடுகிறார்.

அரசன் சண்முகனார் சண்முகம் பிள்ளை 1903ஆம் ஆண்டு மாலை மாற்றுக் கவிதைகளைப் பாடியுள்ளார். இது சித்திரக்கவி யின் புலமைக்கு ஒரு சிறந்த சான்றாக அமைந்துள்ளது. அனைத்து பாடல்களையும் நிரோட்டியத்தில் அமைத்து பாடிய பல நூல்கள் தமிழில் இருக்கின்றன. வடகோவையை சேர்ந்த வேலுப்பிள்ளை பாடிய திருத்தில்லை நிரோட்டக யமக அந்தாதி வண்ணார் பண்ணையைச் சேர்ந்த பொன்னுதுரை அய்யர் பாடிய நல்லை நிரோட்டக யமக அந்தாதி நயிலை வரகவி நாகமணி புலவரால் இயற்றப்பட்ட நயினை நிரோட்ட யமக அந்தாதி போன்றவை ஈழத்து பரப்பிலிருந்து வெளிவந்த நிரோட்டக நூல்களாக ஞானம் பாலச்சந்திரன் அவர்கள் குறிப்பிடுகிறார். தமிழகத்தில் மோசூர் கா முனுசாமி முதலியார் பாடிய நிரோட்டகம், உமையாள்புரம் சாமிநாத பிள்ளை இயற்றிய நெல்லை நாயகி நிரோட்டக மாலை, புதுப்பாளையம் பூ ஆ பெரியசாமி பிள்ளை பாடிய மகிழன் சுப்பிரமணியர் நிரோட்டகம் ஆகியவை சித்திரக்கவியின் நிரோட்டக சிறப்பு பட்டியலாக நிகழ்கின்றன.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இதழகழ் அந்தாதி ,நிரோட்டக ஏகபாத சித்திரக்கவி ஆகும். இவைஅவரின் சித்திரகவி புலமைக்கு சிறப்பான சான்றாக அமைகின்றது. மேலும் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் கூறுவதே மரபு. இவ் வடிப்படையில் நவீன இலக்கியத்தின் வருகையுடன் புணர்ச்சி விதிகள் தளர்த்தப்பட்ட நிலையிலும் யாப்பிலக்கணங்கள் ஒதுங்கிவிட்ட நிலையிலும் மரபு வழி இலக்கணங்களை ஒத்த நூல்கள் எதிர்காலத்தில் தோன்றுவதற்கான சாத்திய கூறுகள் குறைந்து வருகின்றன. அவ்வகையில் சித்திரக் கவிகள் சார்ந்த விளக்க நூல்கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. இந்த விளக்க நூல்களை சித்திரக் கவிகளுக்கான இலக்கண நூல்கள் எனும் தகுதியை எதிர்காலத்தில் பெறும். தற்போதைய காலகட்டத்தில் முனைவர் ரஹமத் பீபீ,பாட்டரசர் கி பாரதிதாசன் ஐயா திருமதி அருணா செல்வம் மோகன் எனும் தமிழ் ஆசிரியர் உள்ளிட்ட பல சித்திரக்கவி புலவர்கள் இதனைப் புதுப்பிக்கும் முயற்சியை மேற்கொண்டு வருகின்றனர். சித்திரக்கவி சார்ந்த முழுமையான ஒரு ஆய்வு செய்யப்படாத நிலையில் ஞானம் பாலச்சந்தர் அவர்களின் சித்திரக்கவி திரட்டு என்னும் நூல் இவ்வாய்வில் தடம் பதிக்கும் ஒவ்வொருவருக்கும் உறுதுணையாக அமையும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை .

**முடிவுரை**

சித்திரக்கவி இலக்கியம் சார்ந்த தனியான பார்வை மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியம் தமிழுக்கு ஏற்பட்டுள்ளது சித்திரக் கவிகளை உள்ளடக்கிய பல தொகுப்பு நூல்கள் விளக்க நூல்கள் தமிழில் வெளிவந்த போதிலும் சித்திரகவி இலக்கியம் முழுமையும் ஒன்று திரட்டிய ஒரு செயல்பாடு நடைபெறவே இல்லை. இதனால் சித்திரக்கவி இலக்கியத்தை ஒன்று திரட்டி அதனை அடுத்த எதிர்காலத்திற்கு கொண்டு சேர்க்க வேண்டிய கடமை இன்றைய தமிழ் ஆர்வலர்களுக்கும் தமிழ் ஆசிரியர்களுக்கும் ஏற்பட்டு இருக்கிறது. திறமையான, நுட்பமான, நுணுக்கமான, அழகியல் சார்ந்த இந்த சித்திரக்கவி வகைகளை நாம் வளப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு கடத்தாவிட்டால் இது முற்றிலும் அழிந்து போகும் நிலையை

எட்டிவிடும். ஆகையால் கடினமான இந்த சித்திரக்கவி வகைகளை எளிமைப்படுத்தி அடுத்த தலைமுறைக்கு கொண்டு சேர்க்க வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உண்டு. அதனை எளிமைப்படுத்த நம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள முயற்சிகள் எடுக்கப்படுவது அவசியம். காலப்போக்கில் சித்திரக்கவியின் வளர்ச்சியை இக்கட்டுரை எடுத்து இயம்புகிறது.

**துணை நூற் பட்டியல்**

1. யாப்பு எழுத்தாணி சித்திரக்கவிகள், பாவலர். சோ. மோகன், 2022, ஜி.எம். அமுதன் பதிப்பகம், தஞ்சாவூர்.
2. சித்திரக்கவிகள்: வே.இரா. மாதவன், 1983, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
3. சித்திரக் கவிக் களஞ்சியம், வ. ஜெயடேவன், 2007, சென்னை பழ்கலைக்கழகம்
4. சித்திரக்கவித் திரட்டு, ஈழமும் தமிழும் (6), ஞானம் பாலச்சந்திரன், 2016, ஞானம் வெளியீடு
5. மாறனலங்காரம், முத்துவீரியம், சுவாமிநாதம், குவலயானந்தம், தமிழ் இலக்கண நூல்கள், பதிப்பாசிரியர், ச.வே. சுப்பிரமணியன், மெய்யப்பன் பதிப்பகம், சென்னை, 2007
6. தண்டியலங்காரம், உரை, டாக்டர் தமிழண்ணல், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.

# கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு

**த. நிர்மலாதேவி**
*ஆசிரியர், அ.பெ.மே.நி.பள்ளி*
*தொண்டாமுத்தூர், கோவை*

**முன்னுரை**

இலக்கியம் என்பது நம் மனதில் தோன்றும் எண்ணங்கள் அல்லது சிந்தனைகளை எடுத்து சொற்கள் வடிவில் வெளிப்படுத்தும் ஒரு கலையாகும் இலக்கியங்கள் விழுமியங்களை கொண்டதாக இருப்பதால் அவை காலம் கடந்தும் வாழும் தன்மை உடையதாக உள்ளன. தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் உலக செம்மொழிகள் உயிராய்வு மைய இயக்குனர் சோ நா கந்தசாமி அவர்கள் நம் தமிழ் மொழி செம்மொழி என்று அழைக்கப்படுகிறது என்கிறார் ஒரு மொழி செம்மொழி என்ற பெயரை பெறுவதற்கு அம்மொழியில் மிகவும் தொன்மை வாய்ந்த இலக்கியங்களும் இலக்கணங்களும் இடம் பெற்றிருத்தல் அவசியம். அவ்வகையில் தமிழ் மொழி எண்ணற்ற தொன்மை வாய்ந்த இலக்கியங்களை இலக்கண வளங்களையும் தன்னுள்ளே கொண்டுள்ளது தமிழ் மொழியில் ஒவ்வொரு காலகட்டத்திலும் புதிய இலக்கியங்கள் தோன்றிய வண்ணம் உள்ளது. மேலும் இலக்கிய நடையில் மாற்றம் பெற்றுள்ளது எழுதும் கருப்பொருட்கள் காலத்தின் சூழ்நிலைக்கேற்ப பல்வேறு வடிவங்களை பெற்று வளர்ந்து வருகிறது கால வளர்ச்சியில் தமிழ் இலக்கியத்தின் போக்கு என்ற தலைப்பில் இலக்கிய வளர்ச்சி ஏற்பட்டுள்ள மாற்றங்களை இக்கட்டுரை வழி ஆய்வு செய்வோம் தமிழ் இலக்கியங்கள் கால வகைப்பாடு

**ஆரம்பக் கால இலக்கியங்கள்**

முதன் முதலில் தோன்றிய நூல்கள் கிரேக்க சுமேரிய நாட்டு இலக்கியங்கள் என அறிஞர்களால் கருதப்படுகிறது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றியிருக்க கூடும் என இலக்கிய அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் அதற்கான சான்றுகள் இயற்கை சீற்றங்களினாலும் போர்களினாலும் மற்றும் அதன் முக்கியத்துவம் அறியப்படாமல் மக்களினாலும் அழிந்தது. தமிழில் மிகப் பழமையான நூல் தொல்காப்பியம் என தமிழ் அறிஞர்களால் அறியப்படுகிறது. தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் தோன்றுவதற்கு முன்பே இலக்கியங்கள் தோன்றியிருக்க வேண்டும். தற்காலத்தில் கிடைக்கும் தமிழ் இலக்கியங்கள் அனைத்தும் தொல்காப்பியத்திற்கு பிற்பட்டவையே. இலக்கண நூலாக இருந்தாலும் தமிழரின் நாகரீகத்தை மற்றும் பண்பாட்டு விடுமியங்களை எடுத்துரைக்கின்றது.

**தலைமக்கள் பண்புகள்**

**"பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டோடு**
**உருவு நிறுத்த காமவாயில் நிறையே**
**அருளே உணர்வோடு திரு என**
**முறையறக் கிளந்த ஒப்பினது வகையே"**

**தொல் - பொருள் - மெய் - 25**

தோன்றிய குடிநிலை, குடிக்குத் தக ஒழுகும் ஒழுக்கம் வினை ஆளும் தன்மை அகவை, வடிவம், நிலைத்த காதல், மன அடக்கம், உயிர் இரக்கம், அறிவு, செல்வம் என பத்து பொருத்தங்களாக பண்டைத் தமிழர்கள் திருமணத்தின் போது பார்த்தனர். இத்தகைய அரிய செய்திகளை தொல்காப்பியம் மூலம் நாம் அறியலாம்.

**தமிழ் இலக்கியத்தின் வடிவங்கள்**

தமிழ் இலக்கியமானது 2000 ஆண்டுகளுக்கு மேலாகவும் சிறந்த இலக்கியங்களில் ஒன்றாகவும் திகழ்ந்து வருகிறது. தமிழ் இலக்கியங்கள் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு வடிவங்களை பெற்று வளர்ந்து வருகிறது. அவை நூற்பா, வெண்பா, பழமொழி, புதுக்கவிதை, கட்டுரை, உரைநடை, நாவல், ஹைக்கூ என பல வடிவங்களை கொண்டுள்ளது. இதனை

சூத்திரம் என நன்னூல் குறிப்பிடுவதை நூற்பா என வழங்குகின்றனர். சில சொற்களால் அமைந்து சுருக்கமாக அமைந்த செய்யுள்கள் நூற்பா என அழைக்கப்படுகின்றன. நூற்பாக்கள் கூறும் கருத்துக்களை கற்றறிந்த அறிஞர்களால் மட்டுமே உணர முடியும்.

**"மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும்"**

(தொல் - நூ - 1580)

**"பூப்பெயர் முன் இன மென்மையும் தோன்றும்"**

(நன் - எழுத்து - நூ - 200)

**வெண்பா**

வெண்பா எனும் "பா" வகையில் ஒவ்வொரு பாடலும் இரண்டு முதல் 12 அடிகள் வரை கொண்டிருக்கும். இப்பாவகைகள் வெண்பா, ஆசிரியப்பா கலிப்பா, வஞ்சிப்பா என என நான்கு "பா" வகைகள் உண்டு.

இரண்டடி வெண்பா - திருக்குறள்

**"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு"** குறள் 1

இரண்டாம் அடியில் தனிச்சொல் பெற்று நான்கடியாய் வருவது நேரிசை வெண்பா

**"கற்றோருக்குக் கல்வி நலனே கலனல்லால்**
**மற்றோர் அணிகலம் வேண்டாவாம் - முற்ற**
**முழுமணி பூணுக்குப் பூண் வேண்டா யாரே**
**அழகுக்கு அழகுசெய் வார்"**
**- நீதிநெறி விளக்கப் பாடல் 12**

ஆசிரியப்பா

அடிகளின் மேல் எல்லைக்கு வரையறை கிடையாது. நான்கடி ஆகவோ மூன்றடியாகவோ கொண்ட சிந்தடியாகவும் இரண்டு அடிகளைக் கொண்ட குரலடியாகவோ ஐந்தடியாகவோ அமையலாம். ஆனால் முதல் அடியும் இறுதி அடியும் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியாக இருக்க வேண்டும்.

**"போர்தற்கு அரும்பபிணி தாம்இவை அப்பிணி**
**தீர்த்தற்கு உரிய திரியோக மருந்து இவை**
**ஓர்தல் தெளிவோடு ஒழுக்கம் இவையுண்டார்**
**போர்த்த பிணியுள் பிறவார் பெரிதின்பமுற்றே"**
**- நீலகேசி தர்ம உரை சருக்கம் பா 116**

புதுக்கவிதை

**"உள்ளத்துள்ளது கவிதை - இன்பம்**
**உருவெடுப்பது கவிதை**
**தெள்ளத் தெளிந்த தமிழில் - உண்மை**
**தெரிந்துரைப்பது கவிதை".**
**- கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை**

மக்களுக்கு புரியும் வகையில் எளிய மொழி வடிவில் அமைந்த பாடல்கள். புதுக்கவிதைகளின் முன்னோடி பாரதியார். பாரதியார் தன்னுடைய கவிதைகளை புதுக்கவிதை வடிவில் வடித்து தந்துள்ளார். சுதந்திரப் போராட்ட கருத்துக்களை புதுக்கவிதை வடிவில் தந்து சுதந்திர வேட்கையை மக்கள் மனதில் புகுத்திய ஒப்பில்லா ஈடற்ற கவிஞர்

**"வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி!**
**வாழிய வாழியவே!**
**வான மளந்தது அனைத்தும் அளந்திடு**
**வன்மொழி வாழியவே!**
**சூழ்க்கடல் வைப்பினும் தன்மணம் வீசி**
**இசைக் கொண்டு வாழியவே!**
**எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி**
**என்றென்றும் வாழியவே!"**
**- பாரதியார் கவிதைகள் தமிழ்மொழி வாழ்த்து**

தமிழ் புதுக்கவிதை ஆசிரியர்கள்

பாரதியார், பாரதிதாசன், கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை, நாமக்கல் கவிஞர், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கண்ணதாசன், ந. பிச்சமூர்த்தி, மீரா, அப்துல் ரகுமான், மு. மேத்தா, வைரமுத்து, சிற்பி பாலசுப்பிரமணியம் போன்றவர்கள்

கட்டுரை

தமிழ் இலக்கியத்தில் நவீன சகாப்தம் ஆனால் மிகப்பெரிய புதுமைகளை தொடங்கியது. "பா" வடிவில் "செய்யுள்" வடிவில் இயற்றப்பட்ட இலக்கியங்கள் கட்டுரை உரைநடை வடிவில் இயற்றப்பட்டது. செய்யுள் இலக்கணங்களை அறிந்தவர்களால் மட்டுமே "பா" மற்றும் செய்யுள் வடிவில் எழுத முடியும். கட்டுரை உரைநடை வடிவில் எழுதுவது என்பது அனைவராலும் எழுதப்படும் இலக்கிய வடிவம் ஆகும்.

கா சொக்கலிங்கம் (கட்டுரைக் கோவை) என்பவர் "ஒரு பொருள் பற்றி சிந்தித்து சிந்தித்தவற்றை எழுதுவதே" கட்டுரை என குறிப்பிடுகிறார். கட்டுரை தர்க்க வெளிப்பாட்டிற்கும் தகவல் பரிமாற்றத்திற்கும் உரிய வடிவமாக இன்று கருதப்படுகிறது. தெளிவு, ஆடம்பரம் இன்றி ஒன்றை கூறல், சுருக்கமாக கூறல், நேர்படக் கூறல், விரிந்த பொருளைக் கூறல், குறிப்பாற் செய்திகளை உணர்த்துதல் போன்றவை கட்டுரையின் பண்புகள் என வி.செல்வநாயகம் அவர்கள் கூறுகிறார்.

கட்டுரையின் வகைகள்

தர்க்க கட்டுரை, செய்தி கட்டுரை, பகுப்பாய்வு கட்டுரை, வருணனை கட்டுரை, செயல்முறை கட்டுரை என பல வடிவங்களில் கட்டுரைகள் எழுதப்பட்டு வருகிறது

கட்டுரை தலைப்புகள் - சான்றுகள்

**அறிவியலின் இன்றைய வளர்ச்சி**
**ஆறு தன் வரலாறு கூறுதல்**
**மகாத்மா காந்தி சுயசரிதை**

நாவலின் தோற்றம்

நாவலின் தோற்றம் என்பது இலக்கிய உலகில் புதிய விடிவெள்ளியாக அறிஞர்களால் கருதப்பட்டது. வாழ்க்கையை அதன் போக்கிலேயே எதார்த்தமாகப் படம் பிடித்துக் காட்டும் ஓர் இலக்கிய வடிவமாக உரைநடையில் தோன்றியதுதான் நாவல். நாவல் என்ற இலக்கிய வடிவம் தோன்றவில்லை என்றால் அவ்வக்கால மக்களின் சமூக வாழ்க்கை, வர்க்க வேறுபாடு, காதல் நிகழ்வுகள், உரையாடல் மொழி ஆகியவை பதிவு செய்யப்படாமல் போயிருக்க

வாய்ப்புண்டு. நாவலில் இடம் பெறும் எந்த ஒரு கதை மாந்தரும் தனித்து இயங்கி வாழ்வதில்லை. கதை மாந்தர் சமூகத்தின் ஓர் அங்கமாகத் திகழ்வதால் சமூகத்தின் வளர்ச்சியிலும், வீழ்ச்சியிலும் தன் பங்கினைச் செய்கின்றனர். சமூகம் கதை மாந்தரைப் பாதிப்பதால் சமூகம் நாவலில் முக்கியப் பங்காற்றுகின்றது. எனவே, நாவல் இலக்கியம் தான் தோன்றிய காலத்துச் சமூக வாழ்வை முழுமையாகப் பதிவு செய்கிறது. இது எதிர்கால வரலாற்று ஆய்விற்கு முக்கியப் பங்காற்றுவதாக விளங்கும்.

**நாவலின் வகைகள்**

நாவல்களைப் பொதுவாக இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம்.

1. சமூக நாவல்
2. வரலாற்று நாவல்

நாவலின் கதைப் பின்னணி அடிப்படையில்தான் இப்பிரிவுகள் அமைகின்றன. பழங்கால மக்களின் வாழ்வு முறை, உணவு, உடை, பழக்க வழக்கங்கள் மிக விரிவாக விவரிக்கப்பட்டிருக்கும். தமிழில் வரலாற்று நாவல்களை எழுதியதில் முன்னோடியாகத் திகழ்பவர் கல்கி. அவரைத் தொடர்ந்து அகிலன், நா.பார்த்தசாரதி, கோவி.மணிசேகரன் போன்றோர் வரலாற்று நாவல்களை எழுதிப் புகழ் பெற்றனர். சாண்டில்யன் தமிழில் மிகுதியான வரலாற்று நாவல்களை எழுதினார்.

**ஹைக்கூ கவிதை**

ஹைக்கூ கவிதை என்பது முதல் வரியில் 5 அசையையும், இரண்டாவது வரியில் 7 அசையையும், மூன்றாவது வரியில் 5 அசையையும் தாங்கி நிற்கும் மூன்று வரிக்கவிதை. ஹைக்கூ வடிவத்தில் எழுதப்பட்ட ஒரு கவிதை அல்லது ஜப்பானிய மொழி அல்லாத வேறு மொழியில் அதை மாற்றியமைப்பது ஹைக்கூ என்றும் அழைக்கப்படுகிறது. ஆங்கிலத்தில் இமேஜிஸ்டுகளால் இயற்றப்பட்ட ஹைக்கூ 20 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் குறிப்பாக செல்வாக்கு செலுத்தியது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு ஜப்பானுக்கு அப்பால் இந்த வடிவத்தின் புகழ் கணிசமாக விரிவடைந்தது, இன்று ஹைக்கூ பல மொழிகளில் எழுதப்படுகிறது.

**இனப்பெருக்கம் காண**
**ஏற்ற இடம் இதுவென**
**அயல் நாட்டுப் பறவைகள்**
**அத்தனையும் இங்கு வந்தாலும்**
**தன் குணம் மொழி மாறாமல்**
**தங்கி இருக்குது வேடந்தாங்கலில்**

**பழமொழி**

பழமொழிகள் ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாய் புழக்கத்தில் இருந்து வரும் அனுபவ குறிப்புகள் ஆகும். ஒரு காலகட்டத்தில் பழமொழிகள் இலக்கிய வடிவம் பெற ஆரம்பித்தன. பழமொழி நானூறு முதுமொழிக்காஞ்சி ஆகிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பழமொழியை மையமாகக் கொண்டு எழுதப்பட்டவை. தற்காலத்தில் பழமொழியைக் கொண்டு கதைகள் நீதி கருத்துக்கள் உரைநடை வடிவில் எழுதப்படுகின்றன

**முது மொழியின் இலக்கணம்**

**நுன்மையும் சுருக்கமும் ஒளியுடைமையும்**
**ஒண்மையும் என்றிவை விளங்கத்தோன்றி**
**குறித்த பொருளை முடித்தற்கு வருஉம்**
**ஏது நுதலிய முதுமொழி என்ப**

**- தொல் - செய் - நூ - 170**

**பழங்கால மொழி நடை**

சங்க இலக்கியங்களும் நீதி இலக்கியங்களும் காப்பியங்களும் இயற்றப்பட்ட காலங்கள். பா மற்றும் செய்யுள் வடிவிலேயே இயற்றப்பட்டன. மக்களால் புரிந்து கொள்ள முடியாத மொழிநடை பழங்கால இலக்கியங்களை கையாளப்பட்டன அனைத்து வகை இலக்கியங்களும் பெரும்பாலும் செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன பதினெண்மேற் கணக்கு நூல்கள், பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் 96 வகை சிற்றிலக்கியங்கள், ஐம்பெரும் காப்பியங்கள், ஐஞ்சிறு காப்பியங்கள் அனைத்தும் சான்றுகளாகும்

**இடைக்கால இலக்கியங்களில் மொழிநடை**

ஆங்கிலமும் வடமொழியும் கலந்த நடை இடைக்கால இலக்கியங்களில் அதிகமாக காணப்பட்டது. வட்டாரத்தின் தன்மைகள் குறித்தும் ஆழமான சிந்தித்துள்ளன இடைக்கால இலக்கியங்கள். வட்டார வழக்கு கொச்சை சொற்கள் எல்லாம் மொழி வளம் உள்ளடக்கம் என்பதை கூர்மைப்படுத்துவதற்கு தானே ஒழிய அவற்றை மழுங்கடிக்க அல்ல என்று நவபாரதி கூறுகிறார்.

**தற்கால இலக்கியங்களின் மொழிநடை**

பிற மொழி வகையிலிருந்து மாறுபட்டது. குறைந்த கல்வி அறிவு உடையவர்களும் எளிதில் படித்து புரிந்து கொள்ளும் மொழிநடையில் இதழ்களின் மொழிநடை அமைய வேண்டும். அகராதிகளின் துணைகொண்டு படிக்கும்படியான இதழ்களை தற்கால மக்கள் வெறுக்கின்றனர் எனவே மக்களுக்கு

புரியக்கூடிய வகையில் இலக்கியத்தில் பயன்படும் மொழிநடை தற்காலத்தில் பெருகி வருகிறது. அவை சிறுகதைகள், புதினங்கள், சிறுகதைகள், உரைநடை நூல்கள்சான்றுகள் ஆகும்.

**உரை நூல்களும் உரையாசிரியர்களும்**

தொல்காப்பிய முதலான அனைத்து வகை சங்க இலக்கியங்களும் சங்கம் மருவிய காலத்தில் இயற்றப்பட்ட இலக்கியங்களும் மக்களுக்கு புரியாத ‘‘பா’’ மற்றும் ‘‘செய்யுள்’’ வடிவில் அமைந்திருந்த காரணத்தால் அந்நூல்களுக்கு உரை எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது எனவே உரை நூல்கள் தோன்ற ஆரம்பித்தன.

**சங்க கால முதல் தற்காலம் வரை**

சங்ககால நூல்கள் மக்களின் அகம் மற்றும் புறம் பற்றிய செய்திகளை தருகின்றன. புறவாழ்வு இலக்கியங்கள் மக்களின் வாழ்க்கை முறை உணவு, உடை கலாச்சாரம் பண்பாடு நாகரிகம் மற்றும் போர்முறை பற்றி எடுத்து இயம்புகிறது. அகவாழ்வு இலக்கியங்கள் அவர்கள் மனதில் தோன்றும் இன்பங்களையும் துன்பங்களையும் நம் கண் முன்னே கொண்டு வந்து நிறுத்துகிறது.

**நீதி நூல்கள்**

சங்கம் மருவிய காலத்தில் மக்களின் வாழ்க்கை முறையில் எண்ணற்ற ஒழுக்க சீர்கேடுகள் நிரம்பி இருந்ததால் இக்காலத்தில் நீதி நூல்கள் இயற்றப்பட்டன என வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். காப்பியங்கள் வழியும் அறக்கத்துகள் மக்களின் மனதில் பதிய வைக்கப்பட்டன காப்பியங்கள் வழி திருமண சடங்குகள், விழாக்கள், மத சடங்குகள், இறை வழிபாடுகள் மற்றும் வணிக முறைகள் பற்றி தகவல்களை அறியலாம்.

**நவீன காலம்**

நவீன காலத்தில் இயற்றப்படும் இலக்கியங்கள் பெரும்பாலும் உரைநடை வடிவிலும் புதுக்கவிதை வடிவிலும் இயற்றப்படுகின்றன. சமுதாயத்தில் காணப்படும் சாதி கொடுமை வரதட்சனை கொடுமை பெண்களுக்கு எதிரான அநீதிகள், போதை பழக்கங்களில் இருந்து விடுபடுவதற்கான வழி முறைகள் போன்ற கருத்துக்கள் இலக்கியங்களில் பெரும்பாலும் இடம்பெறுகின்றன மேலும் சங்க கால இலக்கியங்களைப் பற்றி ஆராய்ச்சி கட்டுரைகள் பெரும்பாலும் வெளிவருகிறது கணினி வளர்ச்சியினால் ஏற்பட்ட மாறுதல்கள் எண்ணற்றவை. மேலும் தமிழ் இலக்கியத்தில் நிலையான ஆங்கிலர் ஆட்சியும் ஐரோப்பிய மிஷனர்களின் தமிழ்மொழி ஈர்ப்பும் அவர்கள் கொண்டு வந்த அச்சு இயந்திரங்களும் பின் ஏற்பட்ட சுதந்திர இந்தியா ஆட்சியும் மத சுதந்திரமும் கல்வி முறையில் ஏற்பட்ட தோற்ற வளர்ச்சியும் நவீன சிந்தனைகளின் உருவாக்கம் போன்ற காரணிகளால் தமிழ் மொழி இலக்கியம் பெரிதும் வளர்ச்சியுற்றது

**முடிவுரை**

தமிழ் இலக்கியத்தின் நவீன சகாப்தம் அதன் பழங்கால சகாக்களிடம் இருந்து பெரிதும் ஈர்க்கப்பட்டது ஆனால் மிகப்பெரிய புதுமைகளை தொடங்கியது 18 மற்றும் 19ஆம் நூற்றாண்டுகளில் ஒளிரும் எதிர்காலத்தை நோக்கி தமிழ் இலக்கியம் இருந்தது. இருபதாம் நூற்றாண்டில் எண்ணற்ற இலக்கிய கவிஞர்கள் புதிய படைப்புகளை இயற்றிய தமிழ் மொழியை உலக அரங்கில் உயர்த்தி வருகின்றனர். கணினி வளர்ச்சியும் இணைய வளர்ச்சியும் இன்றைய இளைய சமுதாயத்தை இலக்கியங்களை படிக்க தூண்டும் சாதனங்களாக மாற்றியுள்ளன. சங்க காலத்திற்கு முற்பட்ட காலம் முதல் சங்க காலம், சங்கம் மருவிய காலம் இடைக்காலம் மற்றும் தற்காலம் வரை இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட மாறுதல்களை கட்டுரை மூலம் ஆய்வு செய்தோம் தமிழ் இலக்கியங்கள் இனி மென்மேலும் வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை

**மேற்கோள்கள்**


1. தமிழ் இலக்கியங்களின் அறிய தொகுப்பு
2. முனைவர் எஸ் குருமூர்த்தி ஆராய்ச்சி கட்டுரை செய்திகள் ஐஎஸ்டீ 978 - டீ1 7090
3. மு வரதராசனாரின் தமிழ் இலக்கியம் கால வகைப்பாடு - விக்கிபீடியா தமிழ் சங்க இலக்கிய செய்திகள்
4. தமிழ் இணைய கல்விக் கழகம் முனைவர் வி மோகன்
5. உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆ மனவழகன்

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

Bodhi International Journal is assigned by ISSN National Centre, India National Science Library, New Delhi

Journal Indexed and Impact Factor by International Institute of Organized Research (I2OR)

## Information of Bodhi Journal

### Subjects for Papers

The journal welcomes publications of quality papers on research in humanities, arts, science. agriculture, anthropology, education, geography, advertising, botany, business studies, chemistry, commerce, computer science, communication studies, criminology, cross cultural studies, demography, development studies, geography, library science, methodology, management studies, earth sciences, economics, entrepreneurship, bioscience, fisheries, history, information science & technology, law, life sciences, logistics and performing arts (music, theatre & dance), religious studies, visual arts, women studies, physics, fine art, microbiology, physical education, public administration, philosophy, political sciences, psychology, population studies, social science, sociology, social welfare, linguistics, literature and so on.

**Hosted by**

அரசு கலைக் கல்லூரி, மேலூர்

PUBLICATION IMPACT FACTOR PIF POWERED BY I2OR

Impact Factor 4.650

Articles should be mailed to bodhijournal@gmail.com

**BODHI**

**International Journal of Research in Humanities, Arts and Science**

www.bodhijournals.com

Powered & Published by

**Center for Resource, Research and Publication Services (CRRPS) India.**

www.crrps.in